பரமபதி துணை.

# இலக்கணச்சுருக்கம்

இது

யாழ்ப்பாணத்து நல்லூர்

ஆறுமுகநாவலரவர்கள்

செய்தது.

---

சிதம்பரசைவப்பிரகாசவித்தியாசாலைத் தருமபரிபாலகர்

விசுவநாதபிள்ளையால்

சென்னபட்டணம்

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டது.

௧௯-ம் பதிப்பு

துர்மதி௵ ஆவணிமீ.

1921.

அரசினரால் அங்கீகரிக்கப்பட்டது.

(Copyright Registered.)

# சூசிபத்திரம்

## எழுத்ததிகாரம்.


| | |
|---|---|
| எழுத்தியல் | |
| பதவியல் | ௧௫ |
| புணரியல் | ௨௬ |


## சொல்லதிகாரம்.


| | |
|---|---|
| பெயரியல் | ௬௩ |
| வினையியல் | ௧௨௫ |
| இடையியல் | ௧௪௭ |
| உரியியல் | ௧௮௩ |


## தொடர்மொழியதிகாரம்.


| | |
|---|---|
| தொகைநிலைத்தொடரியல் ... ... .. | ௧௮௮ |
| தொகாநிலைத்தொடரியல் ... ... ... | ௧௬௯ |
| ஒழிபியல் ... ... ... ... | ௨௦௫ |
| பகுபதமுடிபு ... ... | ௨௨௫ |
| சொல்லிலக்கணங்கூறுதல் ... | ௨௫௬ |
| சொற்றொடரிலக்கணங்கூறுதல் | ௨௫௮ |

பரமபதி துணை.

# இலக்கணச்சுருக்கம்.

முதலாவது

## எழுத்ததிகாரம்.

### க. எழுத்தியல்.

இலக்கண நூலாவது, உயர்ந்தோர் வழக்கத்தையுஞ் செய்யுள் வழக்கத்தையும் அறிந்து விதிப்படி எழுதுதற்கும் பேசுதற்குங் கருவியாகிய நூலாம்.)

உ. (அந் நூல், எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், தொடமொழியதிகாரம் என, மூன்றதிகாரங்களாக வகுக்கப்படும்.

பரீக்ஷை வினாக்கள்.—க. இலக்கண நூலாவதியாது? உ. அந் நூல் எத்தனை அதிகாரங்களாக வகுக்கப்படும்?

---

### எழுத்துக்களின் பெயர்.

எழுத்தாவது, சொல்லுக்கு முதற்காரணமாகிய ஒலியாம்.

௪. அவ்வெழுத்து, உயிரெழுத்து, மெய்யெழுத்து உயிர்மெய்யெழுத்து, ஆய்தவெழுத்து என நான்கு வகைப்படும்.

௫. உயிரெழுத்துக்கள், அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என்னும் பன்னிரண்டெழுத்துக்களுமாம். இவை ஆவி எனவும பெயர் பெறும்

௬. உயிரெழுத்துக்கள், குற்றெழுத்து, நெட்டெழுத்து என இரண்டு வகைப்படும்.

௭. குற்றெழுத்துக்கள், அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்துமாம். இவை குறில் எனவும் பெயர் பெறும்.

௮. நெட்டெழுத்துக்கள், ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் எழுமாம். இவை நெடில் எனவும் பெயர் பெறும்.

௯. மெய்யெழுத்துக்கள், க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் என்னும் பதினெட்டெழுத்துக்களுமாம். இவை உடல், உடம்பு, உறுப்பு, ஒற்று, புள்ளி எனவும் பெயர் பெறும்.

௧௦. மெய்யெழுத்துக்கள், வல்லெழுத்து, மெல்லெழுத்து, இடையெழுத்து என மூன்று வகைப்படும்.

௧௧. வல்லெழுத்துக்கள், க், ச், ட், த், ப், ற், என்னும் ஆறுமாம். இவை வல்லினம், வன்கணம், வலி எனவும் பெயர் பெறும்

கஉ. மெல்லெழுத்துக்கள், ங், ஞ், ண், ந், ம், ன் என்னும் ஆறுமாம். இவை மெல்லினம், மென்கணம், மெலி எனவும் பெயர் பெறும்.

கங. இடையெழுத்துக்கள், ய், ர், ல், வ், ழ், ள் என்னும் ஆறுமாம். இவை இடையினம், இடைக்கணம், இடை எனவும் பெயர் பெறும்.

கச. அ, இ, உ என்னும் மூன்றும், மொழிக்கு முதலிலே சுட்டுப்பொருளில் வரும்போது, சுட்டெழுத்துக்களாம்.

உ - ம். அவன், இவன், உவன்.
அக்கொற்றன், இக்கொற்றன், உக்கொற்றன்.

கரு எகரம் மொழிக்கு முதலிலும், ஆகாரமும் ஓகாரமும் மொழிக்குக் கடையிலும், ஏகாரம் மொழிக்கு முதலிலும் கடையிலும், வினைப்பொருளில் வரும்போது, வினாவெழுத்துக்களாம்.

உ - ம். எவன், எக்கொற்றன்.
கொற்றனா, கொற்றனோ.
ஏவன், கொற்றனே.

யா என்னும் உயிர்மெய்யும், மொழிக்கு முதலிலே வினைப்பொருளில் வரும்போது வினாவெழுத்தாம்.

உ - ம். யாவன், யாங்ஙனம்.

கசு. அகரத்துக்கு ஆகாரமும், இகரத்துக்கு ஈகாரமும், உகரத்துக்கு ஊகாரமும், எகரத்துக்கு ஏகாரமும்,

ஐகாரத்துக்கு இகரமும், ஒகரத்துக்கு ஒகாரமும், ஔகாரத்துக்கு உகரமும், ககரத்துக்கு ஙகரமும், சகரத்துக்கு ஞகரமும், டகரத்துக்கு ணகரமும், தகரத்துக்கு நகரமும், பகரத்துக்கு மகரமும், றகரத்துக்கு னகரமும், இனவெழுத்துக்களாம்; இடையெழுத்தாறும் ஓரினமாகும்; அவை இவ்விரண்டோரினமாகாவாம்.

கஎ. உயிர்மெய்யெழுத்துக்களாவன, பன்னிரண்டுயிரும் பதினெட்டு மெய்மேலுங் தனித்தனி ஏறிவருதலாலாகிய இருநூற்றுப்பதினாறுமாம்.

அவை க, கா, கி, கீ முதலியவைகளாம்.

உயிர்மெய்க்குற்றெழுத்துத் தொண்ணூறு, உயிர்மெய் நெடெட்டுழுத்து நூற்றிருபத்தாறு: ஆக உயிர்மெய் இருநூற்றுப்பதினாறு.

உயிர்மெய் வல்லெழுத்து எழுபத்திரண்டு, உயிர்மெய் மெல்லெழுத்து எழுபத்திரண்டு, உயிர்மெய்யிடையெழுத்து எழுபத்திரண்டு: ஆக உயிர்மெய் இருநூற்றுப்பதினாறு.

கஅ. ஆய்தவெழுத்தாவது, குற்றெழுத்துக்கும் உயிர்மெய் வல்லெழுத்துக்கும் நடுவே மூன்றுபுள்ளி வடிவையுடையதாய் வரும் ஓரெழுத்தாம்.

உ - ம். எஃகு, கஃசு, அஃகு, பஃறி.

ககூ. மேற்சொல்லப்பட்ட உயிர் பன்னிரண்டும், மெய் பதினெட்டும், உயிர்மெய் இருநூற்றுப்பதினாறும், ஆய்தம்

ஒன்றும் ஆகிய இருநூற்று நாற்பத்தேழெழுத்துக்களுந் தமிழ் நெடுங்கணக்கில் வழங்கிவருதல் கண்டுகொள்க.

பரீக்ஷை வினாக்கள்.—௩. எழுத்தாவது யாது? ௪. அவ்வெழுத்து எத்தனை வகைப்படும்? ௫. உயிரெழுத்துக்கள் எவை? ௬. உயிரெழுத்துக்கள் எத்தனை வகைப்படும்? ௭. குற்றெழுத்துக்கள் எவை? ௮. நெட்டெழுத்துக்கள் எவை? ௯. மெய்யெழுத்துக்கள் எவை? ௧௦. மெய்யெழுத்துக்கள் எத்தனை வகைப்படும்? ௧௧. வல்லெழுத்துக்கள் எவை? ௧௨. மெல்லெழுத்துக்கள் எவை? ௧௩. இடையெழுத்துக்கள் எவை? ௧௪. சுட்டெழுத்துக்கள் எவை? ௧௫. வினாவெழுத்துக்கள் எவை? ௧௬. எந்தெந்த வெழுத்துக்கு எந்தெந்தவெழுத்து இனவெழுத்தாகும்? ௧௭. உயிர்மெய்யெழுத்துக்கள் எவை? உயிர்மெய்க் குற்றெழுத்து எத்தனை? உயிர்மெய்க்குற்றெழுத்து எப்படித் தொண்ணூறாகும்? உயிர்மெய் நெட்டெழுத்து எத்தனை? உயிர்மெய் நெட்டெழுத்து எப்படி நூற்றிருபத்தாறுகும்? உயிர்மெய் வல்லெழுத்து எத்தனை? உயிர்மெய்வல்லெழுத்து எப்படி எழுபத்திரண்டாகும்? உயிர்மெய் மெல்லெழுத்து எத்தனை? உயிர்மெய் மெல்லெழுத்து எப்படி எழுபத்திரண்டாகும்? உயிர்மெய்யிடையெழுத்து எத்தனை? உயிர்மெய்யிடையெழுத்து எப்படி எழுபத்திரண்டாகும்? ௧௮. ஆய்தவெழுத்தாவது எது? ௧௯. ஆகத் தமிழ் நெடுங்கணக்கில் வழங்கும் எழுத்துக்கள் எத்தனை?

## எழுத்துக்களின் மாத்திரை.

௨(குற்றெழுத்துக்கு மாத்திரை ஒன்று; நெட்டெழுத்துக்கு மாத்திரை இரண்டு)

மெய்யெழுத்துக்கும் ஆய்தவெழுத்துக்குந் தனித்தனி மாத்திரை அரை.

உயிர்மெய்க்குற்றெழுத்துக்கு ஏறிய உயிரினளவாகிய மாத்திரை ஒன்று; உயிர்மெய்நெட்டெழுத்துக்கு ஏறிய உயிரினளவாகிய மாத்திரை இரண்டு

மாத்திரையாவது கண்ணிமைப்பொழுது, அல்லது கைந்நொடிப்பொழுது.

உக. உயிரெழுத்துக்களுள்ளே, உகரமும் இகரமும், சிலவிடங்களிலே தம்மாத்திரையிற்குறைவாக ஒலித்து நிற்கும். அவ்வுகரத்துக்குக் குற்றியலுகரமென்றும், அவ்விகரத்துக்குக் குற்றியலிகரமென்றும், பெயராம்.

உஉ. குற்றியலுகரமாவது, தனிக்குற்றெழுத்தல்லாத மற்றையெழுத்துக்களுக்குப் பின்னே மொழிகளினிறுதியில் வல்லினமெய்களில் ஏறி நிற்கும் உகரமாம்.

அக்குற்றியலுகரம் ஈற்றெழுத்தாகிய தன்னைத்தொடர்கின்ற அயலெழுத்தின்வகையினாலே, நெடிற்றொடர்க்குற்றியலுகரம், ஆய்தத்தொடர்க்குற்றியலுகரம், உயிர்த்தொடர்க்குற்றியலுகரம், வன்றொடர்க்குற்றியலுகரம், மென்றொடர்க்குற்றியலுகரம், இடைத்தொடர்க்குற்றியலுகரம் என, அறுவகைப்படும். அவைகளுள், நெடிற்றொடர்மாத்திரம் இரண்டெழுத்துமொழியாகியும், மற்றையைந்துதொடரும் மூன்றெழுத்துமுதலிய பலவெழுத்துமொழியாகியும் வரும்.

உ-ம். நாகு, ஆடு......நெடிற்றொடர்க்குற்றியலுகரம்.
எஃகு, கஃசு.....ஆய்தத்தொடர்க்குற்றியலுகரம்.
வரகு, பலாசு ...உயிர்த்தொடர்க்குற்றியலுகரம்.
கொக்கு, கச்சு......வன்றொடர்க்குற்றியலுகரம்.

சங்கு, வண்டு...மென்றொடர்க்குற்றியலுகரம்.
அல்கு, எய்து ...இடைத்தொடர்க்குற்றியலுகரம்.

௨௩. தனிக்குற்றெழுத்துக்குப் பின் வல்லினமெய்களில் ஏறி நிற்கும் உகரமும், மெல்லினமெய்களிலும் இடையினமெய்களிலும் ஏறி நிற்கும் உகரமும், முற்றியலுகரமாம்.

உ-ம். நகு, கொசு, கடு, அது; கணு, திரு, வழு; புணு, வாரு; உருமு, கதவு; நெல்லு, கொள்ளு.

௨௪. குற்றியலிகரமாவது, யகரம் வந்து புணருமிடத்துக் குற்றியலுகரந் திரிந்த இகரமாம்.

உ-ம். நாகு + யாது = நாகியாது.
எஃகு + யாது = எஃகியாது.
வரகு + யாது = வரகியாது.
கொக்கு + யாது = கொக்கியாது.
சங்கு + யாது = சங்கியாது.
அல்கு + யாது = அல்கியாது.

அன்றியும், மியாவென்னும் அசைச்சொல்லிலே மகரத்தின்மேல் ஏறி நிற்கும் இகரமுங் குற்றியலிகரமாம்.

௨௫. பாட்டில் ஓசை குறைந்தவிடத்து, உயிரெழுத்துக்களுள்ளும், ஒற்றெழுத்துக்களுள்ளும், சில சில, தம் மாத்திரைகளின் அதிகமாக ஒலிக்கும்; அவ்வுயிரெழுத்துக்கு உயிரளபெடை என்றும், அவ்வொற்றெழுத்துக்கு ஒற்றளபெடை என்றும், பெயராம்.

௨௬. உயிரளபெடையாவன, மொழிக்கு முதலிலாயினும் இடையிலாயினுங் கடையிலாயினுந் தம்மாத்திரையின்

அதிகமாக ஒலித்து வருகின்ற நெட்டெழுத்துக்களேழுமாம் அளபெடுக்கின்ற நெட்டெழுத்துக்குப் பின் அதற்கினமாகிய குற்றெழுத்து அறிகுறியாக எழுதப்படும்.

உ - ம். ஆஅடை, ஈஇடு, ஊஉமை, ஏஎடு, ஐஇயம், ஓஒடு, ஒளஉவை; பலாஅசு; பலாஅ.

சிலவிடங்களிலே குற்றெழுத்து நெட்டெழுத்தாகிப் பின்னளபெடுக்கும்.

உ - ம். எழுதல் = எழூஉதல், வரும் = வரூஉம், குரி = குரீஇ.

உஎ. (ஒற்றளபெடையாவன, மொழிக்கு இடையிலாயினுங் கடையிலாயினுந் தம்மாத்திரையின் அதிகமாக ஒலித்து வருகின்ற ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள் என்னும் பத்துமெய்களும், ஆய்தமுமாம்.) அளபெடுக்கின்ற ஒற்றெழுத்துக்குப் பின் அவ்வொற்றெழுத்தே அறிகுறியாக எழுதப்படும். இவ்வொற்றளபெடை, குறிற்கீழுங் குறிலிணைக்கீழும், வரும்.

உ - ம். சங்ங்கு, பிஞ்ஞ்சு, கண்ண்டம், பந்ந்து, அம்ம்பு, அன்ன்பு, தெவ்வ்வர், மெய்ய்யர், செல்ல்க, கொள்ள்க, எஃஃகு; அரங்ங்கு; அங்ங்கனிந்த; மடங்ங்கலந்த.

உஅ. (குற்றியலுகரத்துக்குங் குற்றியலிகரத்துக்குந் தனித்தனி மாத்திரை அரை; உயிரளபெடைக்கு மாத்திரை மூன்று; ஒற்றளபெடைக்கு மாத்திரை ஒன்று.)

உகூ. (பண்டமாற்றலினும், அழைத்தலினும், புலம்பலினும், இராகத்தினும், உயிரெழுத்தும், மெய்யெழுத்தும், தமக்குச் சொல்லிய அளவைக் கடந்து

பரீக்ஷை வினாக்கள்.—௨௦. குற்றெழுத்துக்கு மாத்திரை எத்தனை? நெட்டெழுத்துக்கு மாத்திரை எத்தனை? மெய்யெழுத்துக்கு மாத்திரை எத்தனை? ஆய்தவெழுத்துக்கு மாத்திரை எத்தனை? உயிர்மெய்க் குற்றெழுத்துக்கு மாத்திரை எத்தனை? உயிர்மெய் நெட்டெழுத்துக்கு மாத்திரை எத்தனை? மாத்திரையாவது எது? ௨௧. தம்மாத்திரையிற் குறைவாக ஒலித்து நிற்கும் எழுத்துக்கள் உளவோ? தன்மாத்திரையிற் குறைவாக ஒலிக்கும் உகரத்துக்குப் பெயர் யாது? தன்மாத்திரையிற் குறைவாக ஒலிக்கும் இகரத்துக்குப் பெயர் யாது? ௨௨. குற்றியலுகரமாவது யாது? அக்குற்றியலுகரம் எத்தனை வகைப்படும்? நெடிற்றொடர் எத்தனை யெழுத்து மொழியாகி வரும்? நெடிற்றொடரொழிந்த ஐந்து தொடரும் எத்தனை யெழுத்து மொழியாகிவரும்? ௨௩. முற்றியலுகரமாவனஎவை? ௨௪. குற்றியலிகரமாவது யாது? ௨௫. தம்மாத்திரைகளின் அதிகமாக ஒலிக்கும் எழுத்துக்கள் உளவோ? அதிகமாக ஒலிக்கும் உயிரெழுத்துக்குப் பெயர் யாது? அதிகமாக ஒலிக்கும் ஒற்றெழுத்துக்குப் பெயர் யாது? ௨௬. உயிரளபெடையாவன யாவை? ௨௭. ஒற்றளபெடையாவன யாவை? ௨௮. குற்றியலுகரத்துக்கு மாத்திரை எத்தனை? குற்றியலிகரத்துக்கு மாத்திரை எத்தனை? உயிரளபெடைக்கு மாத்திரை எத்தனை? ஒற்றளபெடைக்கு மாத்திரை எத்தனை? ௨௯. எவ்வெவ்விடங்களில் எழுத்துக்கள் தமக்குச் சொல்லிய அளவைக் கடந்து நீண்டொலிக்கும்.

---

## முதனிலை.

௩௦. பன்னிரண்டுயிரெழுத்துக்களும், உயிரேறிய க், ச், த், ந், ப், ம், வ், ய், ஞ், என்னும் ஒன்பது மெய்யெழுத்துக்களும், மொழிக்கு முதலில் நிற்கும் எழுத்துக்களாம்.

-ம். அணி, ஆடை, இலை, ஈரல் உரல், ஊர்தி, எழு, ஏணி, ஐயம், ஒளி, ஓடு, ஔவை.

கரி, சரி, தலை, நன்மை, பந்து, மணி, வயல், யமன், ஞமலி.

௩௧. இவைகளுள்ளே, க், ச், த், ந், ப், ம் என்னும் ஆறு மெய்களும், பன்னிரண்டுயிரோடும் மொழிக்கு முதலாகி வரும். உ-ம்.

(க.) களி, காளி, கிளி, கீரை, குளிர், கூடு, கெண்டை, கேழல், கைதை, கொண்டை, கோடை, கௌவை.

(உ.) சட்டி, சாந்து, சினம், சீர், சுக்கு, சூரல், செக்கு, சேவல், சையம், சொன்றி, சோறு, சௌரியம்.

(௩.) தகை, தார், திதலை, தீமை, துளை, தூசு, தெளிவு, தேன், தையல், தொண்டு, தோடு, தௌவை.

(௪.) நஞ்சு, நாரி, நிலம், நீறு, நுகம், நூல், நெல், நேர்மை, நைதல், நொய்து, நோய், நௌவி.

(௫.) பந்து, பால், பிட்டு, பீடு, புள், பூண்டு, பெருமை, பேடு, பையல், பொன், போது, பௌவம்.

(௬.) மனை, மாடு, மின்னல், மீன், முள், மூரி, மெய்ம்மை, மேதி, மையல், மொட்டு, மோகம், மௌவல்.

௩௨. வகரமெய், அ, ஆ, இ, ஈ, எ, ஏ, ஐ, ஔ என்னும் எட்டுயிரோடு, மொழிக்கு முதலாகி வரும்.

உ-ம். வளி, வாளி, விளி, வீடு, வெண்மை, வேலை, வையம், வௌவால்.

௩௩. யகரமெய், அ, ஆ, உ, ஊ, ஓ, ஔ என்னும் ஆறுயிரோடு, மொழிக்கு முதலாகி வரும்.

உ-ம். யவனர், யானை, யுகம், யூகம், யோகம், யௌவனம்.

௩௪. ஞகரமெய், அ, ஆ, எ, ஒ என்னும் நான்குயி ரோடு, மொழிக்கு முதலாகி வரும்.

உ - ம். ஞமலி, ஞாலம், ஞெகிழி, ஞொள்கல்.

பரீக்ஷை வினாக்கள்.—௩௦. மொழிக்கு முதலில் நிற்கும் எழுத்துக்கள் எவை? ௩௧. இவ்வொன்பது மெய்களுள், எத்தனை மெய்கள் பன்னிரண்டுயிரோடும் மொழிக்கு முதலாகி வரும்? ௩௨. வகரமெய் எவ்வுயிர்களோடு மொழிக்கு முதலாகி வரும்? ௩௩. யகரமெய் எவ்வுயிர்களோடு மொழிக்கு முதலாகி வரும்? ௩௪. ஞகரமெய் எவ்வுயிர்களோடு மொழிக்கு முதலாகி வரும்?

---

## இறுதிநிலை.

௩௫. எகரம் ஒழிந்த பதினோருயிர்களும், ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் என்னும் பதினொருமெய்களுமாகிய இருபத்திரண்டெழுத்துக்களும், மொழிக்கிறுதியில் நிற்கும் எழுத்துக்களாம்.

உ - ம். விள, பலா, கிளி, தீ, கடு, பூ, சே, கை, நொ, போ, வௌ, உரிஞ், மண், வெரிந், மரம், பொன், காய், வேர், வேல், தெவ், யாழ், வாள்.

பரீக்ஷை வினா.—௩௫. மொழிக்கு இறுதியில் நிற்கும் எழுத்துக்கள் எவை?

## எழுத்துக்களின் சாரியை.

௩௬. உயிர்நெட்டெழுத்துக்கள் காரச்சாரியைபெறும்; அவைகளுள், ஐ ஔ இரண்டுங் காரச்சாரியையேயன்றிக் கான்சாரியையும் பெறும்.

உ-ம். ஆகாரம், ஈகாரம், ஊகாரம், ஏகாரம், ஐகாரம், ஓகாரம், ஔகாரம்; ஐகான், ஔகான்.

(உயிர்க்குற்றெழுத்துக்களும், உயிர்மெய்க்குற்றெழுத்துக்களும், கரம், காரம், கான் என்னும் மூன்றுசாரியைகள் பெறும்.)

உ-ம். அகரம், அகாரம், அஃகான்; ககரம், ககாரம், கஃகான்.

(மெய்யெழுத்துக்கள், அ என்னுஞ் சாரியையும், அதனோடு கரம், காரம், கான் என்னுஞ் சாரியைகளும், பெறும்.)

உ-ம். க, ங; ககரம், ககாரம், கஃகான்; ஙகரம், ஙகாரம், ஙஃகான்.

(உயிர்மெய்நெட்டெழுத்துக்கள், சாரியை பெற்றும், மெய்கள் சாரியை பெறாதும், இயங்காவாம்.)

பரீக்ஷை வினாக்கள்.—கசு. உயிர்நெட்டெழுத்துக்கள் எச்சாரியை பெறும்? ஐ, ஔ, இரண்டும் காரச்சாரியை யன்றி வேறு சாரியையும் பெறுமோ? உயிர்க்குற்றெழுத்துக்களும் உயிர்மெய்க் குற்றெழுத்துக்களும் எச்சாரியை பெறும்? மெய்யெழுத்துக்கள் எச்சாரியை பெறும்? எவ்வெழுத்துக்கள் சாரியை பெற்று வருதலில்லை? எவ்வெழுத்துக்கள் சாரியை பெறாது வருதலில்லை?

---

## போலியெழுத்துக்கள்.

கஎ. (அகரத்தோடு யகரமெய் சேர்ந்து ஐகாரம் போன்றும், அகரத்தோடு வகரமெய் சேர்ந்து ஔகாரம்போன்றும், ஒலிக்கும்.)

உ-ம். ஐயன் = அய்யன்; ஔவை = அவ்வை.

பரீக்ஷை வினா.—௩௭. இரண்டெழுத்துக்கள் சேர்ந்து ஓரெழுத்தைப்போல் ஒலிப்பதுண்டோ?

எழுத்தியல் முற்றிற்று.

## ௨. பதவியல்.

௩௮. பதமாவது, ஓரெழுத்தாலாயினும் இரண்டு முதலிய பலவெழுத்துக்களாலாயினும் ஆக்கப்பட்டுப் பொருளை அறிவிப்பதாம். அது, பகாப்பதமும், பகுபதமும் என, இருவகைப்படும்.

௩௯. பகாப்பதமாவது, பகுக்கப்படாத இயல்பையுடைய பதமாம். அது, பெயர்ப்பகாப்பதம், வினைப்பகாப்பதம், இடைப்பகாப்பதம், உரிப்பகாப்பதம், என, நான்கு வகைப்படும்.

| | | | |
|---|---|---|---|
| உ-ம். ...... | நீர், | மரம்.........பெயர்ப்பகாப்பதம். | |
| | நட, | வா, | உண்.........வினைப்பகாப்பதம். |
| | மற்று, | ஏ, | ஓ............இடைப்பகாப்பதம். |
| | உறு, | தவ, | நனி.........உரிப்பகாப்பதம். |

௪0. பகுபதமாவது, பகுக்கப்படும் இயல்பையுடைய பதமாம். அது, பெயர்ப்பகுபதம், வினைப்பகுபதம் என இருவகைப்படும். அவற்றுள், வினைப்பகுபதம், தெரிநிலை வினைப்பகுபதமும், குறிப்புவினைப்பகுபதமும் என, இருவகைப்படும்.

உ - ம். பொன்னன்.........பெயர்ப்பகுபதம்.
நடந்தான்..........தெரிநிலைவினைப்பகுபதம்.
பெரியன்...........குறிப்புவினைப்பகுபதம். *

பரீக்ஷை வினுக்கள்.—௩௮. பதமாவதுயாது? அது எத்தனை வகைப்படும்? ௩௯. பகாப்பதமாவது யாது? அது எத்தனை வகைப்படும்? ௪0. பகுபதமாவது யாது? அது எத்தனை வகைப்படும்? வினைப்பகுபதம் எத்தனை வகைப்படும்?

---

## பகுபதவுறுப்பு.

௪௧. பகுபதத்துக்கு உறுப்புக்கள், பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி, விகாரம் என ஆறும். பகுபதம், இவ்வாறுறுப்புக்களுள்ளும், பகுதி விகுதி என்னும் இரண்டு முதலியவைகளினுல், முடிவுபெறும். உ-ம்.

(க.) கூனி என்பது, கூன், இ எனப் பகுதி விகுதி என்னும் இரண்டுறுப்பால் முடிந்தது.

(உ.) உண்டான் என்பது, உண், ட், ஆன் எனப் பகுதி விகுதி, இடைநிலை என்னும் மூன்றுறுப்பால் முடிந்தது.

(௩.) உண்டனன் என்பது, உண், ட், அன், அன் எனப் பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை என்னும் நான்குறுப்பால் முடிந்தது.

(௪.) பிடித்தனன் என்பது, பிடி, த், த், அன், அன் எனப் பகுதி, விகுதி, இடைநிலை, சாரியை, சந்தி என்னும் ஐந்துறுப்பால் முடிந்தது.

---

* தெரிநிலைவினையுங் குறிப்புவினையும் பகுபதமாகும் எனவே, அவ்விருவகைவினையாலணையும் பெயர்களும் பகுபதமாகும் என்பது பெறப்படும்.

(ரு.) நடந்தனன் என்பது, நட, த், த், அன், அன் எனப் பகுதி முதலிய ஐந்தும் பெற்று, சந்தியால் வந்த தகரவல்லொற்று நகரமெல்லொற்றுதலாகிய விகாரமும் பெற்று, ஆறுறுப்பால் முடிந்தது.

பரீக்ஷை வினாக்கள்.—சக. பகுபதத்திற்கு உறுப்புக்கள் எவை? பகுபதம் இவ்வாறுறுப்புக்களும் பெற்றே முடிவு பெறுமோ?

---

## பகுதி.

சஉ. பகுதிகளாவன, பகுபதங்களின் முதலிலே நிற்கும் பகாப்பதங்களாம்.

சஈ. பெயர்ப்பகுபதங்களுக்குப், பெரும்பாலும் பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் அறுவகைப் பெயர்ச்சொற்களும், சிறுபான்மை சுட்டிடைச்சொற்கள், வினாவிடைச்சொற்கள், பிற மற்று என்னும் இடைச்சொற்களும், பகுதிகளாய் வரும். உ-ம்.

(க.) பொன்னன், நிலத்தன், தையான், பல்லன், கரியன் நடையன்.

(உ.) அவன், இவன், உவன்; எவன், ஏவன், யாவன்; பிறன், மற்றையான்.

சச. வினைக்குறிப்புப்பகுபதங்களுக்கு, மேற்சொல்லப்பட்டனவாகிய அறுவகைப் பெயர்ச்சொற்களும், இடைச்சொற்களும், பகுதிகளாய் வரும். உ-ம்.

(க.) பொன்னன், நிலத்தன், தையான், பல்லன், கரியன், நடையன்.

(உ.) அற்று, இற்று, எற்று.

சடு. மைவிகுதி புணர்ந்து நின்ற செம்மை கருமை முதலிய பண்புப்பெயர்கள், விகுதி புணரும்பொழுது, பெரும் பாலும் விகாரப்பட்டு வரும். இவை விகாரப்படுதல் பதப் புணர்ச்சிக்குங் கொள்க. உ-ம்.

அணியன்; இங்கே அணிமையின் மைவிகுதி கெட்டது.

கரியன்; இங்கே கருமையின் மைவிகுதி கெட்டு, நடு உகரம இகரமாயத் திரிந்தது.

பாசி; இங்கே பசுமையின் மைவிகுதி கெட்டு, முதல் நீண்டது.

பேரறிவு; இங்கே பெருமையின் மைவிகுதியோடு நடுநின்ற உகரவுயிர் கெட்டு முதல் நீண்டது.

கருங்குதிரை; இங்கே கருமையின் மை விகுதி கெட்டு, வரும் வல்லெழுத்திற்கு இனமெல்லெழுத்து மிகுந்தது.

பைந்தார்; இங்கே பசுமையின் மை விகுதியோடு நடுநின்ற சகரவுயிர்மெய் கெட்டு, முதலகரம் ஐகாரமாய்த் திரிந்து, வரும் வல்லெழுத்துக்கு இனமெல்லெழுத்து மிகுந்தது.

வெற்றிலை; இங்கே வெறுமையின் மைவிகுதி கெட்டு, நடுநின்ற மெய் இரட்டித்தது.

சேதாம்பல்; இங்கே செம்மையின் மை விகுதி கெட்டு, முதல் நீண்டு, நடு நின்ற மகரமெய் தகரமெய்யாய்த்

சசு. தெரிநிலைவினைப்பகுபதங்களுக்குப், பெரும்பாலும் நட வா முதலிய வினைச்சொற்களும், சிறுபான்மை

பெயர்ச்சொல் இடைச்சொல் உரிச்சொ                    கிகளாய்
வரும்.

| | | |
|---|---|---|
| உ - ம். நட, | நடந்தான் | வினையடி. |
| வா, | வந்தான் | |
| நில், | | |
| காண், | கண்டான் | |
| ரம, | | பெயரடி. |
| க்கண், | கடை ான் | |
| போல், | பொன்போன்றான் | இடையடி. |
| நிகர், | புலிநிகர்த்தான் | |
| சால், | சான்றான் | உரியடி. |
| மாண் | மாண்டான் | |

சஎ. தெரிநிலைவினைப்பகுதிகள், விகுதி முதலியவற்றோடு புணரும்போது, இயல்பாகியும், விகாரமாகியும் வரும். உ-ம்.

| | | |
|---|---|---|
| (க.) தொழு, | தொழுதான் | இயல்பாகிவந்தன. |
| உண், | உண்டான் | |

(உ.) சேறல்; இங்கே செல்லென்பகுதி முதல் நீண்டது.
தந்தான்; இங்கே தாவென்பகுதி முதல் குறுகியது.

தருகின்றான்; இங்கே தாவென்பகுதி முதல் குறுகி, ருகரவுயிர்மெய் விரியப்பெற்றது.

செத்தான்; இங்கே சாவென்பகுதி முதலாகாரம் எகரமாய்த் திரிந்தது.

விராவினான்; இங்கே விரவென்பகுதி நடுக்குறில் நீண்டது.

கொணர்ந்தான்; இங்கே கொணுவென்பகுதியீற்று நெடில் குறுகி, ரகரமெய் விரிந்தது.

கற்ருன்; இங்கே கல்லென் பகுதி யீற்று மெய் வருமெழுத்தாய்த் திரிந்தது.

சென்ருன்; இங்கே செல்லென்பகுதியீற்று மெய் வருமெழுத்துக்கு இனமாய்த் திரிந்தது.

சஅ. தெரிநிலைவினைப்பகுதிகள், வி, பி முதலிய விகுதி பெற்றேனும், விகாரப்பட்டேனும், விகாரப்பட்டு விகுதி பெற்றேனும் பிறவினைப்பகுதிகளாய் வரும். உ-ம்.

| | | | |
|---|---|---|---|
| (க.) | செய், | செய்வி, | செய்வித்தான். |
| | நட, | நடப்பி, | நடப்பித்தான். |
| (உ.) | திருந்து, | திருத்து, | திருத்தினுன். |
| | ஆடு, | ஆட்டு, | ஆட்டினுன். |
| | தேறு, | தேற்று, | தேற்றினுன். |
| | உருகு, | உருக்கு, | உருக்கினுன். |
| (ங.) | திருத்து, | திருத்துவி, | திருத்துவித்தான். |
| | ஆட்டு, | ஆட்டுவி | ஆட்டுவித்தான். |
| | தேற்று, | தேற்றுவி, | தேற்றுவித்தான். |
| | உருக்கு, | உருக்குவி, | உருக்குவித்தான். |

சகூ. பொன்னன், கரியன் முதலானவை, எட்டு வேற்றுமைகளுள் ஒன்றையேற்கும்போது பெயர்ப்பகுபதங்களாம்; முக்காலங்களுள் ஒன்றைக் குறிப்பாகக் காட்டும்போது வினைக்குறிப்புமுற்றுப்பகுபதங்களாம்; காலங்காட்டுதலோடு வேற்றுமையேற்கும்போது குறிப்புவினையாலணையும் பெயர்ப்பகுபதங்களாம். இவையே இம்மூன்றுக்கும் வேறுபாடாம்.

ருO. நடந்தான், வந்தான் முதலானவை, காலங்காட்டும்போது தெரிநிலை வினைமுற்றுப் பகுபதங்களாம்; காலங்காட்டுதலோடு வேற்றுமையேற்கும்போது தெரிநிலைவினையாலணையும் பெயர்ப்பகுபதங்களாம். இவையே இவ்விரண்டுக்கும் வேறுபாடாம்.

பரீக்ஷை வினக்கள்.—சஉ. பகுதிகளாவன யாவை? சங. பெயர்ப்பகுபதங்களுக்குப் பகுதிகள் எவை? சச. வினைக்குறிப்புப் பகுபதங்களுக்குப் பகுதிகள் எவை? சரு. விகுதி புணரும் பொழுது விகாரப்பட்டு வரும்பெயர்களும் உளவோ? சசு. தெரிநிலைவினைப் பகுபதங்களுக்குப் பகுதிகள் எவை? சஎ. தெரிநிலைவினைப் பகுதிகள் விகுதி முதலியவற்றோடு புணரும்பொழுது எப்படி வரும்? சஅ. தெரிநிலைவினைப் பகுதிகள் பிறவினைப் பகுதிகளாமிடத்து எப்படிவரும்? சகூ. பெயர்ப்பகுபதம், குறிப்புவினைமுற்றுப் பகுபதம், குறிப்புவினையாலணையும் பெயர்ப்பகுபதம் என்னும் மூன்றுக்கும் வேறுபாடு என்னை? ருo. தெரிநிலைவினைமுற்றுப் பகுபதம், தெரிநிலைவினையாலணையும் பெயர்ப்பகுபதம் என்னும் இரண்டுக்கும் வேறுபாடு என்னை?

---

## விகுதி.

ருக. விகுதிகளாவன, பகுபதங்களின் இறுதியிலே நிற்கும் இடைப்பகாப்பதங்களாம்.

ருஉ. பெயர்விகுதிகள், அன், ஆன், மன், மான், ன், அள், ஆள், இ, ள், அர், ஆர், மார், கள், ர், து, அ, வை, வ், தை, கை, பி, முன், அல் என்னும் இருபத்துமூன்றும் பிறவுமாம்

உ - ம். குழையன், வானத்தான், வடமன், கோமான், பிறன், குழையள், வானத்தாள், அரசி, பிறள், குழையர்,

வானத்தார், தேவிமார், கோக்கள், பிறர், அது, குறு
ந்தாளன, அவை, அவ், எந்தை, எங்கை, எம்பி, எம்
முன், தோன்றல்.

௫௫. தொழிற்பெயர்விகுதிகள், தல், அல், அம், ஐ, கை, வை, கு, பு, உ, தி, சி, வி, உள், காடு, பாடு, அரவு, ஆனை, மை, து என்னும் பத்தொன்பதும் பிறவுமாம்

உ-ம். நடத்தல், ஆடல், வாட்டம், கொலை, நடக்கை, பார்வை, போக்கு, நடப்பு, வரவு, மறதி, புணர்ச்சி, புலவி, விக்குள், சாக்காடு, கோட்பாடு, தோற்றரவு, வாரானை, நடவாமை, பாய்த்து என வரும்.

மைவிகுதி, செய்தமை, செய்கின்றமை என இறந்தகாலவிடைநிலை நிகழ்காலவிடைநிலைகளோடு கூடியும், வரும்.

துவ்விகுதி, அவர்செய்தது, செய்கின்றது, செய்வது என முக்காலவிடைநிலைகளோடு கூடியும், வரும்.

௫௬. பண்புப்பெயர்விகுதிகள், மை, ஐ, சி, பு, உ, கு, றி, று, அம், நர் என்னும் பத்தும் பிறவுமாம்

உ-ம். நன்மை, தொல்லை, மாட்சி, மாண்பு, மழவு, நன்கு, நன்றி, நன்று, நலம், நன்னர் என வரும்.

ர்கள, அன, ஆன, அள், ஆள், அர், ஆர், ப, மார், அ, ஆ, கு, டு, து, று, என், ஏன், அல், அம், ஆம், எம், ஏம், ஓம், கும், டும், தும், றும், ஐ, ஆய், இ, இர், ஈர், க, இய, இயர், ஆல், ஏல், மின், உம் என்னும் முப்பத்தெட்டும் பிறவுமாம்

உ-ம். நடந்தனன், நடந்தான், நடந்தனள், நடந்தாள், நடந்தனர், நடந்தார், நடப்ப, நடமார், நடந்தன, நடவா,

உண்கு, உண்டு, நடந்தது, கூயிற்று, நடந்தனென், நடந்தேன், நடப்பல், நடப்பம், நடப்பாம், நடப்பெம், நடப்பேம், நடப்போம், உண்கும், உண்டும், வருதும், சேறும், நடந்தனை, நடந்தாய், நடத்தி, நடந்தனிர், நடந்தீர், வாழ்க, வாழிய, வாழியர், மருல், அழேல், நடமின், உண்ணும்.

ருசு. குறிப்புவினைமுற்று விகுதிகள், அன, ஆன, அள், ஆள், அர், ஆர், அ, டு, து, று, என், ஏன், அம், ஆம், எம், ஏம், ஓம், ஐ, ஆய், இ, இர், ஈர், என்னும் இருபத்திரண்டும் பிறவுமாம்.

உ - ம். கரியன், கரியான், கரியள், கரியாள், கரியர், கரியார், கரியன, குறுந்தாட்டு, கரிது, குழையிற்று, கரியென், கரியேன், கரியம், கரியாம், கரியெம், கரியேம், கரியோம், கரியை, கரியாய், வில்லி, கரியிர், கரியீர்.

ருஎ. தெரிநிலைவினைப்பெயரெச்சவிகுதிகள், அ உம் என்னும் இரண்டுமாம்.

உ - ம். செய்த, செய்கின்ற, செய்யும்.

குறிப்புவினைப்பெயரெச்சவிகுதி, அ, ஒன்றேயாம். உம் விகுதி, இடைநிலையேலாது, தானே எதிர்காலங்காட்டலாற் குறிப்புவினைப்பெயரெச்சத்துக்கு வாராது

உ - ம். கரிய.

ங்கள, உ, இ, ய,

பு, ஆ, ஊ, என, அ, இன், ஆல், கால், ஏல், எனின், ஆயின், ஏனும், கு, இய, இயர், வான், பான், பாக்கு, கடை, வழி, இடத்து, உம், மல், மை மே என்னும் இருபத்தெட்டும்

பிறவுமாம். இவற்றுள், இறுதியிற்கூறிய மல், மை, மே என்னும் மூன்று விகுதிகளும் எதிர்மறையில் வரும்.

உ - ம். நடந்து, ஓடி, போய், உண்குபு, உண்ணு, உண்ணூ, உண்டென, உண்ண, உண்ணின், உண்டால், உண்டக்கால், உண்டானேல், உண்டானெனின், உண்டாயின், உண்டானேனும், உணற்கு, உண்ணிய, உண்ணியர், வருவான், உண்பான், உண்பாக்கு, செய்தக்கடை, செய்தவழி, செய்தவிடத்து, காண்டலும், உண்ணுமல், உண்ணுமை, உண்ணுமே.

குறிப்புவினைவினையெச்சவிகுதிகள், அ, றி, து, ஆல், மல், கடை, வழி, இடத்து என்னும் எட்டும் பிறவுமாம்.

உ - ம். மெல்ல, அன்றி, அல்லது, அல்லால், அல்லாமல், அல்லாக்கடை, அல்லாவழி, அல்லாவிடத்து.

ருகூ. பிறவினைவிகுதிகள், வி, பி, கு, சு, டு, து, பு, று என்னும் எட்டுமாம்.

உ - ம். செய்வி, நடப்பி, போக்கு, பாய்ச்சு, உருட்டு, நடத்து எழுப்பு, துயிற்று.

௬0. இ, ஐ, அம் என்னும் மூன்று விகுதிகளும், வினைமுதற்பொருளையுஞ் செயப்படுபொருளையுங் கருவிப்பொருளையும், உணர்த்தும். உ-ம்

(க.) அலரி, பறவை, எச்சம் என்பன வினைமுதற்பொருளை உணர்த்தின. இவை, முறையே, அலர்வது, பறப்பது, எஞ்சுவது எனப் பொருள்படும்.

(உ.) ஊருணி, தொடை, தேட்டம் என்பன செயப்படுபொருளை உணர்த்தின. இவை, முறையே, ஊராலுண்ணப்

படுவது, தொடுக்கப்படுவது, தேடப்படுவது எனப் பொருள் படும்.

(௩.) மண்வெட்டி, பார்வை, நோக்கம் என்பன கருவிப் பொருளை உணர்த்தின. இவை, முறையே, மண்வெட்டற்கருவி, பார்த்தற்கருவி, நோக்கற்கருவி எனப் பொருள் படும்.

௯௧. இதுவரையுங்கூறிய விகுதிகளேயன்றிப் பிறவிகுதிகளும் உண்டு. அவை வருமாறு:—

விடு, ஒழி விகுதிகள், துணிவுப்பொருளை உணர்த்தும்.

உ-ம். வந்துவிட்டான், கேட்டொழிந்தான் என வரும்.

கொள்விகுதி தற்பொருட்டுப் பொருள் உணர்த்தும்.

உ-ம். அடித்துக்கொண்டான்.

படு, உண் விகுதிகள் செயப்பாட்டு வினைப்பொருள் உணர்த்தும்.

உ-ம். கட்டப்பட்டான், கட்டுண்டான்.

மைவிகுதி தன்மைப்பொருள் உணர்த்தும்.

உ-ம். பொன்மை, ஆண்மை.

இரு, இடு என்பன, தமக்கென வேறுபொருள் இன்றிப், பகுதிப்பொருள் விகுதியாய் வரும்.

உ-ம். எழுந்திருக்கின்றான், உரைத்திடுகின்றான்.

**பரீக்ஷை வினாக்கள்.**—௫௧. விகுதிகளாவன யாவை? ௫௨. பெயர்விகுதிகள் எவை? ௫௩. தொழிற்பெயர் விகுதிகள் எவை? ௫௪. பண்புப்பெயர் விகுதிகள் எவை? ௫௫. தெரிநிலைவினைமுற்று விகுதிகள் எவை? ௫௬. குறிப்புவினைமுற்று

விகுதிகள் எவை? ருள. தெரிநிலைவினைப் பெயரெச்ச விகுதிகள் எவை? குறிப்புவினைப் பெயரெச்ச விகுதி எது? ருஅ. தெரிநிலைவினை வினையெச்ச விகுதிகள் எவை? குறிப்புவினை வினையெச்ச விகுதிகள் எவை? ருகூ. பிறவினை விகுதிகள் எவை. சுo. வினைமுதற்பொருள் செயப்படுபொருள் கருவிப்பொருள்களை உணர்த்தும் விகுதிகள் எவை? சுக. துணிவுப்பொருளுணர்த்தும் விகுதிகள் எவை? தற்பொருட்டுப்பொருளுணர்த்தும் விகுதி எது? செயப்பாட்டு வினைப்பொருளுணர்த்தும் விகுதிகள் எவை? தன்மைப் பொருளுணர்த்தும் விகுதி எது? பகுதிப்பொருள் விகுதிகள் எவை?

## புணர்ந்து கெடும் விகுதி.

சுஉ. முன்னிலையேவலொருமை ஆய் விகுதியும், பெயரெச்சவிகுதியும், தொழிற்பெயர்விகுதியும், வினைமுதற்பொருளை உணர்த்தும் இகரவிகுதியும், செயப்படு பொருளை உணர்த்தும் ஐவிகுதியும், பகுதியோடு புணர்ந்து பின் கெடுதலும் உண்டு. கெடினும் புணர்ந்து நின்றாற்போலவே தம் பொருளை உணர்த்தும்.

உ - ம். நீ நட, நீ நடப்பி; இவைகளிலே ஆய் விகுதி புணர்ந்து கெட்டது.

கொல்களிறு, ஓடாக்குதிரை; இவைகளிலே பெயரெச்ச விகுதிகள் புணர்ந்து கெட்டன.

அடி, கேடு, இடையீடு; இவைகளிலே தல்லென்னுந் தொழிற்பெயர் விகுதி புணர்ந்து கெட்டது.

காய், தளிர், பூ, கனி; இவைகளிலே வினைமுதற்பொருளை உணர்த்தும் இகரவிகுதி புணர்ந்து கெட்

உண், தின், எழுத்து; இவைகளிலே செயப்படுபொருளை உணர்த்தும் ஐவிகுதி புணர்ந்து கெட்டது.

பரீக்ஷை வினா.—கூஉ. பகுதியோடு புணர்ந்து பின்கெடும் விகுதிகள் எவை?

---

## இடைநிலை.

கூங. இடைநிலைகளாவன, பகுபதங்களிலே பகுதிக்கும் விகுதிக்கும் நடுவிலே நிற்கும் இடைப்பகாப்பதங்களாம். அவை, காலங்காட்டாவிடைநிலையும், காலங்காட்டுமிடைநிலையும், என, இரண்டுவகைப்படும்.

கூச. காலங்காட்டாவிடைநிலைகள் பெயர்ப்பகுபதங்களுக்கு வரும்.

உ-ம். அறிஞன்..................[ஞ் இடைநிலை.]
ஓதுவான்...............[வ் இடைநிலை.]
வலைச்சி..................[ச் இடைநிலை.]
வண்ணாத்தி...............[த் இடைநிலை.]

கூரு. காலங்காட்டுமிடைநிலைகள் தெரிநிலைவினைப் பகுபதங்களுக்கு வரும்.

அவை, இறந்தகாலவிடைநிலையும், நிகழ்காலவிடைநிலையும், எதிர்காலவிடைநிலையும் என, மூன்றுவகைப்படும்.

கூசு. இறந்தகாலவிடைநிலைகள், த், ட், ற், இன் என்னும் நான்குமாம்.

உ-ம். செய்தான், உண்டான், தின்றான், ஓடினான்.

சிறுபான்மை இன்னிடைநிலை, போனான் என இகரங் குறைந்தும், எஞ்சியது என னகரமெய் குறைந்தும் வரும்.

போயது என யகரமெய் இறந்தகாலவிடைநிலையாயும் வரும்.

சுஎ. நிகழ்காலவிடைநிலைகள், ஆநின்று, கின்று, கிறு என்னும் மூன்றுமாம்.

உ - ம். நடவாநின்றான், நடக்கின்றான், நடக்கிறான்.

சுஅ. எதிர்காலவிடைநிலைகள், ப, வ என்னும் இரண்டுமாம்.

உ - ம். நடப்பான், செய்வான்.

பரீக்ஷை வினாக்கள்.— சுங. இடைநிலைகளாவன யாவை? அவை எத்தனை வகைப்படும்? சுச. காலங்காட்டாவிடைநிலைகள் எப்பகுபதங்களுக்கு வரும்? சுரு. காலங்காட்டுமிடைநிலைகள் எப்பகுபதங்களுக்கு வரும்? அவை எத்தனை வகைப்படும்? சுசு. இறந்தகாலவிடைநிலைகள் எவை? சுஎ. நிகழ்காலவிடைநிலைகள் எவை? சுஅ. எதிர்காலவிடைநிலைகள் எவை?

---

## எதிர்மறையிடைநிலை.

சுகூ. இல், அல், ஆ என்னும் மூன்றும் எதிர்மறையிடைநிலைகளாம். இவற்றுள், ஆகாரவிடைநிலை, வருமெழுத்து மெய்யாயிற் கெடாதும், உயிராயிற் கெட்டும் வரும்.

உ - ம். நடந்திலன், நடக்கின்றிலன்; நடக்கலன்; நடவாதான், நடவான், நடவேன்.

நடவாதான் என்பதிலே தகரமெய் எழுத்துப்பேறு.

பரீக்ஷை வினாக்கள்.— சுகூ. எதிர்மறையிடைநிலைகள் எவை? எதிர்மறை ஆகாரவிடைநிலை, எங்கே கெடாதும், எங்கே கெட்டும், வரும்?

## காலங்காட்டும் விகுதி.

எ0. சிலவிகுதிகள், இடைநிலையேலாது, தாமே காலங் காட்டும். அவை வருமாறு:—

து, தும், று, றும் என்னும் விகுதிகள் இறந்தகாலமும் எதிர்காலமுங்காட்டும்.

உ-ம், வந்து, (=வந்தேன்.) வந்தும், (=வந்தேம்.) வருது, (=வருவேன்.) வருதும், (=வருவேம்.) எ-ம்.

சென்று, (=சென்றேன்.) சென்றும், (=சென்றேம்.) சேறு, (=செல்வேன்.) சேறும், (=செல்வேம்.) எ-ம். வரும்.

கு, கும் என்னும் விகுதிகள் எதிர்காலங்காட்டும்.

உ-ம், உண்கு, (=உண்பேன்.) உண்கும், (=உண்பேம்.) என வரும்.

டு, டும் என்னும் விகுதிகள் இறந்தகாலங்காட்டும்.

உ-ம். உண்டு, (=உண்டேன்.) உண்டும், (=உண்டேம்.) என வரும்.

இ என்னும் முன்னிலை வினைமுற்று விகுதியொன்றும், ப, மார் என்னும் படர்க்கைவினைமுற்று விகுதியிரண்டும், க, இய, இயர், அல் என்னும் வியங்கோண்முற்று விகுதி நான்கும், ஆய், இ, ஆல், ஏல், காண், மின், உம், ஈர் என்னும் முன்னிலையேவன் முற்றுவிகுதியெட்டும், ஆகிய பதினைந்து விகுதிகளும் எதிர்காலங்காட்டும்.

உ-ம். (க.) சேறி, (=செல்வாய்.) (உ.) நடப்ப, (=நடப்பார்.) நடமார், (=நடப்பார்.) (ங.) வாழ்க, வாழிய,

வாழியர்; உண்ணல். (ச.) நடவாய், உண்ணுதி மருல், அழேல், சொல்லிக்காண், நடமின், உண்ணும் உண்ணீர்.

உம் என்னுஞ் செய்யுமென் முற்றுவிகுதி நிகழ்கால மும் எதிர்காலமுங்காட்டும்.

உ - ம், உண்ணும்.

எச்சவிகுதிகள் காலங்காட்டல் வினையியலிற் கண்டுகொள்க.

பரீக்ஷை வினாக்கள்.—௭0. இடைநிலைபோலாது தாமே காலம் காட்டும் விகுதிகள் உளவோ? து, தும், று, றும் விகுதிகள் எக்காலங் காட்டும்? கு, கும் விகுதிகள் எக்காலங்காட்டும்? டு, டும் விகுதிகள் எக்காலங்காட்டும்? எதிர்காலங்காட்டும் வேறு விகுதிகள் உளவோ? உம என்னுஞ் செய்யுமென் முற்று விகுதி எக்காலங் காட்டும்?

---

## காலங்காட்டும் பகுதி.

௭க. கு, டு, று என்னும் மூன்றுயிர்மெய்களை இறுதி யாக உடைய சில குற்றியலுகரப்பகுதிகள் விகாரப்பட்டு இறந் தகாலங் காட்டும்.

உ - ம். புக்கான், விட்டான், பெற்றான்.

பரீக்ஷை வினா.—௭க. காலங்காட்டும் பகுதிகளும் உளவோ?

---

## சாரியை.

௭உ. சாரியைகள், அன், ஆன், அம், ஆம், அல், அத்து, அற்று, இன், இற்று, தன், தான், தம், தாம், நம், நும், அ, ஆ, உ, ஏ, ஐ, கு, து, ன் என்னும் இருபத்து மூன்றும் பிறவுமாம்.

உ - ம். நடந்தனன், ஒருபாற்கு, புளியங்காய், புற்றுஞ்சோறு, தொடையல், அகத்தன், பலவற்றை, வண்டின்கால், பதிற்றுப்பத்து, அவன்றன்னை, அவன்றான், அவர் தம்மை, அவர்தாம், எல்லாநம்மையும், எல்லீர்நும்மை யும், நடந்தது, இல்லாப்பொருள், உண்ணுவான், ஒன்றேகால், இரட்டைப்பிள்ளை, உண்குவான்; செய் துகொண்டான், ஆன்.

பரீக்ஷை வினா.—எஉ. சாரியைகளென்பன எவை?

---

## சந்தி.

எ௩. சந்திகளாவன, புணரியலிற் சொல்லப்படுவனவா கிய தோன்றல் முதலிய புணர்ச்சிவிகாரங்களாம்.

பரீக்ஷை வினா.—எ௩. சந்திகளாவன எவை?

---

## விகாரம்.

எச. விகாரங்களாவன, மெல்லினமெய்யை வல்லின மெய்யாக்கலும், வல்லினமெய்யை மெல்லினமெய்யாக்கலும், குற்றெழுத்தை நெட்டெழுத்தாக்கலும், நெட்டெழுத்தைக் குற்றெழுத்தாக்கலும், இல்லாத எழுத்தை விரித்தலும், உள்ள எழுத்தைத் தொகுத்தலும் ஆம்.

பரீக்ஷை வினா.—எச. விகாரங்களாவன எவை?

பதவியன் முற்றிற்று.

---

## ௩. புணரியல்

எரு. புணர்ச்சியாவது, நிலைமொழியும் வருமொழியும் ஒன்றுபடப் புணர்வதாம்.

எசு. அப்புணர்ச்சி வேற்றுமைப்புணர்ச்சியும் அல்வழிப்புணர்ச்சியும் என இரண்டுவகைப்படும்.

எஎ. வேற்றுமைப்புணர்ச்சியாவது, ஐ, ஆல், கு, இன், அது, கண் என்னும் ஆறுருபுகளும் இடையில் மறைந்தாயினும் வெளிப்பட்டாயினும் வரச் சொற்கள் புணர்வதாம்.

| | | |
|---|---|---|
| உ-ம். | வேற்றுமைத்தொகை. | வேற்றுமைவிரி. |
| | மரம்வெட்டினான்....[ஐ] | மரத்தைவெட்டினான். |
| | கல்லெறிந்தான்....[ஆல்] | கல்லாலெறிந்தான். |
| | கொற்றன்மகன்......[கு] | கொற்றனுக்குமகன். |
| | மலைவீழருவி...... [இன்] | மலையின்வீழருவி. |
| | சாத்தன்கை....... [அது] | சாத்தனதுகை. |
| | மலைநெல்.......... [கண்] | மலையின்கணெல். |

எஅ. அல்வழிப்புணர்ச்சியாவது, வேற்றுமையல்லாத வழியிற்புணர்வதாம். அது வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை என்னும் ஐந்து தொகைநிலைத்தொடரும், எழுவாய்த்தொடர், விளித்தொடர், தெரிநிலைவினைமுற்றுத்தொடர், குறிப்புவினைமுற்றுத்தொடர், பெயரெச்சத்தொடர், வினையெச்சத்தொடர், இடைச்சொற்றொடர், உரிச்சொற்றொடர், அடுக்குத்தொடர் என்னும் ஒன்பது தொகாநிலைத்தொடருமாகப், பதினான்கு வகைப்படும்.

தொகைநிலைத்தொடர்களுக்கு உதாரணம்.

(க.) கொல்யானை............வினைத்தொகை.
(உ.) கருங்குதிரை.........பண்புத்தொகை.
சாரைப்பாம்பு.......இருபெயரொட்டுப்பண்புத்தொகை.
(ங.) மதிமுகம்............உவமைத்தொகை.

(௪.) இராப்பகல்.........உம்மைத்தொகை.
(௫.) பொற்றொடி........அன்மொழித்தொகை.

தொகாநிலைத்தொடர்களுக்கு உதாரணம்.

(௧.) சாத்தன்வந்தான்...எழுவாய்த்தொடர்.
(௨.) சாத்தாவா.........விளித்தொடர்.
(௩.) வந்தான்சாத்தன்..தெரிநிலைவினைமுற்றுத்தொடர்.
(௪.) பொன்னனிவன்....குறிப்புவினைமுற்றுத்தொடர்.
(௫.) வந்தசாத்தன்.......பெயரெச்சத்தொடர்.
(௬.) வந்துபோனான்.....வினையெச்சத்தொடர்.
(௭.) மற்றொன்று.........இடைச்சொற்றொடர்.
(௮.) நனிபேதை..........உரிச்சொற்றொடர்.
(௯.) பாம்பு பாம்பு......அடுக்குத்தொடர்.

௭௯. இப்படி மொழிகள், வேற்றுமைவழியாலும் அல்வழியாலும் புணருமிடத்து, இயல்பாகவாயினும், விகாரமாகவாயினும், புணரும்.

௮௦. இயல்புபுணர்ச்சியாவது, நிலைமொழியும் வருமொழியும் விகாரமின்றிப் புணர்வதாம்.

உ-ம். பொன்மணி, சாத்தன்கை.

௮௧. விகாரப்புணர்ச்சியாவது, நிலைமொழியேனும், வருமொழியேனும், இவ்விருமொழியுமேனும், தோன்றல், திரிதல், கெடுதல் என்னும் மூன்று விகாரங்களுள் ஒன்றையாயினும் பலவற்றையாயினும் பெற்றுப் புணர்வதாம்.

உ-ம். வாழை + பழம் = வாழைப்பழம் தோன்றல்.
மண் + குடம் = மட்குடம் திரிதல்.
மரம் + வேர் = மரவேர் கெடுதல்.

நிலம் + பனை = நிலப்பனை கெடுதல், தோன்
[றல்.
பனை + காய் = பனங்காய் கெடுதல், தோன்
[றல், திரிதல்.

அஉ. தோன்றல், திரிதல், கெடுதல் என்னும் இவ்வி காரமூன்றும், மயக்கவிதி இன்மை பற்றியும், அல்வழி வேற் றுமைப் பொருளுணர்க்கம் பற்றியும், வரும்.

பரீக்ஷை வினாக்கள்.—எடு. புணர்ச்சியாவது யாது? எசு. அப் புணர்ச்சி எத்தனை வகைப்படும்? எஎ. வேற்றுமைப்புணர்ச்சி யாவது யாது? எஅ. அல்வழிப்புணர்ச்சியாவது யாது? அது எத்தனை வகைப்படும்? எகூ. மொழிகள், வேற்றுமை வழியா லும் அல்வழியாலும் புணருமிடத்து, எப்படிப் புணரும்? அ0. இயல்பு புணர்ச்சியாவது யாது? அக. விகாரப்புணர்ச்சியா வது யாது? அஉ. தோன்றல் முதலிய விகாரங்கள் எவை பற்றி வரும்?

---

## மயங்கா எழுத்துக்கள்.

அஙு. உயிரோடு உயிர்க்கு மயக்கவிதி இன்மையால், உயிரீற்றின்முன், உயிர் வரின், இடையே உடம்படுமெய் யென ஒன்று தோன்றும்.

உடம்படுமெய்யாவது, வந்த உயிருக்கு உடம்பாக நிற்கும் மெய். நிலைமொழியீற்றினும் வருமொழி முதலினும்நின்ற உயிர்களை உடம்படுத்தும் மெய் எனினும் பொருந்தும். படுத்தலெனினும், உடன்படுத்தலெனினும், ஒக்கும்.

அச. மெய்யீற்றின்முன் மயங்குதற்கு உரியல்லாத மெய் வரின், நிலைமொழியீறேனும், வருமொழிமுதலேனும், இவ்விரண்டுமேனும் விகாரப்படும்.

௬௫. மொழிக்கு ஈறாகுமெனப்பட்ட பதினொருமெய்களின் முன்னும், மொழிக்கு முதலாகுமெனப்பட்ட ஒன்பது மெய்களும் புணரும்போது, மயங்குதற்கு உரியனவல்லாத மெய்களைச் சொல்வாம்:—

லகர ளகரங்களின் முன்னே த ஞ ந ம என்னும் நான்கும் மயங்கா. ணகர னகரங்களின் முன்னே த ந என்னும் இரண்டும் மயங்கா. மகரமெய்யின் முன்னே க ச த ஞ ந என்னும் ஐந்தும் மயங்கா. ஞகரத்தின் முன்னே சகரமும் யகரமுமல்லாத ஏழும் மயங்கா. நகரத்தின் முன்னே தகரமும் யகரமுமல்லாத ஏழும் மயங்கா. வகரத்தின் முன்னே யகரமல்லாத எட்டும் மயங்கா.

பரீக்ஷை வினாக்கள்.—௬௩. உயிரீற்றின்முன் உயிர் வரின் எப்படியாகும்? உடம்படுமெய்யாவது யாது? உடம்படுமெய்யென்பதற்கு வேறு பொருளும் உண்டோ? ௬௪. மெய்யீற்றின் முன் மயங்குதற்கு உரியதல்லாத மெய் வரின் எப்படியாகும்? ௬௫. லகர ளகரங்களின் முன் எவ்வெழுத்துக்கள் மயங்கா? ணகர னகரங்களின் முன் எவ்வெழுத்துக்கள் மயங்கா? மகரமெய்யின் முன் எவ்வெழுத்துக்கள் மயங்கா? ஞகரத்தின் முன் எவ்வெழுத்துக்கள் மயங்கா? நகரத்தின் முன் எவ்வெழுத்துக்கள் மயங்கா? வகரத்தின் முன் எவ்வெழுத்துக்கள் மயங்கா?

## மெய்யீற்றின் முன் உயிர் புணர்தல்.

௬௬. தனிக்குற்றெழுத்தைச் சாராத மெய்யீற்றின் முன் உயிர் வந்தால், வந்தவுயிர் அந்தமெய்யின்மேல் ஏறும்.

உ-ம். ஆண் + அழகு = ஆணழகு.
மரம் + உண்டு = மரமுண்டு.

அஎ. தனிக்குற்றெழுத்தைச் சார்ந்த மெய்யீற்றின் முன் உயிர் வந்தால், அந்தமெய் இரட்டிக்கும்; இரட்டித்த மெய்யின்மேல் வந்தவுயிர் ஏறும்.

உ - ம். கல் + எறிந்தான் = கல்லெறிந்தான்.
பொன் + அழகிது = பொன்னழகிது.

பரீக்ஷை வினாக்கள்.—அசு. தனிக்குற்றெழுத்தைச் சாராத மெய்யீற்றின் முன் உயிர் வந்தால் எப்படிப் புணரும்? அஎ. தனிக்குற்றெழுத்தைச் சார்ந்த மெய்யீற்றின் முன் உயிர் வந்தால் எப்படிப் புணரும்?

---

## உயிரீற்றின் முன் உயிர் புணர்தல்.

அஅ. இ, ஈ, ஐ என்னும் மூன்றுயிரீற்றின் முன்னும் உயிர்முதன்மொழி வந்தால், இடையில் யகரம் உடம்படுமெய்யாக வரும்.

உ - ம். கிளி + அழகு = கிளியழகு.
தீ + எரிந்தது = தீயெரிந்தது.
பனை + ஓலை = பனையோலை.

அகூ. அ, ஆ, உ, ஊ, ஒ, ஓ, ஔ என்னும் ஏழுயிரீற்றின் முன்னும் உயிர் முதன்மொழி வந்தால், இடையில் வகரம் உடம்படுமெய்யாக வரும்.

உ - ம். பல + அணி = பலவணி
பலா + இலை = பலாவிலை.
திரு + அடி = திருவடி.
பூ + அரும்பு = பூவரும்பு.
நொ + அழகா = நொவ்வழகா.
கோ + அழகு = கோவழகு.
கௌ + அழகு = கௌவழகு.

கோ என்பதன்முன் இல் என்னும் பெயர் வந்தால் இடையில் வகரம் வராது யகரம் வரும்.

உ-ம். கோ + இல் = கோயில்.

ஒரோவிடத்துக் கோவில் எனவும் வரும்.

௩௦. ஏகாரவுயிரீற்றின் முன் உயிர்முதன்மொழி வந்தால், இடையில் யகரமாயினும், வகரமாயினும், உடம்படுமெய்யாக வரும்.

உ-ம். அவனே + அழகன் = அவனேயழகன்.
சே + உழுதது = சேவுழுதது.

பரீக்ஷை வினாக்கள்.—௨௮. இ, ஈ, ஐ என்னும் மூன்றுயிரீற்றின் முன்னும் உயிர்முதன் மொழி வந்தால் எப்படிப் புணரும்? ௨௯. அ, ஆ, உ, ஊ, ஒ, ஓ, ஔ என்னும் ஏழுயிரீற்றின் முன்னும் உயிர்முதன் மொழிவந்தால் எப்படிப் புணரும்? கோ என்பதன்முன் இல் என்னும் பெயர் வந்தால் இப்படியே முடியுமோ? ௩௦. ஏகாரவுயிரீற்றின் முன் உயிர்முதன் மொழி வந்தால் எப்படிப் புணரும்?

---

## குற்றியலுகரத்தின் முன் உயிரும் யகரமும் புணர்தல்.

௩௧. குற்றியலுகரம், உயிர் வந்தால், தான் ஏறிநின்ற மெய்யை விட்டுக் கெடும்; யகரம் வந்தால் இகரமாகத் திரியும்.

உ-ம். ஆடு + அரிது = ஆடரிது.
நாகு + யாது = நாகியாது.

குற்றியலுகரஞ் சமஸ்கிருதபாடையில் இல்லாமையால் சம்பு, இந்து முதலிய வடமொழிகளின் ஈற்றுகரம் உயிர்வரிற் கெடாது நிற்க உடம்படுமெய் தோன்றும்.

உ - ம். சம்பு + அருளினன் = சம்புவருளினன்.
இந்து + உதித்தது = இந்துவுதித்தது.

பரீக்ஷை வினாக்கள்.—கக. குற்றியலுகரத்தின் முன் உயிர் வந்தால் எப்படியாம்? குற்றியலுகரத்தின் முன் யகரம் வந்தால் எப்படியாம்? குற்றியலுகரஞ் சம்ஸ்கிருத பாஷையில் உண்டா இல்லையா? வடமொழிகளின் ஈற்றுகரத்தின் முன் உயிர்வரின் எப்படியாம்?

---

## சிலமுற்றியலுகரவீற்றின் முன் உயிரும் யகரமும் புணர்தல்.

கூஉ. சில முற்றியலுகரமும், உயிர்வரின் மெய்யை விட்டுக் கெடுதலும், யகரம் வரின் இகரமாகத் திரிதலுமாகிய இவ்விரு விதியையும், பெறும்.

உ - ம். கதவு + அழகு = கதவழகு.
கதவு + யாது = கதவியாது.

பரீக்ஷை வினா.—கஉ. முற்றியலுகரங் குற்றியலுகரவீற்று விதி பெறுதா?

---

## எல்லாவீற்றின் முன்னும் மெல்லினமும் இடையினமும் புணர்தல்.

கூ௩. உயிரும் மெய்யுமாகிய எல்லாவீற்றின் முன்னும் வரும் ஞ ந ம ய வக்கள், இருவழியினும், இயல்பாம்; ஆயினும், இவற்றுள், ண ள ன ல என்னும் நான்கின் முன்னும் வரு நகரந் திரியும். இத்திரிபு மேற்கூறப்படும்.

விளா, பலா, புளி, தீ, கடு, பூ, சே, பனை, கோ, கௌ, உரிஞ், மண், பொருந், மரம், பொன், வேய், வேர்,

வேல், தெவ், யாழ், வாள் என்னும் நிலைமொழிக ளோடு, அல்வழிப்புணர்ச்சிக்கு உதாரணமாக, ஞான்றது, நீண்டது, மாண்டது, யாது, வலிது என்னும் வருமொழிகளையும், வேற்றுமைப்புணர்ச்சிக்கு உதாரணமாக, ஞாற்சி, நீட்சி, மாட்சி, யாப்பு, வன்மை என்னும் வருமொழிகளையும் கூட்டிக் கண்டுகொள்க.

| | | | | |
|---|---|---|---|---|
| உ - ம். விள | + | ஞான்றது | = | விளஞான்றது. |
| உரிஞ் | + | ஞான்றது | = | உரிஞுஞான்றது. |
| விள | + | ஞாற்சி | = | விளஞாற்சி. |
| உரிஞ் | + | ஞாற்சி | = | உரிஞுஞாற்சி. |

நிலைமொழியீற்றுட் சில விகாரப்படுதல், பின்பு அவ்வவ் வீற்றிற்கூறும் விதியாற்பெறப்படும்.

௩௮. தனிக்குற்றெழுத்தைச் சார்ந்த யகரமெய்யின் முன்னுந் தனி ஐகாரத்தின் முன்னும் வரும் மெல்லினம் மிகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| உ - ம். மெய் | + | ஞானம் | = | மெய்ஞ்ஞானம். |
| செய் | + | நன்றி | = | செய்ந்நன்றி. |
| கை | + | மாறு | = | கைம்மாறு. |

௩௯. நொ, து என்னும் இவ்விரண்டின் முன்வரும் ஞ ந ம ய வக்கள் மிகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| உ - ம். நொ | + | ஞெள்ளா | = | நொஞ்ஞெள்ளா. |
| | | யவனா | = | நொய்யவனா. |
| து | + | ஞெள்ளா | = | துஞ்ஞெள்ளா. |
| | | யவனா | = | துய்யவனா. |

நொ - துன்பப்படு. து - உண்.

பரீக்ஷை வினாக்கள்.—௬௩. எல்லாவீற்றின் முன்னும் ஞ ந ம ய வக்கள் வந்தால் எப்படிப் புணரும்? ௬௪. ஞ ந ம ய வக்கள் எந்தமொழி முன்னும் மிகாவோ? ௬௫. ண, ன வென்னும் இவ்விரண்டின் முன்னும் ஞ ந ம ய வக்கள் இயல்பேயாமோ?

## மெய்யீற்றின் முன் யகரம் புணர்தல்.

௬௬. யகரமல்லாத மெய்கள், தம்முன் யகரம் வந்தால், இகரச்சாரியை பெறுதலுமுண்டு.

உ-ம். வேள் + யாவன் = வேளியாவன்.
மண் + யானை = மண்ணியானை.

வேள்யாவன் என இகரச்சாரியை பெறாது வருதலே பெரும்பான்மையாம்.

௬௭. தனிக்குற்றெழுத்தைச் சாராத யகரமெய், வருமொழி யகரம் வந்தாற் கெடும்.

உ-ம். வேய் + யாது = வேயாது.

பரீக்ஷை வினாக்கள்.—௬௬. யகரமல்லாத மெய்களின் முன் யகரம் வந்தால் எப்படிப் புணரும்? ௬௭. தனிக்குற்றெழுத்தைச் சாராத யகரமெய் முன் யகரம் வந்தால் எப்படிப் புணரும்?

---

## மூன்று சுட்டின் முன்னும் எகரவினா முன்னும் நாற்கணமும் புணர்தல்.

௬௮. அ, இ, உ என்னு மூன்று சுட்டின் முன்னும், எகரவினா முன்னும், யகரமொழிந்த மெய்கள் வந்தால், வந்த வெழுத்து மிகும்; யகரமும் உயிரும் வந்தால், இடையில் வகரந் தோன்றும்.

உ-ம். அக்குதிரை இக்குதிரை உக்குதிரை எக்குதிரை.
அம்மலை இம்மலை உம்மலை எம்மலை.
அவ்வழி இவ்வழி உவ்வழி எவ்வழி.
அவ்யானை இவ்யானை உவ்யானை எவ்யானை.
அவ்வுயிர் இவ்வுயிர் உவ்வுயிர் எவ்வுயிர்.

௯௯. அந்த, இந்த, உந்த, எந்த என மரூஉமொழிகளாய் வருஞ் சுட்டு வினாக்களின் முன் வரும் வல்லினம் மிகும்.

உ-ம். அந்தக்கல் இந்தக்கல் உந்தக்கல் எந்தக்கல்.

பரீக்ஷை வினாக்கள்.—௯௮. அ, இ, உ, என்னும் மூன்று சுட்டின் முன்னும், எகரவினா முன்னும், யகரமொழிந்த மெய்கள் வந்தால், எப்படிப் புணரும்? இந்நான்கன் முன்னும், யகரமும் உயிரும் வந்தால் எப்படிப் புணரும்? ௯௯. அந்த, இந்த, உந்த, எந்த என்னும் மரூஉமொழிகளின் முன் வரும் வல்லினம் எப்படியாம்?

---

## உயர்திணைப்பெயர் பொதுப்பெயர்களின் முன் வல்லினம் புணர்தல்.

௧00. உயர்திணைப்பெயர் பொதுப்பெயர்களின், ஈற்றுயிர் முன்னும், யகர ரகர மெய்களின் முன்னும் வரும் வல்லினம் இருவழியினும் மிகாதியல்பாம். உ-ம்.

| அல்வழி. | வேற்றுமை. | |
|---|---|---|
| நம்பிகுறியன் | நம்பிகை | உயர்திணைப் பெயர். |
| விடலைசிறியன் | விடலைசெவி | |
| சேய்பெரியன் | சேய்படை | |
| அவர் தீயர் | அவர்தலை | |

| | | |
|---|---|---|
| சாத்திகுறியள் / சாத்திகுறிது | சாத்திகால். | |
| தந்தைசிறியன் / தந்தைசிறிது | தந்தைசெவி | பொதுப்பெயர். |
| தாய்கொடியள் / தாய்கொடிது | தாய்கை | |

ரகரமெய் பொதுப்பெயர்க்கு ஈருகாது.

நம்பிக்கொற்றன், சாத்திப்பெண், சேய்க்கடவுள், தாய்ப்பசு என இருபெயரொட்டுப் பண்புத்தொகையினும், தாய்க்கொலை, ஒன்னலர்ச்செகுத்தான் என இரண்டாம்வேற்றுமைத் தொகையினும், செட்டித்தெரு என ஒரோவிடத்து ஆறும்வேற்றுமைத்தொகையினும், வல்லின மிகுமெனக் கொள்க.

மகப்பிறந்தது, மகப்பெற்றாள். எ - ம். பிதாக்கொடியன், பிதாக்கை. எ-ம். ஆடேச்சிறியன், ஆடேச்செவி. எ-ம். கோத்தீயன், கோத்தலை. எ-ம். அகர ஆகார ஊகார ஓகாரங்களின் முன் வரும் வல்லினம் இருவழியினும் மிகுமெனக்கொள்க.

௧0௧. உயர்திணைப்பெயர் பொதுப்பெயர்களின் ஈற்று லகர ளகர ணகர னகரமெய்கள், வல்லினம் வந்தால், இருவழியினுந் திரியாதியல்பாம். உ-ம்.

| அல்வழி. | வேற்றுமை. | |
|---|---|---|
| தோன்றல்குறியன் | தோன்றல்கை | உயர்திணைப் பெயர். |
| அவள் சிறியள் | அவள்செவி | |
| அவன் பெரியன் | அவன்பொருள் | |

ணகரமெய் உயர்திணைப்பெயர்க்கு ஈருகாது.

| | | |
|---|---|---|
| தூங்கல்குறியன் / தூங்கல்குறிது | தூங்கல்கை. | பொதுப்பெயர். |
| மக்கள் சிறியர் / மக்கள் சிறிய | மக்கள்செவி | |
| ஆண் பெரியன் / ஆண் பெரிது | ஆண்புறம் | |
| சாத்தன் சிறியன் / சாத்தன் சிறிது | சாத்தன்செவி | |

உயர்திணைப் பெயரீற்று லகர ளகரங்கள், மாற்கடவுள், மக்கட்சுட்டு என இருபெயரொட்டுப் பண்புத்தொகையினும், லகர ளகர னகரங்கள், குரிசிற் கண்டேன், மகட்கொடுத்தான், தலைவற்புகழ்ந்தான், என இரண்டாம்வேற்றுமைத்தொகையினுந் திரியுமெனக் கொள்க.

லகர ளகரங்களின் முன்னும், ணகர னகரங்களின் முன்னும், தகரம் மயங்குதற்கு விதியில்லாமையால், வரும் விகாரம் மேற்கூறப்படும்.

பரீக்ஷை வினாக்கள்.—௧௦௦. உயர்திணைப் பெயர் பொதுப்பெயர்களின் ஈற்றுயிர் முன்னும், யகர ரகரமெய்களின் முன்னும், வல்லினம் வரின் எப்படிப் புணரும்? இவைகளின் முன் வரும் வல்லினம் எந்த விடத்தும் மிகாவோ? ௧௦௧. உயர்திணைப் பெயர் பொதுப்பெயர்களின் ஈற்று லகர ளகர ணகர னகரங்களின் முன் வல்லினம் வந்தால் எப்படிப் புணரும்? இவைகள், வல்லினம் வந்தால் எவ்விடத்துந் திரியாவோ?

---

## சில வுயர்திணைப் பெயர் முன் நாற்கணமும் புணர்தல்.

௧௦௨. ணகர ரகரவீற்றுச் சிலவுயர்திணைப் பெயர்முன் நாற்கணமும் புணருமிடத்து, உம்மைத்தொகையினும், இருபெயரொட்டுப் பண்புத்தொகையினும், ஆறும்வேற்றுமைத்

தொகையினும், நிலைமொழியேனும், வருமொழியேனும், இவ்விருமொழியுமேனும், விகாரப்படும். உ-ம்.

உம்மைத்தொகை.

| | | | | |
|---|---|---|---|---|
| கபிலன் | + | பரணன் | = | கபிலபரணர். |

இருபெயரொட்டுப்பண்புத்தொகை.

| | | | | |
|---|---|---|---|---|
| சிவன் | + | பெருமான் | = | சிவபெருமான். |
| முருகன் | + | கடவுள் | = | முருகக்கடவுள். |
| சதாசிவன் | + | நாவலன் | = | சதாசிவநாவலன். |
| கந்தன் | + | வேள் | = | கந்தவேள். |
| வேலாயுதன் | + | உபாத்தியாயன் | = | வேலாயுதவுபாத்தியாயன். |
| தியாகராசர் | + | செட்டியார் | = | தியாகராசச்செட்டியார். |
| விநாயகர் | + | முதலியார் | = | விநாயகமுதலியார். |

வேற்றுமைத்தொகை.

| | | | | |
|---|---|---|---|---|
| குமரன் | + | கோட்டம் | = | குமரகோட்டம். |
| | | | | குமரக்கோட்டம். |
| வாணிகர் | + | தெரு | = | வாணிகதெரு. |
| வேள்ளாளர் | + | வீதி | = | வேளாளவீதி. |

பரீக்ஷை வினா.—௧௦௨. எல்லாவுயர்திணைப் பெயரும், நாற்கணங்களோடு புணருமிடத்து, இயல்பாகவே புணருமோ?

---

## விளிப்பெயர் முன் வல்லினம் புணர்தல்.

௧௦௩. விளிப்பெயரீற்று உயிர்முன்னும் ய ர ழ வொற்றுக்களின் முன்னும் வரும் வல்லினம் மிகாதியல்பாம். அப்பெயரீற்று லகர ளகர னகர ணகரங்களின், வல்லினம் வந்தால், திரியாதியல்பாம்.

| | |
|---|---|
| உ-ம். புலவபாடு | சாத்தா கேள் |
| நம்பிசெல் | தம்பீ தா |
| வேந்து கூறு | மகனே படி |
| விடலைபோ | நங்காய் பார் |
| நாய்கீர் சென்மின் | குறும்பூழ் போ |
| தோன்றல் கூறாய் | மக்காள் சொல்லீர் |
| ஆண் கேளாய் | கோன் பேசாய் |

விளக்கொடியை, பிதாக் கூறாய், ஆடூஉச் சொல்லாய், சேய் செல்லாய், கோப் பேசாய் என அகர ஆகார ஊகார ஏகார, ஓகாரங்களை இயல்பீறாகவுடைய விளிப்பெயர் முன் வரும் வல்லினம் மிகுமெனக்கொள்க.

பரீக்ஷை வினாக்கள்,—௧௦௩. விளிப்பெயரீற்று உயிர் முன்னும், ய ர ழ மெய் முன்னும், வல்லினம் வரின் எப்படியாம்? விளிப்பெயரீற்று லகர ளகர ணகர னகரங்களின் முன் வல்லினம் வரின் எப்படியாம்? விளிப்பெயர் முன் வரும் வல்லினம் எவ்விடத்தும் மிகாவோ?

## ஈற்று வினா முன்னும் யாவினா முன்னும் வல்லினம் புணர்தல்.

௧௦௪. ஆ, ஏ, ஓ என்னும் மூன்றீற்று வினாமுன்னும் யாவினாமுன்னும் வரும் வல்லினம் மிகாவாம்.

| | |
|---|---|
| உ-ம். அவனா கொண்டான் | அவனே சென்றான் |
| அவனோ தந்தான் | யா பெரிய |

பரீக்ஷை வினா.—௧௦௪, ஆ, ஏ, ஓ என்னும் மூன்றீற்று வினா முன்னும், யாவினா முன்னும், வல்லினம் வரின் எப்படியாம்?

## வினைமுற்று வினைத்தொகைகளின் முன் வல்லினம் புணர்தல்.

௧௦௫. வினைமுற்று வினைத்தொகைகளின் ஈற்றுயிர் முன்னும், ய ர ழ வொற்றுக்களின் முன்னும் வரும் வல்லினம் மிகாதியல்பாம். அச்சொற்களின் ஈற்று லகர ளகர னகரங்கள், வல்லினம் வந்தால், திரியாதியல்பாம். உ - ம்.

### தெரிநிலை வினைமுற்று.

| | |
|---|---|
| உண்டன குதிரைகள் | உண்ணு குதிரைகள் |
| வருதி சாத்தா | வந்தனை சாத்தா |
| வந்தது புலி | வந்தாய் பூதா |
| உண்டீர் தேவரே | உண்டார் தேவர் |
| உண்பல் சிறியேன் | உண்டாள் சாத்தி |
| வந்தேன் சிறியேன் | வந்தான் சாத்தன் |

### குறிப்பு வினைமுற்று.

| | |
|---|---|
| கரியன குதிரைகள் | வில்லி சாத்தா |
| கரியது தகர் | கரியை தேவா |
| கரியாய் சாத்தா | கரியீர் சாத்தரே |

கூயிற்றுக் குயில், குறுந்தாட்டுக் களிறு என வன்றொடர்க் குற்றியலுகரவீற்றுத் தெரிநிலைவினைமுற்றின் முன்னும், குறிப்பு வினைமுற்றின் முன்னுமாத்திரம் வரும் வல்லினம் மிகுமெனக் கொள்க.

### ஏவலொருமை வினைமுற்று.

| | |
|---|---|
| கட கொற்றா | வா சாத்தா |
| ஏறி தேவா | கொடு பூதா |
| ஓடு கொற்றா | வெஃகு சாத்தா |

| | |
|---|---|
| பரசு தேவா | நடந்து பூதா |
| அஞ்சு கொற்று | எய்து சாத்தா |
| வனை தேவா | செய் கொற்று |
| சேர் சாத்தா | வாழ் பூதா |
| நில் கொற்று | கேள் சாத்தா |
| உண் கொற்று | தின் சாத்தா |

நொ, து என்னும் ஏவலொருமை வினைமுற்றிரண்டின் முன்னும் வரும் வல்லினம் மிகும்.

உ - ம். நொக்கொற்று துச்சாத்தா

## வினைத்தொகை.

| | |
|---|---|
| விரிகதிர் | ஈபொருள் |
| அடுகளிறு | வனைகலம் |
| ஆடுபாம்பு | அஃகுபிணி |
| பெருகுபுனல் | ஈட்டுதனம் |
| விஞ்சுபுகழ் | மல்குசுடர் |
| உண்கலம் | தின்பண்டம் |
| கொல்களிறு | கொள்கலம் |
| செய்கடன் | தேர்பொருள் |
| வீழ்புனல் | |

ஏவலொருமைவினைமுற்றும் வினைத்தொகையும் வன்றொடர்க் குற்றியலுகர வீற்றனவாயினும், அவற்றின் முன் வரும் வல்லினம் மிகாமை காண்க.

ணகர ழகரவீறுகள், வினைத்தொகைக்கும் ஏவன்முற்றுக்குமன்றி, மற்றைவினைமுற்றுக்களுக்கு இல்லை. லகர வீறு குறிப்புவினைமுற்றுக்கு இல்லை.

பரீக்ஷை வினாக்கள்.—௯௦௫. வினைமுற்று வினைத்தொகைகளின் ஈற்றுயிர் முன்னும், ய ர ழ மெய் முன்னும், வல்லி

முன் வரும் வல்லினம் மிகா? கoகூ. வன்றொடர்க் குற்றிய லுகரவீற்று வினையெச்சத்தின் முன் வரும் வல்லினம் எப்படியாம்? வன்றொடரொழிந்த குற்றியலுகரவீற்றுவினையெச்சங்களின் முன் வரும் வல்லினம் எப்படியாம்? தல்விகுதி கெட நின்ற எதிர்மறைத் தெரிநிலைவினை வினையெச்சத்தின் முன் வரும் வல்லினம் எப்படியாம்? ககo. வினையெச்சத்திற்று னகர லகரங்களின் முன் வல்லினம் வந்தால் எப்படியாம்? எல்லா வினையெச்சத்திற்று னகரமும் வல்லினம் வந்தாற்றிரியுமோ?

## இ உ ஐயொழிந்த உயிரீற்றஃறிணைப் பெயர்முன் வல்லினம் புணர்தல்.

ககக. அ, ஆ, ஈ, ஊ, ஏ, ஓ என்னும் ஆறுயிரீற்றஃறிணைப் பெயர்முன்னும் வரும் வல்லினம் இருவழியினும் மிகும். உ-ம்.

| அல்வழி. | வேற்றுமை. |
|---|---|
| விளக்குறிது | விளக்கோடு |
| தாராச்சிறிது | தாராச்சிறை |
| தீச்சுடும் | தீச்சுவாலை |
| கொண்மூக்கரிது | கொண்மூக்கருமை |
| சேப்பெரிது | சேப்பெருமை |
| கோச்சிறிது | கோச்செவி |

ககஉ. அகரவீற்றஃறிணைப் பன்மைப்பெயர் முன்னும், வகரவைகாரவீற்றஃறிணைப் பன்மைப்பெயர் முன்னும், வரும் வல்லினம் இருவழியினும் மிகா. உ-ம்.

| அல்வழி. | வேற்றுமை. |
|---|---|
| பல போயின | பல படைத்தான் |
| சில சென்றன | சில்சொற்றான் |

உள்ளன குறைந்தன உள்ளன கொடுத்தான்
உள்ளவை தகர்ந்தன உள்ளவை தந்தான்

பல சில என்னும் இருபெயருந் தம்முன்னே தாம் வரின், வருமொழிமுதலெழுத்து இயல்பாகியும், மிக்கும், நிலைமொழி யீற்றின் அகரங் கெட லகரம் றகரமாகத் திரிந்துந் திரியாதும், வரும்.

உ - ம். பலபல பலப்பல பற்பல பல்பல
சிலசில சிலச்சில சிற்சில சில்சில

பல சில என்னும் இருபெயர் முன்னும் பண்புத்தொகையிற் பிற பெயர் வரின், நிலைமொழியீற்றின் அகரங் கெடாதுங் கெட்டும் வரும்.

உ - ம். பலகலை பல்கலை சிலகலை சில்கலை
பலமலை பன்மலை சிலமலை சின்மலை
பலயானை பல்யானை சிலயானை சில்யானை
பலவணி பல்லணி சிலவணி சில்லணி

ககரு. ஆ, மா, ஆமா, பீ, நீ என்னும் பெயர்களின் முன் வரும் வல்லினம் அல்வழியின் இயல்பாம்.

உ - ம். ஆ தீண்டிற்று மா சிறிது ஆமா பெரிது
பீ கிடந்தது நீ பெரியை

மா - இங்கே விலங்கு. ஆமா - காட்டுப்பசு.

ககச. பூ என்னும் பெயர் முன் வரும் வல்லெழுத்து மிகுதலேயன்றி இனமெல்லெழுத்தும் மிகும்.

உ - ம். பூங்கொடி பூங்கரும்பு.

பூ என்பது மலருக்கும் பொலிவுக்கும் பெயர். மலர்ப்பொருளில் வேற்றுமை; பொலிவுப்பொருளில் அல்வழி.

பரீக்ஷை வினுக்கள்.—கககூ. அ, ஆ, ஈ, ஊ, ஏ, ஓ என்னும் ஆறுயிரீற்று அஃறிணைப்பெயர் முன்னும் வல்லினம் வரின் எப்படியாம்? ககஉ. அகரவீற்றஃறிணைப் பன்மைப்பெயர், வகரவைகாரவீற்றஃறிணைப் பன்மைப் பெயர் என்னும் இவைகளின் முன் வரும் வல்லினமும் மிகுமா? பல, சில என்னும் இருபெயரும் தம்முன்னே தாம் வரின் எப்படிப் புணரும்? இவ்விரண்டின் முன்னும் பண்புத்தொகையிற் பிறபெயர் வரின் எப்படிப் புணரும்? ககஙு. ஆ, மா, ஆமா, பீ, நீ என்னும் பெயர்களின் முன் வல்லினம் வரின் எப்படியாம்? ககச. பூ என்னும் பெயர் முன் வரும் வல்லினம் மிகுகலேயன்றி வேறு விதியும் பெறுமோ?

---

## முற்றியலுகர வீற்றுப் பெயர் முன் வல்லினம் புணர்தல்.

ககரு. முற்றியலுகரவீற்றுப் பெயர் முன் வரும் வல்லினம் இருவழியினும் மிகும். உ-ம்.

| அல்வழி. | வேற்றுமை. |
|---|---|
| பசுக்குறிது | பசுக்கோடு |

ககசு. முற்றுகரவீற்று அது, இது, உது என்னுஞ் சுட்டுப்பெயர் முன்னும், எது என்னும் விஞப்பெயர் முன்னும், ஒரு, இரு, அறு, எழு என்னும் விகாரவெண்ணுப் பெயர் முன்னும் வரும் வல்லினம் மிகாவாம். உ-ம்.

| அல்வழி. | வேற்றுமை. |
|---|---|
| அது குறிது | அது கண்டான் |
| இது சிறிது | இது சொற்றுன் |
| உது தீது | உது தந்தான் |
| எது பெரிது | எது பெற்றுன் |

அல்வழி.

ஒருகை; [illegible], அறுகுணம், எழுகடல்.

பரீக்ஷை வினாக்கள்.—௧௧௫. முற்றியலுகர வீற்றுப் பெயர்முன் வல்லினம் வரின் எப்படிப் புணரும்? ௧௧௬. முற்றுகரவீற்றுச் சுட்டுப்பெயர் முன்னும், வினாப்பெயர் முன்னும், விகார வெண்ணுப்பெயர் முன்னும் வல்லினம் வரின் எப்படிப் புணரும்?

## இ ஐ ய ர ழ வீற் றஃறிணைப் பெயர்முன் வல்லினம் புணர்தல்.

௧௧௭. இகர ஐகாரவுயிர்களையும், ய ர ழ வும் இறுதியாகவுடைய அஃறிணைப்பெயர்களின் முன்வரும் வல்லினம், வேற்றுமையினும், அல்வழியிலே பண்புத்தொகையினும், உவமைத்தொகையினும், மிகும். எழுவாய்த் தொடரினும், உம்மைத்தொகையினும், மிகாவாம். உ-ம்.

| | | | |
|---|---|---|---|
| கரிக்கோடு | யானைச்செவி | | வேற்று |
| நாய்க்கால் | தேர்த்தலை | பூழ்ச்செவி | மை. |
| மாசித்திங்கள் | சாரைப்பாம்பு | | பண்புத் |
| மெய்க்கீர்த்தி | கார்ப்பருவம் | பூழ்ப்பறவை | |
| காவிக்கண் | குவளைக்கண் | | உவமைத் |
| வேய்த்தோள் | கார்க்குழல் | காழ்ப்படிவம் | தொகை. |
| பருத்திகுறிது | யானைகரிது | | எழுவாய். |
| நாய்தீது | வேர்சிறிது | யாழ்பெரிது | |
| பரணிகார்த்திகை | யானைகுதிரை | | உம்மைத் |
| பேய்பூதம் | சீர்கனல் | இகழ்புகழ் | தொகை. |

இரண்டாம் வேற்றுமைத் தொகையினும், ஏழாம்வேற்றுமைத் தொகையினும், வருமொழி வினையாயவிடத்து, வல்லினம் மிகா. உ-ம்.

| இரண்டாம்வேற்றுமை. | ஏழாம்வேற்றுமை. |
|---|---|
| புளிதின்றான் | அடவிபுக்கான் |
| குவளைகொய்தான் | வரைபாய்ந்தான் |
| வேய்பிளந்தான் | வாய்புகுந்தது |
| தேர்செய்தான் | ஊர்சென்றான் |
| தமிழ்கற்றான் | அகழ்குதித்தான் |

காவித்தடம், மனைத்தூண் என உருபும் பயனும் உடன்றொக்க தொகையாயின் வல்லினம் மிகுமெனக் கொள்க. புளிதின்றான், அடவி புக்கான் என்பன, புளியைத் தின்றான், அடவியின்கட்புக்கான் என விரிதலின், உருபுமாத்திரந்தொக்க தொகை. காவித்தடம், மனைத்தூண் என்பன, காவியையுடைய தடம், மனையின்கண்ணதாகிய தூண் என விரிதலின், உருபும் பயனும் உடன்றொக்க தொகை.

ஏரிகரை, குழவிகை, மலைகிழவோன் எனச் சிறுபான்மை அஃறிணைப்பெயரிடத்து வேற்றுமையில் வல்லினம் மிகாமை காண்க.

ஒரோவிடத்து, வேய்ங்குழல், ஆர்ங்கோடு என வேற்றுமையில் யகர ரகரங்களின் முன்னும், பாழ்ங்கிணறு எனப் பண்புத்தொகையில் ழகரத்தின் முன்னும், இனமெல்லெழுத்து மிகுமெனக்கொள்க.

பேய்கோட்பட்டான், பேய்க்கோட்பட்டான். எ-ம். சூர்கோட்பட்டான், சூர்க்கோட்பட்டான். எ-ம். ஒரோவழிச் செயப்பாட்டுவினை முடிக்குஞ்சொல்லாக வருமிடத்து, யகர ரகரங்களின் முன் வரும் வல்லினம், ஒருகால் இயல்பாயும், ஒருகால் மிகுந்தும், வரும்.

**பரீக்ஷை வினாக்கள்.—கக௪.** இகர ஐகாரவுயிர்களையும் ய ர ழ மெய்களையும் இறுதியாகவுடைய அஃறிணைப் பெயர்களின் முன் வரும் வல்லினம் எந்தெந்தவிடங்களின் மிகும், எந்தெந்தவிடங்களின் மிகா? இரண்டாம் வேற்றுமைத்தொகையும், ஏழாம்வேற்றுமைத்தொகையும், உருபுமாத்திரந் தொக்க தொகையாயின், அவற்றின் முன் வரும் வல்லினம் எப்படியாம்? உருபும் பயனும் உடன்றொக்க தொகையாயின், அவற்றின் முன் வரும் வல்லினம் எப்படியாம்? இகர ஐகாரவீற்றஃறிணைப் பெயர்களின் முன் வரும் வல்லினம், ஆறும்வேற்றுமைத் தொகையில், மிகுதலன்றி வேறு விதி பெறுதோ? ய ர ழ வீற்றின் முன் வரும் வல்லினம், வேற்றுமைத்தொகையிலும், பண்புத்தொகையிலும், ஒரோவிடத்து வேறு விதி பெறுவோ? மூன்றும்வேற்றுமைத் தொகையிலே முடிக்குஞ் சொற் செயப்பாட்டுவினையாகுமிடத்து, யரக்களின் முன் வரும் வல்லினம் எப்படிப் புணரும்?

---

## சிலமரப்பெயர்முன் வல்லினம் புணர்தல்.

**ககஅ.** உயிரீற்றுச் சில மரப்பெயர் முன் வல்லினம் வரின், இனமெல்லெழுத்து மிகும்.

| | | | | |
|---|---|---|---|---|
| உ-ம். மா | + | காய் | = | மாங்காய் |
| விள | + | காய் | = | விளங்காய் |

**ககக.** இகர உகர லகரவீற்றுச் சில மரப்பெயர்முன் வல்லினம் வரின், அம்முச்சாரியை தோன்றும்.

| | | | | |
|---|---|---|---|---|
| உ-ம். புளி | + | காய் | = | புளியங்காய் |
| புன்கு | + | காய் | = | புன்கங்காய் |
| ஆல் | + | காய் | = | ஆலங்காய் |

கஉ0. ஐகாரவீற்றுச் சில மரப்பெயர் முன் வல்லினம் வரின், நிலைமொழியீற்றைகாரங் கெட்டு அம்முச்சாரியை தோன்றும்.

உ-ம். எலுமிச்சை + காய் = எலுமிச்சங்காய்
மாதுளை + காய் = மாதுளங்காய்

பரீக்ஷை வினாக்கள்.—கக அ. உயிரீற்றுச் சில மரப்பெயர் முன் வல்லினம் வரின் எப்படியாம்? ககக. இகர உகர லகரவீற்றுச் சில மரப்பெயர் முன் வல்லினம் வரின் எப்படியாம்? கஉ0. ஐகாரவீற்றுச் சில மரப்பெயர் முன் வல்லினம் வரின் எப்படியாம்?

---

## சில வேற்றுமையுருபின் முன் வல்லினம் புணர்தல்.

கஉக. ஒடு, ஓடு என்னும் மூன்றும்வேற்றுமையுருபுகளின் முன்னும், அது, ஆது, அ என்னும் ஆறும்வேற்றுமையுருபுகளின் முன்னும் வரும் வல்லினம் மிகா. உ-ம்.

மகனொடு போனான்    மகனோடு போனான்
தனது கை    தனாது கை    தன கைகள்

பரீக்ஷை வினா.—கஉக. ஒடு, ஓடு என்னும் மூன்றும் வேற்றுமையுருபுகளின் முன்னும் அது, ஆது, அ என்னும் ஆறும்வேற்றுமையுருபுகளின் முன்னும், வல்லினம் வரின் எப்படியாம்?

---

## குற்றியலுகரவீறு.

கஉஉ. வன்றொடர்க்குற்றியலுகரவீற்று மொழிகளின் முன் வரும் வல்லினம் இருவழியினும் மிகும். உ-ம்.

| அல்வழி. | வேற்றுமை. |
| --- | --- |
| கொக்குக்கடிது | கொக்குச்சிறை |
| சுக்குத்திப்பிலி | சுக்குக்கொடு |

கஉ௩. மென்றொடர்க்குற்றியலுகரவீற்று மொழிக ளின் முன் வரும் வல்லினம் அல்வழியில் இயல்பாம்; வேற் றுமையிலே மிகும். உ-ம்.

| அல்வழி. | வேற்றுமை. |
| --- | --- |
| குரங்கு கடிது | குரங்குக்கால் |
| அம்பு தீது | அம்புத்தலை |

குரங்கு பிடித்தான் என இரண்டாம்வேற்றுமைத்தொகை யிலும், அரங்கு புக்கான் என ஏழாம்வேற்றுமைத்தொகையி லும், வருமொழி வினையாயவிடத்து, வல்லினம் மிகாவெனக் கொள்க.

கஉ௪. ஏழாம்வேற்றுமையிடப்பொருள் உணர நின்ற அன்று, இன்று, என்று, பண்டு, முந்து என்னும் இடைச் சொற்களின்முன் வரும் வல்லினம் மிகா. உ-ம்.

| | |
| --- | --- |
| அன்று கண்டான் | பண்டு பெற்றான் |
| இன்று தந்தான் | முந்து கொண்டான் |
| என்று சென்றான் | |

ஏழாம்வேற்றுமையிடப்பொருள் உணர நின்ற அங்கு, ஆங்கு, இங்கு, ஈங்கு, உங்கு, ஊங்கு, எங்கு, யாங்கு, யாண்டு என்னும் இடைச்சொற்களின் முன் வரும் வல்லி னம் மிகும். உ-ம்.

| | |
| --- | --- |
| அங்குக்கண்டான் | ஆங்குக்கண்டான் |
| இங்குச்சென்றான் | ஈங்குச்சென்றான் |

| | |
|---|---|
| உங்குத்தந்தான் | ஊங்குத்தந்தான் |
| எங்குப்பெற்றான் | யாங்குப்பெற்றான் |
| | யாண்டுப்பெற்றான் |

கஉ௫. நெடிற்றொடர், ஆய்தத்தொடர், உயிர்த்தொடர், இடைத்தொடர் என்னும் இந்நான்கு தொடர்க்குற்றியலுகர வீற்றுமொழிகளின் முன் வரும் வல்லினம், இருவழியினும், இயல்பாம். உ-ம்.

| அல்வழி. | வேற்றுமை. |
|---|---|
| நாகு கடிது | நாகு கால் |
| எஃகு கொடிது | எஃகு கூர்மை |
| வரகு சிறிது | வரகு சோறு |
| தெள்கு பெரிது | தெள்கு பெருமை |

கஉ௬. டவ்வையும் றவ்வையும் இறுதியிலுடைய நெடிற்றொடர் உயிர்த்தொடர்க் குற்றியலுகரவீற்றுமொழிகளின் முன் நாற்கணமும் வரின், உகரமேறிய டகர றகர மெய்கள் வேற்றுமையிற் பெரும்பாலும் இரட்டும். உ-ம்.

| | | |
|---|---|---|
| ஆட்டுக்கால் | ஆற்றுக்கால் | நெடிற்றொடர். |
| ஆட்டுமயிர் | ஆற்றுமணல் | |
| ஆட்டுவால் | ஆற்றுவழி | |
| ஆட்டதர் | ஆற்றூறல் | |
| பகட்டுக்கால் | வயிற்றுக்குடல் | உயிர்த்தொடர். |
| பகட்டுமார்பு | வயிற்றுமயிர் | |
| பகட்டுவால் | வயிற்றுவலி | |
| பகட்டடி | வயிற்றணி | |

காட்டரண், ஏற்றுப்பன்றி, வரட்டாடு, வெளிற்றுப்பனை எனச் சிறுபான்மை அல்வழியிலே பண்புத்தொகையில் இரட்டுதலும், வெருக்குக்கண், எருத்துமாடு எனச் சிறுபான்மை இருவழியினும் பிறவொற்றிரட்டுதலும் உளவெனக் கொள்க.

ஆடு கொண்டான், ஆறு கண்டான், பகுதேந்தான், பயறு தின்றான் என இரண்டாம் வேற்றுமைத்தொகையினும், காடு போந்தான், ஆறு பாய்ந்தான், அகடு புக்கது, வயிறு புக்கது என ஏழாம் வேற்றுமைத்தொகையினும், வருமொழி வினையாயவிடத்து, இரட்டாவெனக் கொள்க.

கஉஎ. மென்றொடர்க்குற்றியலுகரவீற்று மொழிகளுள்ளே சில, நாற்கணமும் வரின், வேற்றுமையிலும், அல்வழியிலே பண்புத்தொகையிலும், உவமைத்தொகையிலும், வன்றொடர்க்குற்றியலுகரமாதலு முண்டு. உ-ம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மருந்து | + பை | = | மருத்துப்பை | | வேற்றுமை. |
| சுரும்பு | + நாண் | = | சுருப்புநாண் | | |
| கரும்பு | + வில் | = | கருப்புவில் | | |
| கன்று | + ஆ | = | கற்று | | |
| அன்பு | + தளை | = | அற்புத்தளை | | பண்புத்தொகை. |
| என்பு | + உடம்பு | = | எற்புடம்பு | | |
| குரங்கு | + மனம் | = | குரக்குமனம் | | உவமைத்தொகை. |
| இரும்பு | + நெஞ்சம் | = | இருப்புநெஞ்சம் | | |

கஉஅ. சிலமென்றொடர்க்குற்றியலுகர வீற்றுமொழிகள், இறுதியில் ஐகாரச்சாரியை பெற்று வரும். உ-ம்.

| | | | | |
|---|---|---|---|---|
| பண்டு | + காலம் | = | பண்டைக்காலம் | அல்வழி. |
| இன்று | + நாள் | = | இற்றைநாள் | |
| அன்று | + கூலி | = | அற்றைக்கூலி | வேற்றுமை. |
| இன்று | + நலம் | = | இற்றைநலம் | |

சில மென்றொடர் மொழிகள், வருமொழி நோக்காது, ஒற்றை, இரட்டை எனத் தனிமொழியாக நின்றும், ஈராட்டை, மூவாட்டை எனத்தொடர்மொழியாக நின்றும், ஐகாரச்சாரியை பெறுதலுமுண்டு.

நேற்று + பொழுது = நேற்றைப்பொழுது. எ-ம். நேற்று + கூலி = நேற்றைக்கூலி. எ-ம். வன்றொடர் ஐகாரச்சாரியைபெறுதலுமுண்டு.

பரீக்ஷை வினாக்கள்.—௧௨௨. வன்றொடர்க் குற்றியலுகரவீற்று மொழிகளின் முன் இருவழியினும் வல்லினம் வரின் எப்படியாம்? ௧௨௩. மென்றொடர்க் குற்றியலுகரவீற்று மொழிகளின் முன் இருவழியினும் வல்லினம் வரின் எப்படியாம்? இரண்டாம் வேற்றுமைத்தொகையினும், ஏழாம்வேற்றுமைத் தொகையினும், வருமொழி வினையாயவிடத்து, வல்லினம் எப்படியாம்? ௧௨௪. ஏழாம்வேற்றுமையிடப்பொருள் உணர. நின்ற அன்றுமுதலிய இடைச்சொற்களின் முன் வல்லினம் வரின் எப்படியாம்? ஏழாம்வேற்றுமையிடப்பொருள் உணர நின்ற அங்குமுதலிய இடைச்சொற்களின் முன் வல்லினம் வரின் எப்படியாம்? ௧௨௫. நெடிற்றொடர், ஆய்தத்தொடர், உயிர்த்தொடர், இடைத்தொடர் என்னும் இந்நான்கு தொடர்க்குற்றியலுகரவீற்று மொழிகளின் முன் இருவழியினும் வல்லினம் வரின் எப்படியாம்? ௧௨௬. டுவ்வையும் றுவ்வையும் இறுதியிலுடைய நெடிற்றொடர் உயிர்த்தொடர்க் குற்றியலுகரவீற்று மொழிகளின் முன் வேற்றுமையில் நாற்கணமும் வரின் எப்படியாம்? அல்வழியில் எங்கும் இப்படி இரட்டுதலில்லையோ? வேற்றுமையில் இரட்டாதுவருதலில்லையோ? டற்வொற்றன்றிப் பிறவொற்று இருவழியும் இரட்டுதலில்லையோ? ௧௨௭. மென்றொடர்க் குற்றியலுகரவீற்று மொழிகளுட் சில, இருவழியினும் நாற்கணமும் வரின், வன்றொடராகத் திரிதலும் உண்டோ? ௧௨௮. மென்றொடர்க் குற்றியலுகரம் இன்னும் எவ்வாறாகும்? வன்றொடர்க் குற்றியலுகரம் ஐகாரச்சாரியை பெறுதலில்லையோ?

## குற்றியலுகர வீற்றுத் திசைப்பெயர்களோடு திசைப்பெயர்களும் பிறபெயர்களும் புணர்தல்.

கஉகூ. வடக்கு குணக்கு குடக்கு என்னுஞ் சொற்களின் ஈற்றுயிர்மெய்யுங் ககரவொற்றுங் கெடும். உ-ம்.

| | | | | |
|---|---|---|---|---|
| வடக்கு | + | கிழக்கு | = | வடகிழக்கு. |
| | | மேற்கு | = | வடமேற்கு. |
| | | திசை | = | வடதிசை. |
| | | மலை | = | வடமலை. |
| | | வேங்கடம் | = | வடவேங்கடம். |
| குணக்கு | + | திசை | = | குணதிசை. |
| | | கடல் | = | குணகடல். |
| குடக்கு | + | திசை | = | குடதிசை. |
| | | நாடு | = | குடநாடு. |

கிழக்கு என்பது, ஈற்றுயிர்மெய்யுங் ககரவொற்றும் ழகரமெய்யின்மேனின்ற அகரவுயிருங்கெட்டு, முதனீண்டு வரும்; அங்ஙனம் வருமிடத்து, வல்லெழுத்து, இயல்பாகியும், ஒரோவிடத்து மிகுந்தும், புணரும். உ-ம்.

| | | | | |
|---|---|---|---|---|
| கிழக்கு | + | பால் | = | கீழ்பால். |
| | | திசை | = | கீழ்த்திசை. |

கீழைச்சேரி, கீழைவீதி என ஐகாரம் பெறுதலுமுண்டு.

தெற்கு என்பது, ஈற்றுயிர்மெய் கெட்டு, றகரம் னகரமாகத் திரிந்து, வரும். உ-ம்.

| | | | | |
|---|---|---|---|---|
| தெற்கு | + | கிழக்கு | = | தென்கிழக்கு. |
| | | மேற்கு | = | தென்மேற்கு. |
| | | மலை | = | தென்மலை. |

மேற்கு என்பது, ஈற்றுயிர்மெய் கெட்டு, றகரம் லகரமாகத் திரிந்து, வரும். தகரம் வரிற் றிரியாது. உ-ம்.

| | | | | |
|---|---|---|---|---|
| மேற்கு | + | கடல் | = | மேல்கடல். |
| | | வீதி | = | மேல்வீதி. |
| | | திசை | = | மேற்றிசை. |

மேலைச்சேரி, மேலைவீதி என ஐகாரம் பெறுதலுமுண்டு.

இத்திசைப்பெயர்கள், வடக்கூர், தெற்கூர், கிழக்கூர், மேற்கூர், வடக்கு வாயில், தெற்கு மலை, கிழக்குத்திசை, மேற்கு மலை என, இங்ஙனங் காட்டிய விகாரமின்றியும், வரும்.

வடகிழக்கு என்பது, வடக்குங் கிழக்குமாகிய தொருகோணம் என, உம்மைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. வடதிசை என்பது வடக்காகிய திசை எனப் பண்புத்தொகை. வடமலை என்பது வடக்கின்கண் மலை என ஏழாம்வேற்றுமைத்தொகை.

**பரீக்ஷை வினாக்கள்.**—கஉக. திசைப்பெயர் முதலிய பெயர்கள் வந்து புணரின், வடக்கு, குணக்கு, குடக்கு என்னுஞ் சொற்கள் எப்படியாம்? கிழக்கு என்பது எப்படியாம்? தெற்கு என்பது எப்படியாம்? மேற்கு என்பது எப்படியாம்? இத்திசைப்பெயர்கள் இவ்விகாரமின்றியும் வருமோ? வடகிழக்கென்பது என்னதொகை? வடதிசை என்பது என்னதொகை? வடமலை என்பது என்னதொகை?

---

## உகரவீற்றெண்ணுப்பெயர்ப் புணர்ச்சி.

**கஙO.** ஒன்றென்னும் எண்ணின் ஈற்றுயிர்மெய் கெட்டு, னகரவொற்று ரகரமாகத்திரியும். வந்தது மெய்யாயின், ரகரம் உகரம் பெறும். உயிராயின், உகரம் பெறாது முதனீளும். உ-ம்.

| | | | | |
|---|---|---|---|---|
| ஒன்று | + | கோடி | = | ஒருகோடி. |
| | | கழஞ்சு | = | ஒருகழஞ்சு |
| | | நாழி | = | ஒருநாழி. |
| | | வாழை | = | ஒருவாழை. |
| | | ஆயிரம் | = | ஓராயிரம். |

இரண்டென்னும் எண்ணின் ஈற்றுயிர்மெய்யும், ணகரவொற்றும், ரகரத்தின்மேனின்ற அகரவுயிருங்கெடும். வந்தது மெய்யாயின், ரகரம் உகரம் பெறும்; உயிராயின், உகரம் பெறாது முதனீளும். உ-ம்.

| | | | | |
|---|---|---|---|---|
| இரண்டு | + | கோடி | = | இருகோடி. |
| | | கழஞ்சு | = | இருகழஞ்சு. |
| | | நாழி | = | இருநாழி. |
| | | யானை | = | இருயானை. |
| | | ஆயிரம் | = | ஈராயிரம். |

மூன்றென்னும் எண்ணின் ஈற்றுயிர்மெய் கெடும். நின்ற னகரமெய் வந்தது உயிராயிற்றானும் உடன் கெடும்; மெய்யாயின் முதல் குறுகி, னகரமெய் வருமெய்யாகத் திரியும். உ-ம்.

| | | | | |
|---|---|---|---|---|
| மூன்று | + | ஆயிரம் | = | மூவாயிரம். |
| | | கழஞ்சு | = | முக்கழஞ்சு. |
| | | நாழி | = | முந்நாழி. |

நான்கென்னும் எண்ணின் ஈற்றுயிர்மெய் கெடும். நின்ற னகரம், வந்தவை, உயிரும் இடையெழுத்துமாயின், லகரமாகத் திரியும்; வல்லெழுத்தாயின், றகரமாகத் திரியும்; மெல்லெழுத்தாயின், இயல்பாம். உ-ம்.

| | | | | |
|---|---|---|---|---|
| நான்கு | + | ஆயிரம் | = | நாலாயிரம். |
| | | யானை | = | நால்யானை. |
| | | கழஞ்சு | = | நாற்கழஞ்சு. |
| | | மணி | = | நான்மணி. |

ஐந்தென்னும் எண்ணின் ஈற்றுயிர்மெய் கெடும். நின்ற நகரமெய் வந்தவை உயிராயிற் றானும் உடன் கெடும்; வல்லெழுத்தாயின், இனமெல்லெழுத்தாகத் திரியும். மெல்லெழுத்தும் இடையெழுத்துமாயின், அவ்வந்த வெழுத்தாகத் திரியும். உ-ம்.

| | | | | |
|---|---|---|---|---|
| | + | ஆயிரம் | = | ஐயாயிரம். |
| | | கழஞ்சு | = | ஐங்கழஞ்சு |
| | | மூன்று | = | ஐம்மூன்று. |
| | | வட்டி | = | ஐவ்வட்டி. |

நகரமுந் தகரமும் வரின், ஐந்நூறு, ஐந்நாணி என ஈற்றுயிர்மெய் மாத்திரங் கெடும்.

ஆறென்னும் எண் உயிர் வரிற் பொதுவிதியான் முடியும்; மெய் வரின் முதல் குறுகும். உ-ம்.

| | | | | |
|---|---|---|---|---|
| ஆறு | + | ஆயிரம் | = | ஆறாயிரம். |
| | | கழஞ்சு | = | அறுகழஞ்சு. |
| | | மணி | = | அறுமணி. |
| | | வழி | = | அறுவழி. |

ஏழு என்னும் எண்ணின் முன் உயிர் வரின், ஈற்றுகரங் கெடும்; மெய் வரின் முதல் குறுகும். உ-ம்.

| | | | | |
|---|---|---|---|---|
| ஏழு | + | ஆயிரம் | = | ஏழாயிரம். |
| | | கழஞ்சு | = | எழுகழஞ்சு. |

| | | | | |
|---|---|---|---|---|
| ஏழு | + | மணி | = | எழுமணி. |
| | | வகை | = | எழுவகை. |

ஏழ்கடல், ஏழ்பரி என வருதலுமுண்டு.

எட்டென்னும் எண்ணின் ஈற்றுயிர்மெய் கெடும்; நின்ற டகரமெய் நாற்கணத்தின் முன்னும் ணகரமெய்யாகத் திரியும். உ-ம்.

| | | | | |
|---|---|---|---|---|
| எட்டு | + | ஆயிரம் | = | எண்ணாயிரம். |
| | | கழஞ்சு | = | எண்கழஞ்சு. |
| | | மணி | = | எண்மணி. |
| | | வளை | = | எண்வளை. |

இவ்விகாரங்களின்றிப் பொதுவிதி பற்றி, இரண்டு கழஞ்சு, மூன்று படி, நான்கு பொருள், ஐந்து முகம், ஆறு குணம், ஏழு கடல், எட்டுத் திக்கு எனவும் வருமெனக் கொள்க.

கூஅ. ஒன்பதென்னும் எண்முன் பத்தென்னும் எண் வரின், பது, கெட்டு, முதலுயிரோடு தகரமெய் சேர்ந்து, நின்ற னகரம் ணகரமாகவும், வருமொழியாகிய பத்து நூறாகவுந் திரியும். உ-ம்.

ஒன்பது + பத்து = தொண்ணூறு.

ஒன்பது என்னும் எண்முன் நூறு என்னும் எண் வரின், பது கெட்டு, முதலுயிரோடு தகரமெய் சேர்ந்து, நின்ற னகரம் ளகரமாகவும், வருமொழியாகிய நூறு ஆயிரமாகவுந் திரியும். உ-ம்.

ஒன்பது + நூறு = தொள்ளாயிரம்.

இது இக்காலத்துத் தொளாயிரம் என வழங்கும்.

கஅ௨. ஒன்று முதல் எட்டீறாக நின்ற எண்ணுப்பெயர்கண்முன் பத்தென்னும் எண்ணுப்பெயர் வரின், அப்பத்தின் நடு நின்ற தகரமெய், கெட்டாயினும், ஆய்தமாகத் திரிந்தாயினும், புணரும். உ-ம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஒன்று | + | பத்து | = | ஒருபது, | ஒருபஃது. |
| இரண்டு | | ,, | | இருபது, | இருபஃது. |
| மூன்று | | ,, | | முப்பது, | முப்பஃது. |
| நான்கு | | ,, | | நாற்பது, | நாற்பஃது. |
| ஐந்து | | ,, | | ஐம்பது, | ஐம்பஃது. |
| ஆறு | | ,, | | அறுபது, | அறுபஃது. |
| ஏழு | | ,, | | எழுபது, | எழுபஃது. |
| எட்டு | | ,, | | எண்பது, | எண்பஃது. |

கஅ௩. ஒருபது முதல் எண்பது ஈறாகிய எண்களின் முன் ஒன்று முதல் ஒன்பதென்னும் அவற்றையடுத்த பிற பெயரும் வரின், நிலைமொழியீற்றுக்கு அயலிலே தகரவொற்றுத் தோன்றும். உ-ம்.

ஒருபது + ஒன்று = ஒருபத்தொன்று.
இருபது + இரண்டு = இருபத்திரண்டு.
முப்பது + மூன்றுகழஞ்சு = முப்பத்துமூன்று கழஞ்சு.
மற்றவைகளு மிப்படியே.

கஅ௪. பத்தின்முன் இரண்டு வரின், உம்மைத்தொகையில் ஈற்றுயிர்மெய் கெட்டு, நின்ற தகரமெய் னகரமாகத் திரியும். உ-ம்.

பத்து + இரண்டு = பன்னிரண்டு.

பத்தின் முன் இரண்டொழிந்த ஒன்று முதல எட்டீறாகிய எண்கள் வரின், உம்மைத்தொகையில் ஈற்றுயிர்மெய் கெட்டு, இன்சாரியை தோன்றும். உ-ம்.

| | | | | |
|---|---|---|---|---|
| பத்து | ஒன்று | = | பதினொன்று. |
| | மூன்று | = | பதின்மூன்று |
| | நான்கு | = | பதினான்கு. |
| | ஐந்து | = | பதினைந்து. |
| | ஆறு | = | பதினாறு. |
| | ஏழு | = | பதினேழு. |
| | எட்டு | = | பதினெட்டு. |

கரு. பத்தின் முன்னும், ஒன்பதின் முன்னும், ஒன்று முதலிய எண்ணுப்பெயரும், நிறைப்பெயரும், அளவுப்பெயரும், பிற பெயரும் வரின், பண்புத்தொகையில் இற்றுச்சாரியை தோன்றும்; அங்ஙனந் தோன்றுமிடத்துப் பத்தென்பதின் ஈற்றுயிர்மெய்கெடும். உ-ம்.

| | | | |
|---|---|---|---|
| | ஒன்று | = | பதிற்றொன்று. |
| | இரண்டு | = | பதிற்றிரண்டு. |
| | மூன்று | = | பதிற்றுமூன்று |
| | பத்து | = | பதிற்றுப்பத்து. |
| | நூறு | = | பதிற்றுநூறு. |
| | ஆயிரம் | = | பதிற்றாயிரம். |
| | கோடி | = | பதிற்றுக்கோடி. |
| | கழஞ்சு | = | பதிற்றுக்கழஞ்சு. |
| | கலம் | = | பதிற்றுக்கலம். |
| | மடங்கு | = | பதிற்றுமடங்கு. |
| ஒன்பது + | ஒன்று | = | ஒன்பதிற்றொன்று. |
| | இரண்டு | = | ஒன்பதிற்றிரண்டு. |
| | மூன்று | = | ஒன்பதிற்றுமூன்று. |
| | பத்து | = | ஒன்பதிற்றுப்பத்து. |
| | நூறு | = | ஒன்பதிற்றுநூறு. |
| | ஆயிரம் | = | ஒன்பதிற்றாயிரம். |

| | | |
|---|---|---|
| கோடி | = | ஒன்பதிற்றுக்கோடி. |
| கழஞ்சு | = | ஒன்பதிற்றுக்கழஞ்சு. |
| கலம் | = | ஒன்பதிற்றுக்கலம். |
| மடங்கு | = | ஒன்பதிற்றுமடங்கு. |

பத்தின் முன்னும், ஒன்பதின் முன்னும், ஆயிரமும், நிறைப்பெயரும், அளவுப்பெயரும், பிற பெயரும் வரின், பண்புத்தொகையில் இற்றுச்சாரியையேயன்றி இன்சாரியை யுந் தோன்றும்; அங்ஙனந் தோன்றுமிடத்துப் பத்தென் பதின் ஈற்றுயிர்மெய் கெடும். உ-ம்.

| | | | |
|---|---|---|---|
| பத்து | ஆயிரம் | = | பதினாயிரம். |
| | கழஞ்சு | = | பதின்கழஞ்சு. |
| | கலம் | = | பதின்கலம். |
| | மடங்கு | = | பதின்மடங்கு. |
| ஒன்பது | ஆயிரம் | = | ஒன்பதினாயிரம். |
| | கழஞ்சு | = | ஒன்பதின்கழஞ்சு. |
| | கலம் | = | ஒன்பதின்கலம். |
| | மடங்கு | = | ஒன்பதின்மடங்கு. |

கஙசு. ஒன்பதொழிந்த ஒன்றுமுதற் பத்தீறாகிய ஒன்பதெண்களையும் இரட்டித்துச் சொல்லுமிடத்து, நிலைமொழியின் முதலெழுத்து மாத்திரம் நிற்க, அல்லன வெல்லாங் கெட்டு, முதனெடில் குறுகவும், வந்தவை உயிராயின் வகரவொற்றும், மெய்யாயின் வந்த எழுத்தும் மிகவும், பெறும். உ-ம்.

| | | | | |
|---|---|---|---|---|
| ஒன்று | + | ஒன்று | = | ஒவ்வொன்று. |
| இரண்டு | + | இரண்டு | = | இவ்விரண்டு. |
| மூன்று | + | மூன்று | = | மும்மூன்று. |

| | | | | |
|---|---|---|---|---|
| நான்கு | + | நான்கு | = | நந்நான்கு. |
| ஐந்து | + | ஐந்து | = | ஐவைந்து. |
| ஆறு | + | ஆறு | = | அவ்வாறு. |
| ஏழு | + | ஏழு | = | எவ்வேழு. |
| எட்டு | + | எட்டு | = | எவ்வெட்டு. |
| பத்து | + | பத்து | = | பப்பத்து. |

சிறுபான்மை ஒரோவொன்று, ஒன்றொன்று என வருதலுமுண்டு.

பரீக்ஷை வினாக்கள்.—கூ௰. ஒன்று என்பதன்முன் நாற்கணமும் வரின் எப்படிப் புணரும்? இரண்டு என்பதன் முன் நாற்கணமும் வரின் எப்படிப் புணரும்? மூன்று என்பதன் முன் நாற்கணமும் வரின் எப்படிப் புணரும்? நான்கு என்பதன் முன் நாற்கணமும் வரின் எப்படிப் புணரும்? ஐந்து என்பதன் முன் நாற்கணமும் வரின் எப்படிப் புணரும்? ஆறு என்பதன் முன் நாற்கணமும் வரின் எப்படிப் புணரும்? ஏழு என்பதன்முன் நாற்கணமும் வரின் எப்படிப் புணரும்? எட்டு என்பதன் முன் நாற்கணமும் வரின் எப்படிப் புணரும்? இவ்வெண்ணுப் பெயர்கள் இவ்விகாரமின்றியும் வருமோ? கூ௧. ஒன்பது என்பதன் முன் பத்து வரின் எப்படிப் புணரும்? ஒன்பது என்பதன் முன் நூறு வரின் எப்படிப் புணரும்? கூ௨. ஒன்று முதல் எட்டீறாக நின்ற எண்ணுப்பெயர்கண் முன் பத்து வரின் எப்படிப் புணரும்? கூ௩. ஒருபது முதல் எண்பதீறாகிய எண்களின் முன் ஒன்று முதல் ஒன்பதெண்ணும் அவற்றை யடுத்த பிற பெயரும் வரின், எப்படிப்புணரும்? கூ௪. பத்தின் முன் இரண்டு வரின் உம்மைத்தொகையில் எப்படிப் புணரும்? பத்தின் முன் இரண்டொழிந்த ஒன்று முதல் எட்டீறாகிய எண்கள் வரின் உம்மைத்தொகையில் எப்படிப் புணரும்? கூ௫. பத்தின் முன்னும் ஒன்பதின் முன்னும் ஒன்று

முதலிய எண்ணுப்பெயரும் நிறைப்பெயரும் அளவுப்பெய ரும் பிறபெயரும் வரின், பண்புத்தொகையில் எப்படிப் புணரும்? பத்தின் முன்னும் ஒன்பதின் முன்னும் ஆயிரமும் நிறைப்பெயரும் அளவுப்பெயரும் பிறபெயரும் வரின், பண் புத்தொகையில் இற்றுச்சாரியையேயன்றி வேறு சாரியையுந் தோன்றுமோ? கஅகூ. ஒன்பதொழிந்த ஒன்று முதற் பத் தீறுகிய ஒன்பதெண்களையும் இரட்டித்துச் சொல்லுமிட த்து, எப்படிப் புணரும்?

## மெய்யீற்று முதனிலைத் தொழிற்பெயர் முன்னும் ஏவல்வினைமுன்னும் மெய் புணர்தல்.

கஙஎ. ஞ், ண், ந், ம், ல், வ், ள், ன் என்னும் இவ வெட்டு மெய்யீற்று முதனிலைத்தொழிற்பெயரும், ஏவல் வினைமுற்றும், தம்முன் யகரமல்லாத மெய்கள்வரின், உக ரச்சாரியை பெறும். தொழிற்பெயரின் சாரியைக்கு முன் வரும் வல்லினம் மிகும். உ-ம்.

| அல்வழி. | வேற்றுமை. |
|---|---|
| உரிஞுக்கடிது | உரிஞுக்கடுமை |
| உண்ணுஞான்றது | உண்ணுஞாற்சி |
| பொருநுவலிது | பொருநுவன்மை |
| உரிஞுகொற்றா | |
| உண்ணுநாகா | |
| பொருநுவளவா | |

திரும், செல், வவ், துள், தின் முதலியவற்றோடும் இவ் வாறே யொட்டிக்கொள்க.

முதனிலைத்தொழிற்பெயராவது, தொழிற்பெயர் விகுதி குறைந்து முதனிலைமாத்திரை நின்று தொழிற்பெயர்ப்பொருளைத் தருவதாம்.

இவ்வெட்டீற்று ஏவல்வினைகளுள்ளே, உண் கொற்ரு, தின் சாத்தா, வெல் பூதா, துள் வளவா என, ண ன ல ள என்னும் இந்நான்கீறும், உகரச்சாரியை பெருதும், நிற்கும்.

பொருநுதல் - மற்ருெருவர்போல வேடங்கொள்ளுதல். பொருந் என்பது, தொழிற்பெயராவதன்றி, அத்தொழிலினரை உணர்த்துஞ் சாதிப்பெயருமாம்.

பொருநுக்கடிது என நகரவீற்றுச் சாதிப்பெயரும், வெரிநுக்கடிது என நகரவீற்றுச் சினைப்பெயரும், உகரச்சாரியை பெறுமெனவுங் கொள்க. வெரிந் - முதுகு.

பரீக்ஷை வினுக்கள்.—கரு௭. ஞ ண ந ம ல வ ள ன என்னும் இவ்வெட்டு மெய்யீற்று முதனிலைத்தொழிற்பெயரும், ஏவல் வினைமுற்றும், தம்முன் யகரமல்லாத மெய்கள் வரின், எப்படிப்புணரும்? முதனிலைத் தொழிற்பெயராவது யாது? இவ்வெட்டீற்றேவல் வினைகளுள்ளே, உகரச்சாரியை பெருதும் நிற்பன உளவோ? பொருநுதல் என்பதற்குப் பொருள் என்னை? பொருந் என்பது, தொழிற்பெயராவதன்றி, வேறு பெயரும் ஆமோ? நகரவீற்றுப்பெயர் பொருந் அன்றி வேறும் உண்டோ? வெரிந் என்பதற்குப் பொருள் என்னை? பொருந் என்னுஞ் சாதிப்பெயரும், வெரிந் என்னுஞ் சினைப்பெயரும் உகரச்சாரியை பெருவோ?

---

## ணகர னகர வீற்றுப் புணர்ச்சி.

**கரு௮. ணகர னகரங்களின் முன் வல்லினம் வரின், அல்வழியில் அவ்விரு மெய்களும் இயல்பாம். வேற்றுமையில் ணகரம் டகரமாகவும், னகரம் றகரமாகவுந் திரியும். அவ்விருவழியிலும், வருந் தகரம் ணகரத்தின்முன் டகரமாகவும், னகரத்தின் முன் றகரமாகவுந் திரியும். உ-ம்.**

| அல்வழி. | வேற்றுமை. |
|---|---|
| மண்சிறிது | மட்சாடி |
| மண்டீது | மட்டேண் |
| பொன் குறிது | பொற்கலம் |
| பொன் றீது | பொற்றூண் |

கட்பொறி, பொற்கோடு, எனப் பண்புத்தொகையினும், பட்சொல், பொற்சுணங்கு என உவமைத்தொகையினுந் திரிதலும் உண்டு.

மண்சுமந்தான், பொன் கொடுத்தான் என இரண்டாம் வேற்றுமைத்தொகையினும், விண் பறந்தது, கான் புகுந்தான என ஏழாம்வேற்றுமைத்தொகையினும் வருமொழி வினையாயவிடத்துத் திரியாதியல்பாம். மண்கூடை, புண்கை என ஒரோவிடத்து இரண்டனுருபும் பயனும் உடன்றொக்க தொகையினுந திரியாமைகொள்க.

௩௩௯. ணகர னகரங்களின் முன் மெல்லினமும் இடையினமும் வரின், இறுதி ண னக்கள் இருவழியினும் இயல்பாம். அவ்விருவழியினும், ணகரத்தின் முன் வரு நகரம் ணகரமாகவும், னகரத்தின் முன் வரு நகரம் னகரமாகவுந் திரியும். உ-ம்.

| அல்வழி. | வேற்றுமை. |
|---|---|
| மண்ஞான்றது | மண்ஞாற்சி |
| மண்ணீண்டது | மண்ணீட்சி |
| மண்வலிது | மண்வன்மை |
| பொன்ஞான்றது | பொன்ஞாற்சி |
| பொன்னீண்டது | பொன்னீட்சி |
| பொன்வலிது | பொன்வன்மை |

கசO. தனிக்குற்றெழுத்தைச் சாராத ணகர னக ரங்கள், வரு நகரந் திரிந்தவிடத்து, இருவழியினுங்கெ டும். உ-ம்.

| அல்வழி. | வேற்றுமை. |
|---|---|
| தூணன்று | தூணன்மை |
| அரணன்று | அரணன்மை |
| வானன்று | வானன்மை |
| செம்பொனன்று | செம்பொனன்மை |

கசக. பாண், உமண், அமண், பரண், கவண் என்னும் பெயர்களின் இறுதி ணகரம், வல்லினம் வரின், வேற்றுமை யினுந் திரியாதியல்பாம். உ-ம்.

பாண்குடி. உமண்சேரி அமண்பாடி
பரண்கால் கவண்கால்

பாண் - பாடுதற்ரொழிலுடையதொரு சாதி. உமண் - உப் பமைத்தற்ரொழிலுடையதொரு சாதி. அமண் - அருகனை வழி படுவதொரு கூட்டம்.

கசஉ. தன், என் என்னும் விகாரமொழிகளின் னகரம், வல்லினம் வரின், ஒருகாற் றிரிந்தும், ஒருகாற்றிரி யாதும், நிற்கும். நின் என்னும் விகாரமொழியின் இறுதி னகரந் திரியாதியல்பாம். உ-ம்.

தன்பகை தற்பகை
என்பகை எற்பகை
நின்பகை

தற்கொண்டான், எற்சேர்ந்தான், நிற்புறங்காப்ப என இர ண்டாம்வேற்றுமைத்தொகையிற் றிரிந்தே நிற்கும்.

க௪௩. குயின், ஊன், எயின், எகின், தேன், மீன், மான், மின் என்னும் சொற்களின் இறுதி னகரம், வல்லி னம்வரின் வேற்றுமையினுந் திரியாதியல்பாம். உ-ம்.

| | |
|---|---|
| குயின்கடுமை | தேன்பெருமை |
| ஊன்சிறுமை | மீன்கண் |
| எயின்குடி | மான்செவி |
| எகின்சிறுமை | மின்கடுமை |

குயின் - மேகம். எயின் - வேட்டுவச்சாதி. எகின் - அன் னப்புள்.

தேன் என்பது, தேக்குடம், தேங்குடம் என, இறுதி னக ரங்கெட, ஒருகால் வரும் வல்லெழுத்தும் ஒருகால் அதற்கின மெல்லெழுத்தும் மிகப்பெறுதலும், தேமொழி என மெல்லெழு த்து வருமிடத்து ஈறு கெடுதலுமுண்டு.

பரீக்ஷை வினாக்கள்.—க௩௮. ணகர னகரங்களின் முன் வல் லினம் வரின், இருவழியும் எப்படிப் புணரும்? அல்வழி யில் எவ்விடத்துந் திரியாவோ? வேற்றுமையில் எவ்விடத் தும் இயல்பாகாவோ? ண ன வீறு, இரண்டனுருபும் பயனும் உடன்றொக்க தொகையில் எவ்விடத்துந் திரிந்தே வருமோ? க௩௯. ணகர னகரங்களின் முன் மெல்லினமும் இடையின மும் வரின், இருவழியும் எப்படிப் புணரும்? க௪௦. தனிக்கு ற்றெழுத்தைச் சாராத ணகர னகரங்களின் முன் நகரம் வந்தால், ணகர னகரம் இயல்பாகவே நிற்குமோ? க௪௧. எந்தமொழியினும் ணகரம் வேற்றுமையிற்றிரிந்தே வருமோ? பாண் என்பதற்குப் பொருள் என்னை? உமண் என்பதற்குப் பொருள் என்னை? அமண் என்பதற்குப் பொருள் என்னை? க௪௨. தன், என் என்பவற்றின் னகரம், வல்லினம் வரின் எப்படியாம்? நின் என்பது இப்படி வாராதோ? இம்மூன்றி டத்து னகரமும், இரண்டாம்வேற்றுமைத்தொகையில், இவ்

விதியே பெறுமோ? கசங. எந்த மொழியினும் ணகரம், வேற்றுமையிற்றிரிந்தே வருமோ? தேன் என்பதன் னகரம், இயல்பாதலன்றி, வேறு விதி பெறுதோ? மெல்லெழுத்து வரின், விகாரமடைதல் இல்லையோ?

---

## மகரவீற்றுப்புணர்ச்சி.

கசச. மகரத்தின் முன் வல்லினம் வரின், வேற்றுமையினும், அல்வழியிலே பண்புத்தொகையினும், உவமைத் தொகையினும், இறுதி மகரங் கெட்டு, வரும் வல்லின மிகும். எழுவாய்த்தொடரினும், உம்மைத்தொகையினும், செய்யுமென்னும் பெயரெச்சத்தொடரினும், வினைமுற்றுத் தொடரினும், இடைச்சொற்றொடரினும், இறுதி மகரம் வரும் வல்லெழுத்திற்கு இனமாகத் திரியும். உ-ம்.

| | |
|---|---|
| மரக்கோடு<br>நிலப்பரப்பு | வேற்றுமை. |
| வட்டக்கல்<br>சதுரப்பலகை | பண்புத்தொகை. |
| கமலக்கண் | உவமைத்தொகை. |
| மரங்குறிது<br>யாங்கொடியேம் | எழுவாய்த்தொடர். |
| பணங்காசு | உம்மைத்தொகை. |
| செய்யுங்காரியம்<br>உண்ணுஞ்சோறு | பெயரெச்சத்தொடர். |
| உண்டனஞ்சிறியேம்<br>தின்றனங்குறியேம் | வினைமுற்றுத்தொடர் |

சாத்தனுங்கொற்றனும் } இடைச்சொற்றொடர்.
பூதனுந் தேவனும்

மரம் பெரிது எனப் பகரம் வருமிடத்து இறுதிமகரம் இயல்பாம்.

தவஞ்செய்தான் என இரண்டாம்வேற்றுமைத்தொகையினும், நிலங்கிடந்தான் என ஏழாம்வேற்றுமைத்தொகையினும், வருமொழி வினையாயவிடத்து, இறுதி மகரங் கெடாது, வரும் வல்லெழுத்திற்கு இனமாகத் திரியும்.

கசரு. தனிக்குற்றெழுத்தின் கீழ் நின்ற மகரம், இருவழியினும், வரும் வல்லெழுத்திற்கு இனமாகத் திரியும். உ-ம்.

| அல்வழி. | வேற்றுமை. |
|---|---|
| கங்குறிது | கங்குறுமை |
| அஞ்சிறிது | அஞ்சிறுமை |
| செங்கோழி | நங்கை |
| | தஞ்செவி |

கசசு. மகரத்தின் முன் மெல்லினம் வரின், இறுதி மகரம், இருவழியினுங் கெடும். உ-ம்.

| அல்வழி. | வேற்றுமை. |
|---|---|
| மரஞான்றது | மரஞாற்சி |
| மரநீண்டது | மரநீட்சி |
| மரமாண்டது | மரமாட்சி. |

கசஎ. தனிக்குறிலின் கீழ் நின்ற மகரம், ஞ நக்கள் வரின், அவ்வெழுத்தாகத் திரியும். உ-ம்.

அஞ்ஞானம் நுஞ்ஞானம்
தந்நூல் நந்நூல்

கசஅ. மகரத்தின் முன் உயிரும் இடையினமும் வரின், வேற்றுமையினும், அல்வழியிலே பண்புத்தொகையினும், உவமைத்தொகையினும், இறுதி மகரங்கெடும். எழுவாய்த்தொடரினும், உம்மைத்தொகையினும், செய்புமென்னும் பெயரெச்சத்தொடரினும், வினைமுற்றுத்தொடரினும், இடைச்சொற்றொடரினும், இறுதி மகரங் கெடாது நிற்கும். உ-ம்.

| | |
|---|---|
| மரவடி<br>மரவேர் | வேற்றுமை. |
| வட்டவாழி<br>வட்டவடிவம் | பண்புத்தொகை. |
| பவள6<br>பவளவாய | உவமைத்தொகை. |
| மரமரிது<br>மரம்வலிது | எழுவாய்த்தொடர். |
| வலமிடம்<br>நிலம்வானம் | உம்மைத்தொகை. |
| உண்ணுமுணவு<br>ஆளும்வளவன் | பெயரெச்சத்தொடர். |
| உண்டனமடியேம்<br>உண்டனம்யாம் | வினைமுற்றுத்தொடர் |
| அரசனுமமைச்சனும்<br>புலியும்யாளியும் | இடைச்சொற்றொடர். |

செயமடைந்தான், மரம் வெட்டினன் என இரண்டாம் வேற்றுமைத் தொகையினும், மாயூரவேதியன், சிதம்பரம்

வாழ்ந்தான் என ஏழாம்வேற்றுமைத் தொகையினும், வருமொழி வினையாயவிடத்து, இறுதிமகரங்கெடாது நிற்கும்.

வினையாலணையும் பெயரின் ஈற்று மகரம், வேற்றுமையினும், உயிரும் இடையினமும் வரின், சிறியேமன்பு, சிறியேம் வாழ்வு எனக்கெடாது நிற்கும்; வல்லினம் வரின், சிறியேங்கை என இனமெல்லெழுத்தாகத் திரியும்.

பரீக்ஷை வினாக்கள்.—கசச. மகரத்தின்முன் இருவழியினும் வல்லினம் வரின், எப்படிப் புணரும்? இரண்டாம்வேற்றுமைத் தொகையினும், ஏழாம்வேற்றுமைத் தொகையினும், வருமொழி வினையாயவிடத்து, எப்படிப் புணரும்? கசரு. தனிக்குற்றெழுத்தின் கீழ் நின்ற மகரம், இருவழியினும் வல்லெழுத்து வரின், எப்படியாம்? கசசு. மகரத்தின் முன் இருவழியினும் மெல்லினம் வரின், எப்படிப் புணரும்? கசஎ. தனிக்குறிலின் கீழ் நின்ற மகரம், ஞ நக்கள் வரின், எப்படியாம்? கசஅ. மகரத்தின் முன் இருவழியினும் உயிரும் இடையினமும் வரின், எப்படிப் புணரும்? இரண்டாம் வேற்றுமைத் தொகையினும், ஏழாம் வேற்றுமைத் தொகையினும், வருமொழி வினையாயவிடத்து எப்படியாம்? வினையாலணையும் பெயரின் ஈற்று மகரம், வேற்றுமையில் உயிரும் இடையினமும் வரிற் கெட்டே புணருமோ? வல்லினம் வரின் எப்படியாம்?

---

## லகர ளகர வீற்றுப் புணர்ச்சி.

கசகூ. லகர ளகரங்களின் முன் வல்லினம் வரின், வேற்றுமையினும், அல்வழியிலே பண்புத்தொகையினும், உவமைத்தொகையினும், இறுதி லகரம் றகரமாகவும், ளகரம் டகரமாகவும் திரியும்; எழுவாய்த்தொடரினும், உம்மைத் தொகையினுந் திரிபுதலில்லையாம். உ-ம்.

| | |
|---|---|
| பாற்குடம் | அருட்பெருமை......வேற்றுமை. |
| வேற்படை | அருட்செல்வம் ......பண்புத்தொகை. |
| வேற்கண் | வாட்கண் ............உவமைத்தொகை |
| குயில்கரிது | பொருள்பெரிது .....எழுவாய்த்தொடர் |
| கால்கை | பொருள்புகழ்.......உம்மைத்தொகை. |

பால் குடித்தான், அருள் பெற்றான் என இரண்டாம் வேற்றுமைத் தொகையினும், கால் குதித்தோடினான், வாள் போழ்ந்திட்டான் என மூன்றும் வேற்றுமைத் தொகையினும், வருமொழி வினையாயவிடத்துத், திரியாவெனக்கொள்க.

கஙO. தனிக்குற்றெழுத்தைச்சார்ந்த ல ளக்கள் வல்லினம் வரின், எழுவாய்த்தொடரினும், உம்மைத்தொகையினும், ஒருகால் இயல்பாகவும், ஒருகாற் றிரியவும் பெறும். உ-ம்.

| | | |
|---|---|---|
| கல் குறிது | கற்குறிது | எழுவாய்த்தொடர். |
| முள் சிறிது | முட்சிறிது | |
| அல் பகல் | அற்பகல் | உம்மைத்தொகை. |
| உள் புறம் | உட்புறம் | |

நெல், செல், கொல், சொல் இந்நான்கிற்றின் லகரவொற்று, நெற்கடிது, செற்கரிது, கொற்சிறிது, சொற்பெரிது என எழுவாய்த்தொடரினும் உறழாது, திரிந்தே வரும்.

செல்—மேகம். கொல்—கொல்லன்.

உறழ்ச்சியாவது, ஒருகால் இயல்பாகியும், ஒருகால் விகாரப்பட்டும் வருதல். உறழ்ச்சியெனினும், விகற்பமெனினும், ஒக்கும்.

...தித்தான், கட்குடித்தான் எனத் தனிக்குற்றெழுத்...ர்த்த ல ளக்கள், இரண்டாம் வேற்றுமைத்தொகையின் வருமொழி வினையாயவிடத்தும், இயல்பாகாது திரிந்தே நிற்கும்.

கருக. அல்வழி வேற்றுமை இரண்டினும், லகரத்தின் முன் வருந் தகரம் றகரமாகவும், ளகரத்தின் முன் வருந் தகரம் டகரமாகவுந் திரியும். உ-ம்.

| அல்வழி. | வேற்றுமை. |
|---|---|
| கற்றீது | கற்றீமை |
| முட்டீது | முட்டீமை |

கருஉ. தனிக்குற்றெழுத்தைச் சார்ந்த ல ளக்கள், அல்வழியில், வருந் தகரந் திரிந்த விடத்து, றகர டகரங்களாகத் திரிதலன்றி, ஆய்தமாகவுந் திரியும். உ-ம்.

| | |
|---|---|
| கற்றீது | கஃறீது |
| முட்டீது | முஃடீது |

கருங. தனிக்குற்றெழுத்தைச் சாராத ல ளக்கள், வருந் தகரந் திரிந்தவிடத்து, அல்வழியில் எழுவாய்த்தொடரினும், விளித்தொடரினும், உம்மைத்தொகையினும், வினைமுற்றுத்தொடரினும், வினைத்தொகையினுங் கெடும். உ-ம்.

| | | |
|---|---|---|
| வேறீது | வாடீது | எழுவாய்த்தொடர். |
| தோன்றறீயன் | வேடீயன் | |

| | |
|---|---|
| தோன்றுறெடாய் | வேடீயை......விளித்தொடர். |
| காறலை | நகடலை........உம்மைத்தொகை. |
| உண்பறமியேன் | வந்தாடேவி...வினைமுற்றுத்தொடர். |
| பயிறேகை. | அருடேவன்....வினைத்தொகை. |

குயிற்றிரள், அருட்டிறம் என வேற்றுமையினும், காற்றலை, தாட்டுணை என்ப் பண்புத்தொகையினும், பிறங்கற்றேன், வாட்டாரை என உவமைத்தொகையினும், கெடாது திரிந்து நின்றமை காண்க. பிறங்கல் - மலை. தாரை - கண்.

வேறொட்டான், தாடொழுதான் என இரண்டாம் வேற்றுமைத்தொகையின் வருமொழி வினையாயவிடத்துக் கெடுமெனக்கொள்க.

நிலைமொழி உயர்திணைப் பெயராயின், தோன்றறுன், வேடோள் என வேற்றுமையினும் கெடும் எனவும், குரிசிற்றடிந்தான், அவட்டொடர்ந்தான் என இரண்டாம் வேற்றுமைத்தொகையின் வருமொழி வினையாயவிடத்துக் கெடாது திரியும் எனவுங் கொள்க.

கருச. லகர ளகரங்களின் முன் மெல்லினம் வரின், இருவழியினும், லகரம் னகரமாகவும், ளகரம் ணகரமாகவுந் திரியும். வரு நகரம் லகரத்தின்முன் னகரமாகவும், ளகரத்தின் முன் ணகரமாகவுந் திரியும். உ-ம்.

| அல்வழி. | வேற்றுமை. |
|---|---|
| கல்——கன்ஞெரிந்தது | கன்ஞெரி |
| வில்——வின்னீண்டது | வின்னீட்சி |
| *புல்——புன்மாண்டது | புன்மாட்சி |
| முள்——முண்ஞெரிந்தது | முண்ஞெரி |
| புள்——புண்ணீண்டது | புண்ணீட்சி |
| கள்——கண்மாண்டது | கண்மாட்சி |

கருரு. தனிக்குற்றெழுத்தைச் சாராத லளக்கள், இருவழியினும், வரு நகரந் திரிந்தவிடத்துக் கெடும். உ-ம்.

| அல்வழி. | வேற்றுமை. |
|---|---|
| வேனன்று | வேனன்மை |
| பொருணன்று | பொருணன்மை |

கருசு. லகர ளகரங்களின் முன் இடையினம் வரின் இருவழியினும், இறுதி லளக்கள் இயல்பாம்.

| அல்வழி. | வேற்றுமை. |
|---|---|
| கல்யாது | கல்யாப்பு |
| விரல்வலிது | விரல்வன்மை |
| முள்யாது | முள்யாப்பு |
| வாள்வலிது | வாள்வன்மை |

பரீக்ஷை வினாக்கள்.—கசகூ. லகர ளகரங்களின் முன் இருவழியினும் வல்லினம் வரின், எப்படிப் புணரும்? இரண்டாம் வேற்றுமைத் தொகையினும், மூன்றாம்வேற்றுமைத் தொகையினும், வருமொழி வினையாயவிடத்து, எப்படியாம்? கரு0. தனிக்குற்றெழுத்தைச் சார்ந்த லளக்கள், வல்லினம் வரின், எவ்விடங்களில் ஒருகால் இயல்பாகவும், ஒருகாற்றிரியவும் பெறும்? எச்சொற்களின் ஈற்று லகரவொற்று, வல்லினம் வரின், எழுவாய்த் தொடரிற் றிரிந்தே வரும்? உறழ்ச்சியாவது யாது? தனிக்குற்றெழுத்தைச் சார்ந்த லளக்கள், இரண்டாம் வேற்றுமைத்தொகையின் வருமொழி வினையாயவிடத்து, இயல்பேயாமோ? கருக. இருவழியினும் லகரத்தின முன் வருந் தகரம் எப்படியாம்? ளகரதின் முன்வருந் தகரம் எப்படியாம்? கருஉ. தனிக்குற்றெழுத்தைச் சார்ந்த லளக்கள், வருந் தகரந் திரிந்தவிடத்து, மடக்களாதலன்றி வேறு திரியும் பெறுமோ? கருங. தனிக்குற்றெழுத்தைச் சாராத லளக்கள், வருந் தகரந் திரிந்தவிடத்துக், கெடுதல் எங்கும் இல்லையோ? தனிக்குற்றெழுத்தைச் சாராத லளக்கள், வருந் தகரந் திரிந்தவிடத்து, எங்கே கெடாது திரிந்து நிற்கும்? லளக்கள் வேற்றுமையிற் கெடுதல் எங்கும் இல்லையோ? உயர்திணைப் பெயரீற்று லளக்கள், வேற்றுமையில், வருந் தகரந் திரிந்த விடத்து, எப்படியாம்? கருச. லளக்களின் முன் இருவழியினும் மெல்லினம் வரின், எப்படியாம்? கருரு. தனிக்குற்றெழுத்தைச் சாராத லளக்கள், இருவழியிலும் வரும் தகரந் திரிந்தவிடத்து, எப்படியாம்? கருசா. லளக்களின் முன் இருவழியினும் இடையினம் வரின், எப்படியாம்?

## வகரவீற்றுப் புணர்ச்சி.

கருஎ. அவ், இவ், உவ் என்னும் அஃறிணைப் பலவின் பாலை உணர்த்தி வருஞ் சுட்டுப்பெயர்களின் ஈற்று வகரம், அல்வழியில், வல்லினம் வரின் ஆய்தமாகத் திரியும்; மெல்லினம் வரின் வந்த எழுத்தாகத் திரியும்; இடையினம் வரின் இயல்பாகும். உ-ம்.

| | | |
|---|---|---|
| அஃகடியன | இஃசிறியன | உஃபெரியன |
| அஞ்ஞான்றன | இந்நீண்டன | உம்மாண்டன |
| அவ்யாத்தன | இவ்வளர்ந்தன | உவ்வாழ்ந்தன |

கருஅ. தெவ் என்னும் சொல்லீற்று வகரம் யகரமல்லாத மெய்கள் வரின், உகரச்சாரியை பெறும்; மகரம் வருமிடத்து, ஒரோவழி மகரமாகத் திரியவும் பெறும். உ-ம்.

| அல்வழி. | வேற்றுமை. |
|---|---|
| தெவ்வுக்கடிது | தெவ்வுக்கடுமை |
| தெவ்வுமாண்டது | தெவ்வுமாட்சி |
| தெவ்வுவந்தது | தெவ்வுவன்மை |
| தெவ்வுமன்னர் } தெம்மன்னர் } | தெவ்வுமுனை } தெம்முனை } |

பரீக்ஷை வினாக்கள்.—கருஎ. சுட்டுப்பெயர்களின் ஈற்று வகரம், அல்வழியில் மூவினமெய்களும் வரின், எப்படியாம்? கருஅ. தெவ்வென்னுஞ் சொல்லீற்று வகரம், யகரமல்லாத மெய்கள் வரின், எப்படியாம்? மகரம் வரின் வேறு விதியும் பெறுமோ?

## எண்ணுப்பெயர் நிறைப்பெயர் அளவுப்பெயர்கள் சாரியை பெறுதல்.

கருக. உயிரையும் மெய்யையும் ஈறாகவுடைய எண்ணுப்பெயர் நிறைப்பெயர் அளவுப்பெயர்களின் முன் அவ்வவற்றிற் குறைந்த அவ்வப்பெயர்கள் வரின், பெரும்பாலும் ஏ என்னுஞ் சாரியை இடையில் வரும். உ-ம்.

| | |
|---|---|
| ஒன்றேகால் | காலேகாணி |
| தொடியேகஃசு | கழஞ்சேகுன்றி |
| கலனேபதக்கு | உழக்கேயாழாக்கு |

ஒன்றரை, கழஞ்சரை, குறுணிநானாழி எனச் சிறுபான்மை ஏகாரச்சாரியை வராதொழியுமெனக் கொள்க.

பரீக்ஷை வினா.—கருக. எண்ணுப்பெயர் நிறைப்பெயர் அளவுப்பெயர்களின் முன் அவ்வவற்றிற் குறைந்த அவ்வப்பெயர்கள் வரின், எப்படியாம்?

## இடைச்சொற்களின் முன் வல்லினம் புணர்தல்.

கசுO, உயிரீற்றிடைச்சொற்களின் முன் வரும் வல்லினம் இயல்பாயும் மிக்கும் முடியும். உ-ம்.

அம்ம——அம்மகொற்றா
அம்மா——அம்மாசாத்தா
மியா——கேண்மியாபூதா
மதி——சென்மதிபெரும
என——பொள்ளெனப்புறம்வேரார்
இனி——இனிச்செய்வேன்.

ஏ————அவனே கண்டான்
ஓ————அவனோ போனான்

கசுக. வினையை அடுத்த படி என்னும் இடைச்சொல்லின் முன் வரும் வல்லினம் மிகா. சுட்டையும் வினாவையும் அடுத்த படி என்னும் இடைச்சொல்லின் முன் வரும் வல்லினம், ஒருகால் மிக்கும், ஒருகால் மிகாதும், வரும். உ-ம்.

வரும்படிசொன்னான்
அப்படிசெய்தான்      அப்படிச்செய்தான்
எப்படிபேசினான்      எப்படிப்பேசினான்

கசுஉ. வேற்றுமைப்பொருட்புணர்ச்சியில் வல்லினம் வரின், சாரியை இடைச்சொல்லின் இறுதி னகரந் திரியாதியல்பாம். உ-ம்.

ஆன்கன்று      வண்டின்கால்.

பரீக்ஷை வினாக்கள்.—கசு0. உயிரீற்றிடைச்சொற்களின் முன் வரும் வல்லினம் எப்படியாம்? கசுக. படி என்னும் இடைச்சொல்லின் முன் வரும் வல்லினம் எப்படியாம்? கசுஉ. வேற்றுமைப்பொருட் புணர்ச்சியில் வல்லினம் வரின், சாரியையிடைச்சொல்லின் இறுதி னகரம் எப்படியாம்?

---

## உரிச்சொற்களின் முன் வல்லினம் புணர்தல்.

கசுரு. உயிரீற்றுரிச்சொற்களின் முன் வல்லினம் வரின், மிக்கும், இயல்பாகியும், இனமெல்லெழுத்து மிக்கும் புணரும், உ-ம்.

தவ————தவப்பெரியன்
குழ————குழக்கன்று

கடி — கடிக்கமலம்
,, — கடிகா
தட — தடக்கை
,, — தடந்தோள்
கம — கமஞ்சூல்
நனி — நனிபேதை
கழி — கழிகண்ணோட்டம்

பரீக்ஷை வினா.—௧௬௩. உயிரீற்றுரிச்சொற்களின் முன் வல்லினம் வரின் எப்படியாம்?

---

## உருபுபுணர்ச்சி.

௧௬௪. வேற்றுமையுருபுகள், நிலைமொழியோடும் வருமொழியோடும் புணருமிடத்து, அவ்வுருபின் பொருட்புணர்ச்சிக்கு முற்கூறிய விதிகளைப் பெரும்பான்மை பெறும்; சிறுபான்மை வேறுபட்டும் வரும். உ-ம்.

நம்பிகண்வாழ்வு; இங்கே உயர்திணைப்பெயரீற்று உயிர் முன் வேற்றுமைப்பொருளில் வரும் வல்லினம் மிகா என்றும், ணகரம் இடையினம் வரின் இருவழியினும் இயல்பாம் என்றும், விதித்தபடியே, கண்ணுருபின் முதலுமீறும் இயல்பாயின.

உறிக்கட்டயிர்; இங்கே இகரவீற்றஃறிணைப் பெயர் முன் வேற்றுமைப்பொருளில் வரும் வல்லினம் மிகும் என்றும், ணகரம் வேற்றுமைப்பொருளில் வல்லினம் வரின், டகரமாகத் திரியும் என்றும், விதித்த படியே, கண்ணுருபின்முதலு மீறும் விகாரமாயின.

நம்பிக்குப்பிள்ளை; இங்கே உயர்திணைப்பெயரீற்று உயிர் முன் வேற்றுமைப்பொருளில் வரும் வல்லினம் இயல்

பாம் என்று விதித்தபடி இயல்பாகாது குவ்வுருபு மிகுந்தது.

இங்ஙனம் உருபு புணர்ச்சியானது பொருட்புணர்ச்சியை ஒத்து வருதலும், அதின்வேறுபட்டு வருதலும், சான்றோராட்சியால் அறிந்துகொள்க.

உறித்தயிர் என்பது, கண்ணென்னும் ஏழாம்வேற்றுமை யுருபின்றி அவ்வுருபினது இடப்பொருள் படப் பெயரும் பெயரும் நிலைமொழி வருமொழிகளாய் நின்று புணர்ந்த புணர்ச்சியாதலின், பொருட்புணர்ச்சியெனப்பட்டது. உறிக்கட்டயிர் என்பது, அவ்வேழனுருபு வெளிப்பட்டு நின்று நிலைமொழி வருமொழிகளோடு புணர்ந்த புணர்ச்சியாதலின், உருபு புணர்ச்சியெனப்பட்டது.

பரீக்ஷை வினாக்கள்.—கசுச. வேற்றுமையுருபுகள், நிலைமொழியோடும், வருமொழியோடும், எப்படிப் புணரும்? வேற்றுமைப்பொருட்புணர்ச்சியாவது யாது? உருபு புணர்ச்சியாவது யாது?

---

## விதியில்லா விகாரங்கள்.

கசுரு. விதியின்றி விகாரப்பட்டு வருவனவுஞ் சிலவுள, அவை, மருவி வழங்குதல், ஒத்து நடத்தல், தோன்றல், திரிதல், கெடுதல், நீளல், நிலை மாறுதல் என எழுவகைப்படும்.

அவைகளுள்ளே, மருவி வழங்குதலொன்று மாத்திரம் தொடர்மொழியிலும், மற்றவை பெரும்பாலும் தனிமொழியிலும் வரும்.

கசுசு. மருவி வழங்குதலாவது, விதியின்றிப் பலவாறு விகாரப்பட்டு மருவி வருதல். உ-ம்.

| | |
|---|---|
| அருமருந்தன்னபிள்ளை ... | அருமந்தபிள்ளை |
| பாண்டியனாடு ... ... ... | பாண்டிநாடு |
| சோழனாடு ... ... ... | சோணாடு |
| மலையமானாடு ... ... ... | மலாடு |
| தொண்டைமானாடு ... ... | தொண்டைநாடு |
| தஞ்சாவூர் ... ... ... | தஞ்சை |
| சென்னபுரி ... ... ... | சென்னை |
| குணக்குள்ளது ... ... ... | குணாது |
| தெற்குள்ளது ... ... ... | தெனாது |
| வடக்குள்ளது ... ... ... | வடாது |
| என்றந்தை ... ... ... | எந்தை |
| நுன்றந்தை ... ... ... | நுந்தை |

கசுஎ. ஒத்து நடத்தலாவது, ஓரெழுத்து நின்ற விடத்து மற்றோரெழுத்து வந்து பொருள் வேறுபடா வண்ணம் நடத்தலாம். அவை வருமாறு:—

அஃறிணையியற்பெயருள்ளே, குறிலிணையின்கீழ் மகர நின்றவிடத்து னகரம் வந்து பொருள் வேறுபடா வண்ணம் ஒத்து நடக்கும். உ-ம்.

| | |
|---|---|
| அகம் ... | அகன் |
| முகம் ... ... | முகன் |
| நிலம் ... | நிலன் |
| நலம் ... ... | நலன் |

மொழிமுதலிடைகளிலே சகர ஞகர யகரங்களின் முன் அகர நின்றவிடத்து ஐகாரம் வந்து பொருள் வேறுபடா வண்ணம் ஒத்து நடக்கும். உ-ம்.

| | | |
|---|---|---|
| பசல் | பைசல் | மொழிமுதலில் ஒத்துநடந்தது. |
| மஞ்சு | மைஞ்சு. | |
| அமச்சு | அமைச்சு | மொழியிடையில் ஒத்து நடந்தது. |
| | இலைஞ்சி | |
| அரயர் | அரையர் | |

ஒரோவிடத்து மொழிக்கு முதலினும், சிலவிடத்து ஐகாரத்தின் பின்னும், யகரவொற்றின் பின்னும், நகர நின்ற விடத்து ஞகரம் வந்து, பொருள் வேறுபடாவண்ணம் ஒத்து நடக்கும். உ-ம்.

| | | |
|---|---|---|
| நண்டு ... ... | ஞண்டு | மொழிமுதலில் ஒத்துநடந்தது. |
| நெண்டு ... ... | ஞெண்டு | |
| நமன் ... ... | ஞமன் | |
| ஐந்நூறு ... ... | ஐஞ்ஞூறு | ஐகாரத்தின்பின் ஒத்து நடந்தது. |
| மைந்நின்றகண் ... | மைஞ்ஞின்றகண் | |
| சேய்நலூர் ... | சேய்ஞலூர் | யகரத்தின்பின் ஒத்து நடந்தது. |
| செய்ந்நின்றநீலம்.. | செய்ஞ்ஞின்றநீலம் | |

ஒரோவிடத்து அஃறிணைப்பெயரீற்றில் லகரநின்ற விடத்து ரகரம் வந்து, பொருள் வேறுபடாவண்ணம் ஒத்து நடக்கும். உ-ம்.

| | |
|---|---|
| சாம்பல் ... ... | சாம்பர் |
| பந்தல் ... ... | பந்தர் |
| குடல் ... ... | குடர் |

அஃறிணைப்பெயர்களுள், ஒரோவிடத்து மென்றொடர்க் குற்றுகரமொழிகளினிறுதி உகரநின்றவிடத்து அர் வந்து, பொருள் வேறுபடாவண்ணம் ஒத்து நடக்கும். உ-ம்.

அரும்பு ... ... அரும்பர்.
சுரும்பு ... ... சுரும்பர்
கொம்பு ... ... கொம்பர்
வண்டு ... ... வண்டர்

ஒரோவழி லகரநின்றவிடத்து ளகரமும், ளகரநின்ற விடத்து லகரமும் வந்து, பொருள் வேறுபடாவண்ணம் ஒத்து நடக்கும். உ-ம்.

அலமருகுயிலினம் ... அளமருகுயிலினம்
பொள்ளாமணி ... ... பொல்லாமணி

கசுஅ. தோன்றலாவது, எழுத்துஞ்சாரியையும் விதியின்றித் தோன்றுதலாம். உ-ம்.

யாது ... ... ... யாவது
குன்று ... ... குன்றம்
செல் உழி ... ... செல்வுழி
விண் அத்து ... ... விண்வத்து

கசுகூ. திரிதலாவது, ஓரெழுத்து மற்றோரெழுத்தாக விதியின்றித் திரிதலாம். உ-ம்.

மாகி ... ... ... ... மாசி
மழைபெயின் விளையும் ... மழைபெயில்விளையும்
கண்ணகல் பரப்பு ... ... கண்ணகன்பரப்பு
உயர்திணைமேல ... ... உயர்திணைமேன

கஎ0. கெடுதலாவது உயிர்மெய்யாயினும் மெய்யாயினும் விதியின்றிக் கெடுதலாம். உ-ம்.

யாவர் ... ... ... ... யார்
யார் ... ... ... ... ஆர்
யானை ... ... ... ... ஆனை

யாடு ... ... ... ... ஆடு
யாறு ... ... ... ... ஆறு

எவன் என்னுங் குறிப்புவினை, என் என இடை நின்ற உயிர்மெய் கெட்டும், என்ன, என்னை என உயிர்மெய் கெட்டு இறுதியில் உயிர் தோன்றியும் வழங்கும்.

கஎக. நீளலாவது, விதியின்றிக் குற்றெழுத்து நெட்டெழுத்தாக நீளலாம். உ-ம்.

பொழுது ... .. ... போழ்து
பெயர் ... ... ...பேர்

கஎஉ. நிலைமாறுதலாவது, எழுத்துக்கள் ஒன்று நின்றவிடத்து ஒன்று சென்று மாறி நிற்றலாம். உ-ம்.

வைசாகி ... . ... வைகாசி
நாளிகேரம் ... .. ... நாரிகேளம்
மிஞிறு ... ... ஞிமிறு
சிவிறி ... ... ... ... விசிறி
தசை ... ... .. ... சதை

இந்நிலைமாறுதல் எழுத்துக்கேயன்றிச் சொற்களுக்கும் உண்டு; அங்ஙனஞ் சொன்னிலைமாறி வழங்குவன இலக்கணப்போலி எனப் பெயர்பெறும். உ-ம்.

கண்மீ ... .. மீகண்
நகர்ப்புறம் ... புறநகர்
புறவுலா ... ... உலாப்புறம்
இன்முன் ... ... . முன்றில்

முன்றில் என்பதில் விதியின்றி றகரந் தோன்றிற்று.

பரீக்ஷை வினாக்கள்.—௧௬௫. இப்படி விதியினால், விகாரப்பட்டு வருவனவன்றி, விதியின்றி, விகாரப்படுவனவும் உளவோ? அவை எத்தனை வகைப்படும்? ௧௬௬. மருவி வழங்குதலாவது யாது? ௧௬௭. ஒத்து நடத்தலாவது யாது? ௧௬௮. தோன்றலாவது யாது? ௧௬௯. திரிதலாவது யாது? ௧௭௦. கெடுதலாவது யாது? ௧௭௧. நீளலாவது யாது? ௧௭௨. நிலைமாறுதலாவது யாது? இந்நிலைமாறுதல் எழுத்துக்கேயன்றிச், சொற்களுக்கும் உண்டோ? சொன்னிலைமாறி வழங்குவன எப்படிப் பெயர் பெறும்?

புணரியன் முற்றிற்று.

---

எழுத்ததிகாரம் முற்றுப்பெற்றது.

இரண்டாவது

# சொல்லதிகாரம்.

## க. பெயரியல்.

கஎ௩. சொல்லாவது, ஒருவர் தங்கருத்தின் நிகழ்பொருளைப் பிறர்க்கு அறிவித்தற்கும், பிறர் கருத்தின் நிகழ்பொருளைத் தாம் அறிதற்கும் கருவியாகிய ஒலியாம்.

பரீக்ஷை வினா.—கஎ௩. சொல்லாவது யாது?

கஎ௪. அக்கருத்தின் நிகழ் பொருள், உயர்திணை, அஃறிணை, இருவகைப்படும்.

திணை - சாதி. உயர்திணை - உயர்வாகிய சாதி. அஃறிணை - உயர்வல்லாத சாதி. அல் திணை என்றது அஃறிணை எனப் புணர்ந்தது. இங்கே திணையென்னும் பண்புப்பெயர், ஆகுபெயராய்ப் பண்பியை உணர்த்தி நின்றது. சாதி பண்பு. சாதியையுடைய பொருள் பண்பி.

கஎ௫. உயர்திணையாவன, மனிதரும், தேவரும், நரகரும் ஆகிய மூவகைச் சாதிப்பொருள்களாம்.

கஎ௬. அஃறிணையாவன, மிருகம், பறவை முதலிய உயிருள்ள சாதிப் பொருள்களும், நிலம், நீர் முதலிய உயிரில்லாத சாதிப் பொருள்களுமாம்.

பரீக்ஷை வினாக்கள்.—கஎச. அக்கருத்தின் நிகழ் பொருள் எத்தனை வகைப்படும்? திணையென்பதற்குப் பொருள் என்னை? உயர்திணை யென்பதற்குப் பொருள் என்னை? அஃறிணை யென்பதற்குப் பொருள் என்னை? இங்கே திணையென்னும் பண்புப்பெயர் எதனை உணர்த்தி நின்றது? கஎரு. உயர்திணை யாவன எவை? கஎசு. அஃறிணையாவன எவை?

## பால.

கஎஎ. உயர்திணை, ஆண்பால், பெண்பால், பலர்பால் என, மூன்று பிரிவையுடையது. உ-ம்.

அவன், வந்தான...உயர்திணையாண்பால்.
அவள், வந்தாள்...உயர்திணைப்பெண்பால்.
அவர், வந்தார் ....உயர்திணைப்பலர்பால்.

பலர்பால் என்றது, ஆடவர், காளையர் என்பன முதலிய ஆண்பன்மையும்; பெண்டிர், மங்கையர் முதலிய பெண்பன்மையும்; மக்கள், அவர் என்பன முதலிய அவ்விருவர் பன்மையும், அடக்கி நின்றது.

கஎஅ. அஃறிணை, ஒன்றன்பால், பலவின்பால் என இரண்டு பிரிவையுடையது. உ-ம்.

அது, வந்தது——அஃறிணையொன்றன்பால்.
அவை, வந்தன——அஃறிணைப்பலவின்பால்.

பரீக்ஷை வினாக்கள்.—கஎஎ. உயர்திணை எத்தனைப்பிரிவையுடையது? பலர்பால் என்றது எவைகளை அடக்கி நின்றது? கஎஅ. அஃறிணை எத்தனைப்பிரிவையுடையது?

## இடம்.

௧௭௯. இவ்விருதிணையாகிய ஐம்பாற்பொருளை உணர்த்துஞ் சொற்கள், தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூவிடத்தையும் பற்றி வரும்.

௧௮௦. பேசும் பொருள் தன்மையிடம்; பேசும்பொருளினால் எதிர்முகமாக்கப்பட்டுக் கேட்கும்பொருள் முன்னிலையிடம்; பேசப்படும்பொருள் படர்க்கையிடம்.

பரீக்ஷை வினாக்கள்.—௧௭௯. இவ்விருதிணையாகிய ஐம்பாற்பொருளை உணர்த்துஞ் சொற்கள் எவ்விடத்தைப் பற்றி வரும்? ௧௮௦. தன்மையிடம் எது? முன்னிலையிடம் எது? படர்க்கையிடம் எது?

## சொற்களின் வகை.

௧௮௧. சொற்கள், பெயர்ச்சொல், வினைச்சொல், இடைச்சொல், உரிச்சொல் என, நால்வகைப்படும்.

பரீக்ஷை வினா.—௧௮௧. சொற்கள் எத்தனை வகைப்படும்?

## பெயர்ச்சொற்களின் வகை.

௧௮௨. பெயர்ச்சொல்லாவது, பொறிகட்கும் மனத்துக்கும் விடயமாகிய பொருளை உணர்த்துஞ் சொல்லாம்.

பொருள், இடம், காலம், சினை என்று நான்கும் பொருளென ஒன்றாய் அடங்கும். பொருட்கு உரிமை பூண்டு நிற்பனவாகிய பண்புந் தொழிலும் பொருளெனவும்படுமாகலின், அவைகளை உணர்த்துஞ் சொல்லும் பெயர்ச்சொல்லெனப்படும். பொருளினது புடைபெயர்ச்சியெனப்படும் வினை நிகழ்ச்சியை

உணர்த்துஞ் சொல்லாகிய வினைச்சொல்லும், பெயர்த்தன்மைப் பட்டு, அப்பொருளை உணர்த்தும். இங்ஙனமாகவே, பெயர்களனைத்தும், பொருட்பெயர், வினையாலணையும்பெயர், பண்புப் பெயர், தொழிற்பெயர் என்னும் நால்வகையுள் அடங்கும்.

௧௮௩. பெயர்ச்சொற்கள், இடுகுறிப்பெயர், காரணப் பெயர், காரணவிடுகுறிப்பெயர் என, மூவகைப்படும்.

௧௮௪. இடுகுறிப்பெயராவது, ஒருகாரணமும் பற்றாது பொருளை உணர்த்தி நிற்கும் பெயராம்.

உ - ம். மரம், மலை, கடல், சோறு.

இவை ஒருகாரணமும் பற்றாது வந்தமையால், இடுகுறிப் பெயராயின.

௧௮௫. காரணப்பெயராவது, யாதேனும் ஒருகாரணம் பற்றிப் பொருளை உணர்த்தி நிற்கும் பெயராம்.

உ - ம். பறவை, அணி, பொன்னன், கணக்கன்.

பறப்பதாதலிற் பறவை எனவும், அணியப்படுவதாதலின் அணி எனவும், பொன்னையுடையானாதலிற் பொன்னன் எனவும், கணக்கெழுதுவோனாதலிற் கணக்கன் எனவும் காரணம் பற்றி வந்தமையால், இவை காரணப்பெயராயின.

௧௮௬. காரணவிடுகுறிப்பெயராவது, காரணங்கருதிய பொழுது அக்காரணத்தையுடைய பலபொருள்களுக்குஞ் செல்வதாயும், காரணங் கருதாதபொழுது இடுகுறியளவாய் நின்று ஒவ்வொரு பொருட்கே செல்வதாயும், உள்ள பெயராம்.

உ - ம். முக்கணன், அந்தணன், முள்ளி, கறங்கு.

முக்கணன் என்பது, காரணங் கருதியபொழுது விநாயகக் கடவுள் முதலிய பலர்க்குஞ் செல்லுதலாலும், காரணங் கருதாத பொழுது இடுகுறியளவாய்ச் சிவபெருமானுக்குச் செல்லுதலாலும், காரணவிடுகுறிப் பெயராயிற்று.

அந்தணன் என்பது, காரணங் கருதியபொழுது அழகிய தண்ணளியையுடையோர் பலர்க்குஞ் செல்லுதலாலும், காரணங் கருதாதபொழுது இடுகுறியளவாய்ப் பார்ப்பானுக்குச் செல்லுதலாலும், காரணவிடுகுறிப் பெயராயிற்று.

முள்ளி என்பது, காரணங் கருதியபொழுது முள்ளையுடைய செடிகள் பலவற்றிற்குஞ் செல்லுதலாலும், காரணங் கருதாதபொழுது இடுகுறியளவாய் முள்ளி என்னும் ஒரு செடிக்குச் செல்லுதலாலும், காரணவிடுகுறிப்பெயராயிற்று.

கறங்கு என்பது, காரணங் கருதியபொழுது சுழலலையுடைய பலபொருள்கட்குஞ் செல்லுதலாலும், காரணங் கருதாதபொழுது இடுகுறியளவாய்க் காற்றாடி என்னும் ஒருபொருட்குச் செல்லுதலாலும், காரணவிடுகுறிப்பெயராயிற்று.

௧௮௭. இப்பெயர்கள், பொதுப்பெயர், சிறப்புப்பெயர் என, இருவகைப்படும்.

௧௮௮. பொதுப்பெயராவது, பல பொருள்களுக்குப் பொதுவாகி வரும் பெயராம்.

உ - ம். மரம், விலங்கு, பறவை.

இவற்றுள், மரம் இடுகுறிப்பொதுப்பெயர்; விலங்கு, பறவை என்பன காரணப் பொதுப்பெயர்.

கஅகூ. சிறப்புப்பெயராவது, ஒவ்வொரு பொருளுக்கே சிறப்பாகி வரும் பெயராம்.

உ-ம். ஆல், கரி, காரி.

இவற்றுள் ஆல் இடுகுறிச் சிறப்புப் பெயர்; கரி, காரி என்பன காரணச் சிறப்புப்பெயர். கரி-யானை. காரி-கரிக்குருவி.

கக௦. பெயர்கள், இடவேற்றுமையினாலே, தன்மைப் பெயர், முன்னிலைப்பெயர், படர்க்கைப்பெயர் என, மூவகைப் படும்.

பரீக்ஷை வினாக்கள்.—கஅஉ. பெயர்ச்சொல்லாவது யாது? பெயர்களனைத்தும் எத்தனை வகையுள் அடங்கும்? கஅங. பெயர்ச்சொற்கள் எத்தனை வகைப்படும்? கஅச. இடுகுறிப் பெயராவது யாது? கஅரு. காரணப்பெயராவது யாது? கஅசூ. காரணவிடுகுறிப்பெயராவது யாது? கஅஎ. இப்பெயர்கள் மீட்டு எத்தனை வகைப்படும்? கஅஅ. பொதுப்பெயராவது யாது? கஅகூ. சிறப்புப்பெயராவது யாது? கக௦. பெயர்கள் இடவேற்றுமையினால் எத்தனை வகைப்படும்?

## தன்மைப் பெயர்கள்.

கககூ. தன்மைப்பெயர்கள் நான், யான், நாம், யாம் என நான்காம். இவைகளுள், நான், யான் இவ்விரண்டும் ஒருமைப்பெயர்கள்; நாம், யாம் இவ்விரண்டும் பன்மைப்பெயர்கள்.

இத்தன்மைப்பெயர்கள் உயர்திணையாண்பால் பெண் பால்களுக்குப் பொதுவாகி வருவனவாம்.

* தன்மைப்பெயர்களை உயர்திணைப்பெயர்கள் என்பர் தொல்காப்பியர்; இருதிணைப்பொதுப்பெயர்கள் என்பர் நன்னூலார்.

உ-ம். யானம்பி, யானங்கை......தன்மையொருமை.
யாமைந்தர், யாமகளிர்.......தன்மைப்பன்மை.

உலகவழக்குச் செய்யுள்வழக்கிரண்டினும், நாம், யாம் இரண்டும், நாங்கள், யாங்கள் எனவும் வரும்.

பரீக்ஷை விஞக்கள்.—ககக. தன்மைப்பெயர்கள் எவை? இவைகளுள், எவை ஒருமைப்பெயர்கள்? எவை பன்மைப்பெயர்கள்? இத்தன்மைப் பெயர்கள் திணைபால்களுள் எவைகளுக்குப் பொதுவாகி வருவன?

---

## முன்னிலைப் பெயர்கள்.

ககூஉ. முன்னிலைப்பெயர்கள், நீ, நீர், நீயிர், நீவிர், நல்லீர் என ஐந்தாம். இவைகளுள், நீ என்பது ஒருமைப் பெயர்; மற்றவை பன்மைப்பெயர்கள்.

இம்முன்னிலைப் பெயர்கள் இருதிணையாண்பால் பெண்பால்களுக்குப் பொதுவாகி வருவனவாம்.

உ-ம். நீ நம்பி, நீ நங்கை, நீ பூதம்......முன்னிலையொருமை.
நீர்மைந்தர், நீர்மகளிர், நீர்பூதங்கள்..முன்னிலைப்பன்மை.

இருவழக்கினும் நீங்கள் என்பதும் முன்னிலைப்பன்மையில் வரும்.

பரீக்ஷை விஞக்கள்.—ககஉ. முன்னிலைப்பெயர்கள் எவை? இவைகளுள், எது ஒருமைப்பெயர்? எவை பன்மைப்பெயர்? இம்முன்னிலைப் பெயர்கள் திணை பால்களுள் எவைகளுக்குப் பொதுவாகி வருவன?

## படர்க்கைப் பெயர்கள்.

கசுங. படர்க்கைப்பெயர்கள், மேற்சொல்லப்பட்ட தன்மை முன்னிலைப்பெயர்களல்லாத மற்றைய எல்லாப் பெயர்களுமாம்.

உ-ம். அவன், அவள், அவர், பொன், மணி, நிலம்.

கசுச. அன், ஆன், மன், மான், ன் என்னும் விகுதிகளை இறுதியில் உடைய பெயர்கள் உயர்திணையாண்பாலொருமைப் படர்க்கைப் பெயர்களாம்.

உ-ம். பொன்னன், பொருளான், வடமன், கோமான், பிறன்.

கசுரு. அள், ஆள், இ, ள் என்னும் விகுதிகளை இறுதியில் உடைய பெயர்கள் உயர்திணைப்பெண்பாலொருமைப் படர்க்கைப் பெயர்களாம்.

உ-ம். குழையள், குழையாள், பொன்னி, பிறள்.

கசுசு. அர், ஆர், கள், மார், ர் என்னும் விகுதிகளை இறுதியில் உடைய பெயர்கள் உயர்திணைப்பலர்பாற்படர்க்கைப் பெயர்களாம்.

உ-ம். குழையர், குழையார், கோக்கள், தேவிமார், பிறர்.

தச்சர்கள், தட்டார்கள் எனக் கள்விகுதி, விகுதிமேல் விகுதியாயும், வரும்.

கசுஎ. துவ்விகுதியை இறுதியில் உடைய பெயர்கள் அஃறிணையொன்றன்பாற் படர்க்கைப் பெயர்களாம்.

உ-ம். குழையது.

௧௧௮. வை, அ, கள், வ் என்னும் விகுதிகளை இறுதியில் உடைய பெயர்கள் அஃறிணைப்பலவின்பாற்படர்க்கைப் பெயர்களாம்.

உ-ம். குழையவை, குழையன, மரங்கள், அவ்.

௧௧௯. விகுதி பெறாது உயர்திணை அஃறிணைகளில் ஆண்பால் பெண்பால்களை உணர்த்தி வரும் பெயர்களுஞ் சில உண்டு. அவை வருமாறு:—

நம்பி, விடலை, கோ, வேள், ஆடூஉ முதலியன உயர்திணையாண்பாற் பெயர்கள்.

மாது, தையல், மகடூஉ, நங்கை முதலியன உயர்திணைப் பெண்பாற் பெயர்கள்.

கடுவன், ஒருத்தல், போத்து, கலை, சேவல், ஏறு முதலியன அஃறிணையாண்பாற் பெயர்கள்.

பிடி, பிணை, பெட்டை, மந்தி, பிணா முதலியன அஃறிணைப் பெண்பாற் பெயர்கள்.

**பரீக்ஷை வினாக்கள்.**—௧௧௩. படர்க்கைப்பெயர்கள் எவை? ௧௧௪. உயர்திணையாண்பாலொருமைப் படர்க்கைப் பெயர்கள் எவை? ௧௧௫. உயர்திணைப் பெண்பாலொருமைப் படர்க்கைப்பெயர்கள் எவை? ௧௧௬. உயர்திணைப் பலர்பாற் படர்க்கைப் பெயர்கள் எவை? ௧௧௭. அஃறிணையொன்றன்பாற் படர்க்கைப் பெயர்கள் எவை? ௧௧௮. அஃறிணைப் பலவின்பாற் படர்க்கைப் பெயர்கள் எவை? ௧௧௯. விகுதி பெறாத உயர்திணை அஃறிணைகளில் ஆண்பால் பெண்பால்களை உணர்த்தி வரும் பெயர்களும் உண்டோ?

## இருதிணைப் பொதுப்பெயர்.

௨00. *தந்தை, தாய்; சாத்தன், சாத்தி; கொற்றன், கொற்றி; ஆண், பெண்; செவியிலி, செவியிலிகள்; தான், தாம்* என வரும் படர்க்கைப் பெயர்கள் உயர்திணை அஃறிணை இரண்டற்கும் பொதுப்பெயர்களாம். பொதுப்பெயரெனினும், விரவுப்பெயரெனினும், பொருந்தும். உ-ம்.

| | |
|---|---|
| தந்தையிவன் ... <br> தந்தையிவ்வெருது ... | தந்தையென்பது இருதிணையாண்பாற்கும் பொதுவாயிற்று. |
| தாயிவள் ... <br> தாயிப்பசு ... | தாயென்பது இருதிணைப் பெண்பாற்கும் பொதுவாயிற்று. |
| சாத்தனிவன் ... <br> சாத்தனிவ்வெருது ... | சாத்தனென்பது இருதிணையாண்பாற்கும் பொதுவாயிற்று. |
| சாத்தியிவள் ... <br> சாத்தியிப்பசு ... | சாத்தியென்பது இருதிணைப்பெண்பாற்கும் பொதுவாயிற்று. |
| கொற்றனிவன் ... <br> கொற்றனிவ்வெருது ... | கொற்றனென்பது இருதிணையாண்பாற்கும் பொதுவாயிற்று. |
| கொற்றியிவள் ... <br> கொற்றியிப்பசு ... | கொற்றியென்பது இருதிணைப்பெண்பாற்கும் பொதுவாயிற்று. |
| ஆண் வந்தான் ... <br> ஆண் வந்தது ... | ஆணென்பது இருதிணையாண்பாற்கும் பொதுவாயிற்று. |
| பெண் வந்தாள் ... <br> பெண் வந்தது ... | பெண்ணென்பது இருதிணைப்பெண்பாற்கும் பொதுவாயிற்று. |
| செவியிலியிவன் ... <br> செவியிலியிவள் ... <br> செவியிலியிவ்வெருது ... <br> செவியிலியிப்பசு ... | செவியிலியென்பது இருதிணையொருமைக்கும் பொதுவாயிற்று. |

| | |
|---|---|
| செவியிலிகளிவர் ... <br> செவியிலிகளிவை ... | செவியிலிகளென்பது இருதிணைப் பன்மைக்கும் பொதுவாயிற்று. |
| அவன்றான் ... <br> அவடான் ... <br> அதுதான் ... | தானென்பது இருதிணையொருமைக்கும் பொதுவாயிற்று. |
| அவர்தாம் ... <br> அவைதாம் ... | தாமென்பது இருதிணைப்பன்மைக்கும் பொதுவாயிற்று. |

தாம் என்பது தாங்கள் எனவும் வரும்.

பரீக்ஷை வினா.—உ௦௦. உயர்திணை அஃறிணை இரண்டற்கும் பொதுப்பெயர்கள் எவை?

---

## இருதிணை மூவிடப் பொதுப்பெயர்.

உ௦க. எல்லாம் என்னும் பன்மைப்பெயர் மூவிடங்கட்கும் பொதுப்பெயராம்.

உ-ம். நாமெல்லாம், நீரெல்லாம், அவரெல்லாம், அவையெல்லாம்.

பரீக்ஷை வினா.—உ௦க. எல்லாம் என்னும் பன்மைப்பெயர் எவைகளுக்குப் பொதுப்பெயர்?

---

## உயர்திணையிற் பாற் பொதுப்பெயர்.

உ௦உ. ஒருவர், பேதை, ஊமை என வரும் பெயர்கள் உயர்திணையாண் பெண்ணென்னும் இருபாற்கும் பொதுப்பெயர்களாம். உ-ம்.

| | |
|---|---|
| ஆடவருளொருவர், | பெண்டிருளொருவர். |
| பேதையவன், | பேதையவள். |
| ஊமையிவன், | ஊமையிவள். |

ஒருவர் என்னும் பாற்பொதுப்பெயர், பொருட்கேற்ப ஒருமைச்சொல்லைக் கொள்ளாது, ஒருவர் வந்தார் எனச் சொற்கேற்பப் பன்மைச்சொல்லையே கொண்டு முடியும். இன்னுஞ் சாத்தனார், தேவனார் என்பனவும், பொருட்கேற்ப ஒருமைச்சொல்லைக் கொள்ளாது, சொற்கேற்பப் பன்மைச்சொல்லையே கொண்டு முடியும்.

பரீக்ஷை வினா.—௨0௨. உயர்திணை ஆண் பெண் என்னும் இருபாற்கும் பொதுப்பெயர்கள் எவை?

## அஃறிணையிற் பாற் பொதுப்பெயர்.

௨0௩. து என்னும் ஒருமை விகுதியையாயினும், வை, அ, கள் என்னும் பன்மை விகுதிகளையாயினும் பெறாது வரும் அஃறிணைப்பெயர்களெல்லாம், அத்திணை ஒன்று பல என்னும் இருபாற்கும் பொதுப்பெயர்களாம். இவை பால் பகாவஃறிணைப்பெயர் எனவும், அஃறிணையியற்பெயர் எனவுங் கூறப்படும்.

உ-ம். யானை வந்தது, யானை வந்தன.
மரம் வளர்ந்தது, மரம் வளர்ந்தன.
கண் சிவந்தது, கண் சிவந்தன.

பரீக்ஷை வினுக்கள்.—௨0௩. அஃறிணை ஒன்றன்பால் பலவின்பால் என்னும் இரண்டற்கும் பொதுப்பெயர்கள் எவை? இவை எப்படிப் பெயர் பெறும்?

## ஆகுபெயர்.

௨0௪. ஒருபொருளின் இயற்பெயர், அப்பொருளோடு சம்பந்த முடைய பிறிதொரு பொருளிற்குத் தொன்று தொட்டு வழங்கி வரின், அது ஆகுபெயரெனப்படும்.

உ0ரு. அவ்வாகுபெயர் பதினாறு வகைப்படும். அவை யாவன, பொருளாகுபெயர், இடவாகுபெயர், காலவாகு பெயர், சினையாகுபெயர், குணவாகுபெயர், தொழிலாகு பெயர், எண்ணலளவையாகுபெயர், எடுத்தலளவையாகு பெயர், முகத்தலளவையாகுபெயர், நீட்டலளவையாகுபெயர், சொல்லாகுபெயர், தானியாகுபெயர், கருவியாகுபெயர், காரியவாகுபெயர், கருத்தாவாகுபெயர், உவமையாகுபெயர் என்பனவாம். உ-ம்.

(க.) தாமரைபோலுமுகம்; இங்கே தாமரையென்னு முதற்பொருளின் பெயர் அதன் சினையாகிய மலருக்காதலாற் பொருளாகுபெயர்.

(உ.) ஊரடங்கிற்று; இங்கே ஊரென்னு மிடப்பெயர் அங்கிருக்கிற மனிதருக்காதலால் இடவாகுபெயர்.

(ங.) காரறுத்தது; இங்கே காரென்னும் மழைக்காலப் பெயர் அக்காலத்தில் விளையும் பயிருக்காதலாற் காலவாகு பெயர்.

(ச.) வெற்றிலைநட்டான்; இங்கே வெற்றிலையென்னுஞ் சினைப் பெயர் அதன்முதலாகிய கொடிக்காதலாற் சினையாகு பெயர்.

(ரு.) நீலஞ் சூடினாள்; இங்கே நீலமென்னும் நிறக்குணப்பெயர் அதனையுடைய குவளைமலருக்காதலாற் குணவாகு பெயர்.

(கா.) வற்றலோடுண்டான்; இங்கே வற்றலென்னுந் தொழிற்பெயர் அதனைப் பொருந்திய உணவிற்காதலாற் றொழிலாகுபெயர்.

(எ.) காலாலே நடந்தான்; இங்கே காலென்னும் எண்ணலளவைப்பெயர் அவ்வளவைக் கொண்ட உறுப்பிற்காதலால் எண்ணலளவையாகுபெயர்.

(அ.) இரண்டுவீசை தந்தான்; இங்கே வீசையென்னும் எடுத்தலளவைப்பெயர் அவ்வளவைக் கொண்ட பொருட்காதலால் எடுத்தலளவையாகுபெயர்.

(கூ.) நாழியுடைந்தது; இங்கே நாழியென்னும் முகத்தலளவைப்பெயர் அவ்வளவைக் கருவிக்காதலால் முகத்தலளவையாகுபெயர்.

(௧0.) கிழைத்தடி விளைந்தது; இங்கே தடியென்னும் நீட்டலளவைப்பெயர் அதனால் அளக்கப்பட்ட விளைநிலத்திற்காதலால் நீட்டலளவையாகுபெயர்.

(௧௧.) இந்நூற்குரை செய்தான்; இங்கே உரையென்னுஞ் சொல்லின்பெயர் அதன் பொருளுக்காதலாற் சொல்லாகுபெயர்.

(௧௨.) விளக்கு முரிந்தது; இங்கே விளக்கென்னுந் தானியின்பெயர் அதற்குத் தானமாகிய தண்டிற்காதலாற் றானியாகுபெயர். தானி-தானத்திலுள்ளது. தானம்-இடம்.

(௧௩.) திருவாசகமோதினான்; இங்கே வாசகமென்னுங் கருவிப்பெயர் அதன் காரியமாகிய ஒருநூலிற் காதலாற் கருவியாகுபெயர்.

(௧௪.) அலங்காரங்கற்றான்; இங்கே அலங்காரமென்னுங் காரியத்தின்பெயர் அதனை யுணர்த்துதற்குக் கருவியாகிய நூலிற்காதலாற் காரியவாகுபெயர்.

(௧௫.) திருவள்ளுவர் படித்தான்; இங்கே திருவள்ளுவரென்னுங் கருத்தாவின்பெயர் அவராற் செய்யப்பட்ட நூலிற்காதலாற் கருத்தாவாகுபெயர்.

(௧௬.) பாவை வந்தாள்; இங்கே பாவை என்னும் உவமையின் பெயர் அதனை உவமையாகக்கொண்ட பெண்ணுக்காதலால் உவமையாகுபெயர்.

கார் என்னும் கருநிறத்தின் பெயர், அதனையுடைய மேகத்தை உணர்த்தும்போது ஆகுபெயர்; அம்மேகம் பெய்யும்பருவத்தை உணர்த்தும்போது இருமடியாகுபெயர், அப்பருவத்தில் விளையும் நெற்பயிரை உணர்த்தும்போது மும்மடியாகுபெயர்.

வெற்றிலை நட்டான், திருவாசகமோதினான் என்பவற்றுள், இலையென்பது வெறுமையென்னும் அடையினையும், வாசகமென்பது திருவென்னும் அடையினையும் அடுத்து, ஆகுபெயராய் வருதலால், அடையடுத்தவாகுபெயர்.

பரீக்ஷை வினாக்கள். – ௨௦௪. ஆகுபெயரென்பது யாது? ௨௦௫. அவ்வாகுபெயர் எத்தனை வகைப்படும்? அவை எவை?

---

## வேற்றுமை.

௨௦௬. பெயர்களனைத்தும், முதல்வேற்றுமை, இரண்டாம்வேற்றுமை, மூன்றாம்வேற்றுமை, நான்காம்வேற்றுமை, ஐந்தாம்வேற்றுமை, ஆறாம்வேற்றுமை, ஏழாம்வேற்றுமை, எட்டாம்வேற்றுமை என, எட்டு வேற்றுமைகளை யேற்கும்.

இவற்றுள், முதல்வேற்றுமை எழுவாய் எனவும், பெயர்வேற்றுமை எனவும், பெயர் பெறும். எட்டாம்வேற்றுமை விளியெனவும் பெயர் பெறும்.

௨௦௭. முதல்வேற்றுமையினது உருபாவது திரிபில்லாத பெயரேயாம்.

இது வினையையும், பெயரையும், வினாவையுங்கொள்ளும்.

உ-ம். சாத்தன் வந்தான், சாத்தனிவன், சாத்தன் யார்.

வேற்றுமையுருபினாலே கொள்ளப்படுஞ் சொல், முடிக்குஞ் சொல் எனவும், பயனிலை எனவும், பெயர் பெறும்.

இத்திரிபில்லாத பெயர், தானே தன் பொருளை வினைமுதற்பொருளாக வேறுபடுத்தும். அப்படி வேறுபட்ட வினைமுதற்பொருளே இதன்பொருளாம்.

முதல், கருத்தா, செய்பவன் என்பன ஒரு பொருட் சொற்கள்.

இவ்வெழுவாய்க்கு வேற்றுருபு இல்லையாயினும், ஆனவன், ஆகின்றவன், ஆவான், என்பவன் முதலிய ஐம்பாற் சொற்களுஞ் சிறுபான்மை சொல்லுருபாக வரும்.

உ-ம். சாத்தனானவன் வந்தான்.
சாத்தியானவள் வந்தாள்.
சாத்தரானவர் வந்தார்.
மரமானது வளர்ந்தது.
மரங்களானவை வளர்ந்தன.

மற்றவைகளும் இப்படியே.

௨0௮. இரண்டாம் வேற்றுமையினது உருபு ஐயொன்றே யாம்.

இது வினையையும், வினைக்குறிப்பையுங் கொள்ளும்.

இவ்வையுருபு, தன்னையேற்ற பெயர்ப்பொருளைச் செய ப்படுபொருளாக வேறுபடுத்தும். அப்படி வேறுபட்ட செயப் படுபொருளே இவ்வுருபின் பொருளாம்.

செயப்படுபொருள், கருமம், காரியம் என்பன ஒரு பொருட்சொற்கள்.

அச்செயப்படுபொருளானது, ஆக்கப்படுபொருள், அழி க்கப்படுபொருள், அடையப்படுபொருள், நீக்கப்படுபொருள், ஒக்கப்படுபொருள், உடைமைப்பொருள் முதலியனவாகப், பலதிறப்படும்.

(உதாரணம்.)

| | |
|---|---|
| குடத்தை வனைந்தான் .. | ஆக்கப்படுபொருள். |
| கோட்டையையிடித்தான் | அழிக்கப்படுபொருள். |
| ஊரை யடைந்தான் ... | அடையப்படுபொருள். |
| மனைவியைத் துறந்தான் | துறக்கப்படுபொருள். |
| புலியை யொத்தான் ... | ஒக்கப்படுபொருள். |
| பொன்னை யுடையான் ... | உடைமைப்பொருள். |

உ0கூ. மூன்றும்வேற்றுமையினுடைய உருபுகள் ஆல், ஆன், ஒடு, ஓடு என்பவைகளாம்.

இவை வினையைக்கொள்ளும்.

இவ்வுருபுகளுள், ஆல், ஆன் என்னும் இரண்டுருபுக ளும், தம்மையேற்ற பெயர்ப்பொருளைக், கருவிப்பொருளாக வும், கருத்தாப்பொருளாகவும், வேறுபடுத்தும். அப்படி வேறுபட்ட கருவிப்பொருளுங் கருத்தாப்பொருளும் இவ்

வுருபுகளின் பொருள்களாம். கருவி, காரணம் என்பன ஒரு பொருட்சொற்கள்.

கருவி, முதற்கருவி, துணைக்கருவி என, இருவகைப் படும். கருத்தாவும், இயற்றுதற்கருத்தா, ஏவுதற்கருத்தா என, இ

ஓடு, ஒடு என்னும் இரண்டுருபுகளும், தம்மையேற்ற பெயர்ப்பொருளை உடனிகழ்ச்சிப்பொருளாக வேறுபடுத்தும். அப்படி வேறுபட்ட உடனிகழ்ச்சிப்பொருளே இவ்வுருபுகளின் பொருளாம்.

(உதாரணம்.)

| | |
|---|---|
| மண்ணாலாகிய குடம்<br>மண்ணானாகிய குடம் | முதற்கருவி. |
| திரிகையாலாகிய குடம்<br>திரிகையானாகிய குடம் | துணைக்கருவி. |
| தச்சனாலாகிய கோயில்<br>தச்சனானாகிய கோயில் | இயற்றுதற்கருத்தா. |
| அரசனாலாகிய கோயில்<br>அரசனானாகிய கோயில் | ஏவுதற்கருத்தா. |
| மகனோடு தந்தை வந்தான்<br>மகனொடு தந்தை வந்தான் | உடனிகழ்ச்சிப்பொருள். |

இவ்வுருபுகளுள், ஆல், ஆன் உருபுகள் நிற்றற்குரிய விடத்துக் கொண்டென்பதும், ஓடு, ஒடு உருபுகள் நிற்றற் குரியவிடத்து உடனென்பதுஞ் சொல்லுருபுகளாக வரும்.

உ-ம். வாள்கொண்டு வெட்டினான்.

தந்தையுடன் மைந்தன் வந்தான்

௨௪௦. நான்காம்வேற்றுமையினது உருபு குவ்வொன்றேயாம்.

இது வினையையும் வினையொடு பொருந்தும் பெயரையுங் கொள்ளும்.

இக்குவ்வுருபு, தன்னையேற்றபெயர்ப்பொருளைக்கோடற்பொருளாகவும், பகைதொடர்பொருளாகவும், நட்புத்தொடர்பொருளாகவும், தகுதியுடைப்பொருளாகவும், முதற்காரணகாரியப்பொருளாகவும், நிமித்தகாரணகாரியப்பொருளாகவும், முறைக்கிளைபொருளாகவும், வேறுபடுத்தும். அப்படி வேறுபட்ட கோடற்பொருண் முதலியன இவ்வுருபின்பொருள்களாம்.

(உதாரணம்.)

இரப்பவர்க்குப்பொன்னைக்கொடுத்தான்... கோடற்பொருள்.
பாம்புக்குப் பகை கருடன் ... பகைதொடர்பொருள்.
சாத்தனுக்குத் தோழன் கொற்றன்.... நட்புத்தொடர்பொருள்.
அரசர்க்குரித் தருங்கலம் ... தகுதியுடைப்பொருள்.
குண்டலத்திற்குவைத்தபொன்... முதற்காரணகாரியப்பொருள்.
கூலிக்குவேலைசெய்தான் ... நிமித்தகாரணகாரியப்பொருள்.
சாத்தனுக்கு மகனிவன் ... ... முறைக்கிளைபொருள்.

பொன் முதற்காரணம்; அதன் காரியங் குண்டலம். வேலை நிமித்த காரணம்; அதன் காரியங் கூலி.

குவ்வுருபு நிற்றற்குரிய சிலவிடங்களிலே, பொருட்டு நிமித்தம் என்பனவும், குவ்வுருபின்மேல் ஆகவென்பதுஞ் சொல்லுருபுகளாக வரும்.

உ-ம். கூழின்பொருட்டு வேலைசெய்தான்.
கூலியினிமித்தம் வேலைசெய்தான்.
கூலிக்காக வேலைசெய்தான்.

உகக. ஐந்தாம்வேற்றுமையினுடைய உருபுகள் இன், இல் என்பனவாம்.

இவை வினையையும், வினையொடு பொருந்தும் பெயரை யுங் கொள்ளும்.

இவ்வுருபுகள், தம்மையேற்ற பெயர்ப்பொருளை, நீக்கப் பொருளாகவும், ஒப்புப்பொருளாகவும், எல்லைப்பொருளாக வும், ஏதுப்பொருளாகவும், வேறுபடுத்தும். அப்படி வேறு பட்ட நீக்கப்பொருண் முதலியன இவ்வுருபுகளின் பொருள் களாம். உ-ம்.

| | |
|---|---|
| மலையின்வீழருவி<br>மலையில்வீழருவி | நீக்கப்பொருள். |
| பாலின்வெளிது கொக்கு<br>பாலில்வெளிது கொக்கு. | ஒப்புப்பொருள். |
| சீர்காழியின்வடக்குச் சிதம்பரம்<br>சீர்காழியில்வடக்குச் சிதம்பரம் | எல்லைப்பொருள். |
| கல்வியினுயர்ந்தவன் கம்பன்<br>கல்வியிலுயர்ந்தவன் கம்பன் | ஏதுப்பொருள். |

பாலின் வெளிது கொக்கு என்னுமிடத்து, உயர்வு கருதின் எல்லைப்பொருளாம்.

நீக்கப்பொருளினும், எல்லைப்பொருளினும், இன், இல் உருபுகளின் மேல், நின்று இருந்து என்பவை, உம் பெற் றும், பெறாதுஞ் சொல்லுருபுகளாக வரும்.

உ-ம். நீக்கப்பொருள்.

ஊரினின்றும் போயினன், ஊரினின்றுபோயினன்.
ஊரிலிருந்தும் போயினன், ஊரிலிருந்துபோயினன்.

எல்லைப்பொருள்.

காட்டினின்றுமோர் காவதம், காட்டினின்றோர் காவதம்.
காட்டிலிருந்துமோர் காவதம், காட்டிலிருந்தோர் காவதம்.

ஒரோவிடத்து எல்லைப்பொருளிலே, காட்டிலும் பார்க்கிலும் என்பவைகள், முன் ஐகாரம் பெற்றுச் சொல்லுருபுகளாக வரும்.

உ-ம். அவனைக்காட்டிலும் பெரியனிவன்.
இவனைப்பார்க்கிலுஞ் சிறியனவன்.

உகஉ. ஆறும் வேற்றுமையினுடைய உருபுகள் அது, ஆது, அ என்பனவாம்.

இவைகளுள், அது, ஆது உருபுகள் அஃறிணையொருமைப்பெயரையும், அ உருபு அஃறிணைப்பன்மைப்பெயரையுங் கொள்ளும்.

உ-ம். சாத்தனது கை, தனாது கை, தன கைகள்.

இவ்வுருபுகள், தம்மையேற்ற பெயர்ப்பொருளை, வருமொழிப்பொருளாகிய தற்கிழமைப்பொருளோடும் பிறிதின்கிழமைப்பொருளோடுஞ் சம்பந்தமுடையபொருளாக, வேறுபடுத்தும். அப்படி வேறுபட்ட சம்பந்தப்பொருளே இவ்வுருபுகளின் பொருளாம்.

தற்கிழமைப்பொருளாவது, தன்னோடு ஒற்றுமையுடைய பொருள். அது, உறுப்பும், பண்பும், தொழிலும், ஒன்

றன்கூட்டமும், பலவின்கூட்டமும், ஒன்றுதிரிந் தொன்றாய
தும் என அறுவகைப்படும்.

(உதாரணம்.)

சாத்தனது கை ... ... உறுப்புத்தற்கிழமை.
சாத்தனது கருமை ... பண்புத்தற்கிழமை.
சாத்தனது வரவு ... ... தொழிற்றற்கிழமை.
நெல்லது குப்பை ... ... ஒன்றன்கூட்டத் தற்கிழமை.
சேனையது தொகுதி ... பலவின்கூட்டத் தற்கிழமை.
மஞ்சளது பொடி ... ... ஒன்று திரிந்தொன்றாயதன்றற் [கிழமை.

பிறிதின்கிழமைப்பொருளாவது, தன்னின் வேறாய பொருள். அது, பொருள், இடம், காலம் என மூவகைப் படும்.

(உதாரணம்.)

முருகனது வேல் ... ... பொருட்பிறிதின்கிழமை.
முருகனது மலை ... ... இடப்பிறிதின்கிழமை.
மாரனது வேனில் ... ... காலப்பிறிதின்கிழமை.

இவ்வுருபுகள் நிற்றற்குரிய இடங்களில், உடைய என்பது சொல்லுருபாக வந்து, இருதிணையொருமை பன்மைப் பெயர்களையுங் கொள்ளும்.

உ-ம். சாத்தனுடைய புதல்வன், சாத்தனுடைய புதல்வர்.
சாத்தனுடைய வீடு, சாத்தனுடைய வீடுகள்.

சிறுபான்மை அதுவுருபு, அரனது தோழன், நினதடியா ரொடல்லால் என உயர்திணையொருமை பன்மைப்பெயர்களை யுங் கொள்ளுமென வறிக.

இவ்வீடெனது, அத்தோட்டமவனது என வருவனவற் றில், எனது, அவனது என்பன, தவ்விகுதியும் அகரச்சாரியைப்

யும் பெற்று நின்ற குறிப்புவினைமுற்று. எனது போயிற்று, அவனதை வாங்கினேன் என வருவனவற்றில், எனது, அவனது என்பன, மேற்கூறியபடிவந்த குறிப்புவினையாலணையும்பெயர். இங்ஙனமன்றி, இவ்விடங்களில் வரும் அது என்பது ஆறும்வேற்றுமையுருபன்று.

௨௧௫. ஏழனுடைய உருபுகள், கண், இல், உள், இடம் முதலியனவாம்.

இவை வினையையும், வினையொடு பொருந்தும் பெயரையுங் கொள்ளும்.

இவ்வுருபுகள், தம்மையேற்ற பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் அறுவகைப்பெயர்ப்பொருளையும், வருமொழிப்பொருளாகிய தற்கிழமைப்பொருளுக்காயினும், பிறிதின்கிழமைப்பொருளுக்காயினும், இடப்பொருளாக, வேறுபடுத்தும். அப்படி வேறுபட்ட இடப்பொருளே இவ்வுருபுகளின் பொருளாம்.

(உதாரணம்.)

| | | |
|---|---|---|
| மணியின்கணிருக்கின்றதொளி | ...தற் | பொருளிட |
| பனையின்கண் வாழ்கின்றதன்றில் | ...பிறி | மாயிற்று. |
| ஊரின்கணிருக்குமில்லம் | ...தற் | இடமிடமாயி |
| ஆகாயத்தின்கட்பறக்கின்றது பருந்து | ...பிறி | ற்று. |
| நாளின்கணுழிகையுள்ளது | ...தற் | காலமிடமாயி |
| வேனிற்கட்பாதிரிபூக்கும் | ...பிறி | ற்று. |
| கையின்கணுள்ளது விரல் | ...தற் | சினையிடமா |
| கையின்கண் விளங்குகின்றது கடகம் | ...பிறி | யிற்று. |
| கறுப்பின்கண் மிக்குள்ளதழகு | ...தற் | குணமிடமா |
| இளமையின்கண் வாய்த்தது செல்வம் | ...பிறி | யிற்று. |

ஆடற்கணுள்ளது சதி ...தற் } தொழிலிட
ஆடற்கட்பாடப்பட்டது பாட்டு ...பிறி } மாயிற்று.

மற்றவைகளும் இப்படியே.

உகச. எட்டாம்வேற்றுமையினுடைய உருபுகள், படர்க்கைப்பெயரீற்றில் ஏ ஓ மிகுதலும், அவ்வீறு திரிதலும், கெடுதலும், இயல்பாதலும், ஈற்றயலெழுத்துத் திரிதலுமாம்.

இவை ஏவல்வினையைக் கொள்ளும்.

இவ்வுருபுகள், தம்மையேற்ற பெயர்ப்பொருளை, முன்னிலையின் விளிக்கப்படுபொருளாக, வேறுபடுத்தும். அப்படி வேறுபட்ட விளிக்கப்படுபொருளே இவ்வுருபுகளின் பொருளாம். விளித்தல் - அழைத்தல்.

(உதாரணம்.)

| | | |
|---|---|---|
| சாத்தனே கேளாய் | ஏ | மிகுந்தது. |
| அப்பனோ வுண்ணாய் | ஓ | மிகுந்தது. |
| வேனிலாய் கூறாய் | ஈறு | திரிந்தது. |
| தோழ சொல்லாய் | ஈறு | கெட்டது. |
| பிதா வாராய் | ஈறியல்பாயிற்று. | |
| மக்காள் கூறீர் | ஈற்றயலெழுத்துத் திரிந்தது. | |

உகரு. நுமன், நுமள், நுமர் என்னுங் கிளைப்பெயர்களும், எவன் முதலிய வினைப்பெயர்களும், அவன்முதலிய சுட்டுப்பெயர்களும், தான், தாம் என்னும் பொதுப்பெயர்களும், மற்றையான், பிறன் முதலிய மற்றுப்பிற என்பன அடியாக வரும் பெயர்களும் விளி கொள்ளாப்பெயர்களாம்.

உகசு. சிறுபான்மை ஒருவேற்றுமையுருபு நிற்றற்குரியவிடத்தே, மற்றொரு வேற்றுமையுருபு மயங்கிவரும்

வரின், அவ்வுருபைப் பொருளுக்கியைந்த உருபாகத் திரித்துக்கொள்ளவேண்டும். உ-ம்.

ஆலத்தினலமிர்தாக்கிய கோன், இங்கே ஐயுருபு நிற்றற்குரியவிடத்தில் ஆனுருபு மயங்கிற்று.

காலத்தினற்செய்த நன்றி; இங்கே கண்ணுருபு நிற்றற்குரியவிடத்தில் ஆனுருபு மயங்கிற்று.

நாகுவேயொடு நக்கு வீங்கு தோள்; இங்கே ஐயுருபு நிற்றற்குரியவிடத்தில் ஒடுவுருபு மயங்கிற்று.

ஈசற்கியான் வைத்த வன்பு; இங்கே கண்ணுருபு நிற்றற்குரியவிடத்திற் குவ்வுருபு மயங்கிற்று.

உகஎ. ஒரு வேற்றுமைப்பொருள் மற்றொரு வேற்றுமையுருபோடுந் தகுதியாக வருதலும் உண்டு. உ-ம்.

சாத்தனோடு சேர்ந்தான்; இங்கே செயப்படுபொருள் மூன்றனுருபோடு வந்தது.

மதுரையை நீங்கினன்; இங்கே நீக்கப்பொருள் இரண்டனுருபோடு வந்தது.

சீர்காழிக்கு வடக்குச் சிதம்பரம்; இங்கே எல்லைப்பொருள் நான்கனுருபோடு வந்தது.

வழியைச் சென்றான்; இங்கே இடப்பொருள் இரண்டனுருபோடு வந்தது.

இன்னும் இப்படி வருவனவற்றையெல்லாம் ஆராய்ந்தறிந்துகொள்க.

பரீக்ஷை வினாக்கள்.—உ0௬. பெயர்களனைத்தும் எத்தனைவேற்றுமைகளை ஏற்கும்? முதல் வேற்றுமை எப்படிப் பெயர்பெறும்? எட்டாம் வேற்றுமை எப்படிப் பெயர்பெறும்? உ0எ. முதல்வேற்றுமையினது உருபு யாது? வேற்றுமையுருபினாலே கொள்ளப்படுஞ் சொல் எப்படிப் பெயர்பெறும்? எழுவாய் வேற்றுமையுருபு எச்சொற்களைப் பயனிலையாகக் கொள்ளும்? எழுவாயுருபுக்குப் பொருள் என்னை? வினைமுதற்குப் பரியாய நாமங்கள் எவை? எழுவாய்க்கு எவை சொல்லுருபாக வரும்? உ0அ. இரண்டாம் வேற்றுமையினது உருபு யாது? இவ்வையுருபு எவைகளைப் பயனிலையாகக் கொள்ளும்? ஐயுருபுக்குப் பொருள் என்னை? செயப்படுபொருட்குப் பரியாயநாமங்கள் எவை? செயப்படுபொருள் எத்தனை வகைப்படும்? உ0௯. மூன்றாம் வேற்றுமையினுடைய உருபுகள் எவை? இம்மூன்றாம் வேற்றுமையுருபுகள் எதனைப் பயனிலையாகக் கொள்ளும்? இவைகளுள், ஆல், ஆன் என்னும் இரண்டுருபுகளுக்கும் பொருள் என்னை? கருவியென்பதற்குப் பரியாய நாமம் எது? கருவி எத்தனைவகைப்படும்? கருத்தா எத்தனைவகைப்படும்? ஓடு, ஒடு என்னும் இரண்டுருபுகளுக்கும் பொருள் என்னை? ஆல், ஆன் உருபுகள் நிற்றற்குரியவிடத்து எது சொல்லுருபாக வரும்? ஓடு, ஒடு உருபுகள் நிற்றற்குரியவிடத்து எது சொல்லுருபாக வரும்? உக0. நான்காம் வேற்றுமையினது உருபு யாது? இக்குவ்வுருபு எவைகளைப் பயனிலையாகக்கொள்ளும்? குவ்வுருபுக்குப் பொருள் என்னை? குவ்வுருபு நிற்றற்குரியவிடத்தே எவை சொல்லுருபுகளாக வரும்? உகக. ஐந்தாம் வேற்றுமையினுடைய உருபுகள் யாவை? இவ்வைந்தாம் வேற்றுமையுருபுகள் எவைகளைப் பயனிலையாகக் கொள்ளும்? ஐந்தாம் வேற்றுமையுருபுகளுக்குப் பொருள் என்னை? நீக்கப்பொருளினும் எல்லைப்பொருளினும் எவை சொல்லுருபுகளாகவரும்? எல்லைப்பொருளிலே வேறு சொல்லுருபுகள்

வாராவோ? ௨௧௨. ஆரும்வேற்றுமையினுடைய உருபுகள் யாவை? இவ்வாறும் வேற்றுமையுருபுகளுள், எவ்வெவை எவ்வெச்சொல்லைப் பயனிலையாகக் கொள்ளும்? ஆறும் வேற்றுமை யுருபுகளுக்குப் பொருள் என்னை? தற்கிழமைப் பொருளாவது யாது? அத்தற்கிழமைப்பொருள் எத்தனை வகைப்படும்? பிறிதின்கிழமைப் பொருளாவது யாது? அப்பிறிதின்கிழமைப்பொருள் எத்தனை வகைப்படும்? ஆறும் வேற்றுமையுருபுகள் நிற்றற்குரிய இடங்களில் எது சொல்லுருபாக வரும்? அது வுருபு உயர்திணையொருமை பன்மைப் பெயர்களைக் கொள்ளுதலில்லையோ? இவ்வீடெனது, அத்தோட்டமவனது என வருவனவற்றில் அது என்பது ஆறும் வேற்றுமை யுருபுதானே? ௨௧௩. ஏழாம் வேற்றுமையினுடைய உருபுகள் யாவை? ஏழாம்வேற்றுமையுருபுகள் எவைகளைப் பயனிலையாகக் கொள்ளும்? ஏழாம்வேற்றுமை யுருபுகளுக்குப் பொருள் என்னை? ௨௧௪. எட்டாம் வேற்றுமையினுடைய உருபுகள் யாவை? எட்டாம்வேற்றுமை யுருபுகள் எதனைப் பயனிலையாகக் கொள்ளும்? எட்டாம்வேற்றுமையுருபுகளுக்குப் பொருள் என்னை? ௨௧௫. இவ்விளியுருபுகளை எலாப் பெயர்களும் உளவோ? ௨௧௬. ஒரு வேற்றுமையுருபு நிற்றற்குரியவிடத்தே மற்றொரு வேற்றுமையுருபு மயங்கி வருதல் உண்டோ? ௨௧௭. ஒருவேற்றுமைப்பொருள் மற்றொரு வேற்றுமையுருபோடுந் தகுதியாக வருதலும் உண்டோ?

## பெயர்கள் உருபேற்கு முறை.

௨௧௮. ஐ முதலிய உருபேற்குமிடத்து, யான், நான் என்னுந் தன்மையொருமைப்பெயர்கள், என் எனவும், யாம், நாம், யாங்கள், நாங்கள் என்னுந் தன்மைப்பன்மைப் பெயர்கள், எம், நம், எங்கள், நங்கள் எனவும் விகாரப்பட்டு வரும்.

உ-ம். என்னை, எம்மை, நம்மை, எங்களை, நங்களை.
மற்றையுருபுகளோடும் இப்படியே யொட்டுக.

நீ என்னும் முன்னிலையொருமைப்பெயர், நின், உன் எனவும், நீர் முதலிய முன்னிலைப்பன்மைப்பெயர்கள், நும், உம் எனவும், நீங்கள் என்னும் முன்னிலைப் பன்மைப்பெயர், நுங்கள், உங்கள் எனவும், விகாரப்பட்டு வரும்.

உ-ம். நின்னை, உன்னை, நும்மை, உம்மை, நுங்களை, உங்களை.
மற்றையுருபுகளோடும் இப்படியே யொட்டுக.

தான், தாம், தாங்கள் என்னும் படர்க்கைப்பெயர்கள், தன், தம், தங்கள் என விகாரப்பட்டு வரும்.

உ-ம். தன்னை, தம்மை, தங்களை.
மற்றையுருபுகளோடும் இப்படியே யொட்டுக.

இவைகளுள்ளே, தனிக்குற்றொற்றீறுதியாக நின்ற பெயர்களோடு குவ்வுருபு புணருமிடத்து, நடுவே அகரச்சாரியை தோன்றும். இச்சாரியை அகரத்தின்முன்னும், ஆறனுருபுகளின் முன்னும், தனிக்குற்றொற்று இரட்டாவாம்.

உ-ம். தனக்கு, தனது, தனாது, தன.

உகக. உயிரையும், மெய்யையும், குற்றியலுகரத்தையும் ஈறாகவுடைய பெயர்ச்சொற்கள், இன்னுருபொழிந்த உருபுகளை ஏற்குமிடத்துப், பெரும்பாலும் இன்சாரியை பெறும். உ-ம்.

| | | |
|---|---|---|
| கிளியினை | பொன்னினை | நாகினை |
| கிளியினால் | பொன்னினால் | நாகினால் |
| கிளியிற்கு | பொன்னிற்கு | நாகிற்கு |

கிளியினது பொன்னினது நாகினது
கிளியின்கண் பொன்னின்கண் நாகின்கண்

இப்பெயர்கள், குவ்வுருபேற்குமிடத்துக் கிளியினுக்கு, நாகினுக்கு என இன்சாரியையோடு உகரச்சாரியையும், பொன்னுக்கு, மண்ணுக்கு என இன்சாரியையன்றி உகரச்சாரியையும், பெறுமெனவுங்கொள்க. மற்றவைகளும் இப்படியே வரும்.

உஉ௦. ஆ, மா, கோ என்னும் இம்மூன்று பெயர்களும், உருபேற்குமிடத்து, இன்சாரியையேயன்றி, னகரச்சாரியையும் பெறும். குவ்வுருபிற்கு னகரச்சாரியையோடு உகரச்சாரியையும், னகரச்சாரியையின்றி உகரச்சாரியையும் வரும்.

உ-ம். ஆவினை ஆனை
ஆவினால் ஆனால்
ஆவிற்கு ஆனுக்கு, ஆவுக்கு
ஆவின் ஆனின்
ஆவினது ஆனது
ஆவின்கண் ஆன்கண்

மா, கோ என்பவற்றோடும் இப்படியே யொட்டுக.
இங்கே மா - விலங்கு. கோ - அரசன்.

உஉக. அது, இது, உது என்னுஞ் சுட்டுப்பெயர்களும், எது, ஏது, யாது என்னும் வினைப்பெயர்களும், உருபேற்குமிடத்து, அன்சாரியையும், சிறுபான்மை இன்சாரியையும் பெறும்.

உ-ம். அதனை, அதனால், அதினால்.
இதனை, இதனால், இதினால்.
எதனை, எதனால், எதினால்.
மற்றவைகளும் இப்படியே.

இவை சிறுபான்மை, அதை, இதை, எதை எனச் சாரியை பெறாதும், வரும்.

உஉஉ. அவை, இவை, உவை, எவை, கரியவை, நெடியவை முதலிய ஐகாரவீற்றஃறிணைப்பன்மைப்பெயர்கள், உருபேற்குமிடத்து, ஈற்றைகாரங் கெட்டு, அற்றுச்சாரியை பெறும். நான்கனுருபும் ஏழனுருபும் ஏற்குமிடத்து, அற்றுச்சாரியைமேல் இன்சாரியையும் பெறும். உ-ம்.

| | | |
|---|---|---|
| அவற்றை | எவற்றை | கரியவற்றை |
| அவற்றால் | எவற்றால் | கரியவற்றால் |
| அவற்றிற்கு | எவற்றிற்கு | கரியவற்றிற்கு |
| அவற்றின் | எவற்றின் | கரியவற்றின் |
| அவற்றது | எவற்றது | கரியவற்றது |
| அவற்றின்கண் | எவற்றின்கண் | கரியவற்றின்கண் |

மற்றவைகளும் இப்படியே.

உஉ௩. பல, சில, சிறிய, பெரிய, அரிய முதலிய அகரவீற்றஃறிணைப் பன்மைப்பெயர்களும், யா என்னும் அஃறிணைப்பன்மைவினாப்பெயரும், உருபேற்கு மிடத்து, அற்றுச்சாரியை பெறும். நான்கனுருபும் ஏழனுருபும் ஏற்குமிடத்து, அற்றுச்சாரியைமேல் இன்சாரியையும் பெறும்.

உ-ம்.

| | | |
|---|---|---|
| பலவற்றை | சிறியவற்றை | யாவற்றை |
| பலவற்றால் | சிறியவற்றால் | யாவற்றால் |
| பலவற்றிற்கு | சிறியவற்றிற்கு | யாவற்றிற்கு |
| பலவற்றின் | சிறியவற்றின் | யாவற்றின் |
| பலவற்றது | சிறியவற்றது | யாவற்றது |
| பலவற்றின்கண் | சிறியவற்றின்கண் | யாவற்றின்கண் |

மற்றவைகளும் இப்படியே.

உஉச. மகரவீற்றுப் பெயர்ச்சொற்கள், உருபேற்கு மிடத்து, அத்துச்சாரியை பெறும்; பெறுமிடத்து, ஈற்று மகரமுஞ் சாரியை முதல் அகரமுங் கெடும். சிலவிடத்து அவ்வத்துச்சாரியையின்மேல் இன்சாரியையும் பெறும்.

| | |
|---|---|
| உ - ம். மரத்தை | மரத்தினை |
| மரத்தால் | மரத்தினால் |
| மரத்துக்கு | மரத்திற்கு |
| மரத்தின் | ———— |
| மரத்தது | மரத்தினது |
| மரத்துக்கண் | மரத்தின்கண் |

உஉரு. எல்லாமென்னும் பெயர், அஃறிணைப்பொருளில் உருபேற்குமிடத்து, ஈற்று மகரங் கெட்டு, அற்றுச்சாரியையும், உருபின்மேல் முற்றும்மையும் பெறும்; உயர்திணைப்பொருளில் உருபேற்குமிடத்து, நம்முச்சாரியையும், உருபின்மேல் முற்றும்மையும் பெறும்.

| | |
|---|---|
| உ - ம். எல்லாவற்றையும் | எல்லாவற்றாலும் |
| எல்லாநம்மையும் | எல்லாநம்மாலும் |

எல்லாநம்மையும் என்பது உயர்திணைத்தன்மைப்பன்மை.

உஉசு. உருபேற்குமிடத்து, எல்லாரென்பது, தம்முச்சாரியையும், எல்லீரென்பது நும்முச்சாரியையும் பெற்று, உருபின்மேல் முற்றும்மையும் பெறும்.

| | |
|---|---|
| உ - ம். எல்லார்தம்மையும் | எல்லீர் நும்மையும் |
| எல்லார்தம்மாலும் | எல்லீர் நும்மாலும் |

எல்லாரையும், எல்லாராலும். எ-ம். எல்லீரையும், எல்லீராலும். எ-ம். சாரியை பெறாதும் வரும்.

உஉஎ. இவ்வாறு உருபு புணர்ச்சிக்குக் கூறிய முடிபுகள், உருபு தொக்க பொருட்புணர்ச்சிக்கண்ணும், வரும்.

உ-ம். என்கை, எங்கை, எங்கள் கை, நங்கை, நங்கள் கை, நின்கை, உன்கை, நுங்கை, நுங்கள் கை, உங்கை, உங்கள் கை, தன்கை, தங்கை, தங்கள் கை. எ-ம். கிளியின் கால், கொக்கின் கண், ஆவின் கொம்பு, பலவற்றுக்கோடு, மரத்துக்கிளை, எல்லாவற்றுக்கோடும். எ-ம். வரும்.

பரீக்ஷை வினாக்கள்.—உகஅ. ஐ முதலிய உருபேற்குமிடத்து, தன்மைப் பெயர்கள் எப்படி விகாரப்பட்டு வரும்? முன்னிலைப் பெயர்கள் எப்படி விகாரப்பட்டு வரும்? தான், தாம், தாங்கள் என்னும் படர்க்கைப் பெயர்கள் எப்படி விகாரப்பட்டு வரும்? இவைகளுள்ளே, தனிக்குற்றொற்றிறுதியாக நின்ற பெயர்களோடு நான்கனுருபும் ஆறனுருபுகளும் புணருமிடத்து எப்படியாகும்? உககூ. உயிரையும், மெய்யையும், குற்றியலுகரத்தையும் ஈறாகவுடைய பெயர்ச்சொற்கள் உருபேற்குமிடத்து எப்படியாம்? உஉ0. ஆ, மா, கோ என்னும் பெயர்கள், உருபேற்குமிடத்து இன்சாரியையே யன்றி, வேறு சாரியையும் பெறுமோ? உஉக அது, இது, உது என்னுஞ் சுட்டுப்பெயர்களும், எது, ஏது, யாது என்னும் வினாப்பெயர்களும் உருபேற்குமிடத்து எப்படியாம்? உஉஉ. அவை, இவை, உவை, எவை, கரியவை, நெடியவை முதலிய ஐகாரவீற்றஃறிணைப் பன்மைப் பெயர்கள் உருபேற்குமிடத்து எப்படியாம்? உஉ௩. பல, சில, சிறிய, பெரிய, அரிய முதலிய அகரவீற்றஃறிணைப் பன்மைப் பெயர்களும், யா வென்னும்

அஃறிணைப் பன்மை வினைப்பெயரும் உருபேற்குமிடத்து எப்படியாம்? உஉச. மகரவீற்றுப்பெயர்கள் உருபேற்குமி டத்து எப்படியாம்? உஉரு. எல்லாமென்னும் பெயர் அஃறி ணைப் பொருளில் உருபேற்குமிடத்து எப்படியாம்? உயர்தி ணைப் பொருளில் உருபேற்குமிடத்து எப்படியாம்? உஉசு. உருபேற்குமிடத்து எல்லார் என்பது எப்படியாம்? எல்லீர் என்பது எப்படியாம்? உஉஎ. இவ்வாறு உருபுபுணர்ச்சிக்குக் கூறிய முடிபுகள், உருபு தொக்க பொருட்புணர்ச்சிக்கண் ணும் வருமோ?

பெயரியல் முற்றிற்று.

## உ. வினையியல்.

உஉஅ. வினைச்சொல்லாவது, பொருளினது புடை பெயர்ச்சியை உணர்த்துஞ் சொல்லாம்.

புடைபெயர்ச்சியெனினும், வினைநிகழ்ச்சியெனினும் பொ ருந்தும். வினை, தொழில் என்பவை ஒருபொருட்சொற்கள்.

பரீக்ஷை வினாக்கள்.—உஉஅ. வினைச்சொல்லாவது யாது? புடைபெயர்ச்சியென்பது என்னை? வினைக்குப் பரியாயநாமம் என்னை?

---

### வினைநிகழ்ச்சிக்குக் காரணம்.

உஉகூ. வினையானது, வினைமுதல், கருவி, இடம், செயல், காலம், செயப்படுபொருள் என்னும் இவ்வாறுங் காரணமாகவேனும், இவற்றுட் பல காரணமாகவேனும், நிகழும். உ-ம்.

வனைந்தான், இத்தெரிநிலைவினை, வினைமுதன்முதலிய ஆறுங்காரணமாக, வந்தது. வினைமுதல் குயவன்; முதற்

கருவி மண்; துணைக்கருவி தண்டசக்கரமுதலியன; இடம் வனைதற்கு ஆதாரமாகிய இடம்; செயல் வனைதற்கு முதற்காரணமாகிய செய்கை; காலம் இறந்த காலம்; செயப்படுபொருள் குடமுதலியன.

இருந்தான்; இத்தெரிநிலைவினை, செயப்படுபொருளொழிந்த ஐந்துங் காரணமாக, வந்தது.

உடையன்; இக்குறிப்புவினை, வினைமுதன் முதலிய ஆறுங் காரணமாக, வந்தது.

குழையன்; இக்குறிப்புவினை, கருவியுஞ் செயப்படுபொருளுமொழிந்த நான்குங் காரணமாக, வந்தது.

உகூ௫. வினைமுதன் முதலிய ஆறனுள்ளே, தெரிநிலை வினைமுற்றின்கண், வினைமுதலுஞ் செயலுங் காலமுமாகிய மூன்றும் வெளிப்படையாகவும், மற்றை மூன்றுங் குறிப்பாகவுந் தோன்றும்.

தெரிநிலைவினைப் பெயரெச்ச வினையெச்சங்களின்கண், செயலுங் காலமுமாகிய இரண்டும் வெளிப்படையாகவும், மற்றை நான்குங் குறிப்பாகவுந் தோன்றும்.

வினைமுதல் பால் காட்டும் விகுதியினாலும், செயல் பகுதியினாலும், காலம் இடைநிலையும் விகுதியும் விகாரப்பட்ட பகுதியுமாகிய மூன்றனுள் ஒன்றினாலுந் தோன்றும். எச்சவினைகட்குப் பால் காட்டும் விகுதியின்மையால், அவற்றில் வினைமுதல் வெளிப்படத் தோன்றாதாயிற்று. உ-ம்.

உண்டான்; இத்தெரிநிலைவினைமுற்றிலே, பகுதியாற்செயலும், இடைநிலையாற் காலமும், விகுதியால் வினைமுத

னும் வெளிப்படையாகவும், மற்றவை குறிப்பாகவுந் தோன்றின.

உண்ட; இத்தெரிநிலைவினைப்பெயரெச்சத்திலே, பகுதியாற் செயலும், இடைநிலையாற் காலமும் வெளிப்படையாகவும், மற்றவை குறிப்பாகவுந் தோன்றின.

உண்டு; இத்தெரிநிலைவினையெச்சத்திலே, பகுதியாற் செயலும், இடைநிலையாற், காலமும் வெளிப்படையாகவும், மற்றவை குறிப்பாகவுந் தோன்றின.

உ௩௧. வினைக்குறிப்புமுற்றின்கண் வினைமுதன்மாத்திரம் வெளிப்படையாகவும், மற்றவையெல்லாங் குறிப்பாகவுந் தோன்றும்.

வினைக்குறிப்புப் பெயரெச்ச வினையெச்சங்களின் கண், வினைமுதன் முதலியவெல்லாங் குறிப்பாகவே தோன்றும்.

உ-ம். கரியன்; இக்குறிப்புவினைமுற்றிலே, விகுதியால் வினைமுதல் வெளிப்படையாகவும், மற்றவையெல்லாங் குறிப்பாகவுந் தோன்றின.

கரிய; இக்குறிப்புவினைப்பெயரெச்சத்திலே, வினைமுதன் முதலியவெல்லாங் குறிப்பாகவே தோன்றின.

இன்றி; இக்குறிப்புவினை வினையெச்சத்திலே, வினைமுதன்முதலியவெல்லாங் குறிப்பாகவே தோன்றின.

பரீக்ஷை வினக்கள்.—உ௨௯. வினையானது எவை காரணமாக நிகழும்? உ௩௦. தெரிநிலைவினைமுற்றின்கண் வினைமுதன் முதலிய ஆறும் எப்படித் தோன்றும்? தெரிநிலைவினைப் பெயரெச்ச வினையெச்சங்களின்கண் வினைமுதன் முதலிய ஆறும் எப்படித் தோன்றும்? வினைமுதல், செயல், கால

என்னும் மூன்றும் எவ்வெவ்வுறுப்புக்களினாலே தோன்றும்? யாது காரணத்தால் எச்சவினைகளில் வினைமுதல் வெளிப்படத் தோன்றாதாயிற்று? உ௯க. வினைக்குறிப்புமுற்றின்கண் வினைமுதன் முதலிய ஆறும் எப்படித் தோன்றும்? வினைக்குறிப்புப் பெயரெச்ச வினையெச்சங்களின்கண் வினைமுதன் முதலிய ஆறும் எப்படித்தோன்றும்?

## காலம்.

உ௯உ. காலம், இறப்பு, நிகழ்வு, எதிர்வு என மூவகைப்படும்.

இறப்பாவது தொழிலது கழிவு. நிகழ்வாவது தொழில் தொடங்கப்பட்டு முற்றுப்பெறாத நிலைமை. எதிர்வாவது தொழில் பிறவாமை.

பரீக்ஷை வினாக்கள்.—உ௯உ. காலமாவது யாது? இறப்பாவது யாது? நிகழ்வாவது யாது? எதிர்வாவது யாது?

## வினைச்சொற்களின் வகை.

உ௯௩. இக்காலத்தோடு புலப்படுவனவாகிய வினைச்சொற்கள், தெரிநிலைவினையுங் குறிப்புவினையும் என இருவகைப்படும்.

உ௯௪. தெரிநிலைவினையாவது, காலங்காட்டும் உறுப்புண்மையினாலே, காலம் வெளிப்படத் தெரியும்படி நிற்கும் வினையாம். உ-ம்.

நடந்தான்; இது, தகரவிடைநிலையினால் இறந்தகாலம் வெளிப்படத் தெரியும்படி நிற்றலினாலே, தெரிநிலைவினை.

உண்கும்; இது, கும் விகுதியினால் எதிர்காலம் வெளிப்படத் தெரியும்படி நிற்றலினாலே, தெரிநிலைவினை.

பெற்றான்; இது, பெறு பெற்று என விகாரப்பட்டு நின்ற பகுதியினால் இறந்தகாலம் வெளிப்படத் தெரியும்படி நிற்றலினாலே, தெரிநிலைவினை.

தெரிநிலைவினைகள் தோன்றுதற்குரிய முதனிலையடிகள் இவையென்பது பதவியலில் நாற்பத்தாறும் வசனத்திற் கூறப்பட்டது.

உகூரு. குறிப்புவினையாவது, காலங்காட்டும் உறுப்பின்மையினாலே, காலம் வெளிப்படத் தெரிதலின்றிச் சொல்லுவோனது குறிப்பினாலே தோன்றும்படி, நிற்கும் வினையாம். உ-ம்.

பொன்னன்; இது, பொன்னையுடையனாயினான் என இறந்தகாலங் கருதியாயினும், பொன்னையுடையனாகின்றான் என நிகழ்காலங் கருதியாயினும், பொன்னையுடையனாவான் என எதிர்காலங் கருதியாயினுந் தன்னை ஒருவன் சொல்ல, அக்காலம் அவனது குறிப்பாற் கேட்போனுக்குத் தோன்றும்படி நிற்றலினாலே, குறிப்புவினை.

பொன்னன் என்பது, பொன்னுடைமை காரணமாக ஒருவனுக்குப் பெயராய் நின்று எழுவாய் முதலிய வேற்றுமையுரு பேற்கும்போது பெயர்ச்சொல்; முக்காலம் பற்றிப் புடைபெயரும் ஒருவனது வினைநிகழ்ச்சியை உணர்த்திப் பெயர்க்குப் பயனிலையாய் வரும்போது குறிப்புவினைமுற்றுச்சொல்; அங்ஙனம் வினைமுற்றாய் நின்று பின் அவ்வினைநிகழ்ச்சி காரணமாக அவனுக்குப் பெயராகி எழுவாய் முதலிய வேற்றுமையுருபேற்கும் போது குறிப்புவினையாலணையும் பெயர்.

குறிப்புவினைகள் தோன்றுதற்குரிய முதனிலையடிகள் இவையென்பது பதவியலில் நாற்பத்துநான்காம் வசனத்திற் கூறப்பட்டது.

உரு௬. தெரிநிலைவினை குறிப்புவினை என்னும் இரண்டும், முற்றும், பெயரெச்சமும், வினையெச்சமும் என மும்மூன்று வகைப்படும். எனவே தெரிநிலைவினைமுற்றும், தெரிநிலைவினைப்பெயரெச்சமும், தெரிநிலைவினைவினையெச்சமும், குறிப்புவினைமுற்றும், குறிப்புவினைப்பெயரெச்சமும், குறிப்புவினைவினையெச்சமும் என, வினைச்சொற்கள் அறுவகையாயின.

உரு௭. இவ்வறுவகை வினைச்சொற்களும், உடன்பாட்டினும், எதிர்மறையினும், வரும்.

உடன்பாட்டுவினையாவது, தொழிலினது நிகழ்ச்சியை உணர்த்தும் வினையாம். உடன்பாட்டுவினையெனினும், விதிவினையெனினும், பொருந்தும்.

| | | |
|---|---|---|
| உ - ம். நடந்தான் | நடந்த | நடந்து |
| பெரியன் | பெரிய | மெல்ல |

எதிர்மறைவினையாவது, தொழில் நிகழாமையை உணர்த்தும் வினையாம். எதிர்மறைவினையெனினும் மறைவினையெனினும் பொருந்தும்.

| | | |
|---|---|---|
| உ - ம். நடவான் | நடவாத | நடவாது |
| இலன் | இல்லாத | இன்றி |

உரு௮. வினைச்சொற்கள், இருதிணையைம்பான்மூவிடங்களுள் ஒன்றற்கு உரிமையாகியும், பலவற்றிற்குப் பொதுவாகியும், வழங்கும்.

பரீக்ஷை வினாக்கள்.—௨௩௩. இக்காலத்தோடு புலப்படுவன வாகிய வினைச்சொற்கள் எத்தனை வகைப்படும்? ௨௩௪. தெரிநிலைவினையாவது யாது? ௨௩௫. குறிப்புவினையாவது யாது? பொன்னன் என்பது எத்தனைவகைச் சொல்லாகும்? அது எப்பொழுது பெயர்ச்சொல்? எப்பொழுது குறிப்புவினைமுற்றுச் சொல்? எப்பொழுது குறிப்புவினையாலணையும்பெயர்? ௨௩௬. தெரிநிலைவினை குறிப்புவினை என்னுமிரண்டும் தனித்தனி எத்தனை வகைப்படும்? ௨௩௭. இவ்வறுவகை வினைச்சொற்களும் எவ்வெப் பொருளில் வரும்? உடன்பாட்டுவினையாவது யாது? எதிர்மறைவினையாவது யாது? ௨௩௮. வினைச்சொற்கள் இருதிணையைம்பான் மூவிடங்களைப்பற்றி எப்படி வழங்கும்?

---

## முற்றுவினை.

௨௩௯. முற்றுவினையாவது, பால் காட்டும் விகுதியோடு கூடி நிறைந்து நின்று பெயரைக் கொண்டு முடியும் வினையாம்.

இம்முற்றுவினை கொள்ளும் பெயர்களாவன: பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், குணப்பெயர், தொழிற்பெயர் என்னும் அறுவகைப்பெயருமாம்.

| | | |
|---|---|---|
| உ-ம். | செய்தான் சாத்தன் | நல்லன் சாத்தன் |
| | குளிர்ந்தது நிலம் | நல்லது நிலம் |
| | வந்தது கார் | நல்லது கார் |
| | குவிந்தது கை | நல்லது கை |
| | பரந்தது பசப்பு | நல்லது பசப்பு |
| | ஒழிந்தது பிறப்பு | நல்லது பிறப்பு |

பரீக்ஷை வினாக்கள்.—உ௩௯. முற்றுவினையாவது யாது? முற்றுவினை கொள்ளும் பெயர்களாவன எவை?

## படர்க்கைவினைமுற்று.

உ௪0. படர்க்கைவினைமுற்று, உயர்திணையாண்பாலொருமைப்படர்க்கை வினைமுற்றும், உயர்திணைப்பெண்பாலொருமைப்படர்க்கைவினைமுற்றும், உயர்திணைப் பலர்பாற்படர்க்க
ம், அஃறி
முற்றும், அஃறிணைப்
என, ஐந்து வகைப்படும்.

உ௪௧. அன், ஆன் என்னும் விகுதிகளை இறுதியில் உடைய வினைச்சொற்கள், உயர்திணையாண்பாலொருமைப் படர்க்கைத் தெரிநிலைவினைமுற்றுங் குறிப்புவினைமுற்றுமாம். உ-ம்.

| இ. தெரி. | நி. தெரி. | எ. தெரி. | குறி. | |
|---|---|---|---|---|
| நடந்தனன் | நடக்கின்றனன் | நடப்பன் | குழையன் | அவன். |
| நடந்தான் | நடக்கின்றான் | நடப்பான் | குழையான் | |

உ௪உ. அள், ஆள் என்னும் விகுதிகளை இறுதியில் உடைய வினைச்சொற்கள், உயர்திணைப்பெண்பாலொருமைப் படர்க்கைத் தெரிநிலைவினைமுற்றுங் குறிப்புவினை முற்றுமாம். உ-ம்.

| இ. தெரி. | நி. தெரி. | எ. தெரி. | குறி. | |
|---|---|---|---|---|
| நடந்தனள் | நடக்கின்றனள் | நடப்பள் | குழையள் | அவள் |
| நடந்தாள் | நடக்கின்றாள் | நடப்பாள் | குழையாள் | |

உசங. அர், ஆர் என்னும் விகுதிகளை இறுதியில் உடைய வினைச்சொற்கள், உயர்திணைப்பலர்பாற்படர்க்கைத் தெரிநிலைவினைமுற்றுங் குறிப்புவினைமுற்றுமாம். உ-ம்.

| இ. தெரி. | நி. தெரி. | எ. தெரி. | குறி. | |
| --- | --- | --- | --- | --- |
| நடந்தனர் | நடக்கின்றனர் | நடப்பர் | குழையர் | அவர். |
| நடந்தார் | நடக்கின்றார் | நடப்பார் | குழையார் | |

செய்யுளிலே பலர்பாற்படர்க்கைத் தெரிநிலைவினைமுற்றுக்கு, இவ்விகுதிகளன்றி, ப, மார் என்னும் விகுதிகளும் வரும். அவை இடைநிலையின்றித் தாமே எதிர்காலங் காட்டுதல் பதவியலிற் பெறப்பட்டது.

உ-ம். நடப்ப நடமார் — அவர்.

இவ்விரண்டற்கும் நடப்பார் என்பது பொருள்.

உசச. து, று என்னும் விகுதிகளை இறுதியில் உடைய வினைச்சொற்கள் அஃறிணையொன்றன்பாற்படர்க்கைத் தெரிநிலைவினைமுற்றுங் குறிப்புவினைமுற்றுமாம். இவற்றுள், றுவ்விகுதி, இறந்தகாலவிடைநிலையோடன்றி, நிகழ்காலவெதிர்காலவிடைநிலைகளோடு கூடி வாராது. உ-ம்.

| இ. தெரி. | நி. தெரி. | எ. தெரி. | குறி. | |
| --- | --- | --- | --- | --- |
| நடந்தது | நடக்கின்றது | நடப்பது | குழையது | அது. |
| கூயிற்று | ——— | ——— | அற்று | |

றுவ்விகுதி, வந்தன்று, உண்டன்று, சென்றன்று எனத் தடற வொற்றிடைநிலைகளின் முன்னும், புக்கன்று, விட்டன்று, பெற்றன்று என விகாரப்பட்டிறந்தகாலங் காட்டுங் குடு று வீற்றுப் பகுதிகளின் முன்னும், அன்சாரியை பெற்று வரும். இவை, முறையே, வந்தது, உண்டது, சென்றது, புக்கது, விட்டது, பெற்றது எனப் பொருள்படும். றுவ்விகுதி, கூயிற்று,

ஓடிற்று என இன்னிடைநிலையின் முன்மாத்திரம், சாரியை பெறாது வரும். *

அற்று, இற்று, எற்று என்பவை, சுட்டினும் வினாவினும் வந்த வினைக்குறிப்பு முற்றுக்கள். இவை, முறையே, அத்தன்மைத்து, இத்தன்மைத்து, எத்தன்மைத்து எனப் பொருள்படும்.

டுவ்விகுதியை இறுதியில் உடைய வினைச்சொல், அஃறிணையொன்றன்பாற்படர்க்கைக் குறிப்புவினைமுற்றாம். இவ் விகுதி தெரிநிலைவினைமுற்றிற்கு இல்லை.

உ - ம். பொருட்டு (=பொருளையுடையது)
ஆதிரைநாட்டு (=ஆதிரைநாளிலிடத்தது)
குண்டுகட்டு (=ஆழமாகியகண்ணையுடையது) } அது.

௨௪௫. அ என்னும் விகுதியை இறுதியில் உடைய வினைச்சொல், அஃறிணைப்பலவின்பாற்படர்க்கைத்தெரிநிலை வினைமுற்றுங் குறிப்புவினைமுற்றுமாம்.

இவ்விகுதி, அன்சாரியை பெற்றும், பெறாதும் வரும்.

உ - ம்.

| இ. தெரி. | நி. தெரி. | எ. தெரி. | குறி. | |
|---|---|---|---|---|
| நடந்தன | நடக்கின்றன | நடப்பன | கரியன | அவை. |
| நடந்த | நடக்கின்ற | நடப்ப † | கரிய | |

* தந்தின்று என, றுவ்விகுதி தகரவிடைநிலையின் முன் இன் சாரியை பெற்றதன்றோ எனின்; அன்று. அது, தநதன்று, என்னும் உடன்பாட்டுவினையை மறுத்தற்குத் தகரவிடைநிலைக்கும் றுவ்விகுதிக்கும் இடையே இல்லென்னும் எதிர்மறையிடைநிலை ஏற்று வந்த மறைவினையென்றறிக. தந்தின்று தநததில்லையெனப் பொருள்படும்.

† நடப்ப என்னும் உயர்திணைப்பலர்பாற் படர்க்கைத் தெரிநிலை வினைமுற்றும் வேறு; நடப்ப என்னும் அஃறிணைப் பலவின்பாற்படர்க்

ஆ என்னும் விகுதியை இறுதியில் உடைய வினைச்சொல், அஃறிணைப்பலவின்பாற்படர்க்கை யெதிர்மறைத் தெரிநிலைவினைமுற்றும். இவ்விகுதி குறிப்புவினைமுற்றிற்கு இல்லை. உ-ம்.

நடவா - அவை.

பரீக்ஷை வினாக்கள்.—உசo. படர்க்கைவினைமுற்று எத்தனை வகைப்படும்? உசக. உயர்திணையாண்பாலொருமைப் படர்க்கை வினைமுற்றுக்கள் எவை? உசஉ. உயர்திணைப்பெண்பாலொருமைப் படர்க்கை வினைமுற்றுக்கள் எவை? உசங. உயர்திணைப் பலர்பாற் படர்க்கை வினைமுற்றுக்கள் எவை? பலர்பாற் படர்க்கைத் தெரிநிலைவினைமுற்றுக்கு இவ்விகுதிகளன்றி வேறு விகுதிகளும் வருமோ? உசச. அஃறிணையொன்றன்பாற்படர்க்கை வினைமுற்றுக்கள் எவை? து, று என்னும் இருவிகுதிகளும் முக்கால விடைநிலைகளோடும் வருமோ? றுவ்விகுதி எவ்விடங்களின் எச்சாரியை பெற்று வரும்? எவ்விடத்துச் சாரியை பெறாதுவரும்? அஃறிணையொன்றன்பாற்படர்க்கை வினைமுற்றுக்குத், து, று என்னும் இருவிகுதிகளுமன்றி, வேறு விகுதி இல்லையோ? உசரு. அஃறிணைப் பலவின்பாற் படர்க்கை வினைமுற்றுக்கள் எவை? அஃறிணைப் பலவின்பாற் படர்க்கை வினைமுற்றுக்கு வேறு விகுதி இல்லையோ?

கைத் தெரிநிலைவினைமுற்றும் வேறு. முன்னையது, நட என்னும் பகுதியும், ப என்னும் எதிர்காலப் பலர்பாற்படர்க்கை விகுதியுமாகப் பகுக்கப்பட்டு, வரும். பின்னையது, நட என்னும் பகுதியும், ப் என்னும் எதிர்காலவிடைநிலையும், அ என்னும் பலவின்பாற்படர்க்கை விகுதியுமாகப் பகுக்கப்பட்டு, வரும்.

## தன்மைவினைமுற்று.

௨௪௬. தன்மைவினைமுற்றுத், தன்மையொருமைவினைமுற்றும், தன்மைப்பன்மைவினைமுற்றும் என, இருவகைப்படும்.

௨௪௭. என், ஏன், அன் என்னும் விகுதிகளை இறுதியில் உடைய வினைச்சொற்கள், தன்மையொருமைத் தெரிநிலைவினைமுற்றுங் குறிப்புவினைமுற்றுமாம். உ-ம்.

| | | |
|---|---|---|
| இ. தெரி. | நி. தெரி. | |
| உண்டனென் | உண்கின்றனென் | யான். |
| உண்டேன் | உண்கின்றேன் | |
| உண்டனன் | உண்கின்றனன் | |
| எ. தெரி. | குறி. | |
| உண்குவென் | குழையினென் | |
| உண்பேன் | குழையினேன் | |
| உண்பன் | குழையினன் | |

செய்யுளிலே, தன்மையொருமைத்தெரிநிலைவினைமுற்றிற்கு, இவ்விகுதிகளன்றி, அல், கு, டு, து, று என்னும் விகுதிகளும் வழங்கும்.

இவைகளுள், அல் விகுதி எதிர்காலவிடைநிலைகளோடு மாத்திரம் வரும். மற்றை நான்கு விகுதிகளும் இடைநிலை யின்றித் தாமே காலங்காட்டுதல் பதவியலிற் பெறப்பட்டது.

(உதாரணம்.)

| விகு. | இ. தெ. | எ. தெ. |
|---|---|---|
| அல் | —— | உண்பல் |
| கு | —— | உண்கு |
| டு | உண்டு | —— |
| து | வந்து | வருது |
| று | சென்று | சேறு |

உசஅ. அம், ஆம், எம், ஏம், ஓம் என்னும் கனை இறுதியில் உடைய வினைச்சொற்கள், தன்மைப்பன்மைத்தெரிநிலைவினைமுற்றுங் குறிப்புவினைமுற்றுமாம். உ-ம்.

| இ. தெரி | நி. தெரி. | |
|---|---|---|
| உண்டனம் | | யாம். |
| உண்டாம் | உண்கின்றாம் | |
| உண்டனெம் | உண்கின்றனெம் | |
| உண்டேம் | உண்கின்றேம் | |
| உண்டோம் | உண்கின்றோம் | |
| எ. தெரி. | குறி. | |
| உண்பம் | குழையினம் | |
| உண்பாம் | குழையினாம் | |
| உண்பெம் | குழையினெம் | |
| உண்பேம் | குழையினேம் | |
| உண்போம் | குழையினோம் | |

செய்யுளிலே, தன்மைப்பன்மைத்தெரிநிலைவினைமுற்றுக்கு, இவ்விகுதிகளன்றி, கும், டும், தும், றும் என்னும் விகுதிகளும் வழங்கும்.

இவை இடைநிலையின்றித் தாமே காலங் காட்டுதல் பதவியலிற் பெறப்பட்டது. உ-ம்.

| விகு. | | இ. தெரி. | எ. தெரி. | |
|---|---|---|---|---|
| கும் | ... | ——— | உண்கும் | யாம். |
| டும் | ... | உண்டும் | ——— | |
| தும் | ... | வந்தும் | வருதும் | |
| றும் | ... | சென்றும் | சேறும் | |

**பரீக்ஷை வினாக்கள்.**—உசசா. தன்மை வினைமுற்று எத்தனை வகைப்படும்? உசஎ. தன்மையொருமை வினைமுற்றுக்கள் எவை? தன்மையொருமைத் தெரிநிலைவினைமுற்றிற்கு இவ்வி

குதிகளன்றி வேறு விகுதிகளும் வழங்குமோ? அல் விகுதி எக்காலவிடைநிலைகளோடு வரும்? உசஅ. தன்மைப்பன்மை வினைமுற்றுக்கள் எவை? தன்மைப்பன்மைத் தெரிநிலைவினை முற்றுக்கு இவ்விகுதிகளன்றி வேறுவிகுதிகளும் வழங்குமோ?

உசகூ. முன்னிலைவினைமுற்று, முன்னிலையொருமை வினைமுற்றும், முன்னிலைப்பன்மைவினைமுற்றும் என, இரு வகைப்படும்.

உருo. ஐ, ஆய், இ என்னும் விகுதிகளை இறுதியில் உடைய வினைச்சொற்கள், முன்னிலையொருமைத்தெரிநிலை வினைமுற்றுங் குறிப்புவினைமுற்றுமாம். உ-ம்.

| இ. தெரி. | நி. தெரி. | எ. தெரி. | குறி. |
|---|---|---|---|
| உண்டனை | உண்கின்றனை | உண்பை | குழையினை |
| உண்டாய் | உண்கின்றாய் | உண்பாய் | குழையாய் |
| உண்டி | உண்ணாநின்றி | சேறி | வில்லி |

இகர விகுதி எதிர்காலத்தை இடைநிலையின்றித் தானே காட்டுதல் பதவியலிற் பெறப்பட்டது.

உருக. இர், ஈர் என்னும் விகுதிகளை இறுதியில் உடையவினைச்சொற்கள், முன்னிலைப்பன்மைத்தெரிநிலைவினை முற்றுங் குறிப்புவினைமுற்றுமாம். உ-ம்.

| இ. தெரி. | நி. தெரி. | எ. தெரி. | குறி. | |
|---|---|---|---|---|
| உண்டனிர் | உண்கின்றனிர் | உண்பிர் | குழையினிர் | நீர். |
| உண்டீர் | உண்கின்றீர் | உண்பீர் | குழையீர் | |

பரீக்ஷை வினாக்கள்.— உசகூ. முன்னிலை வினைமுற்று எத்தனை வகைப்படும்? உருo. முன்னிலையொருமை வினைமுற்றுக்கள் எவை? உருக. முன்னிலைப் பன்மை வினைமுற்றுக்கள் எவை?

## எதிர்மறை வினைமுற்று.

உருஉ. எதிர்மறைக்குறிப்புவினைமுற்றுக்கள், அல், இல் என்னும் எதிர்மறைப் பண்படியாகத் தோன்றிப்பால் காட்டும் விகுதிகளைப் பெற்று, வருவனவாம். உ-ம்.

படர்க்கை——அல்லன, அல்லள, அல்லர்; அன்று; அல்ல; [அல்லன.]
இலன; இலள்; இலர், இன்று; இல; [இல்லன.]
தன்மை——அல்லேன்; அல்லேம். இலேன்; இலேம்.
முன்னிலை——அல்லாய்; அல்லீர். இலாய்; இலீர்.

இன்மை என்பது, ஒருபொருளினது உண்மைக்கும் ஒருபொருளை உடைமைக்கும் மறுதலை. உண்மை உளதாதல். உ-ம்.

| உண்மை. | இன்மை. |
|---|---|
| இங்கே சாத்தனுளன் | இங்கே சாத்தனிலன். |
| இவனிடத்தே அறமுண்டு | இவனிடத்தே அறமின்று. |

| உடைமை. | இன்மை. |
|---|---|
| இவன் பொருளுடையன் | இவன் பொருளிலன். |
| இது குணமுடையது | இது குணமில்லது. |

அன்மை என்பது, ஒருபொருள் சுட்டியதொருபொருளாதற்கு மறுதலை: பிறிதுபொருளாதலைக் காட்டும் என்றபடி. உ-ம்.

இவன் சாத்தனல்லன்; [கொற்றன்.]
இஃதறனன்று; [மறம்.]

உருங. எதிர்மறைத் தெரிநிலைவினைமுற்றுக்கள், இல் அல், ஆ என்னும் எதிர்மறை இடைநிலைகளோடு * பால் காட்டும் விகுதிகளைப் பெற்று, வருவனவாம்.

இவற்றுள், இல் இடைநிலை இறந்தகாலவிடைநிலை யோடும், விகாரப்பட்டிறந்தகாலங்காட்டும் பகுதியோடும் நிகழ்காலவிடைநிலையோடுங் கூடி வரும். இனி இடைநிலை யோடு கூடாது, இல் இடைநிலை குச்சாரியை பெற்றும், அல் இடைநிலை குச்சாரியை பெற்றும் பெறாதும், ஆகாரவிடை நிலை சாரியை பெறாதும், எதிர்காலமுணர்த்தி வரும்.

உ-ம். நடந்திலன், பெற்றிலன், நடக்கின்றிலன், நடக்கிலன், எ-ம், நடக்கலன், உண்ணலன். எ-ம். நடவான். எ-ம். வரும். மற்ற விகுதிகளோடும் இப்படியே யொட்டிக்கொள்க.

ஆகாரவிடைநிலை வருமெழுத்து உயிராயவழிக் கெடுதல் பதவியலிற் பெறப்பட்டது.

இங்ஙனமன்றி, உடன்பாட்டுத்தெரிநிலை வினைமுற்றுக்களே, அல் என்னும் பண்படியாகத் தோன்றிய எதிர்மறைச் சிறப்புவினைக்குறிப்போடாயினும், இல்லையென்னும் எதிர் மறைப்பொதுவினைக்குறிப்போடாயினுங் கூடி, ஒருசொன்

---

* இல், அல், ஆ இம்மூன்றையும் எதிர்மறை விகுதியென்பர் சிலர். எதிர்மறை யிடைநிலையென்பதே சேனாவரையர் சிவஞானமுனிவர் முதலியோர் துணிவு. நடவா என்னும் அஃறிணைப்பலவின்பாற்படர்க்கை வினைமுற்றில் ஆகாரம, வேறுவிகுதி வேண்டாது, தானே எதிர்மறைப் பொருளோடு பலவின்பாற்படர்க்கைப்பொருளையுந் தந்து நிற்றலின் அங்கு மாத்திரம் விகுதியேயாமென்றறிக.

னீர்மைப்பட்டு, எதிர்மறைத்தெரிநிலைவினைமுற்றுக்களாயும், வரும்.

உ-ம். உண்டானல்லன், உண்டேனல்லேன், உண்டாயல்லை.
எ-ம். வந்தானில்லை, வந்தேனில்லை, வந்தாயில்லை.
எ-ம். வரும்.

**பரீக்ஷை வினாக்கள்.**—௨௫௨. எதிர்மறைக் குறிப்புவினைமுற்றுக்கள் எவை? இன்மையென்பது என்னை? அன்மையென்பது என்னை? ௨௫௩. எதிர்மறைத் தெரிநிலைவினைமுற்றுக்கள் எவை? இவற்றுள், இல் இடைநிலை எப்படி வரும்? அல் இடைநிலை எப்படி வரும்? ஆகாரவிடைநிலை எப்படி வரும்? எதிர்மறைத் தெரிநிலைவினைமுற்றுக்கள், இங்ஙனமன்றி, இன்னும் எங்ஙனம் வரும்?

## முன்னிலையேவல்வினைமுற்று.

௨௫௪. முன்னிலையேவல்வினைமுற்று, முன்னிலையேவலொருமைவினைமுற்றும், முன்னிலையேவற்பன்மைவினைமுற்றும், என இருவகைப்படும்.

௨௫௫. ஆய், இ, அல், ஏல், ஆல் என்னும் விகுதிகளை இறுதியில் உடைய வினைச்சொற்களும், ஆய்விகுதி புணர்ந்து குன்றிப் பகுதிமாத்திரையாய் நிற்கும் வினைச்சொற்களும், முன்னிலையேவலொருமைத் தெரிநிலைவினைமுற்றுக்களாம்.

இவற்றுள் அல், ஏல், ஆல் என்னும் மூன்று விகுதிகளும் எதிர்மறையிடத்து வரும்.

உ-ம். உண்ணாய்* உண்ணாதி உண்
உண்ணல் உண்ணேல் மருல் } நீ.

ஏவல்விகுதிகள் இடைநிலையின்றித் தாமே எதிர்காலங் காட்டல் பதவியலிற் பெறப்பட்டது.

எதிர்மறையேவலொருமை வினைமுற்றுக்கள், உண்ணாதே, உண்ணாதி என, எதிர்மறை ஆகாரவிடைநிலையின் முன் தகரவெழுத்துப்பெற்றேனும் ஏகாரவிகுதி இகரவிகுதிகளுள் ஒன்று பெற்றும், வரும்.

௨௫௬. ஈர், உம், மின் என்னும் விகுதிகளை இறுதியில் உடைய வினைச்சொற்கள், முன்னிலையேவற்பன்மைத் தெரிநிலைவினைமுற்றுக்களாம்.

உ-ம். உண்ணீர் † உண்ணும் உண்மின்-

எதிர்மறையேவற்பன்மைவினைமுற்றுக்கள், உண்ணன்மின், நடவன்மின் எனப்பகுதிக்கும் மின் விகுதிக்கும் இடையே எதிர்மறை அல் இடைநிலை பெற்றுவரும்.

* உண்ணாய் என்னும் முன்னிலையொருமை யெதிர்மறைத்தெரிநிலைவினைமுற்றும் வேறே; உண்ணாய் என்னும் முன்னிலையேவலொருமைத் தெரிநிலைவினைமுற்றும் வேறே. முன்னையது, உண் என்னும் பகுதியும், ஆ என்னும் எதிர்மறையிடைநிலையும், ஆய் விகுதியும் பெற்று, ஆகாரவிடைநிலை கெட்டு முடிந்தது. பின்னையது, உண் என்னும் பகுதியும், ஆய் விகுதியும் பெற்று, முடிந்தது.

† உண்ணீர் என்னும் முன்னிலைப்பன்மையெதிர்மறைத் தெரிநிலைவினைமுற்றும் வேறே; உண்ணீர் என்னும் முன்னிலையேவற்பன்மைத் தெரிநிலைவினைமுற்றும் வேறே. முன்னையது, உண் என்னும் பகுதியும் ஆ என்னும் எதிர்மறை இடைநிலையும், ஈர் விகுதியும் பெற்று, இடைநிலை ஆகாரங்கெட்டு, முடிந்தது. பின்னையது, உண் என்னும் பகுதியும், ஈர் விகுதியும் பெற்று, முடிந்தது.

பரீக்ஷை வினாக்கள்.—உ௫௪. முன்னிலையேவல் வினைமுற்று எத்தனை வகைப்படும்? உ௫௫. முன்னிலையேவலொருமைத் தெரிநிலைவினைமுற்றுக்கள் எவை? இவற்றுள், எவை எதிர் மறையிடத்தவரும்? எதிர்மறையேவலொருமை வினைமுற்றுக்கள் இன்னும் எப்படி வரும்? உ௫௬. முன்னிலையேவற் பன்மைத் தெரிநிலைவினைமுற்றுக்கள் எவை? எதிர்மறையேவற் பன்மை வினைமுற்றுக்கள் எவை?

---

## வியங்கோள்வினைமுற்று.

உ௫௭. க, இய, இயர், அ, அல் என்னும் விகுதிகளை இறுதியில் உடைய வினைச்சொற்கள் வியங்கோள்வினைமுற்றுக்களாம்.

வியங்கோளாவது, இருதிணையைம்பான் மூவிடங்கட்கும் பொதுவாகிய ஏவல்.

| | | |
|---|---|---|
| ககரவிகுதி—வாழ்க | உண்க | யான், யாம், |
| இயவிகுதி—வாழிய | உண்ணிய | நீ, நீர், அவ |
| இயர்விகுதி—வாழியர் | உண்ணியர் | ன், அவள், |
| அகரவிகுதி—வர | உண்ண | அவர், அது, |
| அல்விகுதி—ஓம்பல் | எனல் | அவை. |

வாழிய என்பது, ஆ வாழி, அந்தணர் வாழி எனப் பெரும்பாலும் ஈற்றுயிர்மெய் கெட்டு, வரும்.

வர = வருக. உண்ண = உண்க.
ஓம்பல் = ஓம்புக. எனல் = என்க.

சிறுபான்மை, இவை, இக்காலத்து உலகவழக்கிலே, நடக்கக்கடவன், நடக்கக்கடவள், நடக்கக்கடவர். எ-ம். நடப்பானாக, நடப்பாளாக, நடப்பாராக. எ-ம். பாலிடங்களுள் ஒன்றற்குரியவாய் வருமெனவுங்கொள்க.

எதிர்மறைவியங்கோள் வினைமுற்றுக்கள், மறவற்க, உண்ணற்க எனப் பகுதிக்கும் ககரவிகுதிக்கும் இடையே எதிர்மறை அல் இடைநிலை பெற்று வரும்.

அன்றியும், 'மகனெனல்' என்னுமிடத்து மகனென்று சொல்லற்க எனவும், 'மரீஇயதொராஅல்' என்னுமிடத்து மரீஇய தொருவற்க. எ - ம். பொருள்பட நிற்றலால், அல், ஆல் இரண்டும் எதிர்மறை வியங்கோள் விகுதிகளாய் வருமெனவும் அறிக.

மேற்கூறிய ஏவல் விகுதிகளும் இவ்வியங்கோள் விகுதிகளும் இடைநிலையின்றித் தாமே எதிர்காலங்காட்டல் பதவியலிற் பெறப்பட்டது.

பரீக்ஷை வினாக்கள்.—உ௫எ. வியங்கோள் வினைமுற்றுக்கள் எவை? வியங்கோளாவது என்னை? எதிர்மறை வியங்கோள் வினைமுற்றுக்கள் எவை?

## செய்யுமென்முற்று.

உ௫அ. செய்யுமென்னும் வாய்பாட்டுத் தெரிநிலைவினை முற்றுச்சொற்கள், படர்க்கையிடத்தனவாகிய ஐம்பால்களுள்ளே பலர்பாலொழிந்த நான்கு பால்களுக்கும் பொதுவாய், வரும்.

உ-ம். அவனுண்ணும், அவளுண்ணும்.
அதுவுண்ணும், அவையுண்ணும்.

இம்முற்றுவினைச்சொல்லில் உம் விகுதி நிகழ்காலமும் எதிர்காலமுங் காட்டுதல் பதவியலிற் பெறப்பட்டது.

பரீக்ஷை வினா.—உ௫அ. செய்யுமென்னும் வாய்பாட்டுத்தெரிநிலைவினைமுற்றுக்கள் எவ்வாறு பொதுப்படவரும்?

## பொதுவினைக் குறிப்பு.

உருகூ. வேறு, இல்லை, உண்டு என்னும் இம்மூன்று வினைக்குறிப்புமுற்றுச்சொற்களும், யார் என்னும் வினாவினைக்குறிப்புமுற்றுச்சொல்லும், இருதிணையைம்பான் மூவிடங்கட்கும் பொதுவாகி, வரும். உ-ம்.

| | | | |
|---|---|---|---|
| அவன் | அவள் | அவர் | வேறு, இல்லை, உண்டு, யார். |
| அது | அவை | யான் | |
| யாம் | நீ | நீர் | |

இல்லையென்பது 'எஞ்ஞான்றுமில்' எனக் கடைக்குறைந்து வருதலுமுண்டு.

அஃறிணையொருமைக்குரிய டுவ்விகுதி பெற்று நிற்கும் உண்டு என்னும் வினைக்குறிப்பு முற்றும் வேறே; விகுதியின்றிப் பொதுச்சொல்லாயே நிற்கும் இவ்வுண்டென்னும் வினைக்குறிப்பு முற்றும் வேறே. முன்னையது இன்று என்பதற்கு மறுதலை; பின்னையது இல் என்பதற்கு மறுதலை.

யார் என வகரங்கெட்டு நிற்கும் பலர்பாற்படர்க்கை வினாப்பெயரும் வேறே; யார் என்னும் இவ்வினாவினைக்குறிப்பும் வேறே.

யாரென்பது ஆரென விகாரப்பட்டும் வரும்.

உகூ௦ எவன் என்னும் வினாவினைக்குறிப்புமுற்றுச்சொல் அஃறிணையிருபாற்கும் பொதுவாகி வரும்.

உ-ம். அஃதெவன்                    அவையெவன்

எவன் என்னும் உயர்திணையாண்பாற்படர்க்கை வினாப்பெயரும் வேறே; எவன் என்னும் இவ்வினாவினைக்குறிப்பும் வேறே.

எவன் என்பது, என், என்ன, என்னை என விகாரப்பட்டும் வரும்.

பரீக்ஷை வினாக்கள்.—உருக. வேறு, இல்லை, உண்டு என்னும் இம்மூன்று வினைக்குறிப்புமுற்றுச் சொற்களும், யார் என்னும் வினாவினைக் குறிப்புமுற்றுச் சொல்லும், எவ்வாறு பொதுப்பட வரும்? உகூ௦. எவன் என்னும் வினாவினைக்குறிப்பு முற்றுச்சொல் எவ்வாறு பொதுப்பட வரும்?

---

## பெயரெச்சம்.

உகூக. பெயரெச்சமாவது, பால் காட்டும் முற்று விகுதி பெறாத குறைச்சொல்லாய்ப் பெயரைக் கொண்டு முடியும் வினையாம்.

இப்பெயரெச்சங் கொள்ளும் பெயர்களாவன, வினைமுதற்பெயர், கருவிப்பெயர், இடப்பெயர், தொழிற்பெயர், காலப்பெயர், செயப்படுபொருட்பெயர் என்னும் அறுவகைப் பெயருமாம். உ-ம்.

உண்டசாத்தன்————வினைமுதற்பெயர்
உண்டகலம்————கருவிப்பெயர்
உண்ட வீடு————இடப்பெயர்
-தொழிற்பெயர்
உண்ட நாள்————காலப்பெயர்
உண்ட சோறு————செயப்படுபொருட்பெயர்.

உகூஉ. தெரிநிலைவினைப்பெயரெச்சம் செய்தவென்னும் வாய்பாட்டிறந்தகாலப்பெயரெச்சம் எனவும், செய்கின்றவென்னும் வாய்பாட்டு நிகழ்காலப் பெயரெச்சம் எனவும், செய்யுமென்னும் வாய்பாட்டெதிர்காலப்பெயரெச்சம் எனவும், மூவகைப்படும்.

உகூங. செய்தவென்னும் வாய்பாட்டிறந்தகாலப்பெயரெச்சங்கள், இறந்தகாலவிடைநிலையோடும், விகாரப்பட்டிறந்தகாலங் காட்டும் பகுதியோடும், அகரவிகுதி பெற்று வருவனவாம்.

உ-ம். வந்த குதிரை — போய குதிரை
உண்ட குதிரை — புக்க குதிரை
தின்ற குதிரை — விட்ட குதிரை
வருந்தின குதிரை — உற்ற குதிரை.

உகூச. செய்கின்றவென்னும் வாய்பாட்டு நிகழ்காலப்பெயரெச்சங்கள், நிகழ்காலவிடைநிலையோடு அகரவிகுதி பெற்று வருவனவாம்.

உ-ம். உண்ணாநின்ற குதிரை உண்கின்ற குதிரை உண்கிற குதிரை.

உகூரு. செய்யுமென்னும் வாய்பாட்டெதிர்காலப்பெயரெச்சங்கள், இடைநிலையின்றித் தானே எதிர்காலங்காட்டும் உம் விகுதி பெற்றுவருவனவாம்.

உ-ம். உண்ணுங் குதிரை — நடக்குங் குதிரை.

உகூகூ. எதிர்மறைத் தெரிநிலைவினைப் பெயரெச்சங்கள், எதிர்மறை ஆகாரவிடைநிலையுந் தகரவெழுத்துப்பேற்றோடு கூடிய அகரவிகுதியும்பெற்று வருவனவாம்.

செய்யாத என்பது, செய்த, செய்கின்ற, செய்யும் என்னும் மூன்றற்கும், எதிர்மறையாம். இவ்வெதிர்மறைப் பெயரெச்சம், செய்கலாத, செய்கிலாத என அல், இல் என்னும் இடைநிலைகளை ஆகாரச்சாரியையோடு பெற்றும் வரும்.

உ-ம். உண்ணாத குதிரை — நடவாத குதிரை.

உண்ணுக்குதிரை, நடவாக்குதிரை என ஈற்றுயிர்மெய் கெட்டும் வரும்.

உகூஎ. குறிப்புவினைப் பெயரெச்சங்கள், அகரவிகுதி பெற்று வருவனவாம்.

உ-ம். கரிய குதிரை பெரிய களிறு நெடிய வில்
செய்ய மலர் தீய சொல் புதிய நட்பு
உள்ள பொருள் முகத்தயானை படைத்த பாம்பு.

உகூஅ. எதிர்மறைக் குறிப்புவினைப்பெயரெச்சங்கள், அல், இல் என்னும் பண்படியாகத் தோன்றி, ஆகாரச்சாரியையுந் தகரவெழுத்துப்பேற்றோடு கூடிய அகரவிகுதியும் பெற்று வருவனவாம்.

உ-ம். அல்லாத குதிரை இல்லாத பொருள்.

அல்லாக்குதிரை, இல்லாப்பொருள் என ஈற்றுயிர்மெய் கெட்டும் வரும்.

உகூகூ. பெயரெச்சங்கள், இருதிணையைம்பான் மூவிடங்கட்கும் பொதுவாக வரும். உ-ம்.

யான், யாம்
நீ, நீர்.
அவன், அவள், அவர், அது, அவை.

பரீக்ஷை வினாக்கள்.—கூகக. பெயரெச்சமாவது யாது? பெயரெச்சங் கொள்ளும் பெயர்கள் எவை? உகூஉ. தெரிநிலைவினைப் பெயரெச்சம் எத்தனை வகைப்படும்? உகூங. செய்தவென்னும் வாய்பாட்டிறந்தகாலப் பெயரெச்சங்கள் எவை? உகூச. செய்கின்றவென்னும் வாய்பாட்டு நிகழ்காலப் பெயரெச்சங்கள் எவை? உகூரு. செய்யுமென்னும் வாய்பாட்டெதிர்காலப் பெயரெச்சங்கள் எவை? உகூகூ. எதிர்மறைத்

தெரிநிலைவினைப் பெயரெச்சங்கள் எவை? செய்யாத என்பது எவற்றிற்கு எதிர்மறை? இவ்வெதிர்மறைப் பெயரெச்சம் இன்னும் எங்ஙனம் வரும்? ௨௬௭. குறிப்புவினைப் பெயரெச்சங்கள் எவை? ௨௬௮. எதிர்மறைக் குறிப்புவினைப் பெயரெச்சங்கள் எவை? ௨௬௯. பெயரெச்சங்கள் எவ்வாறு பொதுப்பட வரும்?

---

## வினையெச்சம்.

௨௭௦. வினையெச்சமாவது, பால் காட்டும் முற்று விகுதி பெறாத குறைச்சொல்லாய், வினைச்சொல்லைக்கொண்டு முடியும் வினையாம்.

இவ்வினையெச்சங் கொள்ளும் வினைச்சொற்களாவன: உடன்பாடும் எதிர்மறையும் பற்றி வருந் தெரிநிலையுங் குறிப்புமாகிய வினைமுற்றும், பெயரெச்சமும், வினையெச்சமும், வினையாலணையும் பெயரும், தொழிற்பெயரும் ஆகிய ஐவகை வினைச்சொற்களுமாம். உ-ம்.

(௧.) தெரிநிலைவினையெச்சந் தெரிநிலைவினைவிகற்பங்கள் கொள்ளுதற்கு உதாரணம்:—

உண்டுவந்தான்; உண்டுவாரான்—தெரிநிலைவினைமுற்று
உண்டுவந்த; உண்டுவாராத—தெரிநிலைவினைப்பெயரெச்சம்
உண்டுவந்து, உண்டுவாராது—தெரிநிலைவினையெச்சம்
உண்டுவந்தவன்; உண்டுவாராதவன்—தெரிநிலைவினையாலணையும்பெயர்
உண்டுவருதல்; உண்டுவாராமை—தெரிநிலைத்தொழிற்பெயர்.

(௨.) தெரிநிலைவினையெச்சங் குறிப்புவினை விகற்பங்கள் கொள்ளுதற்கு உதாரணம்:—

கற்றுவல்லன் ——— குறிப்புவினைமுற்று
கற்றுவல்ல ———— குறிப்புவினைப்பெயரெச்சம்
கற்றுவல்லவன் ——— குறிப்புவினையாலணையும்பெயர்
கற்றுவன்மை ———— குறிப்புத்தொழிற்பெயர்

(ங.) குறிப்புவினையெச்சந் தெரிநிலைவினைவிகற்பங்கள் கொள்ளுதற்கு உதாரணம்:—

அறமன்றிச்செய்தான்; அறமன்றிச்செய்யான் — தெரிநிலை வினைமுற்று

அறமன்றிச்செய்த; அறமன்றிச்செய்யாத — தெரிநிலை பெயரெச்சம்

அறமன்றிச்செய்து; அறமன்றிச்செய்யாது — தெரிநிலை வினையெச்சம்

அறமன்றிச்செய்தவன்; அறமன்றிச்செய்யாதவன் — தெரிநிலை வினையாலணையும்பெயர்

அறமன்றிச்செய்தல்; அறமன்றிச்செய்யாமை — தெரிநிலை தொழிற்பெயர்.

(ச.) குறிப்புவினையெச்சங் குறிப்புவினை விகற்பங்கள் கொள்ளுதற்கு உதாரணம்:—

அறமன்றியிலன் — குறிப்புவினைமுற்று
அறமன்றியில்லாத — குறிப்புவினைப்பெயரெச்சம்
அறமன்றியில்லாது — குறிப்புவினையெச்சம்
அறமன்றியில்லாதவன் — குறிப்புவினையாலணையும்பெயர்
அறமன்றியின்மை — குறிப்புத்தொழிற்பெயர்.

உஎக. பதவியலிற் கூறப்பட்ட வினையெச்ச விகுதிகளுள், உகரவிகுதி இறந்தகாலவிடைநிலையோடு கூடிவரும். என விகுதி இறந்தகாலவிடைநிலையோடும் விகாரப்பட்டிறந்

தகாலங் காட்டும் பகுதியோடுங்கூடி வரும். மற்றை விகுதிக ளெல்லாம் இடைநிலையின்றித் தாமே காலங்காட்டும்.

உஎஉ. தெரிநிலைவினையெச்சங்கள், செய்து என்னும் வாய்பாட்டிறந்தகாலவினையெச்சம் எனவும், செயவென்னும் வாய்பாட்டு முக்காலத்திற்குமுரிய வினையெச்சம் எனவும், செயின் என்னும் வாய்பாட்டெதிர்காலவினையெச்சம் எனவும் மூவகைப்படும்.

உஎ௩. செய்து என்னும் வாய்பாட்டு இறந்தகால வினையெச்சங்கள் உ, இ, ய் என்னும் விகுதிகளை இறுதியிற்பெற்றுத் தன்கருத்தாவின் வினையையே கொண்டு முடிவனவாம்.

இங்கே இறந்தகாலமென்றது, முடிக்குஞ்சொல்லால் உணரப்படுந் தொழிற்கு வினையெச்சத்தால் உணரப்படுந் தொழில் முன்னிகழ்தலே.

(உதாரணம்.)

உகரவிகுதி— { நடந்து, உண்டு, சென்று, தேர்ந்து, கேட்டு, கற்று } வந்தான்.

இகரவிகுதி—— ஆடி, எண்ணி } வந்தான்.
யகரவிகுதி—— ஆய், போய் } வந்தான்.

இங்கே வினையெச்சத்தால் உணரப்படுந் தொழிலை நிகழ்த்தின வினைமுதலே முடிக்குஞ் சொல்லால் உணரப்படுந் தொழிற்கும் வினைமுதலாதல் காண்க.

விகுதி விகாரப்பட்டும், விகுதி பெறாது சில பகுதியே விகாரப்பட்டும், இச்செய்தென்வாய்பாட்டிறந்தகால வினையெச்சங்களாய் வரும். உ-ம்.

| | | |
|---|---|---|
| தழுவிக்கொண்டான்-தழீஇக்கொண்டான் | | விகுதிவிகாரப் |
| மருவிவந்தான் | —மரீஇ வந்தான் | பட்டுவந்தன. |

| | | |
|---|---|---|
| புகு——— | புக்குவந்தான் | விகுதி பெறாத சில |
| விடு——— | விட்டுவந்தான் | பகுதியே விகாரப்ப |
| பெறு——— | பெற்றுவந்தான் | ட்டு வந்தன. |

இச்செய்தெனெச்சம், ஒரோவிடத்துக் காரணப்பொரு ட்டாயும் வரும்.

உ-ம். கற்றறிந்தான்.
அறஞ்செய்து புகழ்பெற்றான்.

செய்யுளிலே, இச்செய்தென்வாய்பாட்டிறந்தகாலவினை யெச்சங்கள், பு, ஆ, ஊ என்னும் விகுதிகளைப்பெற்றும் வரும். உ-ம்.

| | | | |
|---|---|---|---|
| புகரவிகுதி———உண்குபு | தேடுபு | | வந்தான். |
| ஆ விகுதி———உண்ணா | தேடா | | |
| ஊ விகுதி———உண்ணூ | தேடூ | | |

உ௪௭. செய என்னும் வாய்பாட்டு முக்காலத்திற்கும் உரிய வினையெச்சம், அகரவிகுதியை இறுதியிற் பெற்றுத் தன்கருத்தாவின் வினையையும் பிறகருத்தாவின் வினையை யுங் கொண்டு முடிவதாம்.

(க.) செயவென்வாய்பாட்டு வினையெச்சம், இறந்தகால த்திலே காரணப்பொருளில் வந்து, தன்கருத்தாவின் வினை யையும் பிறகருத்தாவின் வினையையுங்கொண்டு முடியும்.

காரணப்பொருளில் வருதலாவது, முடிக்குஞ்சொல் லின் உணரப்படுந் தொழிற்கு வினையெச்சத்தால் உணரப் படுந் தொழில் காரணமென்பது படவருதல்.

உ-ம். மழை பெய்யப் புகழ் பெற்றது—தன்கருத்தாவின் [வினை
மழை பெய்ய நெல் விளைந்தது—பிறகருத்தாவின் [வினை.

மழை பெய்யப் புகழ் பெற்றது என்றவிடத்து, வினையெச்சத்தால் உணரப்படுந் தொழிலை நிகழ்த்தின வினைமுதலே முடிக்குஞ் சொல்லால் உணரப்படுந் தொழிற்கும் வினைமுதலாதல் காண்க.

மழை பெய்ய நெல் விளைந்தது என்றவிடத்து, வினையெச்சத்தால் உணரப்படுந் தொழிலை நிகழ்த்தின வினைமுதலும் வேறே; முடிக்குஞ் சொல்லால் உணரப்படுந் தொழிலை நிகழ்த்தின வினைமுதலும் வேறேயாதல் காண்க.

செய்யுளிலே இச்செயவென்வாய்பாட்டிறந்தகாலவினையெச்சம், என என்னும் விகுதியைப் பெற்றும், வரும்.

உ-ம். மழைபெய்தெனப் புகழ் பெற்றது—தன்கருத்தாவின் [வினை
மழைபெய்தென நெல் விளைந்தது—பிறகருத்தாவின் [வினை.

(உ) செயவென்வாய்பாட்டு வினையெச்சம், எதிர்காலத்திலே காரியப்பொருளில் வந்து, தன்கருத்தாவின்வினையையும் பிறகருத்தாவின் வினையையுங்கொண்டு முடியும்.

காரியப்பொருளில் வருதலாவது, முடிக்குஞ்சொல்லால் உணரப்படுந் தொழிற்கு வினையெச்சத்தால் உணரப்படுந்தொழில் காரியமென்பதுபட வருதல்.

உ-ம். தானுண்ணவந்தான் —தன்கருத்தாவின்வினை.
யானுண்ணத்தந்தான் —பிறகருத்தாவின்வினை.

இச்செயவென்வாய்பாட் டெதிர்கால வினையெச்சம், கு என்னும் விகுதியைப் பெற்றும், வரும்.

உ-ம். தானுணற்கு வந்தான் —தன்கருத்தாவின்வினை.
யானுணற்குத் தந்தான் —பிறகருத்தாவின்வினை.

உண்ணும்படி, உண்ணும்பொருட்டு, உண்ணும் வண்ணம், உண்ணும்வகை என்பன, உணற்கென்னும் பொருள்பட வரும்.

செய்யுளிலே, இச்செயவென்வாய்பாட்டெதிர்காலவினை யெச்சம், இய, இயர், வான், பான், பாக்கு என்னும் விகுதிகளைப் பெற்றும், வரும். இவற்றுள், முன்னைய இரண்டு விகுதி பெற்றவை தன்கருத்தாவின் வினையையும் பிறகருத் தாவின் வினையையுங்கொண்டு முடியும்; பின்னைய மூன்று விகுதி பெற்றவை தன்கருத்தாவின்வினையைக் கொண்டு முடியும். உ-ம்.

இயவிகுதி { நீரிவைகாணியவம்மின்-தன்கருத்தாவின் வினை.
அவர் காணிய வம்மின்-பிறகருத்தாவின் வினை. }

இயர்விகுதி { நாமுண்ணியர்வந்தேம்-தன்கருத்தாவின்வினை.
நீருண்ணியர்வழங்குவேம்-பிறகருத்தாவின் வினை. }

வான்விகுதி—தான் கொல்வான் சென்றான்
பான்விகுதி—தானலைப்பான் புகுந்தான்
பாக்குவிகுதி—தான்றருபாக்கு வருவான்
} தன்கருத்தாவின்வினை.

(௬.) செயவென்வாய்பாட்டு வினையெச்சம், தனக்கென நியமமாக உரிய நிகழ்காலத்திலே, இது, நிகழாநிற்க இது நிகழ்ந்தது என்னும் பொருள்பட வந்து, பிறகருத்தாவின் வினையைக்கொண்டு முடியும்.

இங்கே நிகழ்காலமென்றது, முடிக்குஞ் சொல்லால் உணரப்படுந் தொழிலோடு வினையெச்சத்தால் உணரப்படுந் தொழில் முற்பிற் பாடின்றி உடனிகழ்தலை.

உ-ம். சூரி பழுத்திக்கலந்தான்—பிறகருத்தாவின் வினை.

உஎறு. செயின் என்னும் வாய்பாட்டு எதிர்காலவினையெச்சங்கள், இன், ஆல், கால், கடை, வழி, இடத்து, உம் என்னும் விகுதிகளை இறுதியிற் பெற்றுக் காரணப்பொருளில் வந்து, தன்கருத்தாவின் வினையையும் பிறகருத்தாவின் வினையையுங்கொண்டு முடிவனவாம்.

இவ்வினையெச்சம், எதிர்காலச்சொல்லையே முடிக்குஞ் சொல்லாகக் கொள்ளும். இவ்வினையெச்சத்தால் உணரப்படுந் தொழில், ஒருதலையாகவே சொல்லுவான் சொற்குப் பின்னிகழ்வதாயும், முடிக்குஞ் சொல்லால் உணரப்படுந் தொழிற்குக் காரணமாக முன்னிகழ்வதாயும், உள்ளது; ஆதலால், இவ்வினையெச்சம் எதிர்காலம்பற்றிக் காரணப் பொருளில் வருவதாயிற்று. ஒருதலை—துணிவு.

(உதாரணம்.)

இன்— { யானுண்ணி னுவப்பேன்————தன்கரு.
உண்ணிற் பசிதீரும்————பிறகரு. }

ஆல்— { நீ வந்தால் வாழ்வாய்————தன்கரு.
நீ வந்தால் யான் வாழ்வேன்————பிறகரு. }

கால்— { நீ கற்றக்காலுவப்பாய்————தன்கரு.
உண்டக்காற் பசிதீரும்————பிறகரு. }

கடை— { நல்வினை தானுற்றக்கடையுதவும்————தன்கரு.
நல்வினை தானுற்றக்கடைத்தீவினைவராது————பிறகரு. }

வழி— { நல்வினை தானுற்ற வழியுதவும்——————தனகரு.
நல்வினை தானுற்றவழித் தீவினைவராது——பிறகரு.

இடத்து { நல்வினை தானுற்றவிடத்துதவும்—————தன்கரு.
நல்வினை தானுற்றவிடத்துத்தீவினைவராது—பிறகரு.

உம்— { உண்டலு முவப்பாய்——————————தன்கரு.
உண்டலும் பசிதீரும்——————————பிறகரு.

வந்தால் என்பது துச்சாரியை பெற்றது. உண்டக்கால் என்பது துச்சாரியையும் அகரச்சாரியையும் பெற்றது. உற்றக்கால், உற்றக்கடை, உற்றவழி, உற்றவிடத்து என்பன அகரச்சாரியை பெற்றன. உண்டலும் என்பது துச்சாரியையும் அல்லுச்சாரியையும் பெற்றது.

உண்பானேல், உண்பானெனின், உண்பானாயின், உண்பானேனும் என, முற்றுவினைகள், ஏல், எனின், ஆயின், ஏனும் என்னும் நான்கனோடும் இயைந்து, ஒரு சொன்னீர்மைப்பட்டுச், செயின் என்னும் வாய்பாட்டு வினையெச்சங்களாய் வருமெனவும் அறிக.

௨௭௬. எதிர்மறைத்தெரிநிலைவினையெச்சங்கள் எதிர்மறை ஆகாரவிடைநிலையோடு உ, மல், மே, மை, மைக்கு, கால், கடை, வழி, இடத்து என்னும் விகுதிகளைப் பெற்று வருவனவாம்.

செய்யாது என்பது, செய்து, செய்பு, செய்யா, செய்யூ என்பனவற்றிற்கு, எதிர்மறையாம். செய்யாது என்பதிலே தகரம் எழுத்துப்பேறு. செய்யாது என்பது, செய்கலாது, செய்கிலாது என, அல் இல் என்னும் இடைநிலைகளை ஆகாரச்சாரியையோடு பெற்றும், வரும்.

செய்யாமல் என்பது, செய என்பதற்கு, எதிர்மறையாம்.

, செய்யாமல், செய்யாமே, செய்யாமை, செய்யாமைக்கு என்னும் நான்கும், செயற்கு, செய்யிய, செய்யியர் என்பனவற்றிற்கும், செயற்கு என்பது பட வருஞ் செயவெனெச்சத்திற்கும், எதிர்மறையாம்.

செய்யாக்கால், செய்யாக்கடை, செய்யாவழி, செய்யாவிடத்து என்னு நான்கும், செயின் என்பதற்கும், அப்பொருள்பட வருவனவாகிய செய்தால், செய்தக்கால், செய்தக்கடை, செய்தவழி, செய்தவிடத்து என்பனவற்றிற்கும், எதிர்மறையாம்.

(உதாரணம்.)

| விதிவினையெச்சம். | மறைவினையெச்சம். |
| --- | --- |
| உண்டுவந்தான் | உண்ணாது வந்தான். |
| மழைபெய்யப்பயிர்தழைத்தது | மழைபெய்யாமற் பயிர் வாடிற்று. |

இங்கே பெய்யாமல் என்பதற்குப்பெய்யாமையால் என்பது பொருள்.

| | |
| --- | --- |
| அவன் காண வந்தேன் | அவன் காணாமல் வந்தேன். |

இங்கே காணாமல் என்பதற்குக் காணாதிருக்க என்பது பொருள்.

| | |
| --- | --- |
| நீ வீடெய்தற்கு வணங்கு | நீ நரகெய்தாமல் வணங்கு. |
| | நீ நரகெய்தாமே வணங்கு. |
| | நீ நரகெய்தாமை வணங்கு. |
| | நீ நரகெய்தாமைக்கு வணங்கு. |

இங்கே எய்தாமல் என்பது முதலிய நான்கிற்கும் எய்தாதொழியும்பொருட்டு என்பது பொருள்.

யானுணற்கு விதித்தான்........யானுண்ணாமல் விதித்தான்.
யானுண்ணாமே விதித்தான்.
யானுண்ணாமை விதித்தான்.
யானுண்ணாமைக்கு விதித்தான்.
இங்கே உண்ணாமல் என்பது முதலிய நான்கிற்கும் உண்ணாதொழிதற்பொருட்டு என்பது பொருள்.

யானுண்ணின் மகிழ்வேன்... ...யானுண்ணாக்கான் மகி
யானுண்ணாக்கடை மகிழேன்.
யானுண்ணாவழி மகிழேன்.
யானுண்ணாவிடத்து மகிழேன்.
இங்கே உண்ணாக்கால் என்பது முதலிய நான்கிற்கும் உண்ணாதொழியின் என்பது பொருள்.

உண்ணிற் பசிதீரும்...............உண்ணாக்காற் பசி தீராது.
உண்ணாக்கடைப் பசி தீராது.
உண்ணாவழிப் பசி தீராது.
உண்ணாவிடத்துப் பசி தீராது.

௨௭௭. உடன்பாட்டுக் குறிப்புவினையெச்சங்கள், பண்படியாகத் தோன்றி அகரவிகுதியைப் பெற்று வருவனவாம்.

உ-ம். மெல்லப் பேசினான் சாலப்பல
பையநடந்தான் உறக்கரிது
வலியப் புகுந்தான். மாணப்பெரிது.

மெல்ல என்பது, ளவொற்றுமை பற்றி, மெள்ள வெனவும், வழங்கும்.

உஎஅ. எதிர்மறைக் குறிப்புவினையெச்சங்கள், அல் இல் என்னும் எதிர்மறைப் பண்படியாகத் தோன்றி, றி து மல் மே மை ஆல் கால் கடை வழி இடத்து என்னும் விகுதிகளைப் பெற்று வருவனவாம். உ-ம்.

| | | |
|---|---|---|
| றி— | அறமன்றிச் செய்தான் | அருளின்றிச்செய்தான். |
| து— | அறமல்லா தில்லை | அருளில்லாது செய்தான் |
| | அறமல்ல தில்லை | ——————— |
| மல்— | அறமல்லாமலில்லை | யானில்லாமல் வந்தான். |
| மே— | அறமல்லாமேயில்லை | யானில்லாமே வந்தான். |
| மை— | அறமல்லாமையில்லை | யானில்லாமைவந்தான். |
| ஆல்— | நீயல்லாலில்லை | ——— ——— |
| கால்— | அவனல்லாக்காலியார் | யானில்லாக்காலவருவான். |
| கடை— | அவனல்லாக்கடைநீயார் | யானில்லாக்கடைவருவான். |
| வழி— | அவனல்லாவழிநீயார் | யானில்லாவழிவருவான். |
| இடத்து— | அவனல்லாவிடத்துநீயார் | யானில்லாவிடத்து வருவான். |

இவ்வினையெச்சக்குறிப்புக்களில் வரும் ஆகாரமும் அகரமுஞ் சாரியை.

உஎகூ. வினையெச்சங்கள், இருதிணையைம்பான் மூவிடங்கட்கும் பொதுவாக, வரும். உ-ம்.

நடந்து—வந்தேன், வந்தேம்.
வந்தாய், வந்தீர்.
வந்தான், வந்தாள், வந்தார், வந்தது, வந்தன.

உஅ0. தன்கருத்தாவின் வினையையே கொள்ளுதற்குரிய வினையெச்சங்கள் சினைவினையாயின், அவை அச்சினைவினையைக் கொண்டு முடிதலுமன்றி, ஒற்றுமைபற்றி முதல் வினையையுங் கொண்டு முடியும். உ-ம்.

சாத்தன் காலொடிந்து வீழ்ந்தான், இங்கே ஒடிதல் சினை வினை; வீழ்தல் முதல்வினை; ஆதலின் ஒடிந்து என்னுஞ் சினைவினையெச்சம் வீழ்ந்தான் என்னும் முதல் வினை கொண்டு முடிந்தது.

காலொடிந்து வீழ்ந்தது. இங்கே ஒடிதலுஞ் சினைவினை; வீழ் தலுஞ் சினைவினை; ஆதலின் ஒடிந்து என்னுஞ் சினை வினையெச்சம் வீழ்ந்தது என்னுஞ் சினைவினை கொண்டு முடிந்தது.

மாடு காலொடிந்து வீழ்ந்தது. இங்கே வீழ்தல் மாட்டின் வினை யாதலிற் சினைவினையெச்சம் முதல்வினைகொண்டு முடிந்தது.

௨௮௧. பிறகருத்தாவின் வினையைக் கொள்ளும் வினை யெச்சங்கள், தன்கருத்தாவின் வினையைக் கொள்ளும் வினை யெச்சங்களாகத் திரிந்தும், வரும். திரியினும் அவற்றின் பொருள்கள் வேறுபடாவாம். உ-ம்.

ஞாயிறு பட்டு வந்தான். இங்கே பட என்னுஞ் செயவென் வாய்பாட்டு வினையெச்சம் பட்டு எனத் திரிந்து நின்றது.

மழை பெய்து நெல் விளைந்தது. இங்கே பெய்ய என்னுங் கார ணப்பொருட்டாகிய செயவென்வாய்பாட்டிறந்தகால வினையெச்சம் பெய்து எனத் திரிந்து நின்றது.

பரீக்ஷை வினாக்கள்.— ௨௭௦. வினையெச்சமாவது யாது? வினை யெச்சங் கொள்ளும் வினைச்சொற்களாவன எவை? ௨௭௧. வினையெச்ச விகுதிகளுள், எவ்விகுதிகள் காலங்காட்டும் இடைநிலையோடு கூடி வரும்? எவ்விகுதிகள் இடைநிலையின் றித் தாமே காலங் காட்டும்? ௨௭௨. தெரிநிலைவினையெச்சங் கள் எத்தனை வகைப்படும்? ௨௭௩, செய்து என்னும் வாய்

பாட்டு இறந்தகால வினையெச்சங்கள் எவை? இங்கே இறந்த காலமென்றது எதை? இச்செய்தென் வாய்பாட்டிறந்தகால வினையெச்சங்கள் இன்னும் எப்படி வரும்? செய்தென் வாய்பாட்டிறந்தகால வினையெச்சங்கள் வேறு விகுதிகளைப் பெற்றும் வருமோ? உளசு. செய வென்னும் வாய்பாட்டு முக்காலத்திற்குமுரிய வினையெச்சம் யாது? செயவென் வாய்பாட்டு வினையெச்சம், இறந்தகாலத்திலே எப்பொருளில் வந்து, எவ்வினையைக் கொண்டு முடியும்? காரணப்பொருளில் வருதலாவது என்னை? இச்செயவென் வாய்பாட்டிறந்தகாலவினையெச்சம் வேறு விகுதியைப் பெற்றும் வருமோ? செயவென் வாய்பாட்டு வினையெச்சம், எதிர்காலத்திலே எப்பொருளில் வந்து, எவ்வினையைக் கொண்டு முடியும்? காரியப்பொருளில் வருதலாவது என்னை? இச்செயவென் வாய்பாட்டெதிர்கால வினையெச்சம் வேறு விகுதியைப் பெற்றும் வருமோ? வேறெவைகள் உணற்கென்னும் பொருள்பட வரும்? செய்யுளிலே இச்செயவென் வாய்பாட்டெதிர்கால வினையெச்சம் வேறு விகுதிகளைப் பெற்றும் வருமோ? இவற்றுள், எவ்வெவ்விகுதி பெற்றவை எவ்வெவ்வினையைக்கொண்டு முடியும்? செயவென் வாய்பாட்டு வினையெச்சம், நிகழ்காலத்திலே எப்பொருள்பட வந்து, எவ்வினையைக்கொண்டு முடியும்? இங்கே நிகழ்காலமென்றது எதை? உளரு. செயினென்னும் வாய்பாட்டு எதிர்காலவினையெச்சங்கள் எவை? இவ்வினையெச்சம் எக்காலச் சொல்லே முடிக்குஞ் சொல்லாகக் கொள்ளும்? செயினென்னும் வாய்பாட்டு வினையெச்சங்களாய் வருவன பிறவும் உளவோ? உளசு. எதிர்மறைத் தெரிநிலை வினையெச்சங்கள் எவை? செய்யாது என்பது எவைகளுக்கு எதிர்மறை? செய்யாது என்பது இன்னும் எப்படி வரும்? செய்யாமல் என்பது எதற்கு எதிர்மறை? செய்யாமல், செய்யாமே, செய்யாமை, செய்யாமைக்கு என்று நான்கும் எவைகளுக்கு எதிர்மறை? செய்யாக்கால், செய்யாக்கடை, செய்யாவழி, செய்யா

விடத்து என்னு நான்கும் எவைகளுக்கு எதிர்மறை? உஎஎ. உடன்பாட்டுக் குறிப்புவினையெச்சங்கள் எவை? உஎஅ. எதிர்மறைக் குறிப்புவினையெச்சங்கள் எவை? உஎகூ. வினையெச்சங்கள் எவ்வாறு பொதுப்பட வரும்? உஅ0. தன்கருத்தாவின் வினையையே கொள்ளுதற்குரிய வினையெச்சங்கள் பிற கருத்தாவின் வினையைக் கொண்டு முடிதல் இல்லையோ? உஅக. பிறகருத்தாவின் வினையைக் கொள்ளும் வினையெச்சங்கள் தன் கருத்தாவின் வினையைக்கொள்ளும் வினையெச்சங்களாகத் திரிந்து வருதல் இல்லையோ?

---

## முற்றுவினை எச்சப்பொருளைத் தருதல்.

உஅஉ. தெரிநிலைவினைமுற்றுங் குறிப்புவினைமுற்றும், தமக்குரிய பயனிலை கொள்ளாது, வினையெச்சத்திற்குரிய பயனிலை கொள்ளுமிடத்து வினையெச்சப்பொருளையும், பெயரெச்சத்திற்குரிய பயனிலை கொள்ளுமிடத்துப் பெயரெச்சப் பொருளையுந் தரும். உ-ம்.

கண்டனன் வணங்கினான்; இங்கே கண்டனன் என்பது தெரிநிலைவினைமுற்று, கண்டு என வினையெச்சப்பொருளைத் தந்தது.

உண்டான் சாத்தனூர்க்குப்போயினான்; இங்கே உண்டான் என்னுந் தெரிநிலைவினைமுற்று, உண்ட எனப் பெயரெச்சப் பொருளைத் தந்தது.

உச்சிக் கூப்பிய கையினர் தற் புகழ்ந்து; இங்கே கையினர் என்னுங் குறிப்பு வினைமுற்று, கையையுடையவராகி என வினையெச்சப் பொருளைத் தந்தது.

வெந்திறலினன் விறல் வழுதியொடு; இங்கே திறலினன் என்னுங் குறிப்புவினைமுற்று, திறலினாகிய எனப்பெயரெச்சப் பொருளைத் தந்தது.

பரீக்ஷை வினா.—உ அ உ. வினைமுற்றுக்கள் எச்சப்பொருளைத் தருதல் இல்லையோ?

## இருவகைவினைக்குறிப்பு.

உ அ ௫. வினைக்குறிப்புச்சொற்கள்,
பும் இயற்கைவினைக்குறிப்பும் என, இருவகைப்படும்.

அவற்றுள், ஆக்கவினைக்குறிப்பாவது, காரணம்பற்றி வரும் வினைக்குறிப்பாம். அதற்கு ஆக்கச்சொல் விரிந்தாயினுந் தொக்காயினும் வரும்.

உ-ம். கல்வியாற் பெரியனுயினன். கல்வியாற்பெரியன்.
கற்றுவல்லராயினர். கற்று வல்லர்.

இயற்கைவினைக்குறிப்பாவது, காரணம் பற்றுது இயற்கையை உணர்த்தி வரும் வினைக்குறிப்பாம். அது ஆக்கச் சொல் வேண்டாதே வரும்.

உ-ம். நீர் தண்ணிது.
தீ வெய்து.

பரீக்ஷை வினுக்கள்.—உ அ ௫. வினைக்குறிப்புச் சொற்கள் இன்னும் எத்தனை வகைப்படும்? ஆக்கவினைக்குறிப்பாவது யாது? இயற்கை வினைக்குறிப்பாவது யாது?

## தெரிநிலைவினைப் பகுப்பு.

உ அ ௬. தெரிநிலைவினைச்சொற்கள், செயப்படுபொருள் குன்றிய வினை, செயப்படுபொருள் குன்றுதவினை. எ-ம். தன்வினை, பிறவினை. எ-ம். செய்வினை, செயப்பாட்டுவினை. எ-ம். வெவ்வேறுவகையிற் பிரிவுபட்டு, வழங்கும்.

உஅரு. செயப்படுபொருள் குன்றியவினையாவது, செயப்படுபொருளை வேண்டாது வரு முதனிலை அடியாகத் தோன்றிய வினையாம்.

உ-ம். நடந்தான், வந்தான், இருந்தான், உறங்கினான்.

இவை, இதை நடந்தான், இதை வந்தான் எனச் செயப்படுபொருளேற்று வாராமை காண்க.

உஅசு. செயப்படுபொருள் குன்றாத வினையாவது, செயப்படுபொருளை வேண்டி நிற்கு முதனிலை அடியாகத் தோன்றிய வினையாம்.

உ-ம். உண்டான், கொடுத்தான், கண்டான், படித்தான். இவை, சோற்றையுண்டான், பொருளைக்கொடுத்தான் எனச் செயப்படுபொருளேற்று, வருதல் காண்க.

உஅஎ. தன்வினையாவது, தன்னெழுவாய்க் கருத்தாவின்றொழிலை உணர்த்தி நிற்கும் முதனிலை அடியாகத் தோன்றிய வினையாம். இத்தன்வினை இயற்றுதற்கருத்தாவின் வினையெனப்படும்.

செயப்படுபொருள் குன்றிய முதனிலை, செயப்படுபொருள் குன்றாத முதனிலை என்னும் இருவகை முதனிலையும், தன்வினைக்கு முதனிலையாக, வரும்.

உ-ம். சாத்தனடந்தான், தச்சன் கோயிலைக் கட்டினான். இவைகளிலே, நடக்கையுங் கட்டலுமாகிய முதனிலைத்தொழில்கள் எழுவாய்க் கருத்தாவின்றொழிலாதல் காண்க.

உஅஅ. பிறவினையாவது, தன்னெழுவாய்க்கருத்தாவல்லாத பிறகருத்தாவின்றொழிலை உணர்த்தி நிற்கும் முத

னிலை அடியாகத் தோன்றிய வினையாம். இப்பிறவினை ஏவு தற்கருத்தாவின் வினையெனப்படும்.

செயப்படுபொருள் குன்றிய முதனிலை, செயப்படுபொருள் குன்றாத முதனிலை என்னும் இருவகை முதனிலைகளும், பிறவினை விகுதி பெற்றேனும், தாம் விகாரப்பட்டேனும், விகாரப்பட்டு விகுதி பெற்றேனும், பிறவினைப்பகுதிகளாய் வருதல், பதவியலிற் கூறப்பட்டது.

உ-ம். கொற்றனடப்பித்தான், அரசன் கோயிலைக் கட்டுவித்தான்.

இவைகளிலே, நடக்கையுங் கட்டுதலுமாகிய முதனிலைத்தொழில்கள், எழுவாய்க் கருத்தாவின் றொழிலாகாது பிற கருத்தாவின்றொழிலாதல் காண்க.

செயப்படுபொருள் குன்றிய முதனிலை அடியாகத் தோன்றிய பிறவினைகள், அம்முதனிலைக் கருத்தாவைத் தமக்குச் செயப்படுபொருளாகக் கொண்டு வரும்.

உ-ம். கொற்றன் சாத்தனை நடப்பித்தான்.

செயப்படுபொருள் குன்றாத முதனிலை அடியாகத் தோன்றிய பிறவினைகளுள்ளே, சில அம்முதனிலைக் கருத்தாவைத் தமக்குச்செயப்படுபொருளாகவும், சில தமக்கு மூன்றாம்வேற்றுமைக் கருத்தாவாகவுங் கொண்டு வரும்.

உ-ம். கொற்றன் சாத்தனைக் கடப்பித்தான்.
அரசன்றச்சனாற் கோயிலைக் கட்டுவித்தான்.

உ௪௧. தன்வினைக்கும் பிறவினைக்கும் பொதுவாய் நிற்கும் முதனிலைகளுஞ் சிலவுளவாம். உ-ம்.

| முதனிலை. | தன்வினை. | பிறவினை. |
| --- | --- | --- |
| அழி | யழி | காட்டையழி. |

| | | |
|---|---|---|
| கெடு — | நீ கெடு | அவன்குடியைக் கெடு. |
| | நீ யுடம்புவெளு | துணியை வெளு. |
| கரை | நீ கரை | புளியைக் கரை. |
| தேய் | நீ தேய் | கட்டையைத்தேய். |

இம்முதனிலைகளால் வினைச்சொற் பிறத்தல் வருமாறு:—

| | தன் | பிறவினை. |
|---|---|---|
| அழி — | ... | அழித்தான் |
| | அழிகின்முன் | அழிக்கின்முன் |
| | அழிவான் | அழிப்பான் |
| | கெட்டான் | கெடுத்தான் |
| | கெடுகின்முன் | கெடுக்கின்முன் |
| | கெடுவான் | கெடுப்பான் |
| வெளு — | வெளுத்தான் | |
| | வெளுக்கின்மு | வெளுக்கின்முன் |
| | வெளுப்பான் | வெளுப்பான் |
| கரை — | கரைந்தான் | கரைத்தான் |
| | கரைகின்முன் | கரைக்கின்முன் |
| | கரைவான் | கரைப்பான் |
| தேய் — | தேய்ந்தான் | தேய்த்தான் |
| | தேய்கின்முன் | தேய்க்கின்முன் |
| | தேய்வான் | தேய்ப்பான் |

உகூ0. டத்துப்

தொக்கும் வரும். உ-ம்.

அரசன் செய்த தேர்; லெ செய்வித்த என்னும் பிற வினை செய்த என விவ்விகுதி தொக்கு நின்றது.

கோழி கூவிப் பொழுது புலர்ந்தது; இதிலே கூவுவித்து என்னும் பிறவினை கூவி என விவ்விகுதி தொக்கு

உசுகக. செய்வினையாவது, படு விகுதி புணராத முதனிலை அடியாகத் தோன்றி, எழுவாய்க்கருத்தாவைக்கொண்டு வரும் வினையாம்.

உ-ம். சாத்த னடந்தான், நடப்பித்தான்.
சாத்தன் கட்டினன், கட்டுவித்தான்.

உசுஉ. செயப்பாட்டுவினையாவது, படு விகுதி புணர்ந்த முதனிலை அடியாகத்தோன்றி, வினைமுதல் மூன்றும்வேற்றுமையிலும், செயப்படுபொருள் எழுவாயிலும் வரப் பெறும்

பிறவினைமுதனிலைகளும், செயப்படுபொருள் குன்றாத தன்வினை முதனிலைகளும், படுவிகுதியோடும், இடையே அகரச்சாரியையேனும், குச்சாரியையும் அகரச்சாரியையுமேனும், பெற்றுச், செயப்பாட்டுவினை முதனிலைகளாக வரும்.

உ-ம். சாத்தனு லிம்மாடு நடப்பிக்கப்பட்டது.
கொற்றனு லிச்சோ றுண்ணப்பட்டது.

உசுங. செயப்பாட்டுவினை, ஒரோவிடத்துப் படுவிகுதி தொக்கும் வரும். உ-ம்.

"இல்வாழ்வானென்பான்;" இங்கே எனப்படுவான் என்னுஞ் செயப்பாட்டுவினை என்பான் எனப் படுவிகுதி தொக்கு நின்றது.

உண்டசோறு; இங்கே உண்ணப்பட்ட, என்னுஞ் செயப்பாட்டுவினை உண்ட எனப் படுவிகுதி தொக்கு

பரீக்ஷை வினுக்கள்.—உ அச. தெரிநிலைவினைச்சொற்கள் இன்னும் எவ்வெவ் வகையிற் பிரிவுபட்டு வழங்கும்? உ அரு. செயப்

படுபொருள் குன்றிய வினையாவது யாது? உகு௯. செயப்படுபொருள் குன்றாத வினையாவது யாது? உகு௭. தன்வினையாவது யாது? தன்வினைக்கு முதனிலையாக வருவன எவை? உகு௮. பிறவினையாவது யாது? பிறவினைக்கு முதனிலையாக வருவன எவை? செயப்படுபொருள் குன்றியமுதனிலை யடியாகத் தோன்றிய பிறவினைகள் எதனைத் தமக்குச் செயப்படுபொருளாகக் கொண்டு வரும்? செயப்படுபொருள் குன்றாத முதனிலை அடியாகத் தோன்றிய பிறவினைகள் அம்முதனிலைக் கருத்தாவை யாதாகக் கொண்டு வரும்? உகு௯. தன்வினைக்கும் பிறவினைக்கும் பொதுவாய் நிற்கும் முதனிலைகளும் உளவோ? உ௯0. பிறவினைகள் ஒரோவிடத்துப் பிறவினைவிகுதி தொக்கும் வருமோ? உ௯௧. செய்வினையாவது யாது? உ௯௨. செயப்பாட்டு வினையாவது யாது? எவ்வெம் முதனிலைகள் எவ்வெவ்வாறு செயப்பாட்டு வினைக்கு முதனிலைகளாக வரும்? உ௯௩. செயப்பாட்டுவினை ஒரோவிடத்துப் படுவிகுதி தொக்கும் வருமோ?

---

## வினையாலணையும்பெயர் விகாரப்படுதல்.

உ௯௪. வினையாலணையும் பெயர்கள், சிறுபான்மை இயல்பாகியும், பெரும்பாலும் விகாரப்பட்டும், வரும்.

உ-ம். நடந்தானை, குழையானை, குழையினானை. எ-ம். நடந்தோன், குழையோன், நடந்தவன், குழையவன். எ-ம்.

நடந்தன, குழையன. எ-ம். நடந்தவை, குழையவை. எ-ம். வரும்.

பரிசைக்ஷ வினா.—உ௯௪. வினையாலணையும் பெயர்கள் எங்ஙனம் வரும்?

வினையியல் முற்றிற்று.

## ௩. இடையியல்.

உ௬௫. இடைச்சொல்லாவது, பெயரும் வினையும் போலத் தனித்து நடக்கும் ஆற்றல் இல்லாததாய், அப்பெயரையும் வினையையுஞ் சார்ந்து வருஞ் சொல்லாம்.

பரீக்ஷை வினா.—உ௬௫. இடைச்சொல்லாவது யாது?

### இடைச்சொற்களின் வகை.

உ௬௬. இடைச்சொல்: (க) வேற்றுமையுருபுகளும், (உ) விகுதியுருபுகளும், (௩) இடைநிலையுருபுகளும், (௪) சாரியையுருபுகளும், (௫) உவமவுருபுகளும், (௬) பிறவாறு தத்தமக்குரிய பொருள்களை உணர்த்தி வருபவைகளும், (௭) ஒலி, அச்சம், விரைவு இவற்றைக் குறிப்பால் உணர்த்தி வருபவைகளும், (௮) இசைநிறையே பொருளாக வருபவைகளும், (௯) அசைநிலையே பொருளாக நிற்பவைகளும் என, ஒன்பது வகைப்படும்.

இவைகளுள், வேற்றுமையுருபுகள் பெயரியலினும், விகுதியுருபுகளும் இடைநிலையுருபுகளுஞ் சாரியையுருபுகளும் பதவியலினுஞ் சொல்லப்பட்டன.

இசைநிறை என்பது, வேறுபொருள் உணர்த்தாது செய்யுளில் ஓசையை நிறைத்து நிற்பது.

அசைநிலை என்பது, வேறு பொருள் உணர்த்தாது பெயர்ச்சொல்லோடும் வினைச்சொல்லோடுஞ் சார்த்திச் சொல்லப்பட்டு நிற்பது. அசைத்தல்—சார்த்துதல்.

பரீக்ஷை வினுக்கள்.—உகசு. இடைச்சொல் எத்தனை வகைப்படும்? இசைநிறையென்பது யாது? அசைநிலை யென்பது யாது?

## உவமவுருபிடைச்சொற்கள்.

உகள. உவமவுருபிடைச் சொற்களாவன, போல, புரைய, ஒப்ப, உறழ, மான, கடுப்ப, இயைய, ஏய்ப்ப, நேர, நிகர, பொருவ, அன்ன, அனைய முதலியனவாம்.

இவைகளுள்ளே, போல என்பது முதலிய பதினொன்றும், இடைச்சொல்லடியாகப் பிறந்த வினையெச்சவினைகள். அவைகளிலே, போல், புரை, ஒ, உறழ், மான், கடு, இயை, ஏய், நேர், நிகர், பொரு என்னு முதனிலைகளே இடைச்சொற்கள்.

அன்ன, அனைய என்பவைகள், இடைச்சொல்லடியாகப் பிறந்த பெயரெச்சவினைக் குறிப்புக்கள். அவைகளிலே, அ என்னு முதனிலையே இடைச்சொல். அன்ன என்பதில் னகர மெய் சாரியை; அனைய என்பதில் னகரமெய்யும் ஐகாரமுஞ் சாரியை.

பரீக்ஷை வினுக்கள்.—உகள. உவமவுருபிடைச்சொற்களாவன எவை? இவைகளுள்ளே, இடைச்சொல் அடியாகப் பிறந்த வினையெச்ச வினைகள் எவை? அவைகளிலே இடைச்சொற்கள் எவை? இடைச்சொல் அடியாகப் பிறந்த பெயரெச்ச வினைக்குறிப்புக்கள் எவை? அவைகளிலே எது இடைச்சொல்?

---

## தத்தம் பொருளை உணர்த்தும் இடைச்சொற்கள்.

உகஅ. பிறவாறு தத்தமக்குரிய பொருள்களை உணர்த்தி வருமென்ற இடைச்சொற்கள், ஏ, ஓ, உம் முதலியவைகளாம்.

உகூகூ. ஏகாரவிடைச்சொல் தேற்றமும், வினாவும், எண்ணும், பிரிநிலையும், எதிர்மறையும், இசைநிறையும், ஈற்றசையுமாகிய ஏழுபொருளையுந் தரும்.

தேற்றம்.——— உண்டேகடவுள். இங்கே உண்டென்பதற்கு ஐயமில்லை என்னுந் தெளிவுப் பொருளைத் தருதலாற் றேற்றம்.

வினா.——— நீயே கொண்டாய்.* இங்கே நீயா கொண்டாய் என்னும் பொருளைத் தருமிடத்து வினா.

எண்.——— நிலமே நீரே தீயே வளியே. இங்கே நிலமும் நீருந் தீயும் வளியும் எனப் பொருள் பட எண்ணி நிற்றலால் எண்.

பிரிநிலை.——— அவருளிவனே கள்வன். இங்கே ஒரு கூட்டத்தினின்றும் ஒருவனைப் பிரித்து நிற்றலாற் பிரிநிலை.

எதிர்மறை.——— நானே கொண்டேன். இங்கே நான் கொள்கிலேன் என்னும் பொருளைத் தருமிடத்து எதிர்மறை.

"ஏயே யிவளொருத்தி பேடியோ வென்றார்." இங்கே வேறு பொருளின்றிச் செய்யுளில் இசை நிறைத்து நிற்றலால் இசைநிறை.

ஈற்றசை. —"என்றுமேத்தித் தொழுவோ மியாமே." இங்கே வேறு பொருளின்றி இறுதியிலே சார்த்தப் பட்டு நிற்றலால் ஈற்றசை.

௩00. ஓகாரவிடைச்சொல், ஒழியிசையும், வினாவும், சிறப்பும், எதிர்மறையும், தெரிநிலையும், கழிவும், பிரிநிலையும், அசைநிலையுமாகிய எட்டுப்பொருளையுந் தரும்.

சிறப்பு உயர்வுசிறப்பும் இழிவுசிறப்பும் என இருவகைப் படும். உயர்வுசிறப்பு ஒருபொருளினது உயர்வைச் சிறப்பித்தல். இழிவுசிறப்பு ஒருபொருளினது இழிவைச் சிறப்பித்தல். இங்கே சிறப்பித்தல் என்றது, உயர்வேயாயினும் இழிவேயாயினும் அதனது மிகுதியை விளக்குதல்.

ஒழியிசை.——படிக்கவோ வந்தாய். இங்கே படித்தற்கன்று விளையாடுதற்கு வந்தாய் என ஒழிந்த சொற்களைத் தருதலால் ஒழியிசை.

வினா.——குற்றியோ மகனோ. இங்கே குற்றியா மகனா என வினாப்பொருளைத் தருதலால் வினா.

உயர்வுசிறப்பு—ஓஒ பெரியன். இங்கே ஒருவனது பெருமையாகிய உயர்வின் மிகுதியை விளக்குதலால் உயர்வுசிறப்பு.

இழிவுசிறப்பு.—ஓஒ கொடியன். இங்கே ஒருவனது கொடுமையாகிய இழிவின் மிகுதியை விளக்குதலால் இழிவுசிறப்பு.

எதிர்மறை.——அவனோ கொண்டான். இங்கே கொண்டிலன் என்னும் பொருளைத் தருமிடத்து எதிர்மறை.

தெரிநிலை.——ஆணோ அதுவுமன்று பெண்ணோ அதுவுமன்று. இங்கே அத்தன்மையில்லாமையைத் தெரிவித்து நிற்றலாற் றெரிநிலை.

கழிவு.——உறுதியுணராது கெட்டாரை ஓஒ தமக்கோருறுதி யுணராரோ என்னுமிடத்துக் கழிவிரக்கப் பொருளைத் தருதலாற் கழிவு. கழிவிரக்கம்—கழிந்ததற்கிரங்குதல்.

பிரிநிலை.——இவனோ கொண்டான். இங்கே பலருணின்றும் ஒருவனைப் பிரித்து நிற்குமிடத்துப் பிரிநிலை.

அசைநிலை.—"காணிய வம்மினோ." இங்கே வேறுபொருளின் றிச் சார்த்தப்பட்டு நிற்றலால் அசைநிலை.

௩௦௧. உம் என்னுமிடைச்சொல், எதிர்மறையும், சிறப்பும், ஐயமும், எச்சமும், முற்றும், எண்ணும், தெரி நிலையும், ஆக்கமுமாகிய எட்டுப்பொருளையுந் தரும்.

எச்சம், இறந்தது தழீஇய எச்சமும், எதிரது தழீஇய எச்சமும் என, இருவகைப்படும்.

உ - ம்.

எதிர்மறை.——களவு செய்யினும் பொய் கூறலை யொழிக. இங்கே களவு செய்யலாகாது என்னும் பொருளைத் தருதலால் எதிர்மறை.

உயர்வுசிறப்பு.—"குறவருமருளுங்குன்றம்." இங்கே குன்றினுயர்வைச் சிறப்பித்தலால் உயர்வுசிறப்பு.

இழிவுசிறப்பு.—"புலையனும் விரும்பாப் புன்புலால் யாக்கை." இங்கே உடம்பினிழிவைச் சிறப்பித்தலால் இழிவுசிறப்பு.

ஐயம்.——அவன் வெல்லினும் வெல்லும். இங்கே துணியாமையை உணர்த்தலால் ஐயம்.

எச்சம்.——சாத்தனும் வந்தான். இங்கே கொற்றன் வந்த தன்றி என்னும் பொருளைத் தந்தால் இறந்தது தழீஇயவெச்சம். இனிக் கொற்றனும் வருவான் என்னும் பொருளைத் தந்தால் எதிரது தழீஇயவெச்சம்.

முற்று.——எல்லாரும் வந்தார். இங்கே எஞ்சாப்பொருளைத் தருதலால் முற்று.

எண்.————இராவும் பகலும். இங்கே எண்ணுதற்கண் வருதலால் எண்.

தெரிநிலை.————ஆணுமன்று பெண்ணுமன்று. இங்கே இன்னதெனத் தெரிவித்து நிற்றலாற் றெரிநிலை.

ஆக்கம்.————பாலுமாயிற்று. இங்கே அதுவே மருந்துமாயிற்று என்னும் பொருளைத் தருதலால் ஆக்கம்.

௩0௨. எதிர்மறைவினை அடுத்து வருமிடத்து, முற்றும்மை எச்சவும்மையுமாம். உ-ம்.

எல்லாரும் வந்திலர்; அவர் பத்துங்கொடார்.

இங்கே, சிலர் வந்தார்; சில கொடுப்பார் எனவும் பொருள் படுதலால், எச்சவும்மையாயிற்று.

௩0௩. எச்சவும்மையாற் றழுவப்படும் பொருட் சொல்லில் உம்மை இல்லையாயின், அச்சொல் எச்சவும்மையோடு கூடிய சொற்கு முதலிலே சொல்லப்படும்.

உ-ம். சாத்தன் வந்தான்; கொற்றனும் வந்தான்.

இங்கே சாத்தன் எச்சவும்மையாற் றழுவப்படுபொருள்.

௩0௪. என, என்று என்னும் இரண்டிடைச்சொற்களும், வினையும், பெயரும், எண்ணும், பண்பும், குறிப்பும், இசையும், உவமையும் ஆகிய ஏழுபொருளினும் வரும். உ - ம்.

வினை.————மைந்தன் பிறந்தானெனத் தந்தையுவந்தான். இங்கே வினையோடியைந்தது.

பெயர்.————"அழுக்கா றெனவொரு பாவி." இங்கே பெயரோடியைந்தது.

எண். —நிலமென நீரெனத் தீயென வளியென வானெனப் பூதங்களைந்து. இங்கே எண்ணொடியைந்தது.

பண்பு.— —வெள்ளென விளர்த்தது. இங்கே பண்போடியைந்தது.

குறிப்பு. —"பொள்ளென வாங்கே புறம்வேரார்." இங்கே குறிப்போடியைந்தது.

இசை.— —"பொம்மென்ன வண்டலம்பும் புரிகுழலே." இங்கே இசையோடியைந்தது.

உவமை.— —"புலி பாய்ந்தெனப் பாய்ந்தான்." இங்கே உவமையோடியைந்தது.

என்று என்பதையும், இப்படியே இவைகளோடும் ஒட்டிக்கொள்க.

௩0௫. மேற்கூறிய ஏ, உம், என, என்று என்னு நான்கிடைச்சொற்களன்றியும், என்று, எனு, ஒடு என்னும் இம்மூன்றிடைச்சொற்களும் எண்ணுப்பொருளில் வரும்.

உ-ம். நிலனென்று நீரென்று தீயென்று.
நிலனெனு நீரெனுத் தீயெனு.
நிலனொடு நீரொடு தீயொடு.

௩0௬. பெயர்ச்செவ்வெண்ணும், எண்ணிடைச்சொற்கள் ஏழனுள்ளும், ஏ, என்று, எனு என்னு மூன்றும், தொகைச்சொற் பெற்று வரும். உம், என்று, என, ஒடு என்னு நான்கும், தொகைச்சொற் பெற்றும் பெறாதும், வரும்.

பெயர்ச்செவ்வெண்ணாவது, பெயர்களினிடத்தே எண்ணிடைச்சொற்குறைக்கு நிற்ப வருவது.

(உதாரணம்.)

செவ்வெண்.—சாத்தன் கொற்ற னிருவரும் வந்தார்.
ஏகாரவெண்.—சாத்தனே கொற்றனே யிருவரும் வந்தார்.
என்றுவெண்.—சாத்தனென்று கொற்றனென்று விருவரும் வந்தார்.

எனாவெண்.—சாத்தனெனாக் கொற்றனெனா விருவரும் வந்தார்.
உம்மையெண்.சாத்தனுங் கொற்றனு மிருவரும் வந்தார்.
என்றெண்.—சாத்தனென்று கொற்றனென் றிருவருளர்.
எனவெண்.—சாத்தனெனக் கொற்றனென விருவருளர்.
ஒடுவெண்.—சாத்தனொடு கொற்றனொ டிருவருளர்.
உம்மையெண்.சாத்தனுங் கொற்றனும் வந்தார்.
என்றெண்.—நிலனென்று நீரென்று தீயென்று காற்றென் றளவறு காயமென் றாகிய வுலகம்.
எனவெண்.—நிலனென நீரெனத் தீயெனக் காற்றென வளவறு காயமென வாகிய வுலகம்.
ஒடுவெண்.—நிலனொடு நீரொடு தீயொடு காற்றொடளவறுகாயமொ டாகிய வுலகம்.

௩௦எ. என்று, என, ஒடு என்னும் இம்மூன்றிடைச் சொற்களும், எண்ணப்படும் பொருடோறு நிற்றலேயன்றி, ஓரிடத்து நிற்கவும் பெறும்; அப்படி நிற்பினும், பிரிந்து மற்றைப்பொருடோறும் பொருந்தும். உ-ம்.

என்றெண்.—"வினைபகை யென்றிரண்டி னெச்ச நினையுங் காற்—றீயெச்சம் போலத் தெறும்."

இங்கே என்றென்பது, வினையென்று, பகை யென்று என நின்றவிடத்துப் பிரிந்து பிற வழியுஞ்சென்று பொருந்தியது.

எனவெண்.—"பகைபாவ மச்சம் பழியென நான்கு—மிக வாவா மில்லிறப்பான் கண்."

இங்கே எனவென்பது, பகையெனப் பாவமென அச்சமெனப் பழியென என்று நின்றவிடத்துப் பிரிந்து பிறவழியுஞ் சென்று பொருந்தியது.

ஒடுவெண்.——"பொருள்கருவி காலம் வினையிடனொடைந்து—மிருடீர வெண்ணிச் செயல்."

இங்கே ஒடுவென்பது, பொருளொடு கருவியொடு காலத்தொடு வினையொடு இடனொடு என நின்றவிடத்துப் பிரிந்து பிறவழியுஞ் சென்று பொருந்தியது.

௩0௭. வினையெச்சங்கள், எண்ணப்படுமிடத்து, ஏற்பனவாகிய எண்ணிடைச்சொல் விரியப்பெற்றும், தொகப்பெற்றும், ஓரிடத்து நின்று பிரிந்து கூடப்பெற்றும், வரும். அவை தொகைபெறுதலில்லை. உ-ம்.

உம்மையெண்.——கற்றுங் கேட்டுங் கற்பனை கடந்தான்.
என்றெண்.——உண்ணவென் றுடுக்கவென்று வந்தான்.
எனவெண்.——உண்ணவென வுடுக்கவென வந்தான்.
செவ்வெண்.——கற்றுக் கேட்டுக் கற்பனை கடந்தான்.
பிரிந்துகூடுமெண்.-உண்ண வுடுக்கவென்று வந்தான்.

௩0௮. அ, இ, உ என்னு மூன்றிடைச்சொற்களும் சுட்டுப்பொருளையும், எ, ஆ, யா என்னு மூன்றிடைச்சொற்களும் வினாப்பொருளையுந் தரும்.

உ-ம். அக்கொற்றன், இக்கொற்றன், உக்கொற்றன்.
எக்கொற்றன், கொற்றனா, யாவன்.

௩௧0. கொல் என்னும் இடைச்சொல், ஐயமும் அசைநிலையுமாகிய இரண்டு பொருளையுந் தரும். உ-ம்.

ஐயம்.——— இவ்வுருக் குற்றிகொன் மகன்சொல். இங்கே குற்றியோ மகனோ என்னும் பொருளைத் தருதலால் ஐயம்.

அசைநிலை.—"கற்றதனு லாய பயனென்கொல்." இங்கே வேறு பொருளின்றிச் சார்த்தப்பட்டு நிற்றலால் அசைநிலை.

௩௧௧. மற்று என்னும் இடைச்சொல், வினைமாற்றும், பிறிதும், அசைநிலையுமாகிய மூன்றுபொருளையுந் தரும்.

இங்கே வினைமாற்றென்றது கருதியதற்கு இனமாய மறுதலைவினை; பிறிதென்றது கருதியதற்கு இனமாகிய பிறிது.

(உ - ம்.)

வினைமாற்று.—"மற்றறிவா நல்வினை யாமிளைய மென்னாது." இங்கே கருதியவினையாவது நல்வினையை விரைந்தறிவாம் என்பது. அதற்கு இனமாகிய மறுதலைவினையாவது நல்வினையை விரையாதறிவாம் என்பது. மற்றென்றது, இங்கே, விரைந்தறிவாம் என்னும் வினையை ஒழித்து, விரையாதறிவாம் என்னும் மறுதலைவினையைத் தருதலால், வினைமாற்றுப் பொருளில் வந்தது.

பிறிது.—"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று." இங்கே கருதியதாவது ஊழொன்றென்பது அதற்கினமாகிய பிறிதாவது ஊழல்லதொன்றென்பது. மற்றென்பது, இங்கே, ஊழல்லதொன்றென்னும் பொருளைத் தருதலால், பிறிதென்னும் பொருளில் வந்தது.

அசைநிலை.—"மற்றென்னையாள்க." இங்கே வேறு பொருளின்றிச் சார்த்தப்பட்டு நிற்றலால் அசைநிலை.

* ௩௪௨. மன் என்னும் இடைச்சொல், ஒழியிசையும், ஆக்கமும், கழிவும், மிகுதியும், அசைநிலையுமாகிய ஐந்து பொருளையுந் தரும். உ-ம்.

ஒழியிசை.—"கூறியதோர் வாண்மன்." இங்கே இரும்பை அறத் துணித்தது என்னும் ஒழிந்த சொற்களைத் தருதலால் ஒழியிசை.

ஆக்கம்.——"பண்டு காடுமன்." இங்கே இன்று வயலாயிற்று என்னும் ஆக்கப்பொருளைத் தருதலால்

கழிவு.——"சிறியகட் பெறினே யெமக்கீயு மன்னே." இங்கே இப்பொழுது அவன் இறந்ததனால் எமக்குக் கொடுத்தல் கழிந்தது என்னும் பொருளைத் தருதலாற் கழிவு.

மிகுதி.—"எந்தை யெமக்கருளுமன்." இங்கே மிகுதியும் அருளுவன் என்னும் பொருளைத் தருதலால் மிகுதி.

அசைநிலை.—"அதுமற் கொண்கன்றேரே." இங்கே வேறு பொருளின்றிச் சார்த்தப்பட்டு நிற்றலால்

௩௪௩. கொன் என்னும் இடைச்சொல், அச்சமும், பயனின்மையும், காலமும், பெருமையும் ஆகிய நான்கு பொருளையுந் தரும். உ-ம்,

அச்சம்.——"கொன்வாளி." இங்கே அஞ்சும் வாளி என்னும் பொருளைத் தருதலால் அச்சம்.

பயனின்மை.-"கொன்னே கழிந்தன் றிளமை." இங்கே பயனின்றிக் கழிந்தது என்னும் பொருளைத் தருதலாற் பயனின்மை.

காலம்.——"கொன் வரல் வாடை." இங்கே காதலர் நீங்கிய காலம் அறிந்து வருதலையுடைய வாடை என்னும் பொருளைத் தருதலாற் காலம்.

பெருமை.—"கொன்னூர் துஞ்சினும்." இங்கே பெரிய ஊரு றங்கினும் என்னும் பொருளைத் தருதலாற் பெருமை.

௩௧௪. அந்தில் என்னும் இடைச்சொல், ஆங்கென்னும் இடமும், அசைநிலையுமாகிய இரண்டு பொருளையுந் தரும். உ-ம்.

ஆங்கு.——"வருமே-சேயிழை யந்திற் கொழுநற் காணிய." இங்கே அவ்விடத்து வரும் என்னும் பொருளைத் தருதலால் ஆங்கு.

அசைநிலை.—"அந்திற் கழலினன் கச்சினன்." இங்கே வேறு பொருளின்றிச் சார்த்தப்பட்டு நிற்றலால்

௩௧௫. மன்ற என்னும் இடைச்சொல், தெளிவுப்பொ தரும். உ-ம்.

தெளிவு.——"இரத்தலி னின்னாது மன்ற." இங்கே ஒருதலையாக என்னும் பொருளைத் தருதலாற்றெளிவு.

௩௧௬. அம்ம என்னும் இடைச்சொல், ஒன்றுசொல்வேன் கேள் என்னும் பொருளிலும், உரையசைப் பொருளிலும், வரும்.

உரையசை.—கட்டுரைக்கண் வரும் அசைநிலை.
ஒன்று சொல்வேன் கேள்,—"அம்ம வாழி தோழி"
உரையசை.—— ——--"அதுமற்றம்ம"

௩௧எ. ஆங்க என்னும் இடைச்சொல், உரையசைப் பொருளில் வரும். உ-ம்.

உரையசை.—"ஆங்கத்திறனல்ல யாங்கழற."

௩௧அ. ஆர் என்னும் இடைச்சொல், உயர்த்தற் பொருளிலும், அசைநிலைப் பொருளிலும் வரும்.

உயர்த்தற்பொருட்டு வரும்போது ஒருமைச்சொல்லீற்றில் வரும். அசைநிலையாகும்போது உம்மை முன்னும், உம்மீற்று வினைமுன்னும், வரும்.

(உதாரணம்.)

உயர்த்தற்பொருள்.—தொல்காப்பியனார் வந்தார்.
தந்தையார் வந்தார்.

அசைநிலை.——————"பெயரினாகிய தொகையுமா ருளவே." இங்கே ஆர் அசை நிலையாக உம்மை முன் வந்தது.

"எல்லா வுயிரொடுஞ் செல்லுமார் முதலே." இங்கே ஆர் அசைநிலையாக உம்மீற்றுவினைமுன் வந்தது.

௩௧௯. தொறும், தோறும் என்னும் இவ்விரண்டிடைச்சொற்களும், இடப்பன்மைப் பொருளையுந் தொழிற் பயில்வுப் பொருளையுந் தரும். உ-ம்.

இடப்பன்மை.——சோழநாட்டிலூர்தொறுஞ் சிவாலயம்.
தொழிற்பயில்வு.—படிக்குந் தொறு மறிவு வளரும்.

தோறும் என்பதையும் இப்படியே இவைகளோடும் ஒட்டிக்கொள்க.

௩௨௦. இனி என்னும் இடைச்சொல், காலவிடங்களின் எல்லைப்பொருளைத் தரும். உ-ம்.

காலவெல்லை.—இனி வருவேன்.
இடவெல்லை.—இனியெம்மூர்.

௩௨௧. முன், பின் என்னும் இடைச்சொற்கள், காலப்பொருளையும், இடப்பொருளையுந் தந்து, ஏழாம்வேற்றுமைப் பொருள்பட வரும். உ-ம்.

காலம்.—முன் பிறந்தான். பின் பிறந்தான்.
இடம்.—முன்னிருந்தான். பின்னிருந்தான்.

முன், பின் என்பவைகள், முன்பு, பின்பு. எ-ம். முன்னை, பின்னை. எ-ம். முன்னர், பின்னர். எ-ம். விகாரப்பட்டும், வழங்கும்.

௩௨௨. வாளா, சும்மா என்னும் இடைச்சொற்கள், பயனின்மைப் பொருளைத் தரும்.

உ-ம். வாளாவிருந்தான். சும்மா வந்தான்.

௩௨௩. ஆவது, ஆதல், ஆயினும், தான் என்னும் இடைச்சொற்கள் விகற்பப்பொருளைத் தரும்.

விகற்பமாவது, அது அல்லது இது என்னும் பொருள்பட வருவது.

(உதாரணம்.)

ஆவது.——தேவாரமாவது திருவாசகமாவது தொண்டுவா.
ஆதல்.——சோறுதல் கூழாதல் கொடு.
ஆயினும்.—வீட்டிலாயினும் கோயிலிலாயினும் இருப்பேன்.
தான்.——பொன்னைத்தான் வெள்ளியைத்தான் கொடுத்தானு

ஙஉச. அந்தோ, அன்னோ, ஐயோ, அச்சோ, அஆ, ஆஅ, ஓஓ, என்றாற்போல வருவன, இரக்கப்பொருளைத் தரும் இடைச்சொற்களாம்.

ஙஉரு. சீ, சீசீ, சிச்சீ, சை என்றாற்போல வருவன, இகழ்ச்சிப்பொருளைத் தரும் இடைச்சொற்களாம்.

ஙஉசு. கூ, கூகூ, ஐயோ, ஐயையோ என்றாற்போல வருவன, அச்சப்பொருளைத் தரும் இடைச்சொற்களாம்.

ஙஉஎ. ஆஅ, ஆகா, ஓஓ, ஓகோ, அம்மா, அம்மம்மா, அச்சோ என்றாற்போல வருவன, அதிசயப்பொருளைத் தரும் இடைச்சொற்களாம்.

பரீக்ஷை வினாக்கள்.—உகூஅ. பிறவாறு தத்தமக்குரிய பொருள்களை உணர்த்தி வருமென்ற இடைச்சொற்கள் எவை? உகூகூ. ஏகாரவிடைச்சொல் எவ்வெப்பொருளைத் தரும்? ஙoo. ஓகாரவிடைச்சொல் எவ்வெப்பொருளைத் தரும்? சிறப்பு எத்தனை வகைப்படும்? உயர்வுசிறப்பாவது யாது? இழிவுசிறப்பாவது யாது? இங்கே சிறப்பித்தலென்றது என்னை? ஙoக. உம் என்னும் இடைச்சொல் எவ்வெப்பொருளைத் தரும்? எச்சம் எத்தனை வகைப்படும்? ஙoஉ. ஒருபொருளில் வரும் உம்மை மற்றொருபொருளையுந் தருமோ? ஙoங. எச்சவும்மையாற் றழுவப்படும் பொருட்சொல்லில் உம்மை இல்லையாயின், அச்சொல் எச்சவும்மையோடு கூடிய சொற்கு முதலிலே சொல்லப்படுமோ ஈற்றிலே சொல்லப்படுமோ? ஙoச. என, என்று என்னும் இரண்டிடைச்சொற்களும் எவ்வெப்பொருளைத் தரும்? ஙoரு. எண்ணுப்பொருளில் வரும் இடைச்சொற்கள் எவை? ஙoசு. எவ்வெவ்வெண்கள் தொகைச்சொற் பெற்று வரும்? எவ்வெவ்வெண்கள் தொகைச்சொற்

பெற்றும் பெறாதும் வரும்? பெயர்ச்செவ்வெண்ணாவது யாது? ௱௦௭. எண்ணிடைச்சொற்கள் எண்ணப்படும் பொருடோறும் நிற்கவே பெறுமோ? ௱௦௮. வினை, எண்ணப்படுமிடத்து, எண்ணிடைச்சொற் பெறுதோ? ௱௦௯. அ, இ, உ. எ-ம். எ, ஆ, யா. எ-ம். வரும் இடைச்சொற்கள் எவ்வெப்பொருளைத் தரும்? ௱௧௦. கொல் என்னும் இடைச்சொல் எவ்வெப் பொருளைத் தரும்? ௱௧௧. மற்று என்னும் இடைச்சொல் எவ்வெப்பொருளைத் தரும்? இங்கே வினைமாற்றென்றது என்னை? பிறிதென்றது என்னை? ௱௧௨. மன் என்னும் இடைச்சொல் எவ்வெப்பொருளைத் தரும்? ௱௧௩. கொன் என்னும் இடைச்சொல் எவ்வெப்பொருளைத் தரும்? ௱௧௪. அந்தில் என்னும் இடைச்சொல் எவ்வெப்பொருளைத் தரும்? ௱௧௫. மன்ற என்னும் இடைச்சொல் எப்பொருளைத் தரும்? ௱௧௬. அம்ம என்னும் இடைச்சொல் எவ்வெப்பொருளில் வரும்? ௱௧௭. ஆங்க என்னும் இடைச்சொல் எப்பொருளில் வரும்? ௱௧௮. ஆர் என்னும் இடைச்சொல் எவ்வெப்பொருளில் வரும்? இது உயர்த்தற்பொருட்டு வரும்போது எவ்விடத்து வரும்? அசைநிலையாகும்போது எவ்வெவ்விடத்து 'வரும்? ௱௧௯. தொறும், தோறும் என்னும் இரண்டிடைச்சொற்களும் எவ்வெப்பொருளைத் தரும்? ௱௨௦. இனி என்னும் இடைச்சொல் எப்பொருளைத் தரும்? ௱௨௧. முன் பின் என்னும் இடைச்சொற்கள் எவ்வெப்பொருளைத் தரும்? ௱௨௨. வாளா, சும்மா என்னும் இடைச்சொற்கள் எப்பொருளைத் தரும்? ௱௨௩. ஆவது, ஆதல், ஆயினும், தான் என்னும் இடைச்சொற்கள் எப்பொருளைத் தரும்? விகற்பமாவது என்னை? ௱௨௪. இரக்கப்பொருளைத் தரும் இடைச்சொற்கள் எவை? ௱௨௫. இகழ்ச்சிப்பொருளைத் தரும் இடைச்சொற்கள் எவை? ௱௨௬. அச்சப்பொருளைத் தரும் இடைச்சொற்கள் எவை? ௱௨௭. அதிசயப்பொருளைத் தரும் இடைச்சொற்கள் எவை?

## குறிப்பின் வரும் இடைச்சொற்கள்.

௩௨௮. அம்மென, இம்மென, கோவென, சோவென, துடுமென, ஒல்லென, கஃறென, சுஃறென. எ-ம். கடகடென, களகளென, திடுதிடென, நெறுநெறென, படபடென. எ-ம். வருவன, ஒலிக்குறிப்புப்பொருளைத் தரும் இடைச்சொற்களாம்.

௩௨௯. துண்ணென, துணுக்கென, திட்கென, திடுக்கென என்றாற்போல்வன, அச்சக்குறிப்புப் பொருளைத் தரும் இடைச்சொற்களாம்.

௩௩௦. பொள்ளென, பொருக்கென, கதுமென, ஞரேலென, சரேலென என்றாற்போல்வன, விரைவுக் குறிப்புப் பொருளைத் தரும் இடைச்சொற்களாம்.

**பரீக்ஷை வினாக்கள்.**—௩௨௮. ஒலிக்குறிப்புப் பொருளைத் தரும் இடைச்சொற்கள் எவை? ௩௨௯. அச்சக் குறிப்புப் பொருளைத் தரும் இடைச்சொற்கள் எவை? ௩௩௦. விரைவுக்குறிப்புப்பொருளைத் தரும் இடைச்சொற்கள் எவை?

## இசைநிறை.

௩௩௧. ஒடு, தெய்ய என்பன, இசைநிறையிடைச் சொற்களாம்.

**பரீக்ஷை வினா.**—௩௩௧. இசைநிறையிடைச்சொற்கள் எவை?

---

## அசைநிலை.

௩௩௨. மா என்பது, வியங்கோளைச் சார்ந்துவரும் அசைநிலையிடைச்சொல்லாம்.

கககூ. மியா, இக, மோ, மதி, அத்தை, இத்தை, வாழிய, மாள, ஈ, யாழ என்னும் பத்தும், முன்னிலை மொழியைச் சார்ந்து வரும் அசைநிலையிடைச் சொற்களாம்.

கககச. யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது, இகும், சின், குரை, ஓரும், போலும், அன்று, ஆம், தாம், தான், இசின், ஐ, ஆல், என், என்ப என்னும் இருபத்தொன்றும், மூவிடத்தும் வரும் அசைநிலையிடைச்சொற்களாம்.

பரீக்ஷை வினாக்கள்.—ககஉ. வியங்கோளைச் சார்ந்து வரும் அசைநிலையிடைச்சொல் எது? கககூ. முன்னிலைமொழியைச் சார்ந்து வரும் அசைநிலையிடைச்சொற்கள் எவை? கககச. மூவிடத்தும் வரும் அசைநிலையிடைச்சொற்கள் எவை?

இடையியன்முற்றிற்று.

## ௪. உரியியல்.

ககரு. உரிச்சொல்லாவது, பொருட்கு உரிமைபூண்டு நிற்கும் பண்பை உணர்த்துஞ் சொல்லாம்.

ககசு. உலகத்துப் பொருள் உயிர்ப்பொருளும், உயிரல்பொருளும் என இருவகைப்படும்.

ககஎ. இப்பொருள்களுக்குரிய பண்பு, குணப்பண்புந் தொழிற்பண்பும் என, இருவகைப்படும்.

ககஅ. உயிர்ப்பொருள்களின் குணப்பண்புகளாவன: அறிவு, அச்சம், மானம், பொறுமை, மயக்கம், விருப்பு, வெறுப்பு, இரக்கம், நன்மை, தீமை முதலியனவாம்.

௩௩௯. உயிர்ப்பொருள்களின் றொழிற்பண்புகளாவன: உண்ணல், உடுத்தல், உறங்கல், அணிதல், தொழுதல், நடத்தல், ஆக்கல், காத்தல், அழித்தல் முதலியனவாம்.

௩௪௦. உயிரல்பொருள்களின் குணப்பண்புகளாவன: பல்வகை வடிவங்களும், இருவகை நாற்றங்களும், ஐவகை நிறங்களும், அறுவகைச் சுவைகளும், எண்வகைப் பரிசங்களுமாம்.

பல்வகைவடிவங்களாவன: வட்டம், இருகோணம், முக்கோணம், சதுரமுதலியன.

இருவகை நாற்றங்களாவன: நறுநாற்றம், தீநாற்றம் என்பவைகளாம்.

ஐவகைநிறங்களாவன: வெண்மை, செம்மை, கருமை, பொன்மை, பசுமை என்பவைகளாம்.

அறுவகைச் சுவைகளாவன: கைப்பு, புளிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, கார்ப்பு, இனிப்பு என்பவைகளாம்.

எண்வகைப் பரிசங்களாவன: வெம்மை, தண்மை, மென்மை, வன்மை, நொய்மை, சீர்மை, இழுமெனல், சருச்சரை என்பவைகளாம்.

௩௪௧. உயிர்ப்பொருள், உயிரல்பொருள் என்னும் இருவகைப் பொருள்களுக்கும் உரிய தொழிற்பண்புகளாவன: தோன்றல், மறைதல், வளர்தல், சுருங்கல், நீங்கல், அடைதல், நடுங்கல், ஒலித்தல் முதலியவைகளாம்.

௩௪௨. மேற்கூறிய குணப்பண்பும், உண், உறங்கு முதலிய முதனிலையளவிற் பெறப்படுந் தொழிற்பண்பும்,

ஆகிய பொருட்பண்பை உணர்த்துஞ் சொற்கள் உரிச்சொற்கள் எனப்படும். தொழிற்பண்பின்காரியமாகிய பொருட்புடைபெயர்ச்சியை உணர்த்துஞ் சொற்கள் வினைச்சொற்கள் எனப்படும். பண்புந்தொழிலும் பொருளெனவும்படும். ஆதலால், அவைகளை உணர்த்தும் உரிச்சொற்களும் ஒரோவிடத்துப் பெயர்ச்சொற்கள் எனப்படும்.

௩௪௩. இவ்வுரிச்சொற்கள், ஒருகுணத்தையும் பல குணத்தையும் உணர்த்தி, வரும்.

௩௪௪. சால், உறு, தவ, நனி, கூர், கழி என்பன, மிகுதி என்னும் ஒருகுணத்தை உணர்த்தும் உரிச்சொற்களாம். உ-ம்.

சால்.—"தென்மலை யிருந்த சீர்சான் முனிவரன்."
உறு.—"உறுபுனறந் தலகூட்டி."
தவ.—"ஈயாது வீயு முயிர் தவப்பலவே."
நனி.—"வந்து நனி வருந்தினை வாழிய நெஞ்சே."
கூர்.—"துனிகூ ரெவ்வமொடு."
கழி.—"கழிகண் ணோட்டம்."

௩௪௫. செழுமை என்பது, வளனுங் கொழுப்பும் என்னும் இருகுணத்தை உணர்த்தும் உரிச்சொல்லாம். உ-ம்.

வளம்.—"செழும் பல் குன்றம்."
கொழுப்பு.—"செழுந் தடிதின்ற செந்நாய்."

இவ்வாறே ஒருகுணத்தையும் பல குணத்தையும் உணர்த்தி வரும் உரிச்சொற்களெல்லாவற்றையும் நிகண்டு வாயிலாக அறிந்து கொள்க.

பரீக்ஷை வினாக்கள்.—கக௫. உரிச்சொல்லாவது யாது? ககச. உலகத்துப் பொருள் எத்தனை வகைப்படும்? ககஎ. இப்பொருள்களுக்குரிய பண்பு எத்தனை வகைப்படும்? ககஅ. உயிர்ப்பொருள்களின் குணப்பண்புகள் எவை? ககக. உயிர்ப்பொருள்களின்றொழிற்பண்புகள் எவை? கஉ0. உயிரல்பொருள்களின் குணப்பண்புகள் எவை? பல்வகை வடிவங்களாவன எவை? இருவகை நாற்றங்களாவன எவை? ஐவகை நிறங்களாவன எவை? அறுவகைச் சுவைகளாவன எவை? எண்வகைப் பரிசங்களாவன எவை? கஉக. உயிர்ப்பொருள், உயிரல்பொருள் என்னும் இருவகைப் பொருள்களுக்குமுரிய தொழிற்பண்புகள் எவை? கஉஉ. தொழிற்சொல்லை மேலே வினைச்சொல்லென்றும் இங்கே உரிச்சொல்லென்றுஞ் சொல்லியது என்னை? கஉஙு. இவ்வுரிச்சொற்கள் பொருட்குணங்களை எவ்வாறு உணர்த்தி வரும்? கஉச. ஒருகுணத்தை உணர்த்தும் உரிச்சொற்கள் எவை? கஉ௫. பலகுணங்களை உணர்த்தும் உரிச்சொல் எது?

உரியியன்முற்றிற்று.

சொல்லதிகாரமுற்றுப்பெற்றது.

மூன்றாவது

# தொடர்மொழியதிகாரம்.

## க. தொகைநிலைத்தொடரியல்.

௩௪௫. தொடர்மொழியாவது, ஒன்றோடொன்று பொருள் படத் தொடர்ந்து நிற்கும் இரண்டு முதலிய சொற்களினது கூட்டமாம்.

௩௪௬. சொல்லோடு சொற்றொடருந் தொடர்ச்சி, தொகைநிலைத்தொடர், தொகாநிலைத்தொடர் என இருவகைப்படும்.

௩௪௭. தொகைநிலைத்தொடராவது, வேற்றுமையுருபு முதலிய உருபுகள் நடுவே கெட்டு நிற்ப, இரண்டு முதலிய சொற்கள் ஒருசொற்றன்மைப்பட்டுத் தொடர்வதாம்.

ஒருசொற்றன்மைப்படுதலாவது பிளவு படாது நிற்றல்.

பரீக்ஷை வினாக்கள்.—௩௪௫. தொடர்மொழியாவது யாது? ௩௪௬. சொல்லோடு சொற்றொடருந் தொடர்ச்சி எத்தனை வகைப்படும்? ௩௪௭. தொகை நிலைத்தொடராவது யாது?

### தொகைநிலைத்தொடர்ப்பாகுபாடு.

௩௪௮. அத்தொகைநிலைத்தொடர் வேற்றுமைத்தொகை, வினைத்தொகை, பண்புத்தொகை, உவமைத்தொகை, உம்

மைத்தொகை, அன்மொழித்தொகை என, அறுவகைப் படும்.

பரீக்ஷை வினா.—கஎசக. தொகைநிலைத்தொடர் எத்தனைவகைப்படும்?

## வேற்றுமைத்தொகை.

கஎ0. வேற்றுமைத்தொகையாவது, ஐ முதலிய ஆறு வேற்றுமையுருபும் இடையிலே கெட்டு நிற்கப், பெயரோடு பெயரும் பெயரோடு வினை வினைக்குறிப்புப் பெயர்களுந் தொடர்வதாம். உ-ம்.

நிலங்கடந்தான்——இரண்டாம் வேற்றுமைத்தொகை.

தலைவணங்கினவன்-மூன்றும் வேற்றுமைத்தொகை.

சாத்தன்மகன்——நான்காம் வேற்றுமைத்தொகை.

ஊர்நீங்கினவன் ——ஐந்தாம் வேற்றுமைத்தொகை.

சாத்தன்கை———ஆறும் வேற்றுமைத்தொகை.

குன்றக்கூகை———ஏழாம் வேற்றுமைத்தொகை.

கையையுடைய களிறு என்பது கைக்களிறு எனவும், பொன்னாற்செய்த குடம் என்பது பொற்குடம் எனவும், வருவன, உருபும் பொருளும் ஒருங்கு கெட்ட வேற்றுமைத்தொகை எனக் கொள்க.

கஎக. ஐயுருபுங் கண்ணுருபும், தொடர்மொழியின் இடையிலன்றி, இறுதியிலும் கெட்டு நிற்கும். உ-ம்.

கடந்தானிலம்——— ஐயுருபு தொக்கது.

இருந்தான்மாடத்து—கண்ணுருபு தொக்கது.

இவ்வாறு வருவனவெல்லாம், உருபு கெட்டு நிற்கினும் ஒரு சொற்றன்மைப் படாது பிளவுபட்டு நிற்றலினாலே, தொகாநிலைத் தொடரெனவே, கொள்ளப்படும்.

௬௫௨. வேற்றுமையுருபுகள், விரிந்து நிற்குமிடத்து எப்பொருள் படுமோ அப்பொருள் படுமிடத்தே, தொக்கு நிற்கப் பெறும்; அப்பொருள் படாவிடத்தே தொக்கு நிற்கப் பெறுவாம். உ-ம்.

சாத்தனை யடித்தான் என ஐயுருபு விரிந்து நிற்குமிடத்துச் செயப்படுபொருள் படுதல்போலச் சாத்தனடித்தான் என ஐயுருபு தொக்கு நிற்குமிடத்து அப்பொருள் படாமையால், இங்கே ஐயுருபு தொக்கு நிற்கப்பெறுதென்றறிக.

சாத்தனொடு வந்தான் என ஒடுவுருபு விரிந்து நிற்குமிடத்து உடனிகழ்ச்சிப்பொருள் படுதல்போலச் சாத்தன் வந்தான் எனத் தொக்கு நிற்குமிடத்து அப்பொருள் படாமையால், இங்கே ஒடுவுருபு தொக்கு நிற்கப்பெறுதென்றறிக.

பரீக்ஷை வினாக்கள்.—௬௫௦. வேற்றுமைத்தொகையாவது யாது? ௬௫௧. தொடர்மொழியின் இடையிலன்றி, இறுதியினுங் கெட்டு நிற்கும் உருபுகள் உளவோ? ௬௫௨. வேற்றுமையுருபுகள் எவ்விடத்துத் தொகப்பெறுமோ?

---

## வினைத்தொகை.

௬௫௩. வினைத்தொகையாவது, பெயரெச்சத்தின் விகுதியுங் காலங்காட்டும் இடைநிலையுங் கெட்டு நிற்க, அதன் முதனிலையோடு பெயர்ச்சொற் றொடர்வதாம். உ-ம்.

| | |
|---|---|
| நேற்றுக் கொல் களிறு<br>முன் விடு கணை | இறந்தகாலவினைத்தொகை. |
| இன்று கொல் களிறு<br>இப்பொழுது விடுகணை | நிகழ்காலவினைத்தொகை. |
| நாளைக் கொல் களிறு<br>பின் விடு கணை | எதிர்காலவினைத்தொகை. |

இவை, விரியுமிடத்துக், கொன்ற, கொல்கின்ற, கொல்லும். எ-ம். விட்ட, விடுகின்ற, விடும். எ-ம். விரியும் எனக் கொள்க.

கொல்களிறு, விடுகணை என்றாற்போல்வன, முக்காலமும் பற்றி வரின், முக்காலவினைத்தொகை எனப்படும்.

வருபுனல், தருசுடர், நடந்திடுதிரை என வினைப்பகுதி விகாரப்பட்டும் வினைத்தொகை வரும்.

பரீக்ஷை வினாக்கள்.—கஙக. வினைத்தொகையாவது யாது? கொல்களிறு முதலியன, முக்காலமும் பற்றி வரின் எவ்வாறு பெயர் பெறும்? வினைப்பகுதி விகாரப்பட்டும் வினைத் தொகை வருமோ?

## பண்புத்தொகை.

கஙச. பண்புத்தொகையாவது, ஆகிய என்னும் உருபு கெட்டு நிற்கப், பண்புப்பெயரோடு பண்பிப்பெயர் தொடர்வதாம்.

பண்பு, வண்ணம், வடிவு, அளவு, சுவை, முதலியனவாம்.

ஆகிய என்பது, பண்புக்கும் பண்பிக்கும் உளதாகிய ஒற்றுமையை விளக்குவதோரிடைச்சொல்.

(உதாரணம்.)

| | |
|---|---|
| செந்தாமரை<br>கருங்குதிரை | வண்ணப்பண்புத்தொகை. |
| வட்டக்கல்<br>சதுரப்பலகை | வடிவுப்பண்புத்தொகை. |
| ஒருபொருள்<br>முக்குணம் | அளவுப்பண்புத்தொகை. |
| துவர்க்காய்<br>இன்சொல் | சுவைப்பண்புத்தொகை. |

இவை, விரியுமிடத்துச், செம்மையாகிய தாமரை, வட்டமாகிய கல், ஒன்றாகிய பொருள், துவர்ப்பாகிய காய் என, விரியும்.

இருபெயரொட்டுப்பண்புத்தொகையாவது, ஆகிய என்னும் பண்புருபு கெட்டு நிற்கப், பொதுப்பெயரோடு சிறப்புப் பெயராயினுஞ் சிறப்புப்பெயரோடு பொதுப்பெயராயினும் ஒருபொருண்மேல் வந்து தொடர்வதாம். உ-ம்.

ஆயன் சாத்தன்—பொதுப்பெயரோடு சிறப்புப்பெயர்.
சாரைப்பாம்பு—சிறப்புப்பெயரோடு பொதுப்பெயர்.

இவை, விரியுமிடத்து, ஆயனாகிய சாத்தன். சாரையாகிய பாம்பு என, விரியும். ஆயன் சாரை என்பன பண்பல்லவாயினும், பண்பு தொக்க தொகைபோல விசேடிப்பதும் விசேடிக்கப்படுவதுமாகிய இயைபுபற்றி, இவை போல்வனவும் பண்புத்தொகை எனப்பட்டன.

பரீக்ஷை வினாக்கள்.—௩௬௪. பண்புத்தொகையாவது யாது? பண்பென்பன எவை? ஆகிய என்பது என்ன சொல்? இருபெயரொட்டுப் பண்புத்தொகையாவது யாது?

## உவமைத்தொகை.

ஙருரு. உவமைத்தொகையாவது, போல முதலிய உவமவுருபு கெட்டு நிற்க, உவமானச்சொல்லோடு உவமேயச் சொற்றொடர்வதாம்.

இவ்வுவமை, வினை, பயன், மெய், உரு என்பன பற்றி வரும்.

(உதாரணம்.)

புலிக்கொற்றன்—வினையுவமைத்தொகை.
மழைக்கை———பயனுவமைத்தொகை.
துடியிடை———மெய்யுவமைத்தொகை.
பவளவாய்———உருவுவமைத்தொகை.

இவை, விரியுமிடத்துப், புலிபோலுங் கொற்றன், மழைபோலுங் கை, துடிபோலு மிடை, பவளம்போலும் வாய் என விரியும்.

பரீக்ஷை வினாக்கள்.—ஙருரு. உவமைத்தொகையாவது யாது? இவ்வுவமை எவை பற்றி வரும்?

## உம்மைத்தொகை.

ஙருசு. உம்மைத்தொகையாவது, எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என்னும் நால்வகையளவைகளாற் பொருள்களை அளக்குமிடத்து, எண்ணும்மை இடையிலும் இறுதியிலுங் கெட்டு நிற்கப், பெயரோடு பெயர் தொடர்வதாம். உ-ம்.

இராப்பகல்
ஒன்றேகால் } எண்ணலளவையும்மைத்தொகை.

| | |
|---|---|
| கழஞ்சேகால்<br>தொடியேகஃசு | } எடுத்தலளவையும்மைத்தொகை. |
| கலனே தூணி<br>நாழியாழாக்கு | } முகத்தலளவையும்மைத்தொகை. |
| சாணரை<br>சாணங்குலம் | } நீட்டலளவையும்மைத்தொகை. |

இவை, விரியுமிடத்து, இராவும் பகலும், ஒன்றுங் காலும், கழஞ்சுங் காலும், கலனுந் தூணியும், சாணுமரையும் என, விரியும்.

௩௫௭. உயர்திணையொருமைப்பாலில் வரும் உம்மைத் தொகைகள், ரகரமெய்யுங் கள்விகுதியுமாகிய பலர்பால் விகுதியையுடையனவாய், வரும்.

உ-ம். சேரசோழபாண்டியர்.
தேவன்றேவிகள்.

அஃறிணையொருமைப்பாலிலும் பொதுத்திணையொருமைப்பாலிலும் வரும் உம்மைத்தொகைகள், பன்மை விகுதி பெறாதும், பெற்றும், வரும்.

| | |
|---|---|
| உ-ம். நன்மை தீமை; | நன்மை தீமைகள். |
| தந்தை தாய்; | தந்தை தாய்கள். |

**பரீக்ஷை வினாக்கள்.**—௩௫௬. உம்மைத்தொகையாவது யாது?
௩௫௭. உயர்திணையொருமையில் வரும் உம்மைத்தொகைகள், ஒருமை விகுதியோடு நிற்குமோ பலர்பால் விகுதி பெறுமோ? அஃறிணையொருமைப்பாலிலும் பொதுத்திணையொருமைப் பாலிலும் வரும் உம்மைத்தொகைகள் பன்மை விகுதி பெற்று வாராவோ?

## அன்மொழித்தொகை.

௩௫௪. அன்மொழித்தொகையாவது, வேற்றுமைத் தொகை முதலிய ஐந்து தொகைநிலைத்தொடருந் தத்தம் பொருள்படுமளவிற் றொகாது தத்தமக்குப் புறத்தே தாமல்லாத பிறமொழிப்பொருள் படத் தொகுவதாம். உ-ம்.

(க.) பூங்குழல் என்பது இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது பூவையுடைய குழலினையுடையாள் என விரியும்.

பொற்றொடி என்பது மூன்றும் வேற்றுமைத்தொகைநிலைக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது பொன்னாலாகிய தொடியினையுடையாள் என விரியும்.

கவியிலக்கணம் என்பது நான்காம் வேற்றுமைத்தொகைநிலைக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது கவிக்கிலக்கணஞ் சொல்லப்பட்ட நூல் என விரியும்.

பொற்றாலி என்பது ஐந்தாம் வேற்றுமைத்தொகைநிலைக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது பொன்னினாகிய தாலியினையுடையாள் என விரியும்.

கிள்ளிகுடி என்பது ஆறும்வேற்றுமைத்தொகைநிலைக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது கிள்ளியினது குடியிருக்குமூர் என விரியும்.

கீழ்வயிற்றுக்கழலை என்பது ஏழாம் வேற்றுமைத்தொகைநிலைக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது கீழ்வயிற்றின்கண் எழுந்த கழலைப்போல்வான் என விரியும்.

(உ.) தாழ்குழல் என்பது வினைத்தொகைநிலைக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது தாழ்ந்த குழலினையுடையாள் என விரியும்.

(ந.) கருங்குழல் என்பது பண்புத்தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது கருமையாகிய குழலினையுடையாள் என விரியும்.

(ச.) தேன்மொழி என்பது உவமைத்தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது தேன்போலுமொழியினையுடையாள் என விரியும்.

(ரு.) உயிர்மெய் என்பது உம்மைத்தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இது உயிருமெய்யுங் கூடிப் பிறந்த எழுத்து என விரியும்.

பரீக்ஷை வினா.—நருஅ. அன்மொழித்தொகையாவது யாது?

---

## தொகைநிலைத் தொடர்மொழிகள் பலபொருள் படுதல்.

நருகூ. தொகைநிலைத்தொடர்மொழிகளை விரித்துப் பொருள் கொள்ளுமிடத்து ஒருபொருளைத் தருவனவன்றி, இரண்டு முதல் ஏழெல்லையாகிய பலபொருள்களைத் தருவனவும் உளவாம். உ-ம்.

(க.) தெய்வவணக்கம்... இரண்டு பொருள்.

(க.) தெய்வத்தை வணங்கும் வணக்கம். (உ.) தெய்வத்திற்கு வணங்கும் வணக்கம்.

(உ.) தற்சேர்ந்தார்... மூன்றுபொருள்.

(க.) தன்னைச்சேர்ந்தார், (உ.) தன்னொடு சேர்ந்தார், (ந.) தன்கட்சேர்ந்தார்,

(௩.) சொல்லிலக்கணம்... நான்குபொருள்.

(க.) சொல்லினதிலக்கணம், (உ.) சொற்கிலக்கணம், (௩.) சொல்லின்கணிலக்கணம், (௪.) சொல்லினதிலக்கணஞ் சொன்ன நூல்.

(௪.) பொன்மணி... ஐந்துபொருள்.

(க.) பொன்னாலாகிய மணி, (உ) பொன்னாகிய மணி, (௩.) பொன்னின்கண் மணி, (௪.) பொன்னொடு சேர்ந்த மணி, (ரு.) பொன்னு மணியும்.

(ரு.) மரவேலி... ஆறுபொருள்.

(க.) மரத்தைக்காக்கும் வேலி, (உ.) மரத்திற்கு வேலி, (௩.) மரத்தினது வேலி, (௪.) மரத்தின்புறத்து வேலி, (ரு.) மரத்தாலாகிய வேலி, (சு.) மரமாகிய வேலி.

(சு.) சொற்பொருள்... ஏழுபொருள்.

(க.) சொல்லாலறியப்படும் பொருள், (உ.) சொல்லினது பொருள், (௩.) சொற்குப் பொருள், (௪.) சொல்லின்கட்பொருள், (ரு.) சொல்லும்பொருளும், (சு.) சொல்லாகிய பொருள், (எ.) சொல்லானது பொருள்.

பரீக்ஷை வினா.—௩ருக. தொகைநிலைத் தொடர்மொழிகளை விரித்துப் பொருள் கொள்ளுமிடத்து, அவைகளுள், ஒருபொருளைத் தருவனவன்றிப், பலபொருள்களைத் தருவனவும் உளவோ?

## தொகைநிலைத் தொடர்மொழிகளிற் பொருள் சிறக்கும் இடங்கள்.

௩சுO. தொகைநிலைத்தொடர்மொழிகளுள்ளே, வேற்றுமைத்தொகையிலும், பண்புத்தொகையிலும், முன்மொழியிலாயினும் பின்மொழியிலாயினும் பொருள் சிறந்து நிற்

கும்; வினைத்தொகையினும், உவமைத்தொகையினும், முன் மொழியிற் பொருள் சிறந்து நிற்கும்; உம்மைத்தொகையில் அனைத்துமொழியினும் பொருள் சிறந்து நிற்கும்; அன் மொழித்தொகையில் இருமொழியுமல்லாத புறமொழியிற் பொருள் சிறந்து நிற்கும். உ-ம்.

வேங்கைப்பூ, வெண்டாமரை என வரும் வேற்றுமைத்தொகை பண்புத்தொகைகளிலே, முன்மொழிகள் இனம்விலக்கி நிற்றலால், அம்முன்மொழிகளிற் பொருள் சிறந்தன.

கண்ணிமை, செஞ்ஞாயிறு என வரும் வேற்றுமைத்தொகை பண்புத்தொகைகளிலே, முன்மொழிகள் இனம் விலக்குத லின்றி நிற்றலால், பின்மொழிகளிற் பொருள் சிறந்தன.

ஆடுபாம்பு, வேற்கண் என வரும் வினைத்தொகை உவமைத் தொகைகளிலே, முன்மொழிகள் இனம் விலக்கிநிற்றலால், அம்முன்மொழிகளிற் பொருள் சிறந்தன.

இராப்பகல், சேரசோழபாண்டியர் என வரும் உம்மைத்தொ கைகளிலே, அனைத்து மொழிகளும் இனம் விலக்கலும் விலக்காமையுமின்றி நிற்றலால், அவ்வனைத்து மொழிகளி லும் பொருள் சிறந்தன.

பொற்றொடி, உயிர்மெய் என வரும் அன்மொழித்தொகைக ளிலே, சொல்லுவோனுடைய கருத்து இவ்விருமொழிப் பொருண்மேலதாகாது, இவ்விருமொழியுமல்லாத உடை யாண்முதலிய புறமொழிப் பொருண்மேலதாதலால், அப் புறமொழிகளிற் பொருள் சிறந்தன.

பரீக்ஷை வினா.—௩௯௦. தொகைநிலைத் தொடர்மொழிகளுள், எந்தெந்தத் தொடரில் எந்தெந்த மொழியிற் பொருள் சிற ந்து நிற்கும்?

தொகைநிலைத்தொடரியல் முற்றிற்று.

## ௨. தொகாநிலைத்தொடரியல்.

௩௬௧. தொகாநிலைத்தொடராவது, இடையே வேற்றுமையுருபு முதலிய உருபுகள் கெடாமலும், ஒருசொற்றன்மைப்படாமலும், சொற்கள் பிளவுபடத் தொடர்வதாம்.

பரீக்ஷை வினா.—௩௬௧. தொகாநிலைத் தொடராவது யாது?

---

### தொகாநிலைத்தொடர்ப்பாகுபாடு.

௩௬௨. அத்தொகாநிலைத்தொடர், எழுவாய்த்தொடர், விளித்தொடர், வேற்றுமைத்தொகாநிலைத்தொடர், வினைமுற்றுத்தொடர், பெயரெச்சத்தொடர், வினையெச்சத்தொடர், இடைச்சொற்றொடர், உரிச்சொற்றொடர், அடுக்குத்தொடர், என ஒன்பதுவகைப்படும் உ-ம்.

(௧.) சாத்தன் வந்தான்.........எழுவாய்த்தொடர்.

(௨.) சாத்தா வா..................விளித்தொடர்.

(௩.) குடத்தைவனைந்தான்<br>
வாளால் வெட்டினான்<br>
இரப்போர்க்கீந்தான்<br>
மலையினிழிந்தான்<br>
சாத்தனது கை<br>
மணியின்கணொளி<br>
} வேற்றுமைத்தொகாநிலைத் தொடர்.

(௪.) உண்டான் சாத்தன்<br>
குழையன் கொற்றன்<br>
} வினைமுற்றுத்தொடர்.

(௫.) உண்ட சாத்தன்<br>
கரிய சாத்தன்<br>
} பெயரெச்சத்தொடர்.

(௬.) உண்டு வந்தான்<br>
இன்றி வந்தான்<br>
} வினையெச்சத்தொடர்.

(எ.) மற்றொன்று............... இடைச்சொற்றொடர்.
(அ.) கடிக்கமலம்............... உரிச்சொற்றொடர்.
(க.) பாம்பு பாம்பு............... அடுக்குத்தொடர்.

௩௬௩. வேற்றுமைத்தொகை விரிந்தவிடத்து வேற்றுமைத்தொகாநிலைத்தொடராம். வினைத்தொகை விரிந்தவிடத்துப் பெயரெச்சத் தொகாநிலைத்தொடராம். பண்புத்தொகையும் உம்மைத்தொகையும் விரிந்தவிடத்து இடைச்சொற்றொடராம். உவமைத்தொகை விரிந்தவிடத்து முன்னது இடைச்சொற்றொடரும், பின்னது இடைச்சொல்லடியாகப் பிறந்த பெயரெச்ச வினையெச்சத்தொடருமாம். அன்மொழித்தொகை விரிந்தவிடத்து வேற்றுமைத்தொகாநிலைத்தொடர் முதலேற்பனவாம்.

பரீக்ஷை வினாக்கள்.—௩௬௨. தொகாநிலைத்தொடர் எத்தனை வகைப்படும்? ௩௬௩. வேற்றுமைத்தொகை, விரிந்தவிடத்து, என்ன தொகாநிலைத்தொடராம்? வினைத்தொகை விரிந்தவிடத்து, என்ன தொகாநிலைத் தொடராம்? பண்புத்தொகையும் உம்மைத்தொகையும், விரிந்தவிடத்து, என்னதொடராம்? உவமைத்தொகை, விரிந்தவிடத்து, என்னதொடராம்? அன்மொழித்தொகை, விரிந்தவிடத்து, என்னதொடராம்?

## எழுவாய்த்தொடர்க்கும் வினைமுற்றுத் தொடர்க்கும் வேற்றுமை.

௩௬௪. எழுவாய்க்கு வினைமுற்றைப் பயனிலையாகக் கொள்ளுமிடத்து, வினைமுதல் விசேடணமாக வினை முக்கியப்பொருளாம். வினைமுற்றிற்குப் பெயரைப் பயனிலையாகக் கொள்ளுமிடத்து வினை விசேடணமாக வினைமுதல் முக்கியப் பொருளாம். உ-ம்.

சாத்தன் வந்தான்; இங்கே சாத்தன் இது செய்தான் என வினைமுதல் விசேடணமாக வினை முக்கியப்பொருளாயிற்று.

வந்தான் சாத்தன்; இங்கே இது செய்தான் சாத்தன் என வினை விசேடணமாக வினைமுதல் முக்கியப்பொரு

பரீக்ஷை வினா.—௩௬௪. சாத்தன் வந்தான் என்னும் எழுவாய்த் தொடர்க்கும், வந்தான் சாத்தன் என்னும் வினைமுற்றுத் தொடர்க்கும், வேற்றுமை என்னை?

## இடைப்பிற வரல்.

௩௬௫. வேற்றுமையுருபுகளும், வினைமுற்றுக்களும், பெயரெச்சங்களும், வினையெச்சங்களுங் கொண்டு முடியும் பெயர்க்கும் வினைக்கும் இடையே, வருமொழியோடு இயைபத்தக்க பிறசொற்கள் வரவும் பெறும். உ-ம்.

(௧.) சாத்தன் (வயிறார) உண்டான்.
அறத்தை (அழகு பெறச்) செய்தான்.
வாளான் (மாய) வெட்டினான்.
தேவர்க்குச் (செல்வம்வேண்டிச்) சிறப்பெடுத்தான்.
மலையினின்று (உருண்டு) வீழ்ந்தான்.
சாத்தனது (இத்தடக்கை) யானை.
ஊர்க்கண் (உயர்ந்த வொளி) மாடம்.
சாத்தா (விரைந்து) ஓடி வா.

(உ.) வந்தான் (அவ்வூர்க்குப் போன) சாத்தன். வினைமுற்று.
(௩.) வந்த (வடகாசி) மன்னன். பெயரெச்சம்.
(௪.) வந்து (சாத்தனின்றவனூர்க்குப்) போயினான். வினையெச்சம்.

உண்டு விருந்தோடு வந்தான் என்னுமிடத்து, இடையில் வந்த விருந்தென்னுஞ் சொல் வருமொழியோடு இயைதலன்றி

விருந்தோடுண்டு வந்தான் எனநிலைமொழியோடும் இயைதலால், இது போல்வன இடையில் வரப்பெறுமென்றறிக.

பரிக்ஷை வினா.—கூசுரு. வேற்றுமையுருபுகளும் வினைமுற்றுக்களும் பெயரெச்சங்களும் வினையெச்சங்களுங் கொண்டு முடியும் பெயர்க்கும் வினைக்கும் இடையே பிறசொற்கள் வருதல் உண்டோ?

## முடிக்குஞ் சொன்னிற்கு மிடம்.

கூசுசு. ஆறனுருபொழிந்த வேற்றுமையுருபுகளையும், வினைமுற்றையும், வினையெச்சத்தையும் முடிக்கவருஞ் சொற்கள், அவைகளுக்குப் பின்னன்றி முன்வருதலுமுண்டு. உ-ம்.

(க.) வந்தான் சாத்தன்.
வெட்டினன் மரத்தை.
வெட்டினன் வாளால்.
கொடுத்தானந்தணர்க்கு. } வேற்றுமையுருபு.
சென்றான் சாத்தன் கண்.
வா சாத்தா.

(உ.) சாத்தன் போயினன்............வினைமுற்று.

(ங.) போயினன் வந்து...............வினையெச்சம்.

பரிக்ஷை வினா.—கூசுசு. வேற்றுமையுருபுகளையும் வினைமுற்றையும் வினையெச்சத்தையும் முடிக்க வருஞ் சொற்கள், அவைகளுக்குப் பின்னன்றி, முன்வருதலும் உண்டோ?

தொகாநிலைத்தொடரியன் முற்றிற்று.

## ௩. ஒழிபியல்.

### தொடர்மொழிப் பாகுபாடு.

௩௯௭. தொடர்மொழி, முற்றுத்தொடர்மொழியும் எச்சத்தொடர்மொழியும் என, இருவகைப்படும்.

௩௯௮. முற்றுத்தொடர்மொழியாவது, எழுவாயும் பயனிலையுஞ் செயப்படுபொருண் முதலியவைகளோடு கூடாதாயினுங் கூடியாயினும் முடிவு பெற்று நிற்குந் தொடர்மொழியாம். வடநூலார் இம்முற்றுத்தொடர் மொழியை வாக்கியமென்பர்.

உ-ம். சாத்தன் வந்தான்.
சாத்தன் சோற்றை யுண்டான்.

௩௯௯. எச்சத்தொடர்மொழியாவது, முடிவு பெறாது அம்முற்றுத்தொடர்மொழிக்கு உறுப்பாக வருந் தொடர்மொழியாம்.

உ-ம் யானைக் கோடு.
யானையது கோடு.

பரீக்ஷை வினாக்கள்.—௩௯௭. தொடர்மொழி எத்தனை வகைப்படும்? ௩௯௮. முற்றுத்தொடர்மொழியாவது யாது? ௩௯௯. எச்சத்தொடர்மொழியாவது யாது?

---

### வாக்கியப் பொருளுணர்வுக்குக் காரணம்.

௪00. வாக்கியத்தின் பொருளை உணர்தற்குக் காரணம், அவாய்நிலை, தகுதி, அண்மை, கருத்துணர்ச்சி என்னு நான்குமாம்.

௩௭௧. அவாய்நிலையாவது, ஒருசொற் றனக்கு எச்சொல் இல்லாவிடின் வாக்கியப்பொருளுணர்ச்சி உண்டாகாதோ அச்சொல்லை அவாவி நிற்றலாம். உ-ம்.

ஆவைக்கொணர் என்னுமிடத்து, ஆவை என்பது மாத்திரஞ் சொல்லிக் கொணரென்பது சொல்லாவிடினும், கொணரென்பது மாத்திரஞ் சொல்லி ஆவை என்பது சொல்லாவிடினும், வாக்கியப்பொருளுணர்ச்சி உண்டாகாது. ஆவைக் கொணர் என இரண்டுஞ் சொல்லின், அவாய்நிலை காரணமாக வாக்கியப்பொருளுணர்ச்சி உண்டாதல் அறிக.

௩௭௨. தகுதியாவது, பொருட்குத் தடையுணர்ச்சி இல்லாமையாம். உ-ம்.

நெருப்பா னனை என்னுமிடத்து, நனைத்தலின் நெருப்புக் கருவியன்று என்கிற உணர்ச்சி தடையுணர்ச்சி. இவ்வுணர்ச்சி இருத்தலால், வாக்கியப்பொருளுணர்ச்சி உண்டாகாது.

நீரானனை என்னுமிடத்து, நனைத்தலின் நீர் கருவியாதலாற் றடையுணர்ச்சி யில்லை; ஆகவே தகுதி காரணமாக வாக்கியப்பொருளுணர்ச்சி யுண்டாதலறிக.

௩௭௩. அண்மையாவது, காலம் இடையீடின்றியும் வாக்கியப்பொருளுணர்ச்சிக்குக் காரணமல்லாதசொல் இடையீடின்றியுஞ் சொல்லப்படுதலாம். உ-ம்.

ஆவைக்கொணர் என்பது யாமத்துக்கு ஒவ்வொரு [illegible]கச் சொல்லப்படின், வாக்கியப் பொருளுணர்ச்சி யுண்டாகாது. ஒருதொடராக விரையச் சொல்லப்படின், வாக்கியப் பொருளுணர்ச்சி யுண்டாதலறிக.

[illegible] நெருப்புடையது தேவதத்தன் என்னுமிடத்து, [illegible] நெருப்புடையது என்னும் வாக்கியத்தால் உண்டா

கும் பொருளுணர்ச்சிக்குக் காரணமல்லாத உண்டான் என்னுஞ் சொல் அச்சொற்கட்கு இடையீடாக நின்றது; உண்டான் தேவதத்தன் என்னும் வாக்கியத்தால் உண்டாகும் பொருளுணர்ச்சிக்குக் காரண மல்லாத நெருப்புடையது என்னுஞ் சொல் அச்சொற்கட்கு இடையீடாக நின்றது. இப்படி இடையிட்டுச் சொல்லாது, மலை நெருப்புடையது; உண்டான் தேவதத்தன் எனச் சொல்லின், அண்மை காரணமாக வாக்கியப்பொருளுணர்ச்சி யுண்டாதலறிக.

௧௭௪. கருத்துணர்ச்சியாவது, ஒருசொல், எப்பொருளைத் தரல்வேண்டும் என்னுங் கருத்தாற் சொல்லப்பட்டதோ அக்கருத்தைச் சமயவிசேடத்தால் அறிதலாம். உ-ம்.

மாவைக் கொண்டுவா என்னுமிடத்து, மாவென்பது பலபொருளொருசொல்லாதலால் வாக்கியப்பொருளுணர்ச்சி யுண்டாகாது. இது பசித்தோனாற் சொல்லப்படிற் றின்னுமா வெனவும், கவசம் பூண்டு நிற்பானாற் சொல்லப்படிற் குதிரை யெனவும், சொல்லுவான் கருத்துச் சமயவிசேடத்தால் அறியப்படும்; அப்போது அக்கருத்துணர்ச்சி காரணமாக வாக்கியப்பொருளுணர்ச்சி யுண்டாதலறிக.

பரீக்ஷை வினாக்கள்.—௧௭௦. வாக்கியத்தின்பொருளை உணர்தற்குக் காரணம் என்னை? ௧௭௧. அவாய்நிலையாவது யாது? ௧௭௨. தகுதியாவது யாது? ௧௭௩. அண்மையாவது யாது? ௧௭௪. கருத்துணர்ச்சியாவது யாது?

---

## உருபும் வினையும் அடுக்கி முடிதல்.

௧௭௫. வேற்றுமையுருபுகள் விரிந்தாயினும் மறைந்தாயினும் ஒன்று பல வடுக்கி வரினும், கலந்து பல வடுக்கி வரினும், வினைமுற்றும் பெயரெச்சமும் வினையெச்சமும் ஒன்று

பல வடுக்கி வரினும், அப்பலவுந் தம்மை முடித்தற்குரிய ஒரு சொல்லைக்கொண்டு முடியும். உ-ம்.

| | |
|---|---|
| சாத்தனையுங்கொற்றனையும்வாழ்த்தினான்.<br>சாத்தனுக்குங் கொற்றனுக்குந் தந்தை.<br>அருளற முடையன். | உருபுகள் விரிந்தும் மறைந்தும் ஒன்று பல வடுக்கல். |
| அரசன் பகைவனை வாளால் வெட்டினான்.<br>அரசன் வாள் கைக்கொண்டான். | உருபுகள் விரிந்தும் மறைந்தும் கலந்து பல வடுக்கல். |
| ஆடினான் பாடினான் சாத்தன்.<br>இளையன் மெல்லியன் மடந்தை. | வினைமுற்றொன்று பல வடுக்கல். |
| கற்ற கேட்ட பெரியோர்.<br>நெடிய கரிய மனிதன். | பெயரெச்சமொன்று பல வடுக்கல். |
| கற்றுக் கேட்டறிந்தார்.<br>விருப்பின்றிவெறுப்பின்றியிருந்தார். | வினையெச்சம் ஒன்று பல வடுக்கல். |

௩௭௬. வேற்றுமையுருபு, ஒன்று பலவடுக்கி வருமிடத்து, ஒருதொடரினுள்ளே இறுதியினின்ற பெயரின்மாத்திரம் விரிந்து நின்று மற்றைப் பெயர்களெல்லாவற்றினுந் தொக்கு வருதலு முண்டு.

உ-ம். பொருளின்பங்களைப் பெற்றான்.
சேரசோழபாண்டியர்க்கு நண்பன்.
தந்தை தாயி னீங்கினான்.

௩௭௭. ஒருதொடரினுள் ஒருபொருளுக்கே பலபெயர் வருதலும், அப்பெயர்தோறும் ஒருவேற்றுமையுருபே வருதலும் உளவாம். வரினும், பொருளொன்றேயாதலால் எண்ணும்மை பெறுதலில்லை. உ-ம்.

, சங்கரனை யெண்குணனைச் சம்புவைநால் வேதனொரு
கங்கரனை நெஞ்சே கருது.

பரீக்ஷை வினாக்கள்.—௧௭௫. வேற்றுமையுருபுகள் ஒன்றுபல வடுக்கி வரினும், கலந்து பலவடுக்கி வரினும், வினைமுற்றும் பெயரெச்சமும் வினையெச்சமும் ஒன்று பலவடுக்கிவரினும், அப்பலவும் எப்படி முடியும்? ௧௭௬. வேற்றுமையுருபு, ஒன்று பலவடுக்கி வருமிடத்து, ஒருதொடரினுள்ளே இறுதியினின்ற பெயரின் மாத்திரம் விரிந்து நின்று, மற்றப் பெயர்களெல்லாவற்றிலுந் தொக்கு வருதலும் உண்டோ? ௧௭௭. ஒருதொடரினுள், ஒருபொருளுக்கே பலபெயர் வருதலும், அப்பெயர் தோறும் ஒருவேற்றுமையுருபே வருதலும் உளவோ?

---

## திணைபாலிட முடிபு.

௧௭௮. முடிக்கப்படுஞ் சொல்லோடு முடிக்குஞ் சொல்லானது, திணை பால் இடங்களின் மாறுபடாது இயைந்து நிற்றல்வேண்டும். இயைந்து நில்லாதாயின் வழுவாம்.

உ-ம். நம்பி வந்தான்
நங்கை வந்தாள்
அந்தணர் வந்தார் } வழாநிலை.
நான் வந்தேன்
நீ வந்தாய்

நம்பி வந்தது……………………திணை வழு.
நங்கை வந்தான்……………………பால் வழு.
அவன் வந்தேன்……………………இட வழு.

௧௭௯. இரண்டு முதலிய உயர்திணைப்படர்க்கையெழுவாய் அடுக்கி வரின், பலர்பாற் படர்க்கைப் பயனிலைகொண்டு முடியும். இரண்டு முதலிய அஃறிணைப்படர்க்கையெழுவாய்

அடுக்கி வரின், பலவின்பாற்படர்க்கைப் பயனிலைகொண்டு முடியும்.

உ-ம். நம்பியு நங்கையும் வந்தார்.
யானையுங் குதிரையும் வந்தன.

ந. அ0. முன்னிலையெழுவாயோடு படர்க்கையெழுவாய் அடுக்கி வரின், முன்னிலைப்பன்மைப்பயனிலைகொண்டு முடியும். அது உளப்பாட்டு முன்னிலைப்பன்மை எனப்படும்.

உ-ம். நீயு மவனும் போயினீர்.

ரு அக. தன்மையெழுவாயோடு முன்னிலையெழுவாயேனும் படர்க்கையெழுவாயேனும் இவ்விரண்டெழுவாயுமேனும் அடுக்கி வரின், தன்மைப்பன்மைப் பயனிலைகொண்டு முடியும். இது உளப்பாட்டுத் தன்மைப்பன்மை எனப்படும்.

உ-ம். யானு நீயும் போயினேம்.
யானு மவனும் போயினேம்.
யானு நீயு மவனும் போயினேம்.

ரு அஉ. திணையையந் தோன்றியவிடத்து உருவு வடிவு என்னும் பொதுச்சொற்களாலும், உயர்திணைப்பாலையந் தோன்றியவிடத்து அத்திணைப்பன்மைச் சொல்லாலும், அஃறிணைப்பாலையந் தோன்றியவிடத்துப் பால்பகாவஃறிணைச்சொல்லாலுங் கூறல்வேண்டும். உ-ம்.

(க.) குற்றியோ மனுடனோ அங்குத் தோன்றுகிற உரு?............ } திணை

(௨.) ஆண்மகனோ பெண்மகளோ.....
அங்கேதோன்றுகிறவர்?...... } உயர்திணைப்பாலையம்.

(௩.) ஒன்றோ பலவோ அங்கு வந்த
குதிரை?....................... } அஃறிணைப்பாலையம்.

௩௮௩. இருதிணையில் ஒருதிணை துணிந்தவிடத்தும், இருபாலில் ஒருபால் துணிந்தவிடத்தும், மற்றொன்றல்லாத தன்மையைத் துணிந்த பொருண்மேல் வைத்துக் கூறல் வேண்டும். இது சுருங்கச்சொல்லல் என்னும் அழகைப் பயப்பித்தலாற் சிறப்புடைத்தாம்.

| | | | |
|---|---|---|---|
| உ-ம். (௧.) | (குற்றியெனின்) | மகனன்று. | எ-ம். |
| | (மகனெனின்) | குற்றியல்லன். | எ-ம். |
| (௨.) | (ஆண்மகனெனின்) | பெண்மகளல்லன். | எ-ம். |
| | (பெண்மகளெனின்) | ஆண்மகனல்லள். | எ-ம். |
| (௩.) | (ஒன்றெனின்) | பலவன்று. | எ-ம். |
| | (பலவெனின்) | ஒன்றல்ல. | எ-ம். |

கூ-றுக.

பரீக்ஷைக்கு வினாக்கள்.—௩௭௮. முடிக்கப்படுஞ் சொல்லொடு முடிக்குஞ் சொல்லானது எப்படி இயைந்து நிற்றல் வேண்டும்? ௩௭௯. இரண்டு முதலிய உயர்திணைப் படர்க்கையெழுவாய் அடுக்கி வரின், எப்பயனிலைகொண்டு முடியும்? இரண்டு முதலிய அஃறிணைப் படர்க்கையெழுவாய் அடுக்கிவரின், எப்பயனிலை கொண்டு முடியும்? ௩௮௦. முன்னிலையெழுவாயோடு படர்க்கை யெழுவாய் அடுக்கி வரின், எப்பயனிலைகொண்டு முடியும்? ௩௮௧. தன்மையெழுவாயோடு, முன்னிலையெழுவாயேனும், படர்க்கையெழுவாயேனும், இவ்விரண்டெழுவாயுமேனும் அடுக்கி வரின், எப்பயனிலை கொண்டு முடியும்? ௩௮௨. திணையையத்தையும் பாலையத்தையும் எச்சொற்றந்தச் சொல்லாற் கூறல் வேண்டும்? ௩௮௩. இருதிணையில் ஒருதிணை

துணிந்தவிடத்தும், இருபாலில் ஒருபால் துணிந்தவிடத்தும் மற்றொன்றல்லாத தன்மையை எப்பொருண்மேல் வைத்துக் கூறல்வேண்டும்?

---

## திணைபாலிடப்பொதுமை நீங்குநெறி.

௩௮௪. திணைபாலிடங்கட்குப் பொதுவாகிய பெயர் வினைகட்கு முன்னும் பின்னும் வருஞ் சிறப்புப்பெயருஞ் சிறப்புவினையும், அவற்றின் பொதுத்தன்மையை நீக்கி, ஒன்றனை யுணர்த்தும். உ-ம்.

சாத்தனிவன்; சாத்தனிது. எ-ம். சாத்தன் வந்தான்; சாத்தன் வந்தது. எ-ம். பெயர்த்திணைப்பொதுமையைப் பின் வந்த சிறப்புப்பெயரும் வினையும் நீக்கி ஒருதிணையை யுணர்த்தின.

ஒருவரென்னையர்; ஒருவரென்றாயர். எ-ம். மரம் வளர்ந்தது; மரம் வளர்ந்தன. எ-ம். பெயர்ப்பாற்பொதுமையைப் பின் வந்த சிறப்புப்பெயரும் வினையும் நீக்கி ஒருபாலை யுணர்த்தின.

யாமெல்லாம் வருவம்; நீயிரெல்லாம் போமின்; அவரெல்லாமிருந்தார் எனப் பெயரிடப்பொதுமையை முன்வந்த சிறப்புப்பெயரும் பின் வந்த சிறப்புவினையும் நீக்கி ஒவ்வோரிடத்தை யுணர்த்தின.

வாழ்க அவன், அவள், அவர், அது, அவை, யான், யாம், நீ, நீர் என வினைத்திணைபாலிடப் பொதுமையைப் பின் வந்த சிறப்புப்பெயர்கள் நீக்கி ஒருதிணையையும் பாலையும் இடத்தையும் உணர்த்தின.

௩௮௫. பெயர் வினை யிரண்டும் உயர்திணையாண் பெண்ணிரண்டற்கும் பொதுவாகவேனும், அஃறிணையாண்பெ

னிரண்டற்கும் பொதுவாகவேனும் வருமிடத்து, அப்பா
லிரண்டனுள் ஒருபாற்கேயுரிய தொழின்முதலிய குறிப்பி
னால், அப்பாலானது துணியப்படும்.

உ-ம். ஆயிரமக்கள் போர் செய்யப் போயினார் என்னுமிட
த்து, மக்களென்னும் பெயரும் போயினாரென்னும்
வினையும் உயர்திணையாண்பெணிருபாற்கும் பொது
வாயினும், போர் செயலென்னுந் தொழிற்குறிப்பி
னால் ஆண்பால் துணியப்பட்டது.

பெருந்தேவி மகவீன்ற கட்டிலினருகே நால்வர் மக்
களுளர் என்னுமிடத்து, மக்களென்னும் பெயரும்
உளர் என்னும் வினையும் உயர்திணையாண்பெணிரு
பாற்கும் பொதுவாயினும், ஈனுதலென்னுந்தொழிற்
குறிப்பினாற் பெண்பால் துணியப்பட்டது.

இப்பெற்ற முழவொழிந்தன என்னுமிடத்து, பெற்ற
மென்னும் பெயரும் ஒழிந்தனவென்னும் வினையும்
அஃறிணையாண்பெணிருபாற்கும் பொதுவாயினும்,
உழவென்னுந் தொழிற்குறிப்பினால் எருது துணி
யப்பட்டது.

இப்பெற்றங் கறத்தலொழிந்தன என்னுமிடத்து,
பெற்றமென்னும் பெயரும் ஒழிந்தனவென்னும்
வினையும் அஃறிணையாண்பெணிருபாற்கும் பொது
வாயினும், கறத்தலென்னுந் தொழிற்குறிப்பினாற்
பெண்பசு துணியப்பட்டது.

**பரீக்ஷை வினாக்கள்.—௫௮௪.—திணை பால் இடங்கட்குப் பொ
துவாகிய பெயர் வினைகளின் பொதுத்தன்மையை நீக்கி, ஒன்
றனை உணர்த்துவன யாவை? ௫௮௫. பெயர் வினை இரண்
டும், உயர்திணையாண் பெண் இரண்டற்கும் பொதுவாகவே**

னும் அஃறிணையாண் பெண் இரண்டற்கும் பொதுவாகவே னும் வருமிடத்து, அப்பாலிரண்டனுள் ஒன்று எதனாலே ரியப்படும்?

## உயர்திணை தொடர்ந்த அஃறிணை.

௫௮௬. உயர்திணையெழுவாயோடு கிழமைப்பொருள்படத் தொடர்ந்து எழுவாயாக நிற்கும் அஃறிணைப் பொருளாதியாறும், உயர்திணைவினையான் முடியும்.

உ-ம். நம்பி பொன்பெரியன்
நம்பி நாடு பெரியன்
நம்பி வாழ்நாள் பெரியன்
நம்பி மூக்குக் கூரியன்
நம்பி குடிமை நல்லன்
நம்பி நடை கடியன்

இங்கே உயர்திணையெழுவாயின் பயனிலையோடு அஃறிணையெழுவாயும் முடிந்ததறிக.

மாடு கோடு கூரிது என்னுமிடத்தும், மாடு என்னும் அஃறிணையெழுவாயின் பயனிலையாகிய கூரிது என்னும் வினையோடு அதன் கிழமைப்பொருள்பட எழுவாயாக, நின்ற கோடு என்பது முடிவதறிக.

பரீக்ஷை வினா.—௫௮௬. உயர்திணையெழுவாயோடு கிழமைப் பொருள்படத் தொடர்ந்து, எழுவாயாக நிற்கும் அஃறிணைப் பொருளாதியாறும் எத்திணை வினையான் முடியும்?

---

## கலந்த திணை பால்களுக்கு ஒருமுடிபு.

௫௮௭. இருதிணைப்பொருள்கள் கலந்து ஒருதொடராக வருமிடத்தும், ஆண் பெண் என்னும் இருபாற் பொருள்கள் கலந்து ஒருதொடராக வருமிடத்தும், சிறப்பினாலும், மிகுதியினாலும், இழிவினாலும் ஒருமுடிபைப் பெறும். உ-ம்.

"திங்களுஞ் சான்றோரு மொப்பர்" என இருதிணைப்பொருள்கள் கலந்து சிறப்பினால் உயர்திணை முடிபைப்பெற்றன. சான்றோர் திங்கள்போல மறுத் தாங்கமாட்டாமை இங்கே சிறப்பு.

"பார்ப்பார் தவரே சுமந்தார் பிணிப்பட்டார் மூத்தோர் குழவியெனு மிவர்கள்" என இருதிணைப் பொருள்கள் கலந்து மிகுதியால் உயர்திணை முடிபைப் பெற்றன. அஃறிணைப்பொருள் ஒன்றேயாக உயர்திணைப் பொருள் மிகுந்ததல் இங்கே மிகுதி.

"மூர்க்கனு முதலையுங் கொண்டது விடா" என இருதிணைப் பொருள்கள் கலந்து இழிவினால் அஃறிணை முடிபைப் பெற்றன. மூர்க்ககுணமுடைமை இங்கே இழிவு.

தேவதத்தன் மனைவியுந் தானும் வந்தான் எனப் பாற்பொருள்கள் கலந்து சிறப்பினால் ஆண்பால் முடிபைப் பெற்றன. பெண்ணினும் ஆண் உயர்ந்தமை இங்கே சிறப்பு.

பரீக்ஷை வினா.—௯௮௭. இருதிணைப் பொருள்கள் கலந்து ஒருதொடராக வருமிடத்தும், ஆண் பெண் என்னும் இருபாற் பொருள்கள் கலந்து ஒருதொடராக வருமிடத்தும் அவை பலவும் எப்படி முடியும்?

---

## திணைபால் வழுவமைதி.

௯௮௮. மகிழ்ச்சி, உயர்வு, சிறப்பு, கோபம், இழிவு என்னும் இவைகளுள் ஒருகாரணத்தினால், ஒருதிணைப் பொருள் வேறுதிணைப்பொருளாகவும், ஒருபாற்பொருள் வேறுபாற் பொருளாகவுஞ் சொல்லப்படும். உ-ம்.

ஓராவினை என்னம்மை வந்தாள் என்றவிடத்து, உவப்பினால் அஃறிணை உயர்திணையாகச் சொல்லபட்டது.

பசுங்கிளியார் தூது சென்றார் என்றவிடத்து, உயர்வினால் அஃறிணை உயர்திணையாகச் சொல்லப்பட்டது.

"தம்பொருளென்ப தம்மக்கள்" என்றவிடத்துச், சிறப்பினால் உயர்திணை அஃறிணையாகச் சொல்லப்பட்டது.

பயனில்லாத சொற்களைச் சொல்லும் ஒருவனை இந்நாய் குரைக்கின்றது என்றவிடத்துக், கோபத்தினால் உயர்திணை அஃறிணையாகச் சொல்லப்பட்டது.

நாங் கடவுளுடைமை என்றவிடத்து, இழிவினால் உயர்திணை அஃறிணையாகச் சொல்லப்பட்டது.

தன்புதல்வனை என்னம்மை வந்தாள் என்றவிடத்து, மகிழ்ச்சியினால் ஆண்பால் பெண்பாலாகச் சொல்லப்பட்டது.

ஒருவனை அவர்வந்தார் என்றவிடத்து, உயர்வினால் ஒருமைப்பால் பன்மைப்பாலாகச் சொல்லப்பட்டது.

தேவன் மூவுலகத்திற்குந் தாய் என்றவிடத்து, சிறப்பினால் ஆண்பால் பெண்பாலாகச் சொல்லப்பட்டது.

"எனைத்துணைய ராயினு மென்னாந் தினைத்துணையுந்—தேரான் பிறனில் புகல்." என்றவிடத்துக், கோபத்தினாற் பன்மைப்பால் ஒருமைப்பாலாகச் சொல்லப்பட்டது.

பெண்வழிச்செல்வானை இவன் பெண் என்றவிடத்து, இழிவினால் ஆண்பால் பெண்பாலாகச் சொல்லப்பட்டது.

பரீக்ஷை வினா.—௯௮௮. ஒருதிணைப்பொருள் வேறு திணைப்பொருளாகவும், ஒருபாற்பொருள் வேறு பாற்பொருளாகவுஞ் சொல்லப்படுமோ?

## ஒருமை பன்மை மயக்கம்.

௩௱௪௯. ஒருமைப்பாலிற் பன்மைச்சொல்லையும், பன்மைப்பாலில் ஒருமைச்சொல்லையும் ஒரோவிடத்துத் தழுவிச் சொல்லுதலும் உண்டு. உ-ம்.

வெயிலெல்லா மறைத்தது மேகம் என்னுமிடத்து, வெயில் என்னும் ஒருமைப்பாலில் எல்லாமென்னும் பன்மைச் சொற் சேர்த்துச் சொல்லப்பட்டது.

இரண்டு கண்ணுஞ் சிவந்தது என்னுமிடத்து, இரண்டென்னும் பன்மைப்பாலிற் சிவந்தது என்னும் ஒருமைச்சொற் சேர்த்துச் சொல்லப்பட்டது.

பரீக்ஷை வினா.—௩௱௪௯. ஒருமைப்பாலிற் பன்மைச் சொல்லையும் பன்மைப் பாலில் ஒருமைச் சொல்லையுஞ் சொல்லுதலும் உண்டோ?

## இடவழுவமைதி.

௩௱௫௰. ஓரிடத்திற் பிறவிடச்சொல்லை ஒரோவிடத்துத் தழுவிச் சொல்லுதலும் உண்டு. உ-ம்.

சாத்தன்று யிவை செய்வேனே என்னுமிடத்து, யானெனச் சொல்லல்வேண்டுந் தன்மையிலே சாத்தன்றுயெனப் படர்க்கைச்சொற் சேர்த்தச் சொல்லப்பட்டது. சாத்தன்றுயாகிய யான் என்பது பொருள்.

“எம்பியை யீங்குப் பெற்றே னென்னெனக் கரியதென்றுன்” என்னுமிடத்த, நின்னையெனச் சொல்லல்வேண்டு முன்னிலையிலே எம்பியையெனப் படர்க்கைச்சொற் சேர்த்துச் சொல்லப்பட்டது; எம்பியாகிய உன்னை என்பது பொருள்.

யானோ வவனோ யாரிது செய்தார்;
நீயோ வவனோ யாரிது செய்தார்;
நீயோ யானோ யாரிது செய்தார்;
நீயோ வவனோ யானோ யாரிது செய்தார்.

என ஒரிடத்திற் பிறவிடம் விரவி வருதலும் உண்டெனக் கொள்க.

**பரீக்ஷை வினா.**—௩௧௦. ஒரிடத்திற் பிறவிடச் சொல்லைச் சொல்லுதலும் உண்டோ?

---

## காலவழுவமைதி.

௩௬௧. முக்காலத்தினுந் தந்தொழில் இடையறாமல் ஒருதன்மையவாய் நிகழும் பொருள்களின் வினையை நிகழ் காலத்தாற் சொல்லத்தகும்.

உ-ம். மலை நிற்கின்றது.
தெய்வ மிருக்கின்றது.
கடவு ளளிக்கின்றார்.

மலைக்கு நிற்றலும், தெய்வத்திற்கு இருத்தலும், கடவுட்கு அளித்தலும் முக்காலத்தினும் உள்ளனவாதல் காண்க.

௩௬௨- விரைவு, மிகுதி, தெளிவு என்னும் இம்மூன்று காரணங்களாலும், இக்காரணங்கள் இல்லாமலும், ஒருகாலம் வேறொருகாலமாகச் சொல்லவும்படும். உ-ம்.

உண்பதற்கிருப்பவனும் உண்கின்றவனும் விரைவிலே தம்மை உடன்கொண்டுபோக அழைப்பவனுக்கு, உண்டேன் உண்டேன்; வந்தேன் வந்தேன் என்றவிடத்து, விரைவுபற்றி எதிர்காலமும் நிகழ்காலமும் இறந்தகாலமாகச் சொல்லப் பட்டன.

களவு செய்ய நினைப்போன் கையறுப்புண்டான் என்றவிடத்துக், களவு செய்யிற் கையறுப்புண்ணல் மிகுதியாதலால், எதிர்காலம் இறந்தகாலமாகச் சொல்லப்பட்டது. கையறுப்புண்ணல் தவறினும் தவறாமாதலால் மிகுதி யெனப்பட்டது.

எறும்பு முட்டைகொண்டு திட்டையேறின் மழைபெய்தது என்றவிடத்து, எறும்பு முட்டையெடுத்துத் திட்டையேறின் மழைபெய்தல் தெளிவாதலால், எதிர்காலம் இறந்தகாலமாகச் சொல்லப்பட்டது.

யாம் பண்டு விளையாடுவ திச்சோலை; யாம் பண்டு விளையாடுகிற திச்சோலை இவைகளில், அக்காரணங்கள் இல்லாமலே இறந்தகாலம் எதிர்காலமும் நிகழ்காலமுமாகச் சொல்லப்பட்டன.

**பரீக்ஷை வினாக்கள்.**—௩௯௯. முக்காலத்தினுந் தந்தொழில் இடையறாமல் ஒருதன்மையவாய் நிகழும்பொருள்களின் வினையை எக்காலத்தாற் சொல்லத்தகும்? ௩௯௨. ஒருகாலம் வேறொரு காலமாகச் சொல்லவும்படுமோ?

## வினைமுதலல்லனவற்றை வினைமுதல் போலச் சொல்லல்.

௩௯௩. செயப்படுபொருளையும், கருவியையும், இடத்தையும், செயலையும், காலத்தையும், வினைமுதல் போல வைத்து, அவ்வினைமுதல்வினையை அவைகளுக்கு ஏற்றிச் சொல்லுதலும் உண்டு. உ-ம்.

இம்மாடியான் கொண்டது.........செயப்படுபொருள்.
இவ்வெழுத்தாணியானெழுதியது...கருவி.
இவ்வீடியானிருந்தது................இடம்.

இத்தொழில் யான் செய்தது.........செயல்.
இந்நாள் யான் பிறந்தது...............காலம்.

பரீக்ஷை வினா.—ந௩௩. செயப்படுபொருளையுங் கருவியையும் இடத்தையும் செயலையுங் காலத்தையும் வினைமுதல்போல வைத்து, அவ்வினைமுதல் வினையை அவைகளுக்கு ஏற்றிச் சொல்லுதலும் உண்டோ?

## அடைமொழி.

ந௩௪. பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில் என்னும் ஆறும், இனமுள்ள பொருள்களுக்கேயன்றி, இனமில்லாப் பொருள்களுக்கும், அடைமொழிகளாய் வரும்.

அடையினால் அடுக்கப்பட்டது அடைகொளியெனப்படும். அடையெனினும் விசேடணமெனினும் பொருந்தும். அடைகொளியெனினும் விசேடியமெனினும் பொருந்தும்.

(உதாரணம்.)

| இனமுள்ளன. | இனமில்லன. | |
|---|---|---|
| நெய்க்குடம் | உப்பளம் | பொருள். |
| குளநெல் | ஊர்மன்று | இடம், |
| கார்த்திகைவிளக்கு | நாளரும்பு | காலம். |
| பூமரம் | இலைமரம் | சினை. |
| செந்தாமரை | செம்போத்து | குணம். |
| ஆடுபாம்பு | தோய்தயிர் | தொழில். |

பரீக்ஷை வினா.—ந௩௪. பொருளாதியாறும், இனமுள்ள பொருள்களுக்கேயன்றி, இனமில்லாப் பொருள்களுக்கும் அடைமொழிகளாய் வருமோ?

## சிறப்புப்பெயர் இயற்பெயர்.

௩௱௮. ஒருகாரணம் பற்றி வருஞ் சிறப்புப்பெயரினு லும், காரணம் பற்ருது வரும் இயற்பெயரினுலும் ஒருபொ ருளைச் சொல்லுமிடத்துச், சிறப்புப்பெயரை முன் வைத்து இயற்பெயரைப் பின் வைத்தல் சிறப்பாம்.

உ-ம். சோழியன் கொற்றன்.
பாண்டியன் குலசேகரன்.
தமிழ்ப்புலவன் கம்பன்.

இனிக் கொற்றன் சோழியன் என இயற்பெயர் முன்னும் வருதல் காண்க. இன்னும் இயற்பெயர் முன் வருமிட த்து, வைத்தியநாதநாவலன் கச்சியப்பப்புலவன் என இறுதி விகாரமாக வருதலுங் காண்க.

பரீக்ஷை வினுக்கள்.—௩௱௩. ஒரு காரணம் பற்றி வருஞ் சிறப்புப்பெயரினுலும், காரணம் பற்ருது வரும் இயற்பெயரி னுலும் ஒருபொருளைச் சொல்லுமிடத்து, எதை முன்வைத்து, எதைப் பின் வைத்தல் சிறப்பாம்? இயற்பெயர் சிறப்புப்பெ யருக்கு முன் வருதல் இல்லையோ? இயற்பெயர் முன் வருமி டத்து, அதனிறுதி விகாரமாக வருதலும் உண்டோ?

---

## வினு விடை.

௩௱௯. வினுவாவது, அறியக் கருதியதை வெளிப் படுத்துவதாம். விடையாவது, வினுவிய பொருளை அறி விப்பதாம்.

வினு, உசா, கடா என்பன ஒருபொருட்சொற்கள். விடை, செப்பு, உத்தரம், இறை என்பன ஒருபொருட்சொற்கள்.

௩௯எ. வினவையும் விடையையும் வழுவாமற் காத்தல்வேண்டும்.

உ-ம். உயிரெத்தன்மைத்து? வினவழாநிலை.
உயிருணர்தற்றன்மைத்து விடைவழாநிலை.
கறக்கின்ற வெருமை பாலோசினையோ? வினவழு.
தில்லைக்குவழியாது? எனின் } விடைவழு.
சிவப்புக்காளை முப்பதுபணம் என்பது }

௩௯அ. வினா, அறியாமை, ஐயம், அறிவு, கொளல், கொடை, ஏவல் என, அறுவகைப்படும். உ-ம்.

(க.) ஆசிரியரே, இப்பாட்டிற்குப் பொருள் யாது?...அறியாமை வினா.
(உ.) குற்றியோ மகனோ?......ஐயவினா.
(௩.) மாணாக்கனே, இப்பாட்டிற்குப் பொருள் யாது? அறிவினா.
(௪.) பயறுண்டோ செட்டியாரே?......கொளல்வினா.
(௫.) தம்பிக்காடை யில்லையா?......கொடைவினா.
(௬.) தம்பீ யுண்டாயா?......ஏவல்வினா.

௩௯௯. விடை, சுட்டு, எதிர்மறை, உடன்பாடு, ஏவல், வினவெதிர்வினாதல், உற்றதுரைத்தல், உறுவது கூறல், இனமொழி என, எட்டுவகைப்படும். இவற்றுள், முன்னைய மூன்றுஞ் செவ்வனிறை; பின்னைய ஐந்தும் இறை பயப்பன.

(உதாரணம்.)

| வினா. | விடை. | |
|---|---|---|
| (க.) தில்லைக்கு வழி யாது? | இது | சுட்டு. |
| (உ.) இது செய்வாயா? | செய்யேன் | எதிர்மறை. |
| (௩.) ,, | செய்வேன் | உடன்பாடு. |

(௪.) ,, நீசெய் ஏவல். [னுதல்
(௫.) ,, செய்யேனோ வினாவெதிர் வி
(௬.) ,, உடம்புநொந்தது உற்றதுரைத்தல்
(௭.) ,, உடம்புநோம் உறுவதுகூறல்.
(௮.) ,, மற்றையதுசெய்வேன் இனமொழி.

பரீக்ஷை வினாக்கள்.—௩௯௬. வினாவாவது யாது? விடையாவது யாது? ௩௯௭. வினாவையும் விடையையும் எவ்வாறு காத்தல் வேண்டும்? ௩௯௮. வினா எத்தனை வகைப்படும்? ௩௯௯. விடை எத்தனை வகைப்படும்?

---

## சுட்டு.

௪00. படர்க்கைப்பெயரோடு சுட்டுப்பெயர் சேர்ந்து வரின், அப்படர்க்கைப்பெயர் முடிக்குஞ்சொற் கொள்ளுமிடத்து, அதற்குப் பின் வரும்; முடிக்குஞ்சொற் கொள்ளாவிடத்து அதற்குப் பின்னு முன்னும் வரும். உ-ம்.

(௧.) நம்பி வந்தான்; அவனுக்குச் சோறிடுக.
எருது வந்தது; அதற்குப் புல்லிடுக.

(௨.) நம்பியவன்; அவனம்பி.

பரீக்ஷை வினா.—௪00. படர்க்கைப்பெயரோடு சுட்டுப்பெயர் சேர்ந்து வரின், அச்சுட்டுப்பெயர் அப்படர்க்கைப்பெயர்க்கு எவ்விடத்து வரும்?

---

## மரபு

௪0௧. மரபாவது, உலகவழக்கினுஞ் செய்யுள்வழக்கினும் எப்பொருட்கு எப்பெயர் வழங்கிவருமோ, அப்பொருளை அச்சொல்லாற் கூறுதலாம்.

| | | |
|---|---|---|
| உ-ம். | ஆனைமேய்ப்பான் பாகன் | குதிரைக்குட்டி. |
| | ஆடுமேய்ப்பான் இடையன் | பசுக்கன்று. |
| | ஆனையிலண்டம் | கிளிப்பிள்ளை. |
| | ஆட்டுப்புழுக்கை | கோழிக்குஞ்சு. |
| | யானைக் குட்டி | தென்னம்பிள்ளை. |
| | யானைக்கன்று | மாங்கன்று. |

பரிசைஷ வினா.—௪0௧. மரபாவது யாது?

## முற்றும்மை.

௪0௨. இத்தனையென்று தொகையுற்று நிற்கும் பொருளும், எக்காலத்தும் எவ்விடத்தும் இல்லாத பொருளும், முடிக்குஞ் சொல்லைப் பெற்று வருமிடத்து, முற்றும்மை பெற்று வரும். உ-ம்.

(௧.) தமிழ் நாட்டு மூவேந்தரும் வந்தார்.
(௨.) ஒளிமுன் னிருள் எங்குமில்லை!

பரிசைஷ வினா.—௪0௨. இத்தனையென்று தொகையுற்று நிற்கும் பொருளும், எக்காலத்தும் எவ்விடத்தும் இல்லாத பொருளும், முடிக்குஞ் சொல்லைப் பெற்று வருமிடத்து, எவ்வாறு வரும்?

## ஒருபொருட் பன்மொழி.

௪0௩. சொல்லின்பந் தோன்றுதற்பொருட்டு ஒருபொருண்மேல் இருசொற்கள் தொடர்ந்து வருதலும் உண்டு.

| | | |
|---|---|---|
| உ-ம். | நாகிளங்கமுகு | மீமிசைஞாயிறு |
| | புனிற்றிளங்கன்று | உயர்ந்தோங்குபெருவரை |

பரீக்ஷை வினா.—௪௦௩. ஒருபொருண்மேல் இருசொற்கள் காரணமின்றித் தொடர்ந்து வருதலும் உண்டோ?

---

## அடுக்குச்சொல்.

௪௦௪. ஒருசொல், விரைவு, வெகுளி, உவகை, அச்சம், துன்பம் முதலியகாரணம் பற்றி, இரண்டு முதல் மூன்றளவு அடுக்கிக் கூறப்படும். உ-ம்.

(க.) உண்டேனுண்டேன், போபோபோ............விரைவு.
(உ.) எய்யெய், எறிஎறிஎறி............................கோபம்.
(௩.) வருக வருக; பொலிக பொலிக பொலிக.........உவகை.
(௪.) பாம்பு பாம்பு; தீத்தீத்தீ..........................அச்சம்.
(ரு.) உய்யேனுய்யேன்; வாழேன்வாழேன்வாழேன். துன்பம்.

அசைநிலைக்கு இரண்டளவும், இசைநிறைக்கு இரண்டு முதல் நான்களவும், அடுக்கிக் கூறப்படும். உ-ம்.

(க.) அன்றேயன்றே....................................அசைநிலை.

(உ.) ஏயேயம்பன் மொழிந்தனள் யாயே / நல்குமே நல்குமே நல்குமே நாமகள் / பாடுகோ பாடுகோ பாடுகோ பாடுகோ — இசைநிறை.

சலசல, கலகல என்பவை முதலியன பிரியாது ஒரு சொல்லாகவே நின்று பொருள்படுதலால், அடுக்கியசொல்லல்ல.

பரீக்ஷை வினாக்கள்.—௪௦௪. அடுக்குத்தொடருள், ஒரு சொல்லே அடுக்கிக் கூறப்படும்போது, எவ்வெவ்விடத்தில் எத்தனை எத்தனை அடுக்கிக் கூறப்படும்? இக்காரணங்களின்றி ஒருசொல் இங்ஙனம் அடுக்கிக் கூறப்படுதல் இல்லையோ? சலசல கலகல என்பவை முதலியன அடுக்கிய சொல்லல்லவோ?

## சொல்லெச்சம்.

சOரு. சொல்லெச்சமாவது, வாக்கியத்தில் ஒரு சொல் எஞ்சி நின்று வருவித்துரைக்கப்படுவதாம். உ-ம்.

"பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
ரிறைவ னடிசேரா தார்."

இதிலே சேர்ந்தார் பிறவிப்பெருங்கடல் நீந்துவர் எனச் சேர்ந்தார் என்னும் ஒருசொல் வருவித்துரைக்கப்படுதலாற் சொல்லெச்சம்.

பரீக்ஷை வினா.—சOரு. சொல்லெச்சமாவது யாது?

---

## இசையெச்சம்.

சOசு. இசையெச்சமாவது, வாக்கியத்தில் அவ்வவ்விடத்திற்கு ஏற்ப இரண்டு முதலிய பலசொற்கள் எஞ்சி நின்று வருவித்துரைக்கப்படுவதாம். உ-ம்.

"அந்தாமரையன்னமே நின்னையானகன்றாற்றுவனோ"

இதிலே என்னுயிரினுஞ் சிறந்த நின்னை எனப் பலசொற்கள் வருவித்துரைக்கப்படுதலால் இசையெச்சம்.

பரீக்ஷை வினா.—சOசு. இசையெச்சமாவது யாது?

ஒழிபியல் முற்றிற்று.

தொடர்மொழியதிகாரமுற்றுப்பெற்றது.

பராபரம் துணை.

# பகுபத முடிபு.

## பெயர்ப்பகுபதங்கள்.

அவன் என்னுஞ் சுட்டுப்பொருட் பெயர்ப் பகுபதம், அ என்னும் பகுதியும், அன் என்னும் ஆண்பால் விகுதியும் பெற்று, இடையில் வகரமெய் தோன்றி, அம்மெய்யின்மேல் விகுதி அகர வுயிரேறி, முடிந்தது.

தமன் என்னும் கிளைப்பொருட் பெயர்ப் பகுபதம், தாம் என்னும் பகுதியும், அன் என்னும் ஆண்பால் விகுதியும் பெற்று, பகுதி முதல் குறுகி, இறுதி மகரமெய்யின்மேல் விகுதி அகரவு யிரேறி, முடிந்தது.

பொன்னன் என்னும் பொருட் பெயர்ப் பகுபதம், பொன் என்னும் பகுதியும், அன் என்னும் ஆண்பால் விகுதியும் பெற்று, பகுதியீற்று னகரமெய் இரட்டித்து, இரட்டித்த னகரமெய் யின்மேல் விகுதி அகரவுயிரேறி, முடிந்தது.

நிலத்தன் என்னும் இடப்பெயர்ப் பகுபதம், நிலம் என்னும் பகுதியும், அன் என்னும் ஆண்பால் விகுதியும், அவைகளுக்கு இடையே அத்துச்சாரியையும் பெற்று, பகுதியீற்று மகரமெய் யுஞ் சாரியையின் முதல் அகரமும் ஈற்று உகரமுங் கெட்டு, உகரங்கெட நின்ற தகரமெய்யின்மேல் விகுதி அகரவுயிரேறி, முடிந்தது.

பிரபவன் என்னுங் காலப்பெயர்ப் பகுபதம், பிரபவம் என் னும் பகுதியும், அன் என்னும் ஆண்பால் விகுதியும் பெற்று, பகுதியீற்று அம் குறைந்து வகரமெய்யீறாக நின்று, அவ்வகர மெய்யின்மேல் விகுதி அகரவுயிரேறி, முடிந்தது.

திணிதோளன் என்னுஞ் சினைப்பெயர்ப் பகுபதம், திணி தோள் என்னும் பகுதியும், அன் என்னும் ஆண்பால் விகுதியும்

பெற்று, பகுதியீற்று ளகரமெய்யின்மேல் விகுதி அகரவுயிரேறி, முடிந்தது.

நல்லன் என்னும் குணப்பெயர்ப் பகுபதம், நன்மை என்னும் பகுதியும், அன் என்னும் ஆண்பால் விகுதியும் பெற்று, பகுதியீற்று மைவிகுதி கெட்டு நல் என நின்று, லகரமெய் இரட்டித்து, இரட்டித்த லகரமெய்யின்மேல் விகுதி அகரவுயிரேறி, முடிந்தது.

கரியன் என்னுங் குணப்பெயர்ப் பகுபதம், கருமை என்னும் பகுதியும், அன் என்னும் ஆண்பால் விகுதியும் பெற்று, பகுதியீற்று மைவிகுதிகெட்டு, இடை உகரம் இகரமாகத் திரிந்து, யகரவுடம்படுமெய் தோன்றி, அம்மெய்யின்மேல் விகுதி அகரவுயிரேறி, முடிந்தது.

செய்யன் என்னுங் குணப்பெயர்ப் பகுபதம், செம்மை என்னும் பகுதியும், அன் என்னும் ஆண்பால் விகுதியும் பெற்று, பகுதியீற்று மைவிகுதி கெட்டு, இடை நின்ற மகரமெய் யகரமெய்யாகத் திரிந்து, அது இரட்டித்து, இரட்டித்த மெய்யின்மேல் விகுதி அகரவுயிரேறி, முடிந்தது.

ஓதுவான் என்னுந் தொழிற்பெயர்ப் பகுபதம், ஓது என்னும் பகுதியும், ஆன் என்னும் ஆண்பால் விகுதியும், அவைகளுக்கு இடையே வகரவிடைநிலையும் பெற்று, இடைநிலை மெய்யின்மேல்விகுதி ஆகாரவுயிரேறி, முடிந்தது. ஓதுதலுடையவன் என்பது பொருள். *

நன்மை என்னும் பண்புப்பெயர்ப் பகுபதம், நல் என்னும் பகுதியும், மை என்னும் பண்புப்பெயர் விகுதியும்பெற்று, பகுதியீற்று லகரமெய் னகரமெய்யாகத் திரிந்து, முடிந்தது.

---

* ஓதுவான் என்பது எதிர்காலத் தெரிநிலைவினை முற்றுப் பகுபதமாயின், ஓது பகுதி; ஆன் விகுதி; வகரமெய் எதிர்காலவிடைநிலை. எதிர்காலவினையெச்சப்பகுபதமாயின், ஓது பகுதி; வான் எதிர்காலவினையெச்ச விகுதி.

வருதல் என்னுந் தொழிற்பெயர்ப்பகுபதம், வா என்னும் பகுதியும், தல் என்னும் தொழிற்பெயர் விகுதியும்பெற்று, பகுதி முதல் குறுகி ரகரவுகரம் விரிந்து, முடிந்தது.

உடுக்கை என்னுந் தொழிற்பெயர்ப் பகுபதம், உடு என்னும் பகுதியும், கை என்னுந்தொழிற்பெயர் விகுதியும் பெற்று, விகுதிக் ககரமிகுந்து, முடிந்தது.

உடுக்கை என்னுஞ் செயப்படுபொருட்பெயர்ப் பகுபதம், உடு என்னும் பகுதியும், ஐ என்னுஞ் செயப்படுபொருள் விகுதியும், அவைகளுக்கிடையே குச்சாரியையும் பெற்று சாரியைக் ககரம் மிகுந்து, சாரியையீற்றுகரங்கெட்டு, உகரங்கெட நின்ற ககரவொற்றின்மேல் விகுதி ஐகாரவுயிரேறி, முடிந்தது.

எழுத்து என்னுஞ் செயப்படுபொருட்பெயர்ப் பகுபதம், எழுது என்னும் பகுதியோடு ஐ என்னுஞ் செயப்படுபொருள் விகுதி புணர்ந்து, அவ்விகுதி கெட்டுக், கெட்டவிடத்துத் தகரமிரட்டித்து, முடிந்தது.

ஊண் என்னுஞ் செயப்படுபொருட் பெயர்ப் பகுபதம், உண் என்னும் பகுதியோடு ஐ என்னுஞ் செயப்படுபொருள் விகுதி புணர்ந்து, அவ்விகுதி கெட்டு, பகுதி முதல் நீண்டு, முடிந்தது.

காய் என்னும் வினைமுதற்பொருட் பெயர்ப் பகுபதம், காய் என்னும் பகுதியோடு இ என்னும் வினைமுதற்பொருள் விகுதி புணர்ந்து, அவ்விகுதி கெட்டு, முடிந்தது.

## ...ப் பகுபதங்கள்.

உண்டான் என்னும் இறந்தகாலத் தெரிநிலைவினைமுற்றுப் பகுபதம், உண் என்னும் பகுதியும், ஆன் என்னும் ஆண்பால் விகுதியும், அவைகளுக்கு இடையே இறந்தகாலக் காட்டும் டகர

விடைநிலையும் பெற்று, இடைநிலை டகரமெய்யின்மேல் விகுதி ஆகாரவுயிரேறி முடிந்தது.

உண்கின்றான் என்னும் நிகழ்காலத் தெரிநிலைவினைமுற்றுப் பகுபதம், உண் என்னும் பகுதியும், ஆன் என்னும் ஆண்பால் விகுதியும், அவைகளுக்கு இடையே கின்று என்னும் நிகழ்கால விடைநிலையும் பெற்று, இடைநிலையீற்று உகரங் கெட்டு, உகரங்கெட நின்ற றகரமெய்யின்மேல் விகுதி ஆகாரவுயிரேறி, முடிந்தது.

உண்ணுவான் என்னும் எதிர்காலத் தெரிநிலைவினைமுற்றுப் பகுபதம், உண் என்னும் பகுதியும், ஆன் என்னும் ஆண்பால் விகுதியும், அவைகளுக்கு இடையே எதிர்காலங் காட்டும் வகரவிடைநிலையும், பகுதிக்கும் இடைநிலைக்கும் இடையே உகரச்சாரியையும் பெற்று, பகுதியீற்று ணகரமெய் இரட்டித்து, இரட்டித்த ணகரமெய்யின்மேற் சாரியை உகரமேறி, இடைநிலை வகரமெய்யின்மேல் விகுதி ஆகாரவுயிரேறி, முடிந்தது. *

நடந்தனன் என்னும் இறந்தகாலத் தெரிநிலைவினைமுற்றுப் பகுபதம், நட என்னும் பகுதியும், அன் என்னும் ஆண்பால் விகுதியும், அவைகளுக்கு இடையே இறந்தகாலங் காட்டுந் தகரவிடைநிலையும், இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையே அன்சாரியையும் பெற்று; இடைநிலைத் தகரமிருந்து, மிருந்த தகரவல்லொற்று மெல்லொற்றாக விகாரப்பட்டு, இடைநிலைத் தகரமெய்யின்மேற் சாரியை அகரவுயிரேறிச், சாரியையீற்று னகரமெய்யின்மேல் விகுதி அகரவுயிரேறி, முடிந்தது.

வருகின்றனன் என்னும் நிகழ்காலத் தெரிநிலைவினைமுற்றுப் பகுபதம், வா என்னும் பகுதியும், அன் என்னும் ஆண்பால்

---

* உண்ணுவான் என்பது எதிர்கால வினையெச்சப் பகுபதமாயின், உண் பகுதி; உ சாரியை; வான் எதிர்கால வினையெச்ச விகுதி.

விகுதியும், அவைகளுக்கிடையே கின்று என்னும் நிகழ்கால விடைநிலையும், இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையே அன்சாரியையும் பெற்று, பகுதி முதல் குறுகி, ரகரவுகரம் விரிந்து, இடைநிலையீற்று உகரங்கெட்டு, உகரங் கெடநின்ற றகரவொற்றின்மேற் சாரியை அகரவுயிரேறிச், சாரியையீற்று னகரமெய்யின்மேல் விகுதி அகரவுயிரேறி, முடிந்தது.

நடப்பான் என்னும் எதிர்காலத் தெரிநிலைவினைமுற்றுப் பகுபதம், நட என்னும் பகுதியும், ஆன் என்னும் ஆண்பால் விகுதியும், அவைகளுக்கு இடையே எதிர்காலங் காட்டும் பகர விடைநிலையும் பெற்று, இடைநிலைப் பகரம் மிகுந்து, இடைநிலைப் பகரமெய்யின்மேல் விகுதி ஆகாரவுயிரேறி, முடிந்தது.

நடந்தது என்னும் இறந்தகாலத் தெரிநிலைவினைமுற்றுப் பகுபதம், நட என்னும் பகுதியும், து என்னும் ஒன்றன்பால் விகுதியும், அவைகளுக்கு இடையே இறந்தகாலங் காட்டுந் தகர விடைநிலையும், இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையே அகரச் சாரியையும் பெற்று, இடைநிலைத் தகரம் மிகுந்து, மிகுந்த தகர வல்லொற்று மெல்லொற்றாக விகாரப்பட்டு, இடைநிலைத் தகர வல்லொற்றின்மேற் சாரியை அகரவுயிரேறி, முடிந்தது.

நடப்பித்தான் என்னும் பிறவினைப் பகுபதம், நட என்னும் பகுதியும், பி என்னும் பிறவினைவிகுதியும் பெற்று, விகுதிப் பகரமிகுந்து, அனைத்தும் ஒருபகுதியாய் நின்று, ஆன் என்னும் ஆண்பால் விகுதியும், பகுதிக்கும் விகுதிக்கும் இடையே இறந்தகாலங் காட்டுந் தகரவிடைநிலையும் பெற்று, இடைநிலைத் தகரம் மிகுந்து, இடைநிலைத் தகரமெய்யின்மேல் விகுதி ஆகாரவுயிரேறி, முடிந்தது.

அடிக்கப்பட்டான் என்னுஞ் செயப்பாட்டு வினைமுற்றுப் பகுபதம், அடி என்னும் பகுதியும், படு என்னுஞ் செயப்பாட்டு

வினை விகுதியும், அவைகளுக்கு இடையே குச்சாரியையும், அக ரச்சாரியையும் பெற்று, சாரியைக் ககரம் மிகுந்து, சாரியையீ ற்று உகரங்கெட்டு, உகரங்கெட நின்ற ககரமெய்யின்மேலே சாரியை அகரவுயிரேறி, விகுதிப் பகர மிகுந்து, அடிக்கப்படு என அனைத்தும் ஒரு பகுதியாய் நின்று, ஆன் என்னும் ஆண் பால் விகுதி பெற்று, படு என்பதனுடைய உகரமூர்ந்த டகர மெய்யிரட்டித்து, உகரவுயிர் கெட்டு, உகரங்கெட்ட டகரமெய் யின்மேல் விகுதி ஆகாரவுயிரேறி, முடிந்தது.

நடவான் என்னும் எதிர்மறைத் தெரிநிலைவினைமுற்றுப் பகுபதம், நட என்னும் பகுதியும், ஆன் என்னும் விகுதியும், அவைகளுக்கு இடையே எதிர்மறை ஆகாரவிடைநிலையும் பெ ற்று, அவ்விடைநிலை கெட்டு, வகரவுடம்படுமெய் தோன்றி, அம் மெய்யின்மேல் விகுதி ஆகாரவுயிரேறி, முடிந்தது.

நடக்கின்றிலன் என்னும் எதிர்மறைத் தெரிநிலைவினைமுற் றுப் பகுபதம், நட என்னும் பகுதியும், அன் என்னும் விகுதி யும், அவைகளுக்கு இடையே கின்று என்னும் நிகழ்காலவிடை நிலையும், இல் என்னும் எதிர்மறையிடைநிலையும் பெற்று, கின்றி டைநிலையின் ககரம் மிகுந்து, ஈற்றுகரங் கெட்டு, உகரங்கெட நின்ற றகரமெய்யின்மேல் எதிர்மறையிடைநிலை இகரமேறி, அவ்விடைநிலையீற்று லகரமெய்யின்மேல் விகுதி அகரவுயிரேறி, முடிந்தது.

எழுந்திட்டான் என்னும் இறந்தகாலத் தெரிநிலைவினைமுற் றுப் பகுபதம், எழு என்னும் பகுதியும், இடு என்னும் பகுதிப் பொருள் விகுதியும், அவைகளுக்கு இடையே தச்சாரியையும் பெற்று, சாரியைத் தகர மிகுந்து, மிகுந்த தகரவல்லொற்று மெல்லொற்றாக விகாரப்பட்டு, சாரியையீற்றுகரங் கெட்டு, உகரங்கெட நின்ற தகரமெய்யின்மேல் விகுதி இகரவுயிரேறி,

எழுந்திடு என அனைத்தும் ஒருபகுதியாக நின்று, ஆன் என்னும் ஆண்பால் விகுதி பெற்று, இடு என்பதனுடைய உகரமூர்ந்த டகரமெய் இரட்டி, உகரவுயிர் கெட்டு, உகரங் கெட நின்ற டகரமெய்யின்மேல் விகுதி ஆகாரவுயிரேறி, முடிந்தது.

கழிந்தன்று என்னும் இறந்தகாலத் தெரிநிலைவினைமுற்றுப் பகுபதம், கழி என்னும் பகுதியும், று என்னும் ஒன்றன்பால் விகுதியும், அவைகளுக்கு இடையே இறந்தகாலங் காட்டுந் தகரவிடைநிலையும், இடைநிலைக்கும் விகுதிக்கும் இடையே அன் என்னுஞ் சாரியையும் பெற்று, இடைநிலைத் தகரமிகுந்து, மிகுந்த தகரவல்லொற்று மெல்லொற்றாக விகாரப்பட்டு, இடைநிலைத் தகரவல்லொற்றின்மேற் சாரியை அகரவுயிரேறி, முடிந்தது. கழிந்தது என்பது பொருள்.

கழிந்தின்று என்னும் எதிர்மறை இறந்தகாலத் தெரிநிலைவினைமுற்றுப் பகுபதம், கழி என்னும் பகுதியும், று என்னும் ஒன்றன்பால் விகுதியும், அவைகளுக்கு இடையே இறந்தகாலங் காட்டுந் தகரவிடைநிலையும், அவ்விடைநிலைக்கும் விகுதிக்கும் இடையே இல் என்னும் எதிர்மறையிடைநிலையும் பெற்று, காலவிடைநிலைத் தகரம் மிகுந்து, மிகுந்த தகரவல்லொற்று மெல்லொற்றாக விகாரப்பட்டு, இடைநிலைத் தகரமெய்யின்மேல் எதிர்மறையிடைநிலை இகரவுயிரேறி, இடைநிலையீற்று லகரமெய் னகரமெய்யாகத் திரிந்து முடிந்தது. கழிந்திலது என்பது பொருள்.

கோடும் என்னும் எதிர்காலத் தெரிநிலைவினைமுற்றுப் பகுபதம், கொள் என்னும் பகுதியும், தும் என்னுந் தன்மைப்பன்மை எதிர்காலவிகுதியும் பெற்று, பகுதி முதல் நீண்டு, பகுதியீற்று ளகரங் கெட்டு, விகுதித்தகரம் டகரமாகத் திரிந்து, முடிந்தது.

அற்று என்னுங் குறிப்புவினைமுற்றுப் பகுபதம், அல் என்னும் பகுதியும், று என்னும் ஒன்றன்பால்விகுதியும் பெற்று, விகுதி றகரவல்லொற்று மிகுந்து, முடிந்தது. *

அனையர் என்னுங் குறிப்புவினைமுற்றுப் பகுபதம், அ என்னும் பகுதியும், அர் என்னும் பலர்பால்விகுதியும், அவைகளுக்கு இடையே னகரச்சாரியையும் ஐகாரச்சாரியையும் பெற்று, சாரியை னகரமெய்யின்மேற் சாரியை ஐகாரவுயிரேறி, யகரவுடம்படுமெய் தோன்றி, அம்மெய்யின்மேல் விகுதி அகரவுயிரேறி, முடிந்தது.

இன்று என்னுங் குறிப்புவினைமுற்றுப் பகுபதம், இல் என்னும் பகுதியும், று என்னும் ஒன்றன்பால்விகுதியும் பெற்று, பகுதியீற்று லகரமெய் னகரமெய்யாகத் திரிந்து, முடிந்தது.

உணர்த்துகிற்பன் என்னும் எதிர்காலத் தெரிநிலைவினைமுற்றுப் பகுபதம், உணர்த்து என்னும் பகுதியும், அன் என்னும் ஆண்பால்விகுதியும், அவைகளுக்கு இடையே எதிர்காலங்காட்டும் பகரவிடைநிலையும், பகுதிக்குங் காலவிடைநிலைக்கும் இடையே கில் என்னும் ஆற்றல் இடைநிலையும்பெற்று, ஆற்றலிடைநிலையீற்று லகரமெய் றகரமெய்யாகத் திரிந்து, இடைநிலைப் பகரத்தின்மேல் விகுதி அகரவுயிரேறி, முடிந்தது.

செய் என்னும் முன்னிலையேவலொருமை வினைமுற்றுப் பகுபதம், செய் என்னும் பகுதியோடு ஆய் என்னும் முன்னிலையேவல் விகுதி புணர்ந்து, அவ்விகுதி கெட்டு, முடிந்தது.

---

* அற்று என்பது இறந்தகால வினையெச்சப்பகுபதமாயின், அறு பகுதி, உ விகுதி; உகரமூர்ந்த றகரமெய் இரட்டித்து முடிந்தது எனக.

## பெயரெச்சப் பகுபதங்கள்.

அடித்த என்னும் இறந்தகாலப் பெயரெச்சப் பகுபதம், அடி என்னும் பகுதியும், அ என்னும் பெயரெச்சவிகுதியும், அவைகளுக்கு இடையே இறந்தகாலங் காட்டுந் தகரவிடைநிலையும் பெற்று, இடைநிலைத்தகரம் மிகுந்து, இடைநிலைத் தகரமெய்யின்மேல் விகுதி அகரவுயிரேறி, முடிந்தது.

அடிக்கின்ற என்னும் நிகழ்காலப் பெயரெச்சப்பகுபதம், அடி என்னும் பகுதியும், அ என்னும் பெயரெச்ச விகுதியும், அவைகளுக்கு இடையே கின்று என்னும் நிகழ்காலவிடைநிலையும் பெற்று, இடைநிலைக் ககரம் மிகுந்து, இடைநிலையீற் றுகரங் கெட்டு, உகரங் கெட நின்ற றகரமெய்யின்மேல் விகுதி அகரவுயிரேறி, முடிந்தது.

அடிக்கும் என்னும் எதிர்காலப் பெயரெச்சப் பகுபதம், அடி என்னும் பகுதியும், உம் என்னும் எதிர்காலப் பெயரெச்ச விகுதியும், அவைகளுக்கு இடையே குச்சாரியையும் பெற்று, சாரியைக் ககரம் மிகுந்து, சாரியையீற்றுகரங் கெட்டு, உகரங்கெட நின்ற ககரமெய்யின்மேல் விகுதி உகரவுயிரேறி, முடிந்தது.

---

## வினையெச்சப் பகுபதங்கள்.

நின்று என்னும் இறந்தகால வினையெச்சப் பகுபதம், நில் என்னும் பகுதியும், உ என்னும் வினையெச்ச விகுதியும், அவைகளுக்கு இடையே இறந்தகாலங் காட்டும் றகரவிடைநிலையும் பெற்று, பகுதியீற்று லகரமெய் இடைநிலை றகரமெய்க்கு இனமாகிய னகரமெய்யாகத் திரிந்து, இடைநிலை றகரமெய்யின் மேல் விகுதி உகரவுயிரேறி, முடிந்தது.

நிற்க என்னும் முக்காலத்திற்கும் உரிய வினையெச்சப்பகுபதம், நில் என்னும் பகுதியும், அ என்னும் வினையெச்ச விகுதி

யும், அவைகளுக்கு இடையே குச்சாரியையும் பெற்று, பகுதியீற்று லகரமெய் றகரமெய்யாகத் திரிந்து, சாரியையீற்று உகரங் கெட்டு, உகரங் கெட நின்ற ககரமெய்யின்மேல் விகுதி அகரவுயிரேறி முடிந்தது. *

நிற்கின் என்னும் எதிர்காலவினையெச்சப் பகுபதம், நில் என்னும் பகுதியும், இன் என்னும் எதிர்காலவினையெச்ச விகுதியும், அவைகளுக்கு இடையே குச்சாரியையும் பெற்று, பகுதியீற்று லகரமெய் றகரமெய்யாகத் திரிந்து, சாரியையீற்று உகரங்கெட்டு, உகரங் கெட நின்ற ககரமெய்யின்மேல் விகுதி இகரவுயிரேறி, முடிந்தது.

தோன்றியக்கால் என்னும் எதிர்கால வினையெச்சப் பகுபதம், தோன்று என்னும் பகுதியும், கால் என்னும் எதிர்கால வினையெச்சவிகுதியும், அவைகளுக்கு இடையே இன்சாரியையும் அகரச்சாரியையும் பெற்று, பகுதியீற்று உகரங் கெட்டு, உகரங் கெடநின்ற றகரமெய்யின்மேற் சாரியை இகரவுயிரேறி, சாரியையீற்று னகரமெய் குறைந்து, யகரவுடம்படுமெய் தோன்றி, அம்மெய்யின்மேற் சாரியை அகரவுயிரேறி, விகுதிக் ககரமிகுந்து, முடிந்தது.

* நிற்க என்பது வியங்கோள்வினைமுற்றுப் பகுபதமாயின், பகுதி; க வியங்கோள்விகுதி.

பின் வரும் பொதுப்பதபதங்களை முடிக்க:—

சாவான்: (௧.) உடன்பாட்டுத் தெரிநிலைவினைமுற்று.
(௨.) எதிர்மறைத் தெரிநிலைவினைமுற்று.
(௩.) எதிர்காலவினையெச்சம்.

செய்யாய்: (௧.) முன்னிலையேவலொருமை வினைமுற்று.
(௨.) முன்னிலையொருமையெதிர்மறைவினைமுற்று.

செய்யீர்: (௧.) முன்னிலையேவற் பன்மைவினைமுற்று.
(௨.) முன்னிலைப்பன்மையெதிர்மறை வினைமுற்று.

தழைப்ப: (௧.) பலர்பாற் படர்க்கை வினைமுற்று.
(௨.) பலவின்பாற் படர்க்கை வினைமுற்று.
(௩.) செயவெனெச்சம்.

அன்ன: (௧.) குறிப்புவினைமுற்று.
(௨.) குறிப்புவினைப் பெயரெச்சம்.

செவ்விய: (௧.) குறிப்புவினைமுற்று.
(௨.) குறிப்புவினைப் பெயரெச்சம்.

வேட்கும்: (௧.) எதிர்காலவினைமுற்று.
(௨.) எதிர்காலப் பெயரெச்சம்.

வந்து: (௧.) தன்மையொருமை வினைமுற்று.
(௨.) இறந்தகாலவினையெச்சம்.

உண்டு: (௧.) தன்மையொருமை வினைமுற்று.
(௨.) இறந்தகால வினையெச்சம்.
(௩.) அஃறிணையொன்றன்பாற் படர்க்கைக்குறிப்பு வினைமுற்று.

தேடிய: (௧.) இறந்தகாலவினைமுற்று.
(௨.) வியங்கோள் வினைமுற்று.
(௩.) இறந்தகாலப் பெயரெச்சம்.
(௪.) எதிர்கால வினையெச்சம்.

# சொல்லிலக்கணங் கூறுதல்.

அவன் வந்தான்.

அவன். எ-து. உயர்திணையாண்பாலொருமைப்படர்க்கைச் சுட்டுப்பெயர்; திரிபின்மையாகிய எழுவாயுருபேற்றது; அது வந்தான் என்னும் வினைப்பயனிலை கொண்டது.

வந்தான். எ-து. உயர்திணையாண்பாலொருமைப்படர்க்கை யிறந்தகால உடன்பாட்டுத் தெரிநிலைவினைமுற்று; அது அவன் என்னும் எழுவாய்க்குப் பயனிலையாய் நின்றது.

கொலை செய்தவன் நரகத்தில் வீழ்ந்து வருந்துவான்.

கொலை. எ-து. தொழிற்பெயர்: ஆக்கப்படுபொருளில் வந்த ஐ என்னும் இரண்டனுருபேற்றது; அது செய்தவன் என்னும் வினை கொண்டது.

செய்தவன். எ-து. உயர்திணையாண்பாலொருமைப்படர்க்கையிறந்தகால உடன்பாட்டுத் தெரிநிலைவினையாலணையும் பெயர்; திரிபின்மையாகிய எழுவாயுருபேற்றது; அது வருந்துவான் என்னும் வினைப்பயனிலை கொண்டது.

நரகம். எ-து. பால்பகாவஃறிணைப் படர்க்கைப்பெயர்; பிறிதின்கிழமைப்பொருட்கு இடமிடமாக நிற்கும் இடப்பொருளில் வந்த இல் என்னும் ஏழனுருபேற்றது; அது வீழ்ந்து என்னும் வினை கொண்டது.

அத்து. எ-து. சாரியையுருபிடைச்சொல்.

வீழ்ந்து. எ-து. செய்தெனவாய்பாட்டிறந்தகால உடன்பாட்டுத்தெரிநிலைவினை வினையெச்சம்; வருந்துவான் என்னும் வினை கொண்டது.

வருந்துவான். எ-து. உயர்திணையாண்பாலொருமைப்படர்க்கையெதிர்கால உடன்பாட்டுத் தெரிநிலைவினைமுற்று; செய்தவன் என்னும் எழுவாய்க்குப்பயனிலையாய் நின்றது.

கொற்றனானவன் தன்னை எதிர்த்த பகைவரை வாளான்மாய வெட்டினன்.

கொற்றன். எ-து. உயர்திணையாண்பாலொருமைப்படர்க்கைப்பெயர்; ஆனவன் என்னும் எழுவாய்ச்சொல்லுருபேற்றது; அது வெட்டினன் என்னும் வினைப்பயனிலைகொண்டது.

தான். எ-து. ஒருமைப்படர்க்கைப் பொதுப்பெயர்; அடையப்படுபொருளில் வந்த ஐ என்னும் இரண்டனுருபேற்றது; அது எதிர்த்த என்னும் வினை கொண்டது.

எதிர்த்த. எ-து. செய்தவென்பாய்பாட்டிறந்தகால உடன்பாட்டுத் தெரிநிலைவினைப் பெயரெச்சம்; பகைவர் என்னும் வினைமுதற்பெயர் கொண்டது.

பகைவர். எ-து. உயர்திணைப்பலர்பாற்படர்க்கைப்பெயர்; அழிக்கப்படுபொருளில் வந்த ஐ என்னும் இரண்டனுருபேற்றது; அது வெட்டினன் என்னும் வினை கொண்டது.

வாள். எ-து. பால்பகாவஃறிணைப்படர்க்கைப்பெயர்; கருவிப்பொருளில் வந்த ஆல் என்னும் மூன்றனுருபேற்றது; அது வெட்டினன் என்னும் வினைகொண்டது.

மாய. எ-து. செயவென்வாய்பாட்டு முக்காலத்திற்குமுரிய தெரிநிலைவினை வினையெச்சம்; இங்கே காரியப்பொருளில் வந்தமையால் எதிர்காலத்தது; வெட்டினன் என்னும் வினை கொண்டது.

வெட்டினன். எ-து. உயர்திணையாண்பாலொருமைப் படர்க்கையிறந்தகால உடன்பாட்டுத் தெரிநிலை வினைமுற்று; கொற்றன் என்னும் எழுவாய்க்குப் பயனிலையாய் நின்றது.

## சொற்றொடரிலக்கணங் கூறுதல்.

அவன்வந்தான்.—அல்வழிச்சந்தியில் எழுவாய்த்தொடர்.

கொலைசெய்தவன்.—வேற்றுமைச்சந்தியில் இரண்டாம் வேற்றுமைத்தொகை.

செய்தவன் நரகத்தில்.—அல்வழிச்சந்தியில் தழாத்தொடராகிய எழுவாய்த்தொடர்.

நரகத்தில் வீழ்ந்து.—வேற்றுமைச்சந்தியில் ஏழாம்வேற்றுமை விரி.

வீழ்ந்து வருந்துவான்.—அல்வழிச்சந்தியில் வினையெச்சத்தொடர்.

தழாத்தொடராவது நிலைமொழியானது வருமொழியைப் பொருட்பொருத்தமுறத் தழுவாத தொடர். பொருட்பொருத்தமுறத் தழுவிய தொடர் தழுவுதொடர்.

இலக்கணச்சுருக்கமுற்றுப்பெற்றது.

பரமபதி துணை.

| | | |
|---|---|---|
| கோடி | = | ஒன்பதிற்றுக்கோடி. |
| கழஞ்சு | = | ஒன்பதிற்றுக்கழஞ்சு. |
| கலம் | = | ஒன்பதிற்றுக்கலம். |
| மடங்கு | = | ஒன்பதிற்றுமடங்கு. |

பத்தின் முன்னும், ஒன்பதின் முன்னும், ஆயிரமும், நிறைப்பெயரும், அளவுப்பெயரும், பிற பெயரும் வரின், பண்புத்தொகையில் இற்றுச்சாரியையேயன்றி இன்சாரியையுந் தோன்றும்; அங்ஙனந் தோன்றுமிடத்துப் பத்தென் பதின் ஈற்றுயிர்மெய் கெடும். உ-ம்.

| | | | | |
|---|---|---|---|---|
| பத்து | + | ஆயிரம் | = | பதினாயிரம். |
| | | கழஞ்சு | = | பதின்கழஞ்சு. |
| | | கலம் | = | பதின்கலம். |
| | | மடங்கு | = | பதின்மடங்கு. |
| ஒன்பது | + | ஆயிரம் | = | ஒன்பதினாயிரம் |
| | | கழஞ்சு | = | ஒன்பதின்கழஞ் |
| | | கலம் | = | ஒன்பதின்கலம். |
| | | மடங்கு | = | ஒன்பதின்மடங் |

கஙகூ. ஒன்பதொழிந்த ஒன்றுமுதற் பத்தீறாகிய ஒன்பதெண்களையும் இரட்டித்துச் சொல்லுமிடத்து, நிலைமொழியின் முதலெழுத்து மாத்திரம் நிற்க, அல்லன வெல்லாங் கெட்டு, முதனெடில் குறுகவும், வந்தவை உயிராயின் வகரவொற்றும், மெய்யாயின் வந்த எழுத்தும் மிகவும், பெறும். உ-ம்.

| | | | | |
|---|---|---|---|---|
| ஒன்று | + | ஒன்று | = | ஒவ்வொன்று. |
| இரண்டு | + | இரண்டு | = | இவ்விரண்டு. |
| மூன்று | + | மூன்று | = | மும்மூன்று. |

| | | | | |
|---|---|---|---|---|
| நான்கு | + | நான்கு | = | நந்நான்கு. |
| ஐந்து | + | ஐந்து | = | ஐவைந்து. |
| ஆறு | + | ஆறு | = | அவ்வாறு. |
| ஏழு | + | ஏழு | = | எவ்வேழு. |
| எட்டு | + | எட்டு | = | எவ்வெட்டு. |
| பத்து | + | பத்து | = | பப்பத்து. |

சிறுபான்மை ஓரோவொன்று, ஒன்றொன்று என வருதலுமுண்டு.

**பரீக்ஷை வினாக்கள்.**—௧௮0. ஒன்று என்பதன்முன் நாற்கணமும் வரின் எப்படிப் புணரும்? இரண்டு என்பதன் முன் நாற்கணமும் வரின் எப்படிப் புணரும்? மூன்று என்பதன் முன் நாற்கணமும் வரின் எப்படிப் புணரும்? நான்கு என்பதன் முன் நாற்கணமும் வரின் எப்படிப் புணரும்? ஐந்து என்பதன் முன் நாற்கணமும் வரின் எப்படிப் புணரும்? ஆறு என்பதன் முன் நாற்கணமும் வரின் எப்படிப் புணரும்? ஏழு என்பதன்முன் நாற்கணமும் வரின் எப்படிப் புணரும்? எட்டு என்பதன் முன் நாற்கணமும் வரின் எப்படிப் புணரும்? இவ்வெண்ணுப் பெயர்கள் இவ்விகாரமின்றியும் வருமோ? ௧௮௧. ஒன்பது என்பதன் முன் பத்து வரின் எப்படிப் புணரும்? ஒன்பது என்பதன் முன் நூறு வரின் எப்படிப் புணரும்? ௧௮௨. ஒன்று முதல் எட்டீறாகநின்ற எண்ணுப்பெயர்கள் முன் பத்து வரின் எப்படிப் புணரும்? ௧௮௩. ஒருபது முதல் எண்பதிறுதிய எண்களின் முன் ஒன்று முதல் ஒன்பதெண்ணும் அவற்றை யடுத்த பிற பெயரும் வரின், எப்படிப்புணரும்? ௧௮௪. பத்தின் முன் இரண்டு வரின் உம்மைத்தொகையில் எப்படிப் புணரும்? பத்தின் முன் இரண்டொழிந்த ஒன்று முதல் எட்டீறாகிய எண்கள் வரின் உம்மைத்தொகையில் எப்படிப் புணரும்? ௧௮௫. பத்தின் முன்னும் ஒன்பதின் முன்னும் ஒன்று

| | | |
|---|---|---|
| கோடி | = | ஒன்பதிற்றுக்கோடி. |
| கழஞ்சு | = | ஒன்பதிற்றுக்கழஞ்சு. |
| கலம் | = | ஒன்பதிற்றுக்கலம். |
| மடங்கு | = | ஒன்பதிற்றுமடங்கு. |

பத்தின் முன்னும், ஒன்பதின் முன்னும், ஆயிரமும், நிறைப்பெயரும், அளவுப்பெயரும், பிற பெயரும் வரின், பண்புத்தொகையில் இற்றுச்சாரியையேயன்றி இன்சாரியையுந் தோன்றும்; அங்ஙனந் தோன்றுமிடத்துப் பத்தென்பதின் ஈற்றுயிர்மெய் கெடும். உ-ம்.

| | | | | |
|---|---|---|---|---|
| பத்து | + | ஆயிரம் | = | பதினாயிரம். |
| | | கழஞ்சு | = | பதின்கழஞ்சு. |
| | | கலம் | = | பதின்கலம். |
| | | மடங்கு | = | பதின்மடங்கு. |
| ஒன்பது | + | ஆயிரம் | = | ஒன்பதினாயிரம். |
| | | கழஞ்சு | = | ஒன்பதின்கழஞ்சு. |
| | | கலம் | = | ஒன்பதின்கலம். |
| | | மடங்கு | = | ஒன்பதின்மடங்கு. |

௧௩௯. ஒன்பதொழிந்த ஒன்றுமுதற் பத்தீறாகிய ஒன்பதெண்களையும் இரட்டித்துச் சொல்லுமிடத்து, நிலைமொழியின் முதலெழுத்து மாத்திரம் நிற்க, அல்லன வெல்லாங் கெட்டு, முதனெடில் குறுகவும், வருவது உயிராயின் வகரவொற்றும், மெய்யாயின் வந்த எழுத்தும் மிகவும், பெறும். உ-ம்.

| | | | | |
|---|---|---|---|---|
| ஒன்று | + | ஒன்று | = | ஒவ்வொன்று. |
| இரண்டு | + | இரண்டு | = | இவ்விரண்டு. |
| மூன்று | + | மூன்று | = | மும்மூன்று. |

| | | | | |
|---|---|---|---|---|
| நான்கு | + | நான்கு | = | நந்நான்கு. |
| ஐந்து | + | ஐந்து | = | ஐவைந்து. |
| ஆறு | + | ஆறு | = | அவ்வாறு. |
| ஏழு | + | ஏழு | = | எவ்வேழு. |
| எட்டு | + | எட்டு | = | எவ்வெட்டு. |
| பத்து | + | பத்து | = | பப்பத்து. |

சிறுபான்மை ஒரோவொன்று, ஒன்றொன்று என வருதலுமுண்டு.

**பரீக்ஷை வினாக்கள்.**—கஅ0. ஒன்று என்பதன்முன் நாற்கணமும் வரின் எப்படிப் புணரும்? இரண்டு என்பதன் முன் நாற்கணமும் வரின் எப்படிப் புணரும்? மூன்று என்பதன் முன் நாற்கணமும் வரின் எப்படிப் புணரும்? நான்கு என்பதன் முன் நாற்கணமும் வரின் எப்படிப் புணரும்? ஐந்து என்பதன் முன் நாற்கணமும் வரின் எப்படிப் புணரும்? ஆறு என்பதன் முன் நாற்கணமும் வரின் எப்படிப் புணரும்? ஏழு என்பதன்முன் நாற்கணமும் வரின் எப்படிப் புணரும்? எட்டு என்பதன் முன் நாற்கணமும் வரின் எப்படிப் புணரும்? இவ்வெண்ணுப் பெயர்கள் இவ்விகாரமின்றியும் வருமோ? கஅக. ஒன்பது என்பதன் முன் பத்து வரின் எப்படிப் புணரும்? ஒன்பது என்பதன் முன் நூறு வரின் எப்படிப் புணரும்? கஅஉ. ஒன்று முதல் எட்டீறாகநின்ற எண்ணுப்பெயர்கள் முன் பத்து வரின் எப்படிப் புணரும்? கஅங. ஒருபது முதல் எண்பதீறாகிய எண்களின் முன் ஒன்று முதல் ஒன்பதெண்ணும் அவற்றை யடுத்த பிற பெயரும் வரின், எப்படிப்புணரும்? கஅச. பத்தின் முன் இரண்டு வரின் உம்மைத்தொகையில் எப்படிப் புணரும்? பத்தின் முன் இரண்டொழிந்த ஒன்று முதல் எட்டீறாகிய எண்கள் வரின் உம்மைத்தொகையில் எப்படிப் புணரும்? கஅரு. பத்தின் முன்னும் ஒன்பதின் முன்னும் ஒன்று